# சுதந்திரத்திற்குப்பின் இலங்கை

## - ஒரு பன்முகப்பார்வை -

இலங்கையின் சுதந்திரதினப்
பொன்விழாவையொட்டிய
கட்டுரைத் தொகுப்பு

942.103
இந்து
SLIPR

வெளியீடு :
இந்துசமய கலாசார அலுவல்கள்
திணைக்களம்

# சுதந்திரத்திற்குப்பின் இலங்கை

## ஒரு பன்முகப்பார்வை

இலங்கையின் சுதந்திரதினப்
பொன்விழாவையொட்டிய
கட்டுரைத் தொகுப்பு

தொகுப்பாசிரியர் :
ம.சண்முகநாதன்

வெளியீடு :
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,
98, வோட் பிளேஸ்,
கொழும்பு.

1998

## நூற்பதிப்புத்தரவுகள்

# சுதந்திரத்திற்குப்பின் இலங்கை
## - ஒரு பன்முகப்பார்வை -
## இலங்கையின் சுதந்திரதினப் பொன்விழாவை ஒட்டிய கட்டுரைத்தொகுப்பு

| | | |
|---|---|---|
| தொகுப்பாசிரியர் | :- | ம . சண்முகநாதன் |
| முதற் பதிப்பு | :- | அக்டோபர் 1998 |
| அச்சு | :- | ஒவ்செட் பிரின்ட் |
| பயன்படுத்திய தாள் | :- | 70 கிராம் வெள்ளை |
| நூல் அளவு | :- | A-4 |
| பக்கங்கள் | :- | 100 |
| பிரதிகள் | :- | 1000 |
| வெளியீடு | :- | இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்<br>98, வோட் பிளேஸ்,<br>கொழும்பு. |
| அச்சுப்பதிப்பு | :- | ஸ்பாட்டன் பிரெஸ்<br>154, ஆட்டுப்பட்டித்தெரு,<br>கொழும்பு - 13. |
| விலை | :- | ரூபா 80.00 |

## Bibliographical Data

| | | |
|---|---|---|
| Name | :- | **Suthanthiraththirkkuppin Ilangai.<br>Oru Panmugap Paarvai.<br><br>Compilation of Essays to mark the Golden Jubilee Celebration of Independance of Sri Lanka.** |
| Compiler | :- | **Mr.M.Sanmuhanathan.** |
| 1st Edition | :- | **October, 1998** |
| Print | | **Offset** |
| paper | :- | **70 gram (white)** |
| Size | :- | **A-4** |
| No of Pages | :- | **100** |
| No of Copies | :- | **1000** |
| Published by | :- | **The Department of Hindu Religious & Cultural Affairs<br>98, Ward Place<br>Colombo -07.** |
| Printers | :- | **Spaartan Press.<br>154,Wolfendhal Street,<br>Colombo-13.** |
| Price | | **Rs. 80/-** |

# வெளியீட்டுரை

இலங்கை சுதந்திரம் அடைந்து ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியானதை முன்னிட்டு பொன்விழாக்கொண்டாட்டங்கள் நமது நாட்டிலும் , இலங்கையர்கள் வாழும் ஏனைய நாடுகளிலும் தொடர்ந்து நடைபெறுகின்றன. கொண்டாட்டங்களையொட்டி பல துறைகளை உள்ளடக்கியதாக பல்வேறு வெளியீடுகள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் பொன்விழாக்கொண்டாட்டங்களில் தனது பங்களிப்பினை நல்கி வருகின்றது. "சுதந்திர இலங்கையின் தமிழ்ச்சிறுகதைகள் " என்னும் மகுடத்தில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களைச் சார்ந்த ஐம்பது எழுத்தாளர்களின் சிறுகதைகளைத்தொகுத்து தமிழ் இலக்கியக்குழுவின் மூலம் வெளியிட திணைக்களம் துணைநின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் , பொருளாதார , சமூக மாற்றங்கள் குறித்தும்,கலை இலக்கிய வளர்ச்சிகள் குறித்தும் பல்வேறு அறிஞர்களுடைய ஆய்வுக்கட்டுரைகளைத்தொகுத்து வெளியிட முனைப்புடன் முயன்றும் எதிர்பார்த்த இலக்கை , எம்மால் அடைய முடியாமல் போய்விட்டது. சில அறிஞர்களிடம் ஆக்கங்களை பெற முடிந்தபோதும் இன்னும் சிலருடன் தொடர்பு கொள்வதிலும், அவர்களது ஆக்கங்களைப் பெறுவதிலும் மிகுந்த தாமதம் ஏற்பட்டதால் போதியளவு , கட்டுரைகள் எமது கைக்குக் கிடைக்கவில்லை. இருப்பினும் அரசியல் ,பொருளாதார , சமூக மாற்றங்கள் பற்றியும், கலை இலக்கியத்துறைகளில் ஏற்பட்டுவரும் வளர்ச்சிபற்றியும், கிடைத்த கட்டுரைகளைத் தொகுத்து இந்நூலை வெளியிடுகின்றோம். பல்வேறு அறிஞர்கள் அரசியல் சமூக பொருளாதார மாற்றங்கள் , மலையகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், தமிழ் இலக்கிய நாவல், நாடகம், சிறுகதைகள், கவிதைகள் வளர்ச்சியடைந்த வரலாறு, ஆகியவை பற்றி எழுதப்பட்ட கட்டுரைகள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

வசதிகள், வளங்கள் , வாய்ப்புகள் குறைந்த காரணத்தினால் மாத்திரமன்றி , தவிர்க்க முடியாத காரணங்கள் , பல்வேறு பிரச்சினைகள் ஆகியவற்றினாலும் நமது நாட்டின் விவசாயம், கைத்தொழில், கடற்றொழில் துறைகள் முழுமையான விருத்தி பெற முடியாதிருப்பதுடன் சமூக நலன்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இவை பற்றி எல்லாம் சுருக்கமாகவேனும் புள்ளி விபரங்களையோ , இதர தகவல்களையோ பெறுவது மிக மிகச் சிரமமாக உள்ளது. எனவே முடிந்தவரை பல்வேறு கருத்துக்களையும் , எதிர்பார்ப்புக்களையும் உள்ளடக்கியதான ஆக்கங்களைத் தொகுத்து இந்நூலினை வெளியிடுகின்றோம்.

இந்நூல் முழுமையாக இல்லாவிட்டாலும் ஓரளவுக்காவது பயன்தரும் என்பது எமது நம்பிக்கை. இது போன்ற தொகுப்புக்களை எதிர்வரும் காலத்தில் வெளியிடும் போது அதிக அக்கறை செலுத்த ஆவன செய்து கனதியான நூலாக வெளிக்கொணர்வதற்கு உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இந்நூலுக்கு கட்டுரைகள் எழுதியவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு இது போன்ற வெளியீடுகளுக்கு எல்லோரது ஆதரவையும் நாடி நிற்கின்றோம்.

இந்நூலின் பதிப்புப்பணியில் பங்களிப்பு நல்கிய திணைக்கள பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், உதவிப்பணிப்பாளர் திரு எஸ் . தெய்வநாயகம், தகவல் உத்தியோகத்தர் திரு ம. சண்முகநாதன் ஆகியோருக்கு எமது பாராட்டுக்கள் உரியன.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
கொழும்பு -7.

உடுவை எஸ். தில்லைநடராஜா
பணிப்பாளர்.

# கட்டுரையாளர்கள்

**பேராசிரியர் : நா. பாலகிருஷ்ணன்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுநிலைப் பேராசிரியரான இவர் கலைப் பீடாதிபதியாகவும் பணிபுரிந்தவர். நாற்பதாண்டு காலத்திற்கு மேற்பட்ட பல்கலைக்கழக ஆய்வாளர். சமூக, பொருளாதாரத் துறைகளிலும், குறிப்பாக, வங்கியியற் துறையிலும் ஆய்வுகள் மேற்கொண்டவர். இத்துறைகளில் பல நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். சிரேஷ்ட கல்விமான். தற்போது வவுனியா, யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தின் பணிப்பாளராக விளங்குகின்றார்.

**பேராசிரியர் : சோ. சந்திரசேகரன்**

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக பல்கலைக்கழக கல்வித்துறையில் போதித்துவரும் இவர், இலங்கையிலுள்ள முதன்மையான கல்வியாளர் ஆவார். கல்வியியல், சமூகவியல் சார்ந்த பல நூல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இன்றைய உலகின் கல்வி வளர்ச்சியையும் இலங்கையின் கல்வி நிலையையும் ஒப்பிட்டு ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர். இலங்கையில் வாழும் இந்தியத் தமிழ் மக்களின் வரலாறு தொடர்பாகவும், வாழ்வு நிலைதொடர்பாகவும் ஆய்வுகள் செய்து நூல்கள் எழுதியுள்ளார். அடுத்த நூற்றாண்டின் கல்வி நிலை தொடர்பாக அதிகம் சிந்தித்து எழுதி வருபவர். தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தின், சமூக, விஞ்ஞான கல்வித்துறையின் பேராசிரியராக விளங்குகின்றார்.

**பேராசிரியர் : மா. செ. மூக்கையா**

புவியியல் துறையில் முப்பது ஆண்டுகளாக, சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணிபுரிந்துவரும் இவர், புவியியல், சமூகவியல், தொடர்பாக பல ஆய்வுகளை மேற்கொண்டு நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். குறிப்பாக, மலையகத் தமிழ் மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர். தொழிலாளர் நலன் சார்ந்த பல கருத்தரங்குகளை நடாத்தியுள்ளதோடு, சர்வதேசக் கருத்தரங்குகள் பலவற்றிலும் கலந்து கொண்டுள்ளார். தற்போது பேராதனைப் பல்கலைக் கழகத்தின் புவியியல் துறையின் இணைப்பேராசிரியராக விளங்குகின்றார்.

**கலாநிதி க. குணராசா**

இலங்கை நிர்வாக சேவையிற் சேர்ந்து உதவி அரசாங்க அதிபராகப் பணிபுரிந்த இவர், புவியியல் தொடர்பான பல பாடநூல்களை எழுதிப் பதிப்பித்தவர் .இலங்கையின் தலை சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவரான இவர், செங்கை ஆழியான் எனும் புனைப்பெயரில் பல நாவல்களையும் சிறுகதைத் தொகுதிகளையும் குறுநாவல்களையும். எழுதி வெளியிட்டுள்ளார். தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளராக விளங்குகின்றார்.

**கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை**

நீண்டகாலம், கல்வித்துறையிற் பணிபுரிந்த இவர், ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் அதிபராகவும் கடமையாற்றியவர்.
இலங்கையின் தமிழ் நாடகம், நாட்டுக்கூத்துக்கள் ,பாரம்பரியக் கலை வடிவங்கள் போன்ற துறைகளில் பல ஆய்வுகளை மேற்கொண்டு நூல்களையும், கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டவர். சிறந்த எழுத்தாளரும் கவிஞருமாவார்.

**திரு செ. யோகராசா எம். ஏ**

தமிழ் இலக்கிய ஆய்வாளரான இவர் கவிதை, நாவல், சிறுகதை தொடர்பாக பல விமர்சனக் கட்டுரைகளை எழுதி வருபவர். இலக்கிய ஆய்வாளர். இலங்கையின் நவீன இலக்கியத்துறை தொடர்பாக பல ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர்.
தற்போது கிழக்குப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளராக விளங்குகின்றார்.

**திரு ந. இரவீந்திரன்**

இலக்கிய விமரிசனம், பாரதியியல் போன்ற துறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர், பல ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார். இலக்கியக் கொள்கைகள், நவீனத்துவப் போக்குகள் தொடர்பாக பல ஆய்வுகளை மேற்கொண்டு வருபவர். தற்போது வவுனியா கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளராகப் பணி புரிகின்றார்.

**திரு. குமாரசாமி சோமசுந்தரம் எம். ஏ.**

மஹரகம தேசியக் கல்வி நிறுவகத்தில் துணைப் பணிப்பாளர் நாயகமாகவும், தமிழ் மொழித் துறைப் பணிப்பாளராகவும் கடமை புரிந்த இவர், நீண்ட காலமாக கல்விப் பணிப்பாளராகவும் பணிசெய்தவர். சிரேஷ்ட கல்விமானான இவர், மனித விழுமியங்கள் தொடர்பாக, தொடர் கட்டுரைகளும் நூல்களும் எழுதி வருபவர்.

**கலாநிதி க. ந. வேலன்**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்றவர். நீண்ட காலம் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். யோகர் சுவாமிகள் தொடர்பான ஆய்விற்காக அமெரிக்கா, அரிசோனா பல்கலைக் கழகத்தில் 'கலாநிதி' பட்டம் பெற்றவர். சமய இலக்கிய ஆய்வுகளில் ஈடுபாடுமிக்கவர். இந்து சமய கலாசாரத் திணைக்களத்தில் இந்துக் கலைக்களஞ்சியம் தொகுதிகளின் வெளியீடுகளுக்கு பெரிதும் பங்களித்தவர், இலங்கைக் கம்பன் கழக ஸ்தாபகர்களுள் ஒருவர். தற்போது புலம்பெயர்ந்து லண்டனில் வசிக்கின்றார்.

**திருமதி சாந்தி நாவுக்கரசன்**

இலங்கையின் நிர்வாக சேவையுடன் இணைந்து கடந்த 15 ஆண்டுகளாக சேவை செய்து வருபவர். யாழ் மாவட்டத்தில் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றி தற்போது இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பிரதிப் பணிப்பாளராகக் கடமையாற்றுகின்றார்.

இந்து நாகரித்துறையின் சிறப்புப் பட்டதாரியான இவர், சமய, கலை இலக்கியத் துறைகளில், ஆர்வத்துடன் பணிபுரிந்து வருபவர். வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு தொடர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். அறநெறிப் பாடசாலைக்கல்வி இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு மிக்கவர்.

# பொருளடக்கம்


1. சுதந்திரத்திற்குப்பின் இலங்கையின் பொருளாதார மாற்றங்கள் - :- நா. பாலகிருஷ்ணன்

2. இலங்கையின் சுதந்திரமும் மலையக மக்களின் அரசியல் நிலைப்பாடும் - :- சோ. சந்திரசேகரன்

3. இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள், மலையகத் தமிழ் மக்கள் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கங்களும், விளைவுகளும் - :- மா.செ. மூக்கையா

4. கடந்த ஐந்து தசாப்த ஈழத்துத் தமிழ் நாவல் துறையில் ஏற்பட்ட மாற்றமும் வளர்ச்சியும் - :- க. குணராசா

5. சுதந்திரத்திற்குப் பின் ஈழத்துக் கவிதை மாற்றமும் வளர்ச்சியும் - :- செ. யோகராசா

6. சமகால ஈழத்தமிழ்ச் சிறுகதைகள் ஒரு பார்வை - :- ந. இரவீந்திரன்

7. இலங்கை சுதந்திரம் பெற்றபின் தமிழ் நாடகத்துறையில் ஏற்பட்ட மாற்றமும் வளர்ச்சியும் - :- காரை.செ.சுந்தரம்பிள்ளை

8. யோக சுவாமிகள் ஆன்மீக வாழ்வில் ஏற்படுத்திய தாக்கம் - :- க .ந .வேலன்

9. பாரம்பரிய சமயமும் நவீன சமயமும் - :- குமாரசாமி சோமசுந்தரம்

10. அறநெறிக்கல்வியின் தேவையும், வளர்ச்சியும் - :- சாந்தி நாவுக்கரசன்

# சுதந்திரத்திற்குப்பின் இலங்கையின் பொருளாதார மாற்றங்கள்

**நா. பாலகிருஷ்ணன்**

சுதந்திரமடைந்த காலத்தினைத் தொடர்ந்து இலங்கையில் பல பொருளாதார, சமூக, மாற்றங்கள் ஏற்பட்டன. அரசியல் சுதந்திரம் பல வழிகளில் சமூக பொருளாதார மாற்றங்களுக்கு ஒரு பெரும் உந்து சக்தியாக விளங்கியது. நாட்டில் நிலவி வந்த அடிப்ப டையான சனநாயக அரசியல் அமைப்பின் பிரதான இயல்புகளுக்கமைய, பொருளாதார சமூக மாற்றங்களின் தன்மையும் நிர்ணயிக்கப்பட்டதை அறியலாம். சனநாயக அரசியல் கட்டமைப்பு சமூக பொருளாதார அமைப்பு ஆகியவற்றிடையே ஊடாட்டங்கள் மெதுவாகவும், படிப்படியாகவும் நிலைமாற்றங்களைக் கொண்டு வந்தன. சுதந்திரமடைந்த காலத்திலிருந்து க்காலனித்துவத்தின் சாயலும் பொருளாதாரக் கட்டமைப்பில் தொடர்ந்து சென்றது.

## காலனித்துவப் பின்னணி

இலங்கையின் தற்கால பொருளாதார அமைப்பும் தொழிற்பாடுகளும் காலனித்துவ காலத்துடன் குறிப்பாக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து – உருவாக்கம் பெற்றன. இக்காலப் பகுதியில் தோற்றுவிக்கப்பட்ட பெருந்தோட்டப் பொருளாதாரமும் அதனைத் தழுவிய வெளிநாட்டு வர்த்தகமும் ஒரு நவீன பொருளாதார முறையினை அறிமுகப்படுத்தியது.

பெருந்தோட்ட விவசாயம், அதன் அடிப்படையிலான வெளிநாட்டு வர்த்தகம், அவற்றுடன் தொடர்புடைய வியாபார நிறுவனங்கள், நிதி வங்கி நிறுவனங்கள் மற்றைய துணை நடவடிக்கைகள் முதலானவை சேர்ந்த ஒரு நவீன பொருளாதாரத்துறை விருத்தியடைந்ததைக் காண்கின்றோம். "பெருந்தோட்டப் பொருளாதாரம்", "ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரம்", "இரட்டைப் பொருளாதாரம்" என்றெல்லாம் விபரிக்கப்பட்டும் வந்துள்ளதனை அறியலாம்.

இப்பொருளாதார அமைப்பு, குறைபாடுகளையும் விரும்பத்தகாத பாதிப்புகளையும் கொண்டிருந்த பொழுதிலும், பல நன்மைகளையும் தந்துள்ளது. அக்காலந்தொட்டு அண்மைக்காலம் வரை பெருந்தோட்டப் பொருளாதாரம் மேலாண்மை செலுத்தி வந்ததனையும் அறிய முடிகின்றது. சுதந்திரத்திற்குப் பின்னரான காலத்திலும் இத்துறையின் செல்வாக்கு நீடித்திருந்தது.

சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இலங்கையின் எதிர்கால பொருளாதார அபிவிருத்தி பற்றிய சிந்தனையிலும், கொள்கை வகுத்தலிலும் இத்துறையின் முக்கியத்துவம் தொடர்ந்தது. பல தசாப்தங்களாக இலங்கையின் அந்நியச் செலாவணி தேயிலை, இறப்பர், தெங்குப் பொருள்கள் ஆகிய விவசாய ஏற்றுமதிகளிலிருந்தே பெறப்பட்டது. உணவுப் பொருள்கள், மூலப் பொருள்கள் முதலானவற்றின் இறக்குமதிகளை நிதிப்படுத்துவதற்கு ஏற்றுமதி வருவாய்கள் தேவைப்பட்டன.

பெருந்தோட்டப் பொருளாதாரத்தினூடாக நாட்டிற்கு, ஒப்பீட்டளவில், கணிசமான அளவு தலா வருமானத்தையும் பெற முடிந்தது. ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தினூடாக அரசாங்கத்தின் பெரும் பகுதி வருமானமும் பெறப்பட்டது. அரச துறையின் உயர்ந்தளவான

செலவீடுகள் தொடர்ந்திருப்பதற்கு இது வழிவகுத்தது எனலாம். அபிவிருத்தியடைந்து செல்லுகின்ற சூழ்நிலையில் நாட்டின் அபிவிருத்தி தொடர்பான இறக்குமதி தேவைகளைத் தேடிக் கொள்வதில் ஏற்றுமதித் துறையின் முக்கியத்துவம் தொடர்ச்சியாகச் சென்றதனையும் வலியுறுத்த முடிகின்றது.

பெருந்தோட்ட ஏற்றுமதி விவசாயத்திலிருந்து பல நன்மைகள் கிடைத்துள்ள பொழுதிலும், அதன் அடிப்படையிலான பொருளாதார பலவீனங்களும் நன்கு உணரப்பட்டன. சுதந்திரத்தின் பின்னரான காலத்தில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியும் சீராக்கமும் பெருந்தோட்ட விவசாயம் பற்றிய எதிர்காலத்துடன் இணைந்ததாகவே காணப்பட்டது. இலங்கையில் மட்டுமல்ல, மற்றைய முதல் விளைவுகளைத் தழுவிய குறைவிருத்தி நாடுகளிலும் இத்தகைய ஏற்றுமதி வர்த்தகம் தொடர்பாக சர்வதேச ரீதியிலான நிலைப்பாடு ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் மேலோங்கி இருந்தது.

இலங்கையின் அனுபவத்தில் முதல் விளைவு துறையிலும் அது சார்ந்த வெளிநாட்டு வர்த்தகத்திலும் பல பிரச்சினைகள் எதிர்நோக்கப்பட்டன. முக்கியமாக, பிரதான விவசாய ஏற்றுமதிகளின் விலைகளில் சரிவு நிலை அனுபவிக்கப்பட்டது.

ஏற்றுமதிகள் - இறக்குமதிகள் தொடர்பாக வர்த்தக மாற்றுவீதத்தின் வீழ்ச்சி அறுபதுகளிலிருந்து நாட்டின் வெளிநாட்டு வர்த்தகத்தில் தொடர்ச்சியாக எதிர்நோக்கப்பட்டது. காலப்போக்கில் இறக்குமதிகளின் விலைகள் விரைவாக அதிகரித்தன. ஆனால் ஏற்றுமதிப் பொருள்களின் விலைகள் தேங்கி நின்றன. இதனால் இரண்டினையும் பொறுத்த ஒப்பீட்டு ரீதியான விலை விகிதங்கள் இலங்கையினைப் பொறுத்து பாதகமாகவே சென்றன. இதனை வர்த்தக மாற்று வீதத்தின் வீழ்ச்சியாக நாடு அனுபவித்தது. இதனால் ஏற்றுமதி வருவாய்களின், நாட்டின் இறக்குமதிகளைப் பொறுத்த கொள்வனவுச் சக்தி வீழ்ச்சியடையமாட்டாது; நாட்டின் இறக்குமதிகளைப் பெறுவதற்கு தேவையான ஏற்றுமதி அலகு அதிகரிக்க வேண்டியிருந்தது.

இத்தகைய வர்த்தக மாற்று வீதத்தின் வீழ்ச்சியினால் இலங்கை பெரும்பாதிப்பினை அடைந்தது. ஏற்றுமதி விவசாயப் பொருள்களுக்கான உலக சந்தையிலான கிராக்கி கூடுதலாக அதிகரிக்காத நிலையில், மற்றைய முதல் விளைவு ஏற்றுமதி நாடுகளுடன் இலங்கை கடுமையாகப் போட்டியிட வேண்டியிருந்தது.

இதில் நாடு வெற்றியினைச் சாதிக்க முடியவில்லை. மேலும் இத்துறையில் உள்நாட்டு ரீதியான பிரச்சினைகள் வேறு எதிர்நோக்கப்பட்டன. உற்பத்தித்திறன் தேங்கிய நிலையிலும், உற்பத்திச் செலவுகள் அதிகரித்துச் சென்றதனாலும், ஏற்றுமதித் துறையின் - குறிப்பாக தேயிலை உற்பத்தியில் - இலாபத்தன்மையும் பாதிக்கப்பட்டதனை அறுபதுகளுக்குப் பின்னதாகக் காணமுடிந்தது. பெருந்தோட்டத்துறையின் எதிர்காலம் பற்றிய உறுதியில்லாத நிலைகளும் இத்துறையின் உற்பத்தி ஆற்றலைப் பாதித்தன.

எழுபதுகளில் இத்துறையில் மேற்கொள்ளப்பட்ட நிலச்சீர்திருத்தம், “தேசிய மயமாக்கல்” போன்றவற்றால் ஏற்பட்ட விளைவுகள் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தின. பெருந்தோட்டத் துறையின் பங்களிப்பு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் முக்கியத்துவம் கொண்டதாக இருந்தது என்பது மறுப்பதற்கில்லை. ஆனாலும் காலப்போக்கில் இத்துறை ஒரு திடகாத்திரமான, உற்சாகமான, ஆரோக்கியமான நிலையில் தொடர்ந்து செல்ல முடியவில்லை. வெளிநாட்டுக் காரணிகளும் உள்நாட்டுக் காரணிகளும் சேர்ந்து இதற்குப் பொறுப்பாக இருந்துள்ளன.

## அரசும் பொருளாதாரமும்

இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னரான காலத்தில் பொருளாதார சமூக அபிவிருத்தியின் பல்வேறு பரிமாணங்களை நோக்குமிடத்து, அதில் அரசின் முனைப்பான பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. இது பற்றிய விளக்கத்தில் சமூக – பொருளாதார அபிவிருத்தி எவ்வகையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் முன்னெடுத்துச் செல்லப்பட்டது என்பதை அறிய முடிகின்றது. குறைவிருத்திப் பொருளாதாரங்களின் பின்னணியில் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான அரசின் பங்களிப்பு முக்கியமானது என்ற எண்ணமும் கருத்தும் ஐம்பதுகளிலிருந்து வலியுறுத்தப்பட்டது. இது குறித்துக் கருத்து வேறுபாடுகளும் இருந்து வந்துள்ளன. குறைவிருத்திப் பொருளாதாரங்களில் அரசின் பங்களிப்பு முனைப்பானதாக இருத்தல் வேண்டும் என்பதற்குச் சார்பான கருத்தும் கொள்கை நிலைப்பாடும் ஐம்பதுகளின் பிற்பகுதியிலிருந்து வலுப்பெற்றன. இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக ஐம்பதுகளுக்குப் பின்னர் அவ்வாறான நிலைப்பாடு இருந்து வந்துள்ளது.

அபிவிருத்திப் பின்னணியில் அரசின் முனைப்பான தொழிற்பாடு இலங்கையில் ஐம்பதுகளின் நடுப்பகுதியிலிருந்து விருத்தி அடைந்ததனை பிரதானமாக மூன்று பகுதிகளாக நோக்க முடிகின்றது. பொருளாதாரத்தின் உட்கட்டுமான அமைப்பு தொடர்பான விரிவாக்கம் ஐம்பதுகளிலிருந்து அரசினால் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. போக்குவரத்து நெடுஞ்சாலைகள், மின்சாரம், நீர்ப்பாசனம் முதலானவற்றில் அரசின் முதலீடுகளும் தொழிற்பாடும் பெருமளவுக்கு இடம் பெற்றதைக் காணலாம். வரலாற்று ரீதியாக பெருந் தோட்டப் பொருளாதாரத்துடன் ஆரம்ப கட்டங்களில் தொடர்பு கொண்டதாகவும், பின்னர் பொருளாதாரத்தின் மற்றைய துறைகளுடன் தொடர்பு ஏற்படுத்திய முறையிலும் உட்கட்டுமான அமைப்பு பெருமளவுக்கு விரிவாக்கப்பட்டதனைக் குறிப்பிடுதல் வேண்டும்.

அரச முதலீடுகளும் அரச நடவடிக்கைகளும் உட்கட்டுமான விரிவாக்கத்துடன் கூடுதலாக ஈடுபாடு கொண்டதனால் அத்தேவைகளைக் கருதி அரசநிர்வாகமும் விரிவடைந்துள்ளதைக் காணலாம். ஐம்பதுகளிலிருந்து சமூகப் பொருளாதார ரீதியில் அரச துறையின் ஒரு பிரதான பகுதி உட்கட்டுமான அமைப்பின் விரிவாக்கத்துடன் சேர்ந்துள்ளது என்பதை வலியுறுத்த முடிகின்றது.

அரசின் முனைப்பான பங்களிப்பு நேரடியான அபிவிருத்தி முயற்சிகளில் ஈடுபட்டதனாலும் ஏற்பட்டுள்ளது. இது ஐம்பதுகளின் பிற்பகுதியிலிருந்து படிப்படியாக அதிகரித்து வந்ததனைக் காண முடிகின்றது. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் "கலப்புப் பொருளாதார" அமைப்பு பின்பற்றப்பட்டு வந்தது. இதில் தனியார் துறையும் சேர்ந்த அமைப்பாக இயங்கி வந்துள்ளது. இந்த "அபிவிருத்தி மாதிரியத்தில்" பல ஆண்டுகளாக அரச துறையின் மேலாதிக்கம் கூடுதலாக இருந்துள்ளது. அடிப்படையான மாற்றங்களை விரும்பி நின்ற அரசியல் கருத்து நிலைப்பாடும், சோஷலிச கோட்பாடுகளின் செல்வாக்கு மேலோங்கி நின்றதும் அரசின் கூடுதலான பங்களிப்பு எதிர்பார்க்கப்பட்டது.

இலங்கையில் ஐம்பதுகளிலிருந்து ஆட்சி நடாத்திய அரசாங்கங்களினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் நடந்த கூட்டாட்சியிலும், அடிப்படை மாற்றங்களையும் சோஷலிச சார்பான கொள்கைகளையும் விரும்பிய நிலைப்பாடு வலுப்பெற்றது. பொருளாதார அமைப்பில் உற்பத்திச் சாதனங்களின் உடைமை தொடர்பாக அரசின் முக்கியத்துவம் அதிகரித்தது. நிதி, வங்கி அமைப்பு

போக்குவரத்து, வர்த்தகம், கைத்தொழில் முதலானவற்றில் அரச உடைமையும், பங்களிப்பும் அதிகரித்ததனைக் காண்கிறோம். அரச தலையீடு நேரடியான அபிவிருத்தி முயற்சிகளும் – பொருளாதாரத்தினை வழிப்படுத்தும் நோக்குடன் – கூடுதலாக மேற்கொள்ளப்பட்டதனையும் குறிப்பிடுதல் வேண்டும்.

சமூக முன்னேற்றம், அபிவிருத்தி தொடர்பாக இலங்கையில் அரச தலையீடு என்பதன் இன்னொரு முக்கியமான அம்சத்தையும் தொடர்புபடுத்திக் கூறுவது பொருத்தமாகும். நலன் பேணும் அரசு என்ற பரிமாணம் இங்கு சுட்டிக் காட்டுதல் தேவையாகின்றது. சுதந்திரமடைந்த கட்டத்திலிருந்து இலங்கையில் ஏற்பட்ட சமூகப் பொருளாதார அபிவிருத்தி பற்றித் தனியே பொருளாதார நோக்கில் எடுத்துக் கூறுவது முழுமை பெறுவதாக இல்லை. அரசின் பங்களிப்பினூடாக, குறிப்பாக நலன் பேணும் அரசு என்ற பங்களிப்பினூடாகவும் சமூக மாற்றம், முன்னேற்றம் என்பவற்றை அணுகுவது பொருத்தமாகும். இதனை எடுத்துக் காட்டுதல் அதனுடைய முக்கியத்துவத்தினை வெளிக் கொணர உதவுகின்றது. இது ஒரு "அரசியற் பொருளாதார" பரிமாணத்தைக் கொண்டதாக அமைகின்றது.

சுதந்திரத்திற்கு முன்பாகவே இலங்கையில் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து பிரதிநிதித்துவ அரசியல் முக்கியத்துவம் அடையவே சமூகநலன் துறை அரசின் கூடிய கவனத்துக்கு உள்ளானது. இப்போக்கு சுதந்திரத்திற்குப் பின்னர் முக்கிய கொள்கை நிலைப்பாடாக வகுக்கப்பட்டது. அபிவிருத்தி குறிக்கோளின் முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகின்றது. இக்கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டதுடன் நாட்டின் குடிசனத் தொகை ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் அதிகரித்ததினால் அதற்கான நிதியீட்டமும் பெருமளவாக அதிகரித்தது. காலப்போக்கில் சமூக நலன் செலவீடுகள் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் பெரும் சுமையினையும் ஏற்படுத்தியது. ஆனாலும் இவற்றின் சமூக – பொருளாதார நன்மைகள் மக்களிடத்தே பரவலாகச் சென்றடைந்தன.

நிதி, பொருளாதாரப் பிரச்சினைகள் இக் கொள்கையினால் தோற்றுவிக்கப்பட்ட பொழுதிலும், சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சமூக நலன் பேணல், சுதந்திரத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் பிரதான மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளது.

இலங்கை சுதந்திரம் பெற்ற கட்டத்திலிருந்து எதிர்கால அபிவிருத்தி பற்றிய சிந்தனைகளும் கொள்கை விளக்கங்களும் முன்வைக்கப்பட்டன. ஐம்பதுகளிலும், அறுபது களிலும் பொருளாதார அபிவிருத்தி பற்றிய உபாயங்களும் அவற்றின் பிரதான கொள்கை நிலைப்பாடுகளும் வழிமுறைகளும் கூடியளவுக்கு தெளிவாக்கம் பெற்றன. ஏற்கனவே இருந்து வந்த பெருந்தோட்ட விவசாயத்துறையினைப் பேணுதல், சிலவற்றைப் புனரமைத்தல், உலக சந்தையில் மாற்றமடைந்து வருகின்ற சூழ்நிலைக்கேற்ப இத்துறை உற்பத்தியினை சீராக்கம் செய்தல் போன்ற முக்கியமான கொள்கை ஒழுங்குகள் வரையறை செய்யப்பட்டன.

பொருளாதாரத்தின் பிரதான துறைகள் தொடர்பாக உட்கட்டுமான விரிவாக்கம் பற்றிய கொள்கையும், நடைமுறை ஒழுங்குகளும் முக்கியத்துவம் பெற்றன. ஐம்பதுகளிலும், அறுபதுகளிலும் பிரதான கொள்கை வகுத்தலில் நாட்டின் பொருளாதாரத்தைப் பல்லினப் படுத்துதல் வலியுறுத்தப்பட்டது. தனியே ஓரிரு துறைகளில் தங்கியிருப்பதைத் தவிர்த்து பல்துறை அபிவிருத்தியினை மேற்கொள்வதும் வலியுறுத்தப்பட்டது. இந்த அபிவிருத்தி நோக்கில் கைத்தொழிலாக்கம், உள்நாட்டு விவசாயம் போன்றவற்றின் அபிவிருத்தி முக்கியத்துவம் பெற்றது.

## உள்நாட்டு விவசாயம்

சென்ற ஐந்து தசாப்தங்களில் இலங்கையில் ஏற்பட்ட பிரதான பொருளாதார மாற்றங்கள் உள்நாட்டு - குடியான - விவசாயத்துறையுடன் தொடர்பு கொண்டவையாக இருந்துள்ளன.

உள்நாட்டு விவசாயத்தின் அபிவிருத்தி நாட்டின் பெருமளவு குடும்பங்களின் பொருளாதார, சமூக நன்மைகள் குறித்து முக்கிய தாக்கத்தினை ஏற்படுத்தும் துறையாகக் காணப்பட்டுள்ளது. நாட்டில் வாழ்பவர்களில் பெருந்தொகையினர் கிராமங்களில் வாழ்பவர்கள். விவசாயத்தையே நம்பி வாழ்பவர்கள். இலங்கையில் உள்நாட்டு குடியான (சிறுநில) விவசாயம் ஒரு பாரம்பரிய, பின்தங்கிய துறையாக இருந்துள்ளது. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட நவீன பெருந்தோட்டப் பொருளாதாரமும் அதனைத்தழுவிய வெளிநாட்டு வர்த்தகமும் விருத்தியடைந்த பொழுதிலும், இதனால் உள்நாட்டு விவசாயம் நன்மை அடையவில்லை. மேலும் சில விமர்சகர்களுடைய கருத்துப்படி பெருந்தோட்டத்தின் நீண்ட விருத்தி உள்நாட்டு விவசாயத்தின் நலன்களைப் பாதித்தும் உள்ளது எனவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

உள்நாட்டு விவசாயத்தின் எதிர்கால அபிவிருத்தியின் பிரதான நோக்கங்களாக, பொருளாதாரத்தைப் பல்லினப்படுத்துதல், விவசாயத்தில் உற்பத்தித்திறனை அதிகரித்தல், விவசாயக் குடும்பங்களின் வருமானத்தைக் கூட்டுதல் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல், வேலை வாய்ப்புகளை அதிகரித்தல், கிராமியப் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துதல் முதலானவை முக்கியமாக இடம்பெற்றன. உள்நாட்டு விவசாயத்தின் எதிர்கால அபிவிருத்தியில் அரசாங்க அடிப்படையில் வகுத்த ஒழுங்குகள் முக்கியமானவையாக இருந்துள்ளன. உள்நாட்டு விவசாயத்துறை அபிவிருத்தியிலும் பொதுவாக இத்துறையின் சமூக சார்பான மாற்றத்திலும் நில அபிவிருத்திக் குடியேற்றத்திட்டங்கள் பிரதான பங்கினை வகித்துள்ளன. நில அபிவிருத்தி, நிலக்குடியேற்றம், நீர்ப்பாசனம் ஆகியவற்றுடன் அரசின் ஈடுபாடு சுதந்திரத்திற்கு முன்னராகவே ஆரம்பித்தது, அதற்குப் பின்னரும் தொடர்ந்துள்ளதைக் காண்கின்றோம். நில அபிவிருத்தி, நிலக் குடியேற்றம், நீர்ப்பாசனம் போன்றவை வரண்ட வலயப் பிரதேசத்தில் பாரிய திட்டங்களினூடாக மேற்கொள்ளப்பட்டன.

இவற்றிற்காக அரசு பெருமளவு முதலீடுகளை பல தசாப்தங்களாக செய்துள்ளது. இக்குடியேற்றத் திட்டங்கள் மூலம் குடிசன மாற்றமும் பிரதேச ரீதியாக ஏற்பட்டது. அரசாங்கம் பெருமளவிற்கு முடிக்குரிய காணிகளை எடுத்து விவசாயக் குடும்பங்களுக்கு பங்கீடு செய்த பொழுது அவற்றிற்குத் தேவையான பல்வேறு வசதிகளையும் அமைத்துக் கொடுக்க வேண்டியிருந்தது. ஐம்பதுகளிலிருந்து அரசாங்கத்தினால் பெருமளவு நிலப் பங்கீடு செய்யப்பட்டது. இலங்கையில் உள்நாட்டு விவசாயத்தின் வளர்ச்சியிலும், மாற்றத்திலும் நில அபிவிருத்தி, நிலக்குடியேற்றம், நீர்ப்பாசனம் ஆகியன பிரதான அடிப்படைப் பங்களிப்பினைச் செய்துள்ளன. இவற்றின் விளைவாக நாட்டின் பயிர் செய்யும் நிலத்தின் பரப்பு பெருமளவுக்கு அதிகரிப்பதற்கு - குறிப்பாக வரண்ட வலயப் பிரதேசத்தில் - வழிவகுக்கப்பட்டது. ஐம்பதுகளுக்குப் பின்னரான தசாப்தங்களில் இலங்கையின் விவசாயத்துறையின் "விரிவாக்கப் பயிர்ச்செய்கை" முறைக்கும் இவை இடமளித்தன.

நிலக்குடியேற்றம், நில அபிவிருத்தி, நீர்ப்பாசனம், விவசாயப் பொருளுற்பத்திக்கு விலை உதவி, விற்பனை வசதிகள், விவசாய உள்ளீடுகள் வழங்கல், கொடுகடன் வசதிகள் முதலான கொள்கைகளும் நடவடிக்கைகளும் உள்நாட்டு விவசாயத்தில் குறிப்பாக நெல் பயிர்ச்செய்கையினை மையப்படுத்திய துறையில் - ஐம்பதுகளுக்குப் பின்னர் பல முன்னேற்றங்களைக் கொண்டு வந்துள்ளன. விவசாயத்துறையின் நிலைமாற்றங்கள் இக்காலப்

பகுதியில் பிரதானமாக அமைந்தன. உள்நாட்டு விவசாயத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் இரண்டு காலகட்டங்களினூடாகச் சென்றுள்ளதாகக் கருதலாம். விரிவாக்கப் பயிர்ச்செய்கை, செறிவுப் பயிர்ச்செய்கை என வேறுபடுத்தலாம். முதலாவது காலகட்டத்தில் நெற் பயிர்ச் செய்கையில், பயிர்ச் செய்கையின் நிலப் பரப்பு பெருமளவுக்கு அதிகரித்ததன் விளைவாக உற்பத்தி கூடிச் சென்றது. இதே காலப்பகுதியில் இத்துறையில் வேலைவாய்ப்பு அதிகரித்தது. இக்காலப் பகுதி ஏறத்தாழ அறுபதுகள் மட்டும் சென்றது. இரண்டாவது காலப்பகுதியில் பயிர்ச்செய்கை நிலத்தைச் செறிவாக்கி புதிய பயிர்ச்செய்கை முறைகளைப் புகுத்தி விளைவு பெருமளவுக்கு அதிகரிக்க முடிந்தது.

எழுபதுகளிலிருந்து ஏற்பட்ட "பசுமைப் புரட்சி" இதற்கு வழிவகுத்தது. புதிய விதை இனங்களையும், இரசாயன வளமாக்கிகளையும் பயன்படுத்தி, விளைவினை அதிகப்படுத்திய முறையாக இலங்கையிலும் வேறு ஆசிய நாடுகளிலும் இது அறுபதுகளின் பிற்பகுதியிலிருந்து பரவியது. பசுமைப் புரட்சி உற்பத்தி அதிகரிப்பினையும் வருமான அதிகரிப்பினையும் கொண்டு வந்துள்ளது. இலங்கையில் உள்நாட்டு விவசாயத்துறையில் இன்னும் குறைபாடுகளும், பிரச்சினைகளும் இத்துறையில் தொடர்ந்திருப்பினும் அங்கு குறிப்பிடத்தக்க மாற்றமும் முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளன என்பதையும் வலியுறுத்த முடிகின்றது. உற்பத்தித் திறன் உயர்வு, உற்பத்திப் பெருக்கம், விவசாய வருமான விரிவாக்கம், பயிர்ச்செய்கை முறைகளில் மாற்றங்கள், தொழில்நுட்ப மாற்றங்கள், நெல் உற்பத்தியில் ஏறத்தாழ தன்னிறைவு, வேலை வசதிகளின் அதிகரிப்பு முதலான பிரதான முன்னேற்றங்களையும் நிலைமாற்றங்களையும் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

## கைத்தொழில் வளர்ச்சி

ஐம்பதுகளுக்குப் பிற்பட்ட காலத்தில் இலங்கைப் பொருளாதாரத்தின் அமைப்பு சார்பான மாற்றங்கள் குறித்து கைத்தொழில் கொள்கையும் அபிவிருத்தியும் பிரதான இடத்தைப் பெறுகின்றன. இலங்கையின் கைத்தொழில் அபிவிருத்தி ஐம்பதுகளின் நடுப்பகுதியிலிருந்து வெவ்வேறு காலகட்டங்களினூடாக முன்னெடுத்துச் செல்லப்பட்டது. 1958 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பத்து ஆண்டுத் திட்டம் (Ten Year Plan 1958-68) சரியாக நடைமுறைப்படுத்தப் படாவிட்டாலும், இத்திட்டம் நாட்டின் பொருளாதாரத்தின் அபிவிருத்தி பற்றியும், அதில் வெவ்வேறு துறைகளின் பங்களிப்பினைப் பற்றியும் எதிர்காலத்தில் எவ்விதமாகச் செல்ல வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளது. அத்தகைய கருத்துத் தெளிவாக்கத்தில் கைத்தொழில் வளர்ச்சிக்கும் முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. இக் காலகட்டத்தில் மற்றைய குறைவிருத்தி நாடுகளிலும் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பான உரையாடல் பிரசித்தி பெற்றதனையும் அறியலாம்.

குறைவிருத்திப் பொருளாதாரங்களில் கைத்தொழில் அபிவிருத்தியின் பங்களிப்புப் பற்றி வலியுறுத்துமிடத்து முதலாவது பிரதான கட்டமாக "இறக்குமதி பதிலீட்டுக் கைத் தொழிலாக்கம்" முன்வைக்கப்பட்டது. ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்டு வருகின்ற கைத்தொழில் பொருள்களை உள்நாட்டில் உற்பத்தி செய்து கைத்தொழில் அபிவிருத்தியினை முன்னெடுத்துச் செல்லுதல், இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழில் அபிவிருத்தி என விபரிக்கப் பட்டுள்ளது. இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்தி அனுபவங்களை நோக்குமிடத்து அறுபதுகளின் தொடக்கத்திலிருந்து பின்பற்றப்பட்ட கைத்தொழில் அபிவிருத்தி இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில் அபிவிருத்தியாகவே மேற்கொள்ளப்பட்டது.

அரசாங்கம், தனியார்துறை கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்காக பல ஊக்குவிப்புகளை வழங்கியது. ஆனாலும் இவை பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை. அதே நேரத்தில் நாட்டின் சென்மதிநிலுவை நெருக்கடியினை அரசாங்கம் எதிர்நோக்கிய பொழுது இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடுகளும் அறுபதுகளில் ஆரம்பிக்கப் பட்டன. தனியார்துறைக்கு வழங்கப்பட்ட ஊக்குவிப்புகளை உபயோகித்து தனியார் துறை முன்பு இல்லாத அளவிற்கு நாட்டின் கைத்தொழில் வளர்ச்சியில் ஈடுபட்ட அனுபவம் அறுபதுகளில் இலங்கையில் முக்கியமானதாக அமைந்துள்ளது.

ஐம்பதுகளின் பிற்பகுதியிலிருந்து அரசாங்கத்துறையின் முயற்சிகளும், இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்கள் உட்பட முக்கியமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டது. தனியார்துறை சிறு கைத்தொழில்களிலும், நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில்களிலும் பெருமளவுக்கு ஈடுபடுதல் பற்றிய கொள்கை நிலைப்பாடு வரையறுக்கப் பட்டது. அதே நேரத்தில் அரசாங்கம் நடுத்தர, பாரிய கைத்தொழில்களிலும், கனரக அடிப்படைக் கைத்தொழில்களிலும் கவனம் செலுத்தும் எனவும் அரசாங்கக் கொள்கை வகுக்கப்பட்டது.

இப் பாகுபாடு ஐம்பதுகளிலிருந்து பெருமளவுக்கு ஒரு முக்கிய வழிகாட்டியாக இருந்துள்ளது. அறுபதுகளிலிருந்து இலங்கையில் கைத்தொழில் அபிவிருத்தி தொடர்பாக பல அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் அமைக்கப்பட்டன. இவையும் நாட்டின் கைத்தொழில் அபிவிருத்தியில் பிரதான பங்கினை எடுத்தன. அநேகமான அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்களும் நிறுவனங்களும் பாரிய அடிப்படைக் கைத்தொழில்களை விருத்தி செய்வதற்காக அமைக்கப்பட்டன. இக் காலப்பகுதியில் அரசதுறையின் விரிவாக்கம் ஏற்பட்டுச் சென்றது. கைத்தொழில் துறையிலும் மற்றைய துறைகளிலும் பல அரச உற்பத்தி நிறுவனங்கள் நிறுவப்பட்டன.

தனியார் துறைக் கைத்தொழில்களும், அரசதுறைக் கைத்தொழில்களும் அறுபதுகளிலும், எழுபதுகளிலும் இறக்குமதிப் பதிலீட்டைத் தழுவிய கைத்தொழில் அபிவிருத்திக்கு முக்கிய பங்களிப்பினைச் செய்தன. ஆனாலும் இறக்குமதிப்பதிலீட்டுக் கைத்தொழில்கள் வளர்ச்சி இறக்குமதிகளை அறுபதுகளின் நடுப்பகுதியிலிருந்து எதிர்நோக்க வேண்டியிருந்தது. அநேகமான கைத்தொழில்கள் பெருமளவுக்கு இறக்குமதி மூலப்பொருள்களிலும் வேறு இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளிலும் தங்கியிருந்தன. இதனால் கைத்தொழில் அபிவிருத்திக்கான இறக்குமதித் தேவைகளும் அதிகரித்தன. இக் காலப்பகுதியில் நாட்டின் அந்நியச் செலாவணிப் பிரச்சினையும் மோசமான நிலையினை அடையவே கட்டுப்பாடுகளின் பாதிப்பும் அதிகரித்தது.

இக் கஷ்டமான சூழ்நிலையில் போதியளவு மூலப் பொருள்களையும் உள்ளீடுகளையும் இறக்குமதி செய்ய முடியவில்லை. இதனால் தனியார் துறையிலும், அரச துறையிலும் - கூடுதலாக தனியார்துறையில் - முழு உற்பத்தி இயலளவு மட்டத்தில் இயங்க முடியவில்லை. அந்நியச் செலாவணி நெருக்கடி அறுபதுகளிலும், எழுபதுகளிலும் கைத்தொழில் அபிவிருத்தியினைப் பெரிதும் பாதித்தது.

இக் காலகட்டத்தில் கைத்தொழில் அபிவிருத்தி மட்டுமல்லாது பொதுவாக பொருளாதாரத்தின் பல துறைகளின் உற்பத்தி ஆற்றல் பாதகமான நிலைக்குத் தள்ளப்பட்டது. இக்கட்டத்தில் எழுபதுகளின் நடுப்பகுதியில் கைத்தொழில் அபிவிருத்தி உபாயத்தில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. ஏற்றுமதி சார்பான கைத்தொழில், அபிவிருத்தி முயற்சிகள்

கூடியளவுக்கு ஊக்குவிக்கப்பட்டன. இப்போக்கு, இறுதியில் இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையிலிருந்து விலகி ஏற்றுமதி சார்பான கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கை, தாராளமயமாக்கலுடன், 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உயர்ந்த இடத்தைப் பெற்றது. இது இன்னொரு பிரதான நிலை மாற்றத்தை எழுபதுகளுக்குப் பின்னர் கொண்டுவந்தது.

## சமூகநலன் சார்பு

சென்ற ஐம்பது வருடகாலத்தில் இலங்கையின் அபிவிருத்தி அனுபவத்தினை நோக்குமிடத்து, அங்கு இரண்டு அடிப்படையான வேறுபட்ட போக்குகளை அவதானிக்க முடிகின்றது. பொருளாதாரத்தின் தேசிய வருமான அடிப்படையிலான வளர்ச்சி பொதுவாகக் குறைந்ததாகவே காணப்பட்டுள்ளது. பொருளாதாரத்தின் மொத்த ரீதியான வளர்ச்சியும் குறைந்ததாகவே காணப்பட்டுள்ளது. பொருளாதாரத்தின் மொத்த ரீதியான வளர்ச்சியினை ஒரு பிரதான அளவு கோலாகப் பயன்படுத்துவது வழக்கம். அத்தகைய பார்வையில் பொருளாதாரத்தின் சாதனை நல்லதாக இருக்கவில்லை. இது பொதுவான உற்பத்தித்திறன் குறைந்த தன்மை, முதலீடும் சேமிப்பும் ஆரோக்கியமான வளர்ச்சி ஏற்படாதநிலை, நாட்டின் வேலையின்மை அதிகரித்த போக்கு போன்ற நிலைமைகள் பொருளாதாரத்தின் பலவீனங்களாகத் தோற்றமளித்தன.

அறுபதுகளிலும், எழுபதுகளிலும் தேசியப் பொருளாதாரத்தின் சராசரி ஆண்டு வளர்ச்சி 4 சதவீதமாக இருந்துள்ளது. இக் காலப்பகுதியில் நாட்டின் மொத்த குடிசனத் தொகையின் வளர்ச்சி வருடத்திற்கு 2.5 சதவீதமாக காணப்பட்டுள்ளது. ஆகவே நாட்டின் தலாவருமான வளர்ச்சி வருடமொன்றுக்கு 1.5 சதவீதத்தில் மட்டும் அதிகரித்துள்ளது. இரண்டு சதவீதத்திற்குக் குறைவான சராசரி தலா வருமான வளர்ச்சி ஒரு உற்சாகமான முன்னேற்றத்தைத் தரவில்லை. குறைந்த தலாவருமானம் பெறுகிற குறைவிருத்திப் பொருளாதாரங்களில் இலங்கையும் ஒன்றாக அநேகமான ஆண்டுகளில் இருந்ததைக் காணலாம்.

இது இவ்வாறாக இருப்பினும், காலப்போக்கில் ஒரு நாட்டின் சமூக பொருளாதார நிலை மாற்றத்தினை தனியே குறுகிய நோக்கில் வளர்ச்சிக் குறிகாட்டி மூலம் பார்ப்பதும் சரியல்ல. இத்தகைய கண்ணோட்டம் எழுபதுகளிலிருந்து வலியுறுத்தப்பட்டுள்ளது. தேசிய வருமான வளர்ச்சியினை மையப்படுத்திய நோக்கிலிருந்து விலகி சற்று பரந்த சமூகக் குறிகாட்டிகளின் வழியாக அணுகுவது பொருத்தமாகும். அத்தகைய "சமூகக் குறிகாட்டிகள்" மூலம் நோக்குமிடத்து இலங்கையின் சமூக - பொருளாதார அபிவிருத்திச் சாதனை போற்றத்தக்கதாக உள்ளது. பல தசாப்தங்களாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டு வந்த இலவசக் கல்வி, இலவச சுகாதார வசதிகள், மானிய உணவு விநியோகம் போன்றவை பல நன்மைகளை குறிப்பாக, குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு கொண்டு வந்துள்ளது. விருத்தியடைந்துள்ள முறைசாராக் கல்வி முறை நாட்டில் கல்வி வளர்ச்சியில் பரவலான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரதேச ரீதியாக இன்னும் கல்வி வசதிகளில் ஏற்றத் தாழ்வுகள் காணப்படுமிடத்திலும், இலவசக் கல்வி முறையினூடாக ஏற்பட்ட விரிவாக்கம் ஐம்பதுகளிலிருந்து சமுதாயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. நாட்டின் கல்வியறிவு குறிப்பிடத்தக்களவுக்கு உயர்ந்துள்ளது.

நாட்டின் கல்வியறிவின் வளர்ச்சியினை பொதுவான முறையில் மொத்த வயது வந்தவர்களின் தொகையில் எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் தொகை எவ்வளவாக உள்ளது

என்ற குறிகாட்டியினால் கூறுமிடத்து, ஐம்பதுகளின் முற்பகுதியில் 65 சதவீதமாக இருந்து எண்பதுகளின் முடிவில் 85 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதில் பெண்களின் நிலைமை குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. சமூக ரீதியாக கல்வி வசதிகளின் விரிவாக்கத்தில், பெண்களும் காலப்போக்கில் கூடுதலாகப் பங்கெடுத்துள்ளனர்.

அரசினால் தொடர்ந்து வழங்கப்பட்டுள்ள சுகாதார வசதிகளின் நன்மைகளும் ஐம்பதுகளுக்குப் பின்னர் பரவலாக அதிகரித்துள்ளன. இத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் நல்ல விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. இது தொடர்பாக சில முக்கிய குறிகாட்டிகள் பயனுடையவை. 1950இல் நாட்டின் குழந்தைகளின் இறப்பு, ஆயிரம் பிறப்புகளுக்கு 90 ஆக இருந்து, 1990 இல் 20க்கு வீழ்ச்சியடைந்துள்ளது. மேலும், சுகாதார வசதிகளின் பரவல் மக்களின் வாழ்வு எதிர்பார்ப்புக் காலத்தில் பெருமளவு மாற்றத்தைக் கண்டுள்ளது. சராசரியாக எதிர்பார்க்கும் வாழ்வுக் காலம், பிறந்தவர்கள் எவ்வளவு ஆண்டுகள் வாழக்கூடிய சாத்தியம் பற்றிக் கூறுகின்றது. அது நீடித்துச் சென்றால் அடிப்படையில் நல்ல சுகாதார வசதிகள் கிடைக்கின்றன எனக் கருதலாம். இலங்கையில் இது சுதந்திரத்திற்குப் பின்னர் பிரதான மாற்றத்தைக் கண்டுள்ளது.

இலங்கையில் ஐம்பதுகளின் ஆரம்பத்தில் இருபாலாருக்கும் 40 வருடமாக இருந்து 1990 இல் இது 70 ஆக உயர்ந்துள்ளது. குறிப்பாக, இது பெண்களைப் பொறுத்து 74 ஆக அதிகரித்துள்ளது. வாழ்வுக்காலம் அதிகரிப்பது அடிப்படைச் சுகாதார வசதிகளையும் உணவு விநியோகம், மற்றைய சமூக வசதிகள் போன்றவற்றைப் பிரதிபலித்துள்ளது. கல்வியறிவு, வாழ்வுக்கால எதிர்பார்ப்பு குழந்தைகள் இறப்பு ஆகிய முறையையும் சேர்த்து, குறைவிருத்தி நாடுகளின் சமூகப் பொருளாதார நிலையினை மதிப்பிடுவதற்குப் பௌதீக வாழ்க்கைச்சுட்டி என்ற அளவை எழுபதுகளில் பிரசித்திபெற்றது.

எழுபதுகளிலும், எண்பதுகளிலும் நாடுகளின் சமூகப்பொருளாதார மட்டத்தின் தேசிய வருமானச்சார்பில்லாத அளவையாக, சமகுறிகாட்டியாக இது பெரிதும் பயன்படுத்தப்பட்டது. இக்குறிகாட்டியினூடாக நாடுகளின் ஒப்பீட்டு நிலையினை அறிந்து கொள்ளவும் முடிகின்றது. இக்குறிகாட்டியின் மூலம் இலங்கையின் சாதனையை எண்பதுகளில் நோக்கிய பொழுது, குறைந்த தலாவருமானம் பெறுகின்ற நாடு எனினும், அதனுடைய பௌதீக வாழ்க்கைத்தரம் உயர்ந்ததாக (82/100) காணப்பட்டது. இச்சாதனை அடிப்படைக்கல்வி, வாழ்வுக்கால நீடிப்பு, குழந்தை இறப்பு வீழ்ச்சி முதலானவற்றுடன் தொடர்புபட்ட முன்னேற்றங்களினால் ஏற்பட்டதனை அறியமுடிகின்றது.

அண்மைக்காலங்களில் குறைவிருத்திப் பொருளாதாரங்கள் பற்றிய மதிப்பீட்டில் தேசிய வருமானம் சார்பான அணுகுமுறையிலிருந்து விலகி, "அடிப்படைத் தேவைகள்" என்ற அளவைமுறையும் முக்கியத்துவம் பெற்றது. மக்களின் அடிப்படைத் தேவைகள் எவ்வளவுக்குப் பூர்த்தி செய்யப்படுகின்றன என்பதன் ஊடாக பொருளாதார அபிவிருத்தி சமூகப் பொருளாதார மாற்றங்கள் ஆகியவற்றை எடைபோடும் அணுகுமுறையாக இது முன்வைக்கப் பட்டது. அடிப்படைத் தேவைகள் பற்றிய கருத்து வேறுபாடுகள் எழுவதற்கு இடமுண்டு. எனினும் அதனை ஒரு பயனுள்ள வழிகாட்டியாகக் கையாள முடியும்.

அடிப்படைக்கல்வி, சுகாதார, மருத்துவ வசதிகள், உணவு, போஷாக்கு, குடிநீர்வசதி, வதிவிட வசதி போன்றவற்றின் நிலைமைகளைப் பொறுத்து எவ்வாறு மாற்றமடைந்துள்ளன என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. இலங்கையின் கடந்த நான்கு ஐந்து தசாப்தங் களில் அரசாங்க நடவடிக்கையினால் வழங்கப்பட்ட பல்வேறு சேவைகள் மக்களின்

அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படுவதில் கணிசமான முன்னேற்றத்தினை ஏற்படுத்தியுள்ளன. சமூகக் குறிகாட்டிகள் என்ற வகையில் மிக அண்மையில் "மனித அபிவிருத்தி" குறிகாட்டி பெறும் வரவேற்பினைப் பெற்றுள்ளது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தினால் 1990ஆம் ஆண்டிலிருந்து வெளியிடப்பட்ட மனித அபிவிருத்திக் குறிகாட்டி மதிப்பீட்டில் உயர்வான மனித அபிவிருத்திச் சாதனை உடைய நாடுகளில் இலங்கையும் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சமூக அபிவிருத்தி தொடர்பாக இலங்கை, தலாவருமான நோக்கில் குறைந்த நிலையில் இருந்திருப்பினும் போற்றத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

சமூகநீதி தழுவிய கொள்கைப் போக்கில் ஐம்பதுகளிலிருந்து நாட்டின் வருமானப் பங்கீட்டில் சமமின்மையும் குறைக்கப்பட்டது. எண்பதுகள் வரையுள்ள புள்ளிவிபரங்களில் வருமானப் பங்கீட்டின் ஏற்றத்தாழ்வுகள் குறைந்து சென்றதற்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன. இப்போக்கு ஒப்பீட்டு வருமான அளவில் முக்கிய மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது. ஆனாலும் நாட்டில் வறுமை நிலை இன்னும் பாரதூரமான பிரச்சினையாகத் தொடர்கின்றது. வறுமைநிலை பற்றியதரவுகள், வறுமையின் போக்கு எவ்வாறு இருந்துள்ளது என்பதை திடமாகக் கூறுவதற்குப் போதுமானவையாக இல்லை. கிடைக்கும் தரவுகளிலிருந்து ஏறத்தாழ 35 சதவீதத்தினர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்றவர்கள் எனக்கருத முடிகின்றது. அரசாங்க சமூகநலக் கொள்கைகள் வறுமைத் தணிப்பில் முக்கிய பங்காற்றியுள்ளன. இலங்கையில் வறுமையில் வாழ்பவர்களில் பெரும் தொகையினர் கிராமப் புறங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். ஆகவே, கிராமிய விவசாயத்துறையின் முன்னேற்றமும், கிராமிய அபிவிருத்தியும் வறுமைத்தணிப்பில் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

## தாராண்மைக் கொள்கைகள்

இலங்கையின் அபிவிருத்தி அனுபவத்தினை வெவ்வேறு காலப்பகுதியினூடாக நோக்குமிடத்து 1977 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலம் கூடிய கவனத்தை எடுத்துள்ளது. அபிவிருத்தி உபாயங்கள் கொள்கைகள், அனுபவங்கள் ஒரு பெரும் திருப்பத்தினைக் காட்டியுள்ளன. கொள்கை நோக்குகளும், கொள்கை இயல்புகளும் முன்பு இல்லாத அளவுக்கு வேறுபட்டுள்ளன. அரச மேலாண்மை, கட்டுப்பாடுகள், தலையீடுகள் ஆகியவற்றிலிருந்து பெரிதும் விலகி 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தாராண்மைக் கொள்கை, கட்டுப்பாடுகள், தளர்ச்சி, பலமான சந்தைச்சார்பு, தனியார்சார்பு, வெளிநாட்டு முதலீடு, ஏற்றுமதிச்சார்பான கைத்தொழிலாக்கம், வெளிநோக்கிய அபிவிருத்தி, தனியார் மயமாக்கல் முதலான அம்சங்கள் புதிய கொள்கைப் பொதியில் அடங்கியுள்ளன.

1994இல் இன்றைய அரசாங்கம் பதவியேற்ற பின்னரும் பெருமளவுக்கு அதே கொள்கைகள் பின்பற்றப்பட்டன. 1977 இல் இருந்து இன்று வரை அபிவிருத்திப் போக்குகளும், அபிவிருத்தி அனுபவங்களும், விளைவுகளும் பெரிதும் வேறுபட்டன.

அறுபதுகளிலிருந்து படிப்படியாக கட்டுப்பாடுகள் பொருளாதாரத்தின் மீது விதிக்கப் பட்டன. இறக்குமதிக் கட்டுப்பாடுகள், அந்நியச்செலாவணிக் கொடுப்பனவுகள் மீது கட்டுப் பாடுகள், விலைக்கட்டுப்பாடுகள் முதலானவை அரச துறையின் மேலாதிக்கத்துடன் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார முறைமை அமைக்கப்பெற்று எழுபதுகளில் இது உச்ச கட்டத்தை அடைந்தது எனலாம். 1977இல் அறிமுகப்படுத்தப்பட்ட தாராளமயமாக்கல் கொள்கையும், நடவடிக்கைகளும் அவற்றின் தொடர்ச்சியும் கட்டுப்பாடு பெரிதும் குறைக்கப்பட்ட, சந்தைச் சக்திகள் இயங்குவதற்கு இலகுவாக்கப்பட்ட பொருளாதார

சூழ்நிலையினைத் தோற்றுவித்தன. இச்சூழ்நிலை தனியார் முயற்சிகள், முதலீடுகள், வெளிநாட்டு முதலீடுகள், திறந்த பொருளாதார நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு உந்துசக்தியாக விளங்கியது.

எழுபதுகளிலும், எண்பதுகளிலும் மீண்டும் பொருளாதாரத்தின் உயர்ந்த வளர்ச்சி மையப்படுத்தப்பட்டது. சந்தை மேலாதிக்கம், ஏற்றுமதிச் சார்பான கைத்தொழில் வளர்ச்சி, வெளிநாட்டு முதலீட்டின் அதிகரிப்பு என்பனவற்றுடன் ஒரு விரைவுபடுத்திய முதலீடும் வளர்ச்சியும் முக்கியத்துவம் கொண்டன. அத்துடன் சமூக நலன் பேணுதல் பற்றிய மீளாய்வும், உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் வற்புறுத்தலினால் மேற்கொள்ளப்பட்டது. சமூக நலன் செலவுகளும் உடனடியாகக் குறைக்கப்படக்கூடியவையாக இருக்கவில்லை. ஆனாலும் உணவு மானியம் தொடர்பாக அரசாங்கம், முன்பிருந்த முறைக்குப்பதிலாக "உணவு முத்திரை" முறையினை அறிமுகப்படுத்தி உணவு மானியச் செலவைக் கட்டுப்படுத்த முயற்சி எடுத்தது.

எழுபதுகளுக்குப் பின்னர் நாட்டின் முதலீட்டு வீதம் குறிப்பிடத்தக்கவகையில் மொத்த தேசிய செலவில் 25 சதவீத மட்டத்திற்கு அதிகரித்தது. இத்தகைய துரிதப்படுத்திய முதலாக்கத்திற்கு உள்நாட்டுச் சேமிப்பு போதியளவு திரட்டப்படவில்லை. இப்பின்னணியில் வெளிநாட்டுச் சேமிப்புக் கூடுதலாக கிடைக்கப்பெற்ற உயாந்த முதலீட்டின் நிதியாக்கம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சி உயர்ந்த மட்டத்திற்குச் சென்றது. எழுபதுகளிலும், எண்பதுகளிலும், புதிய கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்திலிருந்து 6 சதவீதத்தினை அடைந்தது. தாராளமயப்படுத்திய பொருளாதாரத்தில் வேலைவாய்ப்புகளும் அதிகரித்து வேலையின்மை வீதம் குறைந்தது. முதலீட்டின் தாக்கமான அதிகரிப்பு, உயர்ந்த தேசிய வருமானத்தின் வளர்ச்சி, வெளிநாட்டு முதலீட்டில் பெருமளவு வருகை ஆகியவற்றின் பின்னணியில் ஏற்றுமதி மையப்படுத்திய கைத்தொழிலாக்கம் ஒரு முக்கிய திருப்பமாக அமைந்தது.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள், நாட்டின் முக்கிய பகுதிகளில் அமைக்கப்பட்டன. இலங்கை ஏற்றுமதித் துறை பிரதானமாக தேயிலை, இறப்பர், தெங்குப் பொருள்களைக் கொண்டிருந்தது. இந்த அமைப்பு எழுபதுகளுக்குப் பின்னர் மாறிவிட்டது. நாட்டின் ஏற்றுமதி அமைப்பில் பாரம்பரியமான ஏற்றுமதிகள், குறிப்பாக கைத்தொழிற் பொருள்களின் ஏற்றுமதிகள் வெகுவாக அதிகரித்தன. இது வெளிநாட்டு வர்த்தகத்தில் ஒரு முக்கிய அமைப்பு ரீதியான மாற்றத்தினை உண்டு பண்ணியது.

1977ஆம் ஆண்டுக்குப் பின்னராக ஏற்பட்ட கைத்தொழில் அபிவிருத்தி பெரும்பாலும் ஏற்றுமதி சார்பானதாகவே அமைந்தது. இதில் வெளிநாட்டவர்களின் முதலீடும் முக்கியமானதாக இருந்துள்ளது. வேறு கொள்கை ஊக்குவிப்புகளும் உதவின.

இன்று நாட்டின் மொத்த ஏற்றுமதி வருவாய்ப் பெறுமதியில் கைத்தொழில் ஏற்றுமதிகள் 70 சதவீதத்தைக் கொண்டுள்ளன. துணிகளும் ஆடைகளும் மட்டும் ஏற்றுமதியில் 45 சதவீதமாக காணப்பட்டுள்ளது. பாரம்பரிய ஏற்றுமதிகளின் பங்கு காலப்போக்கில் குறைந்துள்ளது. அவற்றின் இடத்தை கைத்தொழில் ஏற்றுமதிகள் நிரப்பியுள்ளன. இது ஒரு பிரதான மாற்றமெனினும், பெருமளவுக்குத் தனியே துணியும் ஆடையும் பங்குகொள்வதும் எதிர் காலத்தில் ஒரு ஆரோக்கியமான நிலையாகும் என்றும் சொல்வதற்கில்லை.

திறந்த பொருளாதாரக் கொள்கை இலங்கைப் பொருளாதாரத்தில் சென்மதி நிலுவை மீது அதிக தாக்கத்தினை ஏற்படுத்தியது. இப்பின்னணியில் பணவீக்கமும் பாரதூரமான சிக்கல்களை விளைவித்தது. அறுபதுகளிலிருந்து இலங்கை பாதகமான சென்மதி நிலுவைப்

பிரச்சினையினை எதிர்நோக்கியது. இறக்குமதிகளின் தாராளமயப்படுத்தலும், விரைவுபடுத்தப் பட்ட முதலீடும், வளர்ச்சியும் நாட்டின் இறக்குமதிகளை பெருமளவுக்கு அதிகரித்தன. எழுபதுகளின் இறுதியிலிருந்து இப்போக்கு பலமடைந்தது.

இப் பின்னணியில் நாட்டின் ஏற்றுமதி வருவாய்களுக்கும் இறக்குமதிப் பெறுமதிகளுக்கு மிடையே உள்ள இடைவெளி படிப்படியாக விரிவடைந்தது. இறக்குமதிகளின் பெறுமதி பெருமளவாக அதிகரித்துச் செல்ல சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்கில் குறைவுகள் அதிகரித்தன. தாராள இறக்குமதிக் கொள்கையில் இத்தகைய விளைவுகள் எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் இது தொடர்ந்து ஏற்பட்டுச் சென்றது பெரும் சிக்கலை ஏற்படுத்தியது. வெளிநாட்டுக் கொடுப்பனவுகளின் நிலுவையற்ற தன்மை பெரும் பாதிப்பினை கொண்டு வந்தது. இக் காலப்பகுதியில் வெளிநாட்டு மூலதனம் அதிகளவாகக் கிடைத்ததனால் நிலைமை சரிசெய்யக் கூடியதாக இருந்தது. வெளிநாட்டிலிருந்து கிடைத்த, இலங்கையர்களினால் அனுப்பப்பட்ட தொகையும் அதிகரித்தது. இதுவும், வெளிநாட்டு முதல் ஓட்டமும் சென்மதி நிலுவையின் குறைவுகள் அடைப்பதற்கு உதவியுள்ளன.

திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக இலங்கையில் பணவீக்கமும் பெரிதும் அதிகரித்தது. விலைக்கட்டுப்பாடுகள் இல்லாத நிலையிலும், இறக்குமதிகளின் விலைகளின் அதிகரிப்பின் தாக்கமும், உள்நாட்டுச் செலவீடுகளின் அதிகரிப்பும் எழுபதுகளுக்குப் பின் கூடியளவு பணவீக்கத்தினை விளைவித்தன. இக்கால கட்டத்தில் இலங்கைப் பொருளாதார த்தில் வருடமொன்றுக்கு 15-20 சதவீத பணவீக்கம் அனுபவிக்கப்பட்டது. இதில் இறக்குமதிகளின் விலைகளின் ஏற்றங்கள் உள்நாட்டு விலைகளின் அதிகாரியாக மாற்றப்படுதல் ஒரு பிரதான காரணியாக இருந்துள்ளது. மேலும் உள்நாட்டிலும் ஏற்படும் செலவு விரிவாக்கம், பணவிரிவாக்கம் ஆகியவையும் பணவீக்கத்தினை அதிகரித்துள்ளன. இதில் அரசாங்க செலவுகளின் அதிகரிப்பினைக் குறிப்பிடுதல் வேண்டும்.

அரசாங்க செலவீடுகள் தொடர்ந்து அதிகரித்துச் சென்றன. 1977ஆம் ஆண்டுக்குப் பின்னரும் இப்போக்குத் தொடர்ந்தது. புதிய கொள்கையின் பின்னணியில் அரச மேலாண்மை மட்டுப்படுத்தப்பட்ட பொழுதிலும், உட்கட்டுமான அமைப்பின் விரிவாக்கத்தில் அரச துறையின் பங்களிப்பு முக்கியமானதாகவே இருந்தது. புதிய பொருளாதாரக் கொள்கைகள் அறிமுகப் படுத்தியபொழுது, அரசாங்கத் துறையின் முதலீடுகள் விரைவாக அதிகரித்துச் சென்றன. இக்காலப்பகுதியில் நாட்டின் மொத்த முதலீடு விரைவாக அதிகரித்துச் சென்றதில் அரசதுறையின் முதலீடுகளின் அதிகரிப்பு முக்கியமானதாக இருந்துள்ளது. இவை பெரும்பாலும் மகாவலி அபிவிருத்தி, நகர்ப்புற வீடமைப்புத்திட்டம், முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களின் உட்கட்டுமான விரிவாக்கம் போன்றவற்றின் செலவீடுகளாக இருந்துள்ளன.

அரசாங்க செலவீடு விரைவாக அதிகரித்தபொழுதிலும், அரசாங்க வருமானம் போதியளவுக்கு அதிகரிக்கவில்லை. இரண்டுக்குமிடையே இடைவெளி அதிகரிக்கவே வரவு செலவுத்திட்டக் குறைவுகள் பெருமளவுக்கு விரிவடைந்தன. வரவு செலவுத்திட்டத்தின் துண்டு விழும் தொகை பெருகவே அவற்றை நிதிப்படுத்துவதில் அரசாங்கம் வங்கிக்கடன் படுகையினைப் பெரிதும் பயன்படுத்தியது. இது வரவு செலவுத்திட்டத்தின் வழியாக பணவீக்கம் அதிகரிப்பதற்கு இடமளித்தது. இப்பிரச்சினை தொடர்ந்து ஏற்பட்டுச் சென்றது. அரசாங்க வரவு செலவுத்திட்டக்கொள்கை பணச்சார்பான உறுதியின்மைக்கு பொறுப்பாக இருந்துள்ளது. தற்போதைய அரசாங்கமும் அதற்கு முன்னர் பதவியிலிருந்த அரசாங்கத்தின் தாராள மயமாக்கல் கொள்கையினைப் பின்பற்றி வருகின்றது. ஏற்றுமதிச் சார்பான கைத்தொழில் அபிவிருத்தியினை முன்னெடுத்துச் செல்வதில் வெளிநாட்டுக் கம்பனிகளின் முதலீடுகளை வரவழைப்பதற்கு பலவகையான ஊக்குவிப்புக்களை வழங்கி வருகின்றது.

இன்று இத்துறையில் முதலீட்டுச்சபை அதிகாரங்களைக் கொண்ட பிரதான நிறுவனமாகச் செயல்பட்டு வருகின்றது. பல வெளிநாட்டு முதலீட்டாளர் அரசாங்கம் வழங்கியுள்ள ஊக்குவிப்புகளினால் கவரப்பட்டுள்ளனர். முன்பு இல்லாத அளவுக்கு இப்பொழுது வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்துள்ளன. ஆனாலும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி, வெளிநாட்டு முதலீடு ஆகியவை அண்மைக்காலத்தில் நாட்டில் நடந்து வருகின்ற "இனப்போர்" காரணமாக பாதிப்படைய நேர்ந்துள்ளன.

இனப்போர் இரண்டு வகையில் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு இடையூறாக விளங்குகின்றது. வருடாவருடம் பெருந்தொகையான பணம் பாதுகாப்புத் தேவைகளுக்காக செலவிடப்படுகின்றது. "இனப்போர்" நாட்டின் பல பகுதிகளில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாட்டு முதலீடு, உல்லாசப்பிரயாணத்துறை போன்றவற்றில் இனப்போரினால் எழுகின்ற உறுதியற்ற நிலைமைகள் இடையூறுகளை விளைவிக்கின்றன. பொருளாதாரரீதியாக இனப்போரினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் அரசாங்கத்திற்குப் பெரும் சவால்களைத் தோற்றுவித்துள்ளன.

மிக அண்மையில் ஆசியாவில் தாராளமயமாக்கல் கொள்கைகளைப் பின்பற்றிய திறந்த பொருளாதாரங்கள் எதிர்பாராத வகையில் நெருக்கடிகளை அனுபவித்துள்ளன. வளர்ச்சியிலும், பொருளாதார மேம்பாட்டிலும் சிறந்த சாதனைகளை நிலைநாட்டியுள்ள மலேசியா, தென்கொரியா போன்ற பொருளாதாரங்கள் முன்பு இல்லாத வகையில் நாணய நெருக்கடியினால் பாதிக்கப்பட்டன. நாணய நெருக்கடியில் ஆரம்பித்துப் பொருளாதார மந்த நிலையினையும் எதிர்நோக்கியுள்ளன. ஆசிய நாடுகளின் நாணய நெருக்கடியினால் இலங்கையும் பாதிக்கப்படக் கூடுமா என்ற அச்சமும் எழுந்துள்ளது. ஆனால் அவ்வாறு பாதிப்புகள் ஏற்படுவதற்கு சாத்தியக்கூறுகள் இதுவரை காணப்படவில்லை. இலங்கையில் குறுகியகால இலாப நோக்குடன் தொழில்படும் முதலோட்டங்கள் அதிகமாக ஏற்படுவதில்லை. மேலும் இலங்கையில் முதலோட்டக் கொடுக்கல் வாங்கல்கள் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவையாக இருப்பதும் கவனிக்கத்தக்கது.

நாட்டின் நிதி, வங்கி அமைப்புத் தொழிற்பாடுகளிலும் பாரதூரமான பெருமளவிலான மீட்புக் கடன் பிரச்சினைகளும் அதிகம் இல்லை. ஆகவே மற்றைய சில ஆசிய நாடுகளில் ஏற்பட்டது போன்ற நிதி நெருக்கடி ஏற்படுவதற்கான சூழ்நிலை உடனடியாக எழுவதற்கு இடமில்லை. எனினும் உறுதியில்லா பொருளாதார நிதி நிலை மாற்றங்கள் வெளிநாடுகளில் ஏற்படும் பொழுது, இலங்கைப் பொருளாதாரத்தின் மீதும் சில பாதிப்புகள் தவிர்க்க முடியாதவை. உலக மயமாக்கல், தாராளக்கொள்கையின் பின்னணியில் துரிதமாக நடந்து கொண்டிருக்கும் நிலையில் நிதிச்சந்தைகளும், முதல் சந்தைகளும் பெருமளவுக்கு இணைக்கப் படுகின்றன. இச்சந்தர்ப்பத்தில் பிறநாட்டு நிலைமைகளும் மாற்றங்களும் இதற்கு விலக்கானவையல்ல. சிறிய பொருளாதாரமாக இருப்பதும் பிறநாட்டு நிலைமைகளின் பாதிப்புகள் தாக்கமுடையவையாக இருப்பதை எதிர்பார்க்கலாம்.

# இலங்கையின் சுதந்திரமும் மலையக மக்களின் அரசியல் நிலைப்பாடும்

சோ. சந்திரசேகரன்

நாடு சுதந்திரம் பெறும் தறுவாயில் இந்நாட்டில் மலையகத்தமிழர்கள்[1] ஒரு முக்கிய சிறுபான்மையினமாக வளர்ச்சியுற்றிருந்தனர். 1911 ஆம் ஆண்டில் அவர்கள் நாட்டின் சனத்தொகையில் 12.9 வீதத்தினராக (5,30,000) இருந்தனர். 1947ஆம் ஆண்டளவில் இவர்களுடைய தொகை 9 இலட்சமாக (11.7%) வளர்ச்சியுற்றிருந்தனர். அத்துடன் அவர்கள் இந்நாட்டில் நிரந்தரக் குடிமக்களாக[2] மாறி நாட்டின் பன்மைச் சமூக அமைப்பின் ஒரு அங்கமாயினர். டொனமூர் அரசியல் திட்டம் நடைமுறையிலிருந்த காலத்தில் இவர்கள் வாக்குரிமையைப் பெறுவதில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட போதிலும் 1947 ஆம் ஆண்டளவில் 2,25,000 மலையகத் தமிழர்கள் வாக்குரிமையைப் பெற்றிருந்தனர். 101 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் ஏழு பேர் அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தினர். ஆயினும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை அவர்களுக்கு இருக்கவில்லை. அரசாங்க சபைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இலங்கையர் மயமாக்கக் கொள்கையினால் அவர்கள் அரசாங்க வேலைகளைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டது.[3]

அவர்களுடைய சமூக, பொருளாதார வாழ்க்கை நிலைமைகளைப் பொறுத்த அளவில், இந்திய அரசாங்கத்தின் வற்புறுத்தலின் பேரில் இலங்கை அரசாங்கம் இம்மக்களின் வீட்டு வசதி, சுகாதாரம், சம்பளம், கல்வி என்பவற்றில் குறைந்த பட்ச வசதிகளை வழங்கும் வகையில் பல சமூக நலச்சட்டங்களை இயற்றி இருந்தது. பெருந்தோட்டப் பொருளாதார முறையைப் பாதுகாக்க இத்தகைய அடிப்படை வசதிகளை மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டியிருந்தது.

சுதந்திரத்துக்கு முற்பட்ட அரசாங்க சபைக் காலத்தில் இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூகவாழ்வில் மலையகத்தமிழர்கள் பிரச்சினைக்குரிய ஓர் இனக்குழுவினராகக் கருதப்பட்டனர். மலைநாட்டின் நிலப்பகுதிகளில் பெருந்தோட்டங்களை உருவாக்கக் குடியேற்ற அரசாங்கம் அவற்றைக் கைப்பற்றிய போதிலும் அங்கு வேலை செய்ய வந்த இந்தியத் தமிழர்களே நிலப்பறிப்புக்குக் காரணம் எனக் கருதப்பட்டனர். நகர்ப்புறங்களில் இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்புப் பிரச்சினை ஏற்பட்டபோது, அரசாங்கத் திணைக்களங்களில் சாதாரண தொழில் புரிந்த இந்தியர்களை அகற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டால், மலையக மாவட்டங்களில் உள்ளூர் மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யமுடியாது போய்விடும் என்பதால், இந்தியர்கள் வாக்குரிமை பெறுவதைக் கட்டுப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

சமூக, கலாசாரரீதியாக இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளூர் மக்களுடன் இரண்டறக் கலக்காது தமது பண்பாடு, மொழி, சமயம் என்பவற்றைப் பேணிப்பாதுகாத்து வந்தனர். இந்தியர்கள் தமது தாய்நாட்டுடன் தொடர்ந்து தொடர்பு வைத்திருந்தமையால் அவர்களை இந்நாட்டின் நிரந்தரக் குடிமக்களாகக் கருதுவதற்கில்லை. இலங்கையில் வாழ்கின்ற இந்தியர்களை, இந்தியத் தலைவர்கள் தமது ஐந்தாம் படையாகப் பயன்படுத்தக் கூடும்.[4] உள்ளூர் மக்களைப் பொறுத்தவரையில் இந்தியர் பிரச்சினை வாழ்வா? சாவா? என்ற நிலைமையை ஏற்படுத்தி விட்டது.[5] இந்தியர்களுக்கு சகல உரிமைகளையும் வழங்குமிடத்து பெரும்பான்மை மக்களின் இன அடையாளம் மறைந்து விட நேரிடும். 1940களின் இறுதியில்

இந்திய மக்கள் பற்றிப் பெரும்பான்மையினத் தலைவர்கள் கொண்டிருந்த பரவலான கருத்து இதுவாகும்.

## சுதந்திரத்துக்குப் பிற்பட்ட காலப்பகுதியின் குடியுரிமைச் சட்டங்கள்

சுதந்திர இலங்கையில் முற்பகுதியில் மேற்கூறிய பின்னணிக் காரணிகளின் அடிப்படையிலும் ஏனைய புதிய அரசியற் காரணிகளின் நிர்ப்பந்தம் காரணமாகவும் இந்நாட்டில் வாழ்ந்த மலையக இந்தியத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை என்பவற்றை அகற்றும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி புரிந்த காலப்பகுதியில் (1947-1952) நிறைவேற்றப்பட்ட அச்சட்டங்களாவன:

1. 1948 ஆம் ஆண்டின் இலங்கைக் குடியுரிமைச் சட்டம்.
2. 1949 ஆம் ஆண்டின் இந்திய பாகிஸ்தானியர் (குடியுரிமைச்) சட்டம்.
3. 1949 ஆம் ஆண்டின் பாராளுமன்றச் (தேர்தல்கள் திருத்த) சட்டம்.

சுதந்திர இலங்கைக்கான அரசியல் யாப்பை வகுத்துத் தந்த சோல்பரி ஆணைக்குழுவினர் ஆலோசனைகளில் குடியுரிமை, மக்கள் குடிவரவு போன்ற வாதப்பிரதிவாதத்துக்குட்பட்ட விடயங்கள் எவையும் அடங்கவில்லை; இலங்கைக் குடியுரிமைக்கு உரித்துடையவர்களுக்குரிய தகுதிகள் பற்றி சுதந்திர இலங்கையின் அரசாங்கம் இந்திய அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து முடிவு செய்யவேண்டும் என்பது இவ்வாணைக்குழுவின் கருத்தாகவிருந்தது. இலங்கைவாழ் இந்தியர்களின் குடியுரிமைப் பிரச்சினை இலங்கை, இந்திய அரசாங்கங்களுக்கிடையிலான இருதரப்புப் பிரசசினை என்ற முறையில் சோல்பரி ஆணைக்குழு இவ்வாறு பரிந்துரை செய்திருந்தது.

1948 ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டப்படி இந்தியத்தமிழர்கள் பரம்பரைக் குடியுரிமை பெற அவர்களுடைய பாட்டன், முப்பாட்டன் ஆகியோர் இலங்கையில் பிறந்தவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டியிருந்தது. இச்சட்டப்படி சிங்கள மக்களும் இலங்கைத் தமிழ்மக்களும் முஸ்லீம் மக்களும் உடனடியாக இலங்கைக் குடியுரிமையைப் பெற்றவிடத்து, இந்நாட்டில் வாழ்ந்த சகல இந்தியத் தமிழர்களும் தமது பாட்டனார்களின் பிறப்புச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க முடியாத நிலையில் குடியுரிமையை இழக்க நேரிட்டது. இலங்கையில் பிறப்பைப் பதிவு செய்யும் முறை 1897ஆம் ஆண்டிலேயே நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்துடன் 1920 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட பிறப்புப் பதிவுகள் நாட்டின் பல பகுதிகளில் காணப்படவில்லை. இச்சட்டம் விதித்த கடுமையான நிபந்தனைகளை இந்தியத் தமிழர்களால் நிறைவேற்ற முடியவில்லை.

இலங்கையில் வாழ்ந்த இந்தியத்தமிழர்கள் அனைவரும் நீண்டகாலமாக இலங்கையில் வாழ்ந்து அந்நாட்டையே தாயகமாக ஏற்றுக் கொண்டவர்கள் என்பதால், இலங்கைக் குடியுரிமைக்கு உரித்துடையவர்கள் என்பது இந்திய அரசின் வாதமாக இருந்தது. தற்காலிக வேலைவாய்ப்புகளை நாடியே இந்தியர்கள் இலங்கைக்குச் சென்றனர் என்பது வரலாற்று உண்மை நிகழ்வுகளுக்கு முரணானது என்பது நேருவின் நிலைப்பாடாக இருந்தது. அவர்களை இந்தியப் பிரசைகளாக ஏற்றுக்கொள்ள இந்திய அரசாங்கம் ஆயத்தமாக இருக்கவில்லை. சுதந்திர இலங்கையில் வாழ்ந்த இந்தியர்களின் "நாடற்றவர்" என்ற பிரச்சினை உருவாக இச்சட்டம் அடிகோலியது.

குடியுரிமையை இழந்த இந்தியத் தமிழர்களில் தகுதி உடையோருக்குக் குடியுரிமை வழங்கும் நோக்குடன் இந்தியர்-பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டம் (1949) கொண்டு வரப்பட்டது. இச்சட்டப்படி குடியுரிமை பெற திருமணமானவர்களுக்கு ஏழாண்டு வாசகால தகுதியும் திருமணமாகாதவர்களுக்குப் பத்தாண்டுகால வாசகால தகுதியும் நிபந்தனைகளாக விதிக்கப்பட்டன. இந்நிபந்தனைகளை இந்தியத்தமிழர்கள், இலங்கைத்தமிழர்கள், இடதுசாரிகள் போன்றோரின் தலைவர்கள் மிகக்கடுமையானவை; மனிதாபிமானமற்றவை; குடியுரிமையை மறுக்கவே உருவாக்கப்பட்டவை எனக்கூறிப் பெரிதும் எதிர்த்தனர். ஐக்கிய தேசியக்கட்சி அரசின் தலைவர்களும் ஒரு சிறு தொகையான இந்தியர்களுக்கே குடியுரிமை வழங்கப்படும் எனப் பல்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துக் கூறினர். இலங்கை இந்தியக் காங்கிரஸ் இச்சட்டத்தை பகிஷ்கரிக்குமாறு தனது உறுப்பினர்களைக் கோரியது. எனினும் இறுதிநேரத்தில் 8,24,430 பேர் இலங்கைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்தனர். 1960 ஆம் ஆண்டளவில், இவ்விண்ணப்பதாரர்களில் 135,000 பேர் மட்டுமே இலங்கைக் குடியுரிமை பெற ஏனையவர்கள் "நாடற்றவர்கள்" என்ற அந்தஸ்தைப் பெற்றனர்.

இச்சட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றப்பட்ட பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் (1949) இலங்கைக் குடியுரிமை பெற்றவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை உண்டு என விதித்தது. இதன் உடனடியான விளைவாக வாக்காளர் பட்டியலிலிருந்து சகல இந்தியர்களின் பெயர்களும் நீக்கப்பட்டு[6] அவர்களுடைய வாக்குரிமை பறித்தெடுக்கப்பட்டது. இதன் விளைவாக 1952-1977 வரை இந்தியத் தமிழர்கள் மலையகத் தேர்தல் தொகுதிகளிலிருந்து ஒரு பிரதிநிதியையும் தெரிவு செய்ய முடியாது போய்விட்டது. அவர்களுடைய நலவுரிமைகளைப் பேண அவ்வப்போது ஒரு நியமன உறுப்பினர் பாராளுமன்றத்தில் நியமிக்கப்பட்டார்.

இச்சட்டங்கள் கொண்டுவரப்பட ஒரு முக்கிய அரசியல் காரணி இருந்தது. 1947ஆம் ஆண்டுத்தேர்தலில் மலையகத் தேர்தல் தொகுதிகளில் இந்தியத் தமிழர்கள் ஒட்டுமொத்தமாக ஐக்கியதேசியக் கட்சிக்கு எதிராக வாக்களித்திருந்தனர். அத்தேர்தலில் அவர்கள் ஏழு இலங்கை இந்தியர் காங்கிரஸ் (இ.இ.கா) வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்திருந்தனர். இ.இ.கா வேட்பாளர்கள் போட்டியிடாத ஏனைய மலையக மாவட்டங்களில் போட்டியிட்ட இடதுசாரி வேட்பாளர்களுக்கு இந்திய வாக்காளர்கள் வாக்களித்திருந்தனர். இதனால் 14 இடதுசாரி வேட்பாளர்கள் வெற்றியடைய முடிந்தது. இவ்வாறு நாட்டின் 20 வீதமான தேர்தல்களில் இந்திய வாக்காளர்கள் தேர்தல் முடிவுகளை நிர்ணயிக்கும் வலிமையைப் பெற்றிருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் பெருவாரியான இந்தியர்கள் குடியுரிமையையும் வாக்குரிமையையும் பெற நேர்ந்தால் தனது கட்சியின் எதிர்கால அரசியல் வாய்ப்புகளும் வெற்றிகளும் பாதிக்கப்படும் எனக்கருதியமையால், கடுமையான நிபந்தனை கொண்ட குடியுரிமை, வாக்குரிமைச் சட்டங்களை நிறைவேற்றினார்.

இம்மூன்று சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, மலையகத் தேர்தல் தொகுதிகளில் இந்தியத்தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைய நேரிட்டது. 1949-1953 காலப்பகுதியில் 8087 பேர் மட்டுமே இலங்கைக் குடியுரிமையைப் பெற்றனர். இந்தியத் தமிழர்கள் வெற்றி பெற்றிருந்த மலையகத் தேர்தல் தொகுதிகளின் வாக்காளர் பதிவேடுகளிலிருந்து இந்தியர்களின் பெயர்கள் நீக்கப்பட்டமையால் அத்தொகுதிகளின் மொத்த வாக்காளர் தொகை 30,000 இலிருந்து. 2500, 4000, 5000 ஆகக் குறைந்தது. எடுத்துக்காட்டாக, 28,000 வாக்காளர்கள் இருந்த நாவலப்பிட்டித் தொகுதியில், 1952 ஆம் ஆண்டளவில் இத்தொகை 2000 ஆகக் குறைந்தது. இவ்வாறு இந்தியத் தமிழர்களின் வாக்குபலம் 1952 ஆம் ஆண்டுத் தேர்தலில் குறைக்கப்பட்டமையால் ஐக்கிய தேசியக் கட்சி முன்னைய தேர்தலில் பெற்ற வெற்றியைவிட 1952 தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெற்றது. வெற்றி பெற்ற

ஆசனங்கள் 42 இலிருந்து 54ஆக அதிகரித்தன. இடதுசாரிகளின் ஆசனங்கள் இந்தியர்களின் ஆதரவின்மையால் 18 இலிருந்து 13ஆகக் குறைந்தன.

அரசியல் சுதந்திரத்தைப் பெற்றபின் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றிய குடியுரிமைச் சட்டங்களின் தாக்கம், தொகைரீதியாகப் பின்வருமாறு அமைந்தது:

1. 1949 ஆம் ஆண்டின் இந்தியர் பாகிஸ்தானியர் குடியுரிமைச் சட்டப்படி இலங்கைக் குடியுரிமை பெற்றவர்கள் தொகை } 140,185
2. 1964 ஆம் ஆண்டளவில் நாடற்றவர்கள் தொகை - 9,71,073

## இலங்கை-இந்திய ஒப்பந்தங்கள் (1964, 1974) ஏற்படுத்திய விளைவுகள்

1964 ஆம் ஆண்டளவில் நாடற்றவர்களின் தொகை 975,000 எனக் கொள்ளப்பட்டு இலங்கை அரசும் இந்திய அரசும் பேச்சுவார்த்தைகளை நடாத்தி, அவர்களில் 525,000 பேரை இந்தியாவும் 300,000 பேரை இலங்கையும் ஏற்றுக்கொள்வதென ஒப்பந்தம் செய்யப்பட்டது. 1974 ஆம் ஆண்டின் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி, எஞ்சிய 150,000 பேரை இருநாடுகளும் சமஅளவில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.7 எனவே இந்தியா மொத்தமாக 600,000 பேருக்கும் இலங்கை 375,000 பேருக்கும் குடியுரிமை வழங்க முடிவு செய்யப்பட்டது. இவ்வொப்பந்தங்கள் சர்வதேசச் சட்டப்படி இருநாடுகளும் தமக்குரிய கடப்பாடுகளை நிறைவேற்றக் கோரின.

இவ்வொப்பந்தங்கள், சம்பந்தப்பட்ட இந்தியத் தமிழர்கள் அவர்களுடைய தலைவர்கள் போன்றோருடன் கலந்தாலோசித்து செய்யப்படவில்லை என்றும், இந்தியாவின் சர்வதேச உறவுகளைப் பேணும் நோக்கிற்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது என்றும் பல கண்டனங்கள் விடுக்கப்பட்டன. எவ்வாறாயினும் இந்தியத் தமிழர்களின் அரசியல் கட்சிகள் இவ்வொப்பந் தங்களை முற்றாக நிராகரிக்கவில்லை.

கடந்த மூன்று தசாப்தகால அனுபவங்களை வைத்து நோக்குமிடத்து, இவ்வொப்பந்த ங்கள் பல நியாயமான கண்டனங்களுக்குள்ளான போதிலும், அவை நாடற்றவர் என்ற நிலையைப் போக்கிட நீண்டகால நோக்கில் உதவின எனலாம். இவ்வொப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, மலையகத்தில் வாழ்ந்த இந்தியத்தமிழர்கள் உண்மையில் தாயகமாகக் கொள்ள விரும்பிய நாடு எது என்பது தெளிவாயிற்று. நீண்ட காலதாமதம் ஏற்பட்ட போதிலும், அவர்கள் தெரிவித்த விருப்பம் பிற்கால குடியுரிமைச் சட்ட ஏற்பாடுகளுக்கு (1988) உதவின எனலாம்.

இந்திய அரசாங்கம் 6 இலட்சம் பேரை ஏற்றுக்கொள்ள சம்மதித்த போதிலும் 506,000 பேர் மட்டுமே இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பித்திருந்தனர். அதேவேளையில் 625,000 பேர் இலங்கைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்திருந்தனர். இருநாடுகளும் செய்து கொண்ட ஒப்பந்தங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகைகள் எந்த அளவுக்கு யதார்த்தமற்றவை என்பதையே இவ்விண்ணப்பங்கள் பற்றிய விபரங்கள் காட்டுகின்றன.

1987 ஆம் ஆண்டளவில் 421,887 பேர் இந்தியக்குடியுரிமையையும் 218,181 பேர் இலங்கைக் குடியுரிமையையும் பெற்றிருந்தனர். அதாவது, முன்னைய ஒப்பந்தங்கள் (1964, 1974) 975,000 பேரை உள்ளடக்கியவிடத்து, 1987ஆம் ஆண்டளவில் 640,068 பேரின் நாடற்றவர் நிலை மட்டுமே நீக்கப்பட்டு குடியுரிமை வழங்கப்பட்டிருந்தது. இந்தியக் குடியுரிமைக்கு

விண்ணப்பித்திருந்த 84,113 பேர் நீங்கலாக ஏனைய 250,000 பேர், அவர்களுடைய பிள்ளைகள் ஆகியோருடைய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியிருந்தது. இவர்களுடைய நாடற்றவர் அந்தஸ்து காரணமாகப் பல நிர்ப்பந்தங்களுக்குள்ளான ஐ.தே.க அரசாங்கம் 1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புதிய குடியுரிமைச் சட்டமொன்றை நிறைவேற்றியது. இச்சட்டம் இலங்கை இந்திய மரபுவழித் தமிழர்கள் அனைவருக்கும் இலங்கைக் குடியுரிமையை வழங்கியது. இச்சட்டம் குடியுரிமை பெறுவோரின் தொகை எதனையும் குறிப்பிடாதது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும். அத்துடன் குடியுரிமை விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான முடிவு திகதி எதுவும் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. இதனால் இந்திய வம்சாவழியினரான எவரும் எதிர்காலத்தில் குடியுரிமை பெறும் வாய்ப்பு சட்டபூர்வமாக வழங்கப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தொடர்ச்சியான நிர்ப்பந்தங்களும் ஐ.தே.கட்சித் தலைவர்களின் பொதுத் தேர்தல் நோக்கங்களும் இச்சட்டம் நிறைவேற்றப்பட முக்கிய காரணங்களாயின. குடியுரிமை பெறும் இந்தியத்தமிழர் அனைவரும் தமது கட்சிக்கே வாக்களிப்பர் என்பது ஐ.தே.கட்சியினரின் தேர்தல் கணிப்பீடாக இருந்தது.

சுதந்திரத்துக்குப் பிற்பட்ட கால குடியுரிமைச் சட்டங்களும் இலங்கை-இந்திய ஒப்பந்தங்களும் பல்வேறு நியாயமான கண்டனங்களுக்குள்ளாயின என்பது உண்மையே. அவற்றின் விளைவாக, இலங்கை வாழ் இந்தியத் தமிழர்களில் ஒரு பகுதியினர் இந்தியா திரும்ப நேரிட்டது. 1987ஆம் ஆண்டளவில் 337,410 பேரும் அவர்களுடைய பிள்ளைகள் 123,952 பேரும் இந்தியக் குடியுரிமை பெற்று இந்தியா சென்றனர். இந்தியா செல்லவேண்டிய 84,000 பேர் தவிர்ந்த ஏனையோர் இலங்கைக் குடியுரிமையைப் பெற்றனர்.

சுதந்திர இலங்கையின் குடியுரிமைச் சட்டங்களின் ஏற்பாடுகளின் அடிப்படையில் குடியுரிமை பெற்றவர்கள் பதிவுப்பிரஜைகளாகக் கருதப்பட்டபோதிலும் 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு பரம்பரைப் பிரஜை, பதிவுப்பிரஜை என்ற வேறுபாட்டை அகற்றும் ஏற்பாடுகளைக் கொண்டிருந்தது. சுதந்திர இலங்கையின் குடியுரிமைச் சட்டங்களின்படி குடியுரிமை பெறும் இந்தியத் தமிழர்களுக்கென தனியான வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படல் வேண்டும் என்ற ஆலோசனை பல சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்டது. இதனால் மலையகத் தேர்தல் தொகுதிகளில் அவர்களுடைய வாக்குகள் முக்கியத்துவம் பெறுவதைத் தடுக்கலாம் எனக் கருதப்பட்டது. ஆயினும் இவ்வாலோசனை பிற்காலத்தில் முற்றாகக் கைவிடப்பட்டு இந்தியத்தமிழ் வாக்காளர்கள், தேசிய அரசியலில் ஒரு முக்கிய சக்தியாக உருப்பெற வழிகோலப்பட்டது. அவ்வாறே, 1964, 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தவும் இந்தியா 600,000 பேரை ஏற்றுக் கொள்ளச் செய்யவும், இந்தியர்கள் கட்டாயமாக இந்தியாவுக்கு அனுப்பப்படல் வேண்டும். 1964 ஆம் ஆண்டின் ஒப்பந்தத்தில் அதற்கான ஏற்பாடுகள் உண்டு என வாதிடப்பட்டது. இக்கட்டாய நிபந்தனையும் பிற்காலத்தில் கைவிடப்பட்டமையும் இந்தியர்கள் தமது சொந்த விருப்பத்தின் அடிப்படையிலேயே இந்தியக் குடியுரிமை பெற்றுத் தாயகம் திரும்பியமையும் குறிப்பிடத்தக்கது.

## ஒப்பந்தங்களின் விளைவுகள்

இலங்கை வாழ் இந்தியமக்கள் தமது ஒரு நூற்றாண்டு கால வாசகாலத்தின் பின்னர், தமிழ்நாட்டுடனான தமது தொடர்புகளை நீக்கி இலங்கையின் ஒரு முக்கிய சிறுபான்மைக் குழுவினராகப் பரிணமிக்கத் தொடங்கிய காலப்பகுதியில் செய்யப்பட்ட இவ்வொப்பந்தங்கள், இவ்வினத்தவருக்கு நீண்டகால நோக்கில் இலங்கை அல்லது இந்தியக் குடியுரிமையை

வழங்கியது உண்மையே! இச்செயற்பாடு முற்றுப்பெற இந்தியத்தமிழர்கள் நான்கு தசாப்தகாலத்துக்கு அரசியல் உரிமைகளை இழந்த நாடற்றவர்களாக வாழ நேர்ந்தது.

வெளிநாட்டில் வாழும் இந்தியர்களைப் பொறுத்தவரையில் இந்திய அரசு முதன்முதலாக இலங்கை அரசுடன்தான் இரு ஒப்பந்தங்களைச் செய்தது. அத்துடன் அவ்வொப்பந்தங்கள் முதன்முதலாக ஏற்றுக்கொள்ளப்படவுள்ள இந்தியர்களின் தொகையையும் குறிப்பிட்டன. பர்மா, இலங்கை ஆகிய நாடுகளுடனான பிரச்சினையில்தான் இந்திய அரசு, இருதரப்பு அரசாங்கத் தொடர்புகளுக்கு முக்கியத்துவமளித்து இந்தியர் பிரச்சினையை அணுகியது. இந்தியா ஆறு இலட்சம் இந்தியர்களை ஏற்றுக்கொண்டதன் விளைவாக, இலங்கை வாழ் இந்தியர் சமூகம் இரு கூறுகளாகப் பிரிவடைய நேர்ந்தது. சுதந்திர இலங்கையின் அரசியல் நிர்ப்பந்தங்களினால் மட்டுமன்றி, இந்தியா எதிர்நோக்கிய சர்வதேச அரசியல் மட்டுமன்றி, நெருக்கடிகள் காரணமாக ஆறு இலட்சம் இந்தியர்களை இந்தியா ஏற்கவேண்டியதாயிற்று. குடித்தொகை ரீதியாக நோக்குமிடத்து 1950களில் முதல்முக்கிய இலங்கைச் சிறுபான்மை யினராக இருந்த இந்தியத்தமிழர்கள் 1981இல் மூன்றாவது இடத்தைப் பெற இவ்வொப்பந்தங்கள் காரணமாயின.

மலையக மாவட்டங்களில் செறிந்து வாழ்ந்த இந்தியத் தமிழர்களில் 337,410 பேர் இந்தியா திரும்பியவிடத்து (1987 இறுதிவரை)[8], 1981ஆம் ஆண்டின் குடிசனமதிப்பீட்டு அறிக்கையின்படி 75,000 பேர்வரை வடமாகாணம் சென்று குடியேறியிருந்தனர். 1958, 1977, 1981 ஆகிய ஆண்டுகளில் மலையக மாவட்டங்களில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டமையாலும், 1972 ஆம் ஆண்டில் பெருந்தோட்டங்களை அரசாங்கம் பொறுப் பேற்றபின்னர் ஏற்பட்ட வேலையின்மைப் பிரச்சினை, உணவுப்பற்றாக்குறை என்பவற்றால் ஏற்பட்ட பாதிப்புகளாலும் கணிசமானவர்கள் வடமாகாணத்தில் சென்று குடியேற நேர்ந்தது. இவ்வாறு சென்றவர்கள் இலங்கைத்தமிழர் செறிந்து வாழும் வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் காலப்போக்கில் தமது இந்திய, மலையக அடையாளங்களைக் கைவிட்டு உள்ளூர் மக்களுடன் கலந்துவிடும் போக்குகள் தென்படுகின்றன. இவ்வாறான மக்கள் வெளியேற்றம், குடித்தொகை ரீதியாக மலையக மாவட்டங்களில் இந்தியர்களின் வலிமையைக் குறைத்துவிட்டது. 1958 தொடக்கம் ஏற்பட்ட இனக்கலவரங்களும் பெருந்தோட்டத் தேசியமயம் ஏற்படுத்திய பாதக விளைவுகளும் இந்தியத்தமிழர்கள் இலங்கை-இந்திய ஒப்பந்தங்களின் கீழ் தமது தாயகத்தை நாடுவதை ஊக்குவித்தன.

இந்தியா திரும்பிய பெருந்தோட்ட இந்தியத் தொழிலாளர்களுக்கான முழுமையான புனர்வாழ்வுத் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. நம்பிக்கையுடன் தாயகம் திரும்பியோருக்கான புனர்வாழ்வுத் திட்டங்கள் ஏமாற்றத்தையே தந்தன. இலங்கையில் வறுமையால் பீடிக்கப்பட்டவர்கள் இந்தியா திரும்பியதும் அனாதைகள் என்ற நிலைக்கே இட்டுச் செல்லப்பட்டனர். இவர்களுடைய அனாதரவான நிலையைக் கடிதங்கள் மூலம் அறிந்த இலங்கை வாழ் இந்தியர்கள் பலர், இந்தியா செல்லத் தயக்கம் காட்டினர். இந்தியக் குடியுரிமை பெற்று இந்தியா திரும்பியவர்கள் நீண்ட காலம் இலங்கையின் பன்மைக் கலாசார பாதிப்புக்குட்பட்டிருந்தபடியால், அவர்கள் தமிழ்நாட்டுக் கிராமங்களில் "நம்மவர்களாக" உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.[9]

## இலங்கைத் தமிழர்களின் அரசியல் போராட்டங்களின் தாக்கம்

சுதந்திரத்தின் பின்னர் தமிழ்மொழி உரிமை வடகிழக்கில் அரசாங்க அனுசரணையுடனான குடியேற்றத்திட்டங்கள், வேலைவாய்ப்பு, உயர்கல்வி வாய்ப்புகள், பிராந்திய சுயாட்சி என்னும் பிரச்சினைகளை முன்வைத்து இலங்கைத் தமிழர்களின் அரசியல் இயக்கங்கள் தொடக்கி வைத்த அரசியல் போராட்டங்களும், அவற்றின் எதிர்விளைவாகத் தென்னிலங்கையில் எழுந்த தமிழர்களுக்கு எதிரான கலவரங்களும், உரிமைப் போராட்டங்களுடன் நேரடித்தொடர்பற்ற இந்தியத்தமிழர்களைப் பெரிதும் பாதித்தன. இன, மொழி, கலாசார ரீதியான ஒருமைப்பாட்டையும் வரலாற்று ரீதியான வேறுபாட்டையும் இந்தியத் தமிழர்களும் இலங்கைத் தமிழர்களும் கொண்டிருந்த நிலைமையில் இனக்கலவர சக்திகள் இலங்கைத் தமிழர் போராட்டங்களுக்கான பதிலடியை மலையக மாவட்டங்களில் வாழ்ந்த இந்தியத் தமிழர்களுக்கே வழங்கின. அவர்களுக்கெதிரான 1958, 1977, 1981, 1983 ஆம் ஆண்டுக் கலவரங்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். இக்கலவரங்கள் ஏற்படுத்திய உயிரிழப்பு, பொருளிழப்பு காரணமாக, இந்தியக் குடியுரிமை பெற்றவர்கள் மட்டுமன்றி இலங்கைக் குடியுரிமை பெற்ற இந்தியத் தமிழர்களும் அகதிகளாக இந்தியா செல்ல நேரிட்டது. இக்கலவரங்களின் ஒரு முக்கிய விளைவாக மலையக மாவட்டங்களில் நகர்ப்புற இந்தியர்களின் (பதுளை, பண்டாரவளை, கண்டி) தொகை கணிசமாகக் குறைய நேரிட்டது. 1977–1994 காலப் பகுதியில் பதவி வகித்த ஐ.தே.கட்சிக்கு இந்தியத் தமிழ் வாக்காளர்கள் தேர்தல்களில் தமது கணிசமான ஆதரவை வழங்கி வெற்றி பெறச் செய்திருந்த போதிலும் அக்கட்சி அரசு கலவர காலங்களில் (1977, 1983) போதிய பாதுகாப்பை வழங்கத்தவறி விட்டது. அரசாங்கக் கட்சிக் குழுக்களே கலவரங்களுக்கு முக்கிய காரணம் என்ற குற்றச்சாட்டும் உண்டு.[10]

## அரசியல் பிரதிநிதித்துவத்தில் முன்னேற்றம்

1949 ஆம் ஆண்டுக் குடியுரிமைச் சட்டம், 1964 ஆம் ஆண்டின் இலங்கை-இந்திய ஒப்பந்தம், 1988 ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டம் என்பவற்றால் இந்தியத் தமிழர்கள் படிப்படியாகப் பெற்ற இலங்கைக் குடியுரிமையும், தொடர்ந்து பெறப்பட்ட வாக்குரிமையும் அவர்களை அலட்சியம் செய்யப்படமுடியாத ஒரு அரசியல் சக்தியாக உருவாக்கின. இவர்கள் பெற்ற வாக்குரிமை பலத்தின் காரணமாக இன்று பாராளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும் பிரதேச சபைகளிலும் இவர்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். சுதந்திரம் பெற்ற 50 ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள முக்கிய முன்னேற்றம் இதுவாகும். வாக்குரிமை பறிக்கப்பட்ட நிலையில் இவர்களுக்கு அரசாங்க அமைப்புகளில் பிரதிநிதித்துவமும் இருக்கவில்லை. பிரதான அரசியற்கட்சிகளால் இவர்கள் தேடப்படவுமில்லை. 1980களில் இந்நிலையில் மாற்றம் ஏற்பட்டு இந்தியத்தமிழர் சமூகம் தேசிய அரசியலில் ஒரு முக்கிய அங்கமாக உருவாகியிருப்பது ஒரு முக்கிய முன்னேற்றமாகும். அரசியல் பங்கேற்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக இம்மக்கள் இன்று தமது சமூக-பொருளாதார உரிமைகள், மேம்பாடு, கல்வி வளர்ச்சி, மொழி, பண்பாட்டுத் தனித்துவம் பேணல் முதலாம் விடயங்களில் விழிப்புணர்வுடன் செயற்பட்டு வருகின்றனர். இலங்கையின் பன்மைச் சமூகக் கட்டமைப்பில் தாம் ஒரு தனித்துவம் வாய்ந்த இனக்குழுவாக அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் மேலோங்கி வருகின்றது.

அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட மாகாண சபைகளில் உறுப்பினர்களாவும் அமைச்சர்களாகவும் இந்தியத் தமிழர்களின் பிரதிநிதிகள் கடமையாற்றி

வந்தபோதிலும் இந்தியத்தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் வாழ்ந்து வரும் பெருந்தோட்டப் பகுதிகள், மாகாண சபைகளின் அதிகார வரம்பின் கீழ் வரவில்லை. இதனால் இந்தியத் தமிழர்களின் மாகாணசபை உறுப்பினர்கள், பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டிற்கான செயற்றிட்டங்ளைை உருவாக்கி நடைமுறைப்படுத்த முடியவில்லை. அதிகாரப்பரவலாக்கத்தின் முக்கிய நோக்கமான பின்தங்கிய பிரதேச மக்களின் மேம்பாடு, பெருந்தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் பொருளற்றதாகி விட்டது. மாகாண சபைகள், பிரதேச சபைகள் மூலமாக இம்மக்கள் மத்தியில் சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் இவ்வாறான முட்டுக் கட்டைகளை எதிர்நோக்கி வந்துள்ளன.

## சமூகநலன்கள், கல்வி, வேலைவாய்ப்புகள்

நான்கு தசாப்தங்களாகக் குடியுரிமையும் வாக்குரிமையும் அற்றநிலையில் மலையக இந்திய மக்கள் கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரவசதி, வீட்டு வசதி என்பவற்றில் பிற சமூகத்தவரை விடப் பின்தங்கியவர்களாகவே உள்ளனர்.

கல்வித்துறையில் நகர்ப்புற மக்களின் எழுத்தறிவு 89.1 வீதமாகவும் கிராமப்புற மக்களின் எழுத்தறிவு 84.6 வீதமாகவும் இருந்தவிடத்து பெருந்தோட்ட இந்தியர்களின் எழுத்தறிவு வீதம் 59.4 ஆக உள்ளது. இந்தியப் பெண்களின் எழுத்தறிவு வீதம் 46 வீதம் மட்டுமே (1985)11. அவ்வாறே, இந்தியத் தொழிலாளர் பிள்ளைகளின் பாடசாலை இடைநிறுத்த வீதம், மாணவர் சேர்வு வீதம், பல்கலைக்கழக அனுமதிவீதம் என்பன தேசிய சராசரியுடன் ஒப்பிடும்போது இயன்றளவில் பின்தங்கிய நிலையில் உள்ளன. ஆயினும் அண்மைக்காலங்களில் பெரும்பாலான மலையகத் தமிழ்ப் பாடசாலைகள் வெளிநாட்டு உதவியுடன் முன்னேற்றங் கண்டுள்ளன. மலையகத்தில் ஒரு கல்வியியல் கல்லூரியும் ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் இயங்கி வருகின்றன. 3000 மலையக இளைஞர்கள் வரை மலையகத் தமிழ்ப்பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஆயினும் கல்வித்துறையில் ஏனைய சமூகத்தினர் அடைந்துள்ள தராதரங்களை எய்த புதிய நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. நீண்ட காலமாகப் பெருந்தோட்டப் பாடசாலைகள் தேசிய கல்விமுறைக்கு அப்பாற்பட்ட முறையில் பெருந்தோட்ட நிர்வாகத்தின் பொறுப்பில் இயங்கியமையால் கல்வி முன்னேற்றம் பின்தங்க நேரிட்டது.

அவ்வாறே, பெருந்தோட்ட சுகாதார சேவைகளும் தேசிய சுகாதார சேவைகளுடன் ஒன்றிணைக்கப்படவில்லை. 1972 வரை பெருந்தோட்ட நிர்வாகத்தின் மேற்பார்வையின் கீழ்வந்த சுகாதார சேவைகள், தேசியமயமாக்கத்தின் பின்னர் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், சபை ஆகிய அமைப்பின் கீழ் வந்தன. 1992இல் பெருந்தோட்டங்கள் தனியார் மயமாக்கத்துக்கு உட்பட்ட பின்னர் வெளிநாட்டு உதவியுடன் அமைக்கப்பட்ட அரசாங்கப் பொதுநல ட்ரஸ்ட்டினால் சுகாதார சேவைகள் பொறுப்பேற்கப்பட்டன. அரசாங்க நிதி ஒதுக்கீடன்றி வெளிநாட்டு நிறுவனங்களின் உதவிநிதியே இச்சேவைகளுக்கு உதவி வருகின்றது. மேற்கண்ட நடவடிக்கைகளின் காரணமாக, பெருந்தோட்ட அபிவிருத்தி சபையின் (JEDB) கீழ்வரும் தோட்டங்களில் பிள்ளை இறப்பு வீதம் 73 இலிருந்து (1982) 49 ஆகக் (1989) குறைந்துள்ளது. அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத் தோட்டங்களில் இவ்விகிதம் 73 இலிருந்து (1982) 34 ஆகக் (1989) குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் தேசிய சராசரியுடன் ஒப்பிடும் போது (1982=30, 1989=17) பெருந்தோட்டப் பிள்ளைகளின் இறப்பு விகிதம் இன்னும் அதிகமாகவே உள்ளது. பெருந்தோட்டங்களில் பல்கலைக்கழகப்பட்டம் பெற்ற மருத்துவர்கள் பொதுவாகச் சேவையில் இல்லை. (நாட்டில் 1996இல் 5904 பயிற்சி பெற்ற மருத்துவர்கள்) மலையக

மாவட்டங்களில் வாழுவோரின் சராசரி வயது (life expectancy) ஏனைய மாவட்டங்களை விடக் குறைவாகவே உள்ளது.[12]

வீட்டு வசதிகளைப் பொறுத்தவரையில் சுதந்திரத்தின் பின்னரும் பல தசாப்தங்களாக மலையக மக்கள் லைன் வீடுகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். 1969-1970இல் 85 வீதமான மலையகத் தொழிலாளர்களின் வசிப்பிடமாக இவை விளங்கின. 1947-1975 காலப்பகுதியில் தனியார் நிர்வாகம் வீட்டுவசதிகளை முன்னேற்ற முற்படவில்லை. 1984இல் தொடங்கப்பட்ட 10 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தில் பெருந்தோட்டங்கள் சேர்க்கப்படவில்லை. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபையின் ஐந்தாண்டுத் திட்டத்தில் (1990-95) பெருந்தோட்டங்களில் 5000 வீடுகளைக் கட்டத்திட்டமிடப்பட்டது. (இன்றைய பெருந்தோட்டக் கட்டமைப்பு அமைச்சிற்கு இத்துறையில் முக்கிய பொறுப்புண்டு.) மலையக இந்தியர் சமூகம் குடியுரிமையற்றிருந்தமையால் போதிய அரசாங்க வேலைவாய்ப்புகள் அவர்களுக்குக் கிட்டவில்லை. அண்மைக்காலங்களில் அரசாங்க சேவையில் இந்தியத்தமிழர்களின் வீதாசாரம் 0.1 மட்டுமே. மாகாணசேவைகளில் 0.2 வீதம், அரசாங்க சபைகள், கூட்டுத்தாபன சேவைகளில் 0.5 வீதம் எனக் குறைந்த அளவிலேயே அவர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

## முடிவுரை

சுதந்திரத்தின் பின்னர் நான்கு தசாப்தங்களாக இந்தியத்தமிழர்கள் குடியுரிமையும் வாக்குரிமையும் அற்றவர்களாய், தேசிய அரசியலில் வலிமையற்ற சமூகமாக வாழநேர்ந்தது. இந்நிலை அவர்களுடைய சமூக, பொருளாதார, கலாசார வாழ்க்கையில் எதிர்மறைப் பாதிப்புகளை ஏற்படுத்தியிருந்தது. கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி, வேலைவாய்ப்பு என்பனவற்றில் அவர்கள் ஏனைய சமூகத்தவரைவிடப் பின்தங்கியவர்களாய் ஒரு தொழிலாளர் சமூகமாகவே வாழ நேரிட்டது. கடந்த ஒரு தசாப்த காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் உரிமைகள் இச்சமூகத்தவர் மத்தியில் புதிய விழிப்புணர்வையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளன. இன்று அவர்கள் இலங்கைப் பன்மைச் சமூக அமைப்பின் ஒரு முக்கிய அங்கமென்ற அங்கீகாரத்தைப் பெற்றவர்களாய், தமது நலவுரிமைகளையும், தனிப்பண்பையும் கலாசார அடையாளத்தையும் பேணும் அவாவுடன் செயற்பட்டு வருகின்றனர். அவர்கள் பெற்றுள்ள வாக்குபலமும் அரசியல் விழிப்புணர்வும் தேசிய அரசியற் கட்சிகளிடத்து ஒரு புதிய கௌரவத்தை ஏற்படுத்தியுள்ளது. வடபகுதியில் வளர்ச்சி பெற நேர்ந்த தீவிரவாத அரசியலினால் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில, மலையக மக்களின் அடிப்படைத் தேவைகளையும் அபிலாஷைகளையும் துரிதமாகத் தீர்க்கவேண்டும் என்ற முறையில் தேசிய அரசியற்கட்சிகள் இன்று சிந்திக்க முற்பட்டிருப்பதும் ஒரு முக்கிய முன்னேற்றமாகும்.

## அடிக்குறிப்புகள்

1. "மலையகத் தமிழர்" என்ற சொல் இலங்கையில் வசிக்கும் சகல இந்திய மரபு வழித் தமிழர்களையும் கருதுகிறது. இச்சொற்பிரயோகம் பற்றிப் பல கருத்து வேறுபாடுகள் உண்டு. இலங்கையின் குடிசன மதிப்பீட்டு அறிக்கைகள் "இந்தியத் தமிழர்" என்ற சொல்லையே பயன்படுத்துகின்றன.

   டொனமூர் அறிக்கையின்படி (1928) 40-50 வீதமானவர்களும் ஜாக்சன் அறிக்கையின்படி (1938) 60 வீதமானவர்களும் சோல்பரி அறிக்கையின்படி 1946ஆம் ஆண்டளவில் 80 வீதமானவர்களும் நாட்டில் நிரந்தரமாகக் குடியேறியிருந்தனர்.

3. *1930களில் ஏற்பட்ட பொருளாதார மந்தத்தினால் உருவாகிய வேலைவாய்ப்புப் பிரச்சினை காரணமாக, அரசாங்கத் திணைக்களங்களில் (பொது வேலைத்திணைக்களம். துறைமுகம். புகையிரதப்பகுதி) பணிபுரிந்த இந்தியர்களின் இடத்தில் இலங்கையர்களை அமர்த்த இக்கொள்கை உருவாக்கப்பட்டது.*

4. *S.U Kodikara, Indo-Ceylon Relations Since Independence, Colombo, 1965, pp 30-40.*

5. *John Kotalawela, An Asian Prime Minister's Story. London, 1956. p 99* இவரது கூற்று: மூன்று *தலைமுறைகளாகியும் இன்னும் இந்தியர்கள் உள்ளூர் மக்களுடன் கலந்து விடாது இந்தியர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.*

6. *L.L.T. Peiris, The Citizenship Law of the Republic of Sri Lanka, Colombo, 1974.*

7. *1964ஆம் ஆண்டின் சிரிமா–சாஸ்திரி ஒப்பந்தம்: 1972 இன் சிரிமா–இந்திரா காந்தி ஒப்பந்தம்*

8. *இத்தொகையுடன் 124.000 பிள்ளைகளையும் (இயற்கை அதிகரிப்பு) சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.*

9. *மேலும் விபரங்களுக்குப் பார்க்க:*
   *V. Suriyanarayan, ed., Rehabilitation of Sri Lankan Repatriates: A Critical Analysis, Madras, 1986.*
   *M. Vamadevan, Sri Lankan Repatriates in Tamil Nadu, Madras 1989.*

10. *B. Bastiam Pillai, Survey of Conflicts among Communities in Sri Lanka, University of Madras, 1995. p 49.*
    *பார்க்க*
    *L. Piyadasa, Sri Lanka: The Holocaust and After, London 1984*

11. *Dept. of Census and Statistics, Labour Force and Socio-Economic Survey, Colombo 1987.*

12. *P. Muthulingam, Devolution and Indian-Origin Tamils, Lanka Guardian, Vol. 19, No. 20, 1997, pp 11-12*

# இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் மலையகத் தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய தாக்கங்களும் விளைவுகளும்

மா. செ. மூக்கையா

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதலாக மலையகத் தமிழ் மக்களின் வாழ்வின் பல்வேறு துறைகளிலும் அரசியல் பல பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளது என நம்பப்படுகிறது.[1] அதே நேரத்தில் சில சந்தர்ப்பங்களில் அவர்கள் அரசியலில் பேரம் பேசக்கூடிய தகுதிகளைக் கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது. இத்தகைய கருத்துக்களை முற்றாக ஏற்றுக் கொள்ள முடியுமா என்பதனையும், சில கால கட்டங்களில் அவர்கள் அரசியலில் பேரம் பேசக் கூடிய தகுதியினைப் பெற்றிருந்தனர் என்று கூறப்படும் கருத்தினை நுணுகி ஆராய்வதனையும், அவ்வாறான நிலைமைகளின் இறுதி விளைவாக அவர்கள் சாதித்தவை என்ன என்பதனை நுணுகி ஆராய்வதனையும் நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததன் (பெப்ரவரி, 1948) பின்னர் நிகழ்ந்த முதலாவது, பாராளுமன்றத் தேர்தலில் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஏழு பேர் தெரிவு செய்யப்பட்டனர். இக்கால கட்டத்தில் தென் கிழக்காசிய நாடுகளில் குறிப்பாக, சீனாவில் ஏற்பட்ட கம்யூனிசப் புரட்சியும், கம்யூனிசத்தின் ஊடுருவல் பற்றி ஏனைய தென்கிழக்காசிய நாடுகளான மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளில் ஆட்சியாளர்கள் மேற்கொண்ட முன் எச்சரிக்கை நடவடிக்கைகளும் இலங்கையின் அக்கால அரசியல் தலைவர்களது அரசியல் கருத்துக்களிலும் செல்வாக்குச் செலுத்தத் தவறில்லை. கம்யூனிஸத்தின் அச்சுறுத்தல் ஒருபுறம் காணப்பட, மறுபுறத்தில் இலங்கையின் பெருந்தோட்ட உற்பத்திகள் பொருளாதார முதுகெலும்பாக விளங்கியமையும் அதனால் அத்தோட்டங்களில் தொழில்புரிந்த இந்தியத் தமிழ் தொழிலாளர்கள் இந்நாட்டின் அரசியலில் கூடிய செல்வாக்கினைப் பெற்று விடுவார்களோ என்ற ஒரு அர்த்தமற்ற அச்சத்தினை அரசியல் சக்திகள் மனதில் கொண்டிருந்ததன் காரணமாகவும் அத்தொழிலாளர் சமூகத்தினது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பத்திலேயே தடைசெய்வதற்காக அல்லது முளையிலே கிள்ளிவிட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் "பிரஜா உரிமைச் சட்டம்" பாராளுமன்றத்தினால் உருவாக்கப்பட்டது என்ற கருத்துக்கள் உள்ளன.

இக்காலகட்டத்தில் நிலவிய நாட்டின் சனத்தொகையினது, இனரீதியான பரம்பலினையும் அதனது அமைப்பினையும் கவனித்துப் பார்க்கும் போது இத்தகைய காரணங்களின் செல்வாக்கின் முக்கியத்துவத்தை இனங்காண முடியும். 1951 ஆம் ஆண்டு நடைபெற்ற குடிமதிப்பீட்டின் போது, நாட்டின் மொத்தக் குடித்தொகையில் சிங்களவர்கள் (69.3%) முதன்மையாகவும் அவர்களை அடுத்து இரண்டாவது இனக்குழுவாக இந்தியத்தமிழர்களும் (12.0%) காணப்பட்டனர். (அட்டவணை – 1) இதற்கடுத்த வரிசையிலேயே ஏனைய இனக் குழுக்கள் நாட்டின் சனத்தொகையில் இடம் வகித்தன. (இணைப்பு 1 ) 1949ஆம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்டத்தினால் ஏற்பட்ட மனத் தளர்வும், இந்நாட்டின் இனவாத அடிப்படையிலான அணுகுமுறைகளும் காரணமாக 1961ஆம் ஆண்டளவில் இந்தியத்தமிழரது எண்ணிக்கை இலங்கையின் மொத்த சனத்தொகையில் முன்னர் வகித்த நிலையிலிருந்து பல மாற்றங்கள் ஏற்பட்டன. இவர்களில் சிலர் தாமாகவே இந்தியா திரும்பி விட்டனர்.

இந்திய–பாகிஸ்தானிய வதிவிட சட்டத்தின் பிரகாரம் இலங்கை பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்தவர்களில் ஏறத்தாழ 80% வீதமானோரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமையால் அம்மக்கள் மத்தியில் ஒரு விரக்தி நிலை உருவாகியதில் ஆச்சரியமில்லை. (2) மறுபுறத்தில் இச்சட்டத்தினைப் பகிஷ்கரிக்கும் எண்ணத்துடன் இலங்கையில் அப்போது வாழ்ந்த இந்தியத் தமிழ் மக்களது தலைவர்களும் நிறுவனங்களும் அம்மக்கள் பிரஜா உரிமைக்கு விண்ணப்பிப்பதனை ஊக்குவிக்கவில்லை. இவை யாவற்றினதும் விளைவாக 1951ஆம் ஆண்டில் இந்நாட்டின் சனத்தொகையில் இரண்டாம் இடத்தை வகித்த இந்தியத் தமிழ் மக்கள் 1961ஆம் ஆண்டு குடி மதிப்பீட்டின் போது (10.6%) மூன்றாம் இடத்திற்குத் தள்ளப்பட்டனர். (3) இக்கால கட்டத்தில் இந்தியத் தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகளை எடுத்துக் கூறக்கூடிய அரசியற் கட்சி எதுவுமிருக்கவில்லை. அவர்கள் பிரஜா உரிமை இல்லாததன் காரணமாக தேர்தல்களில் வாக்களிக்கும் தகுதியினை இழந்திருந்தனர். பிரஜா உரிமை இல்லாததால் அவர்கள் வேறு பல தகுதிகளையும் இந்நாட்டில் இழந்திருந்தனர். நாடற்றவர்களாகக் கருதப்பட்ட அவர்கள் இலங்கையை விட்டு வேறெந்த நாட்டிற்கும் பிரயாணம் செய்வதற்கான தகுதியும் மறுக்கப்பட்டிருந்தது. சர்வதேச மனித அடிப்படை உரிமைகளின்படி ஒருவர் சுதந்திரமாக பயணம் செய்யக்கூடிய உரிமையும் ஒன்றாகும். இவர்கள் நாடற்றவர் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு அதனால் கடவுச்சீட்டு (Pass port) பெறும் தகுதியினை இழந்திருந்தனர். இது மாத்திரமன்றி அரசாங்க தொழில்களுக்கு தகுதியற்றவராகினர். (4) ஏனெனில், அரசாங்கத் தொழில் வாய்ப்புக்கள் இலங்கையருக்கே என்ற நியதி அப்போதும் நடைமுறையில் இருந்தது. இதனை விடவும் பாரதூரமான விளைவினை ஏற்படுத்திய நடைமுறை ஒன்றிருந்தது. தொழிலுக்கோ அல்லது ஏதாகிலும் வேறு தேவைகளுக்கோ விண்ணப்பங்களில் விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையா என்ற வினா மாத்திரமன்றி அவர் எவ்வாறு பிரஜா உரிமையைப் பெற்றுக் கொண்டார். வம்சாவளி மூலமாகவா? அல்லது பதிவின் மூலமாகவா? என்ற வினாவும் கேட்கப்பட்டு வந்தது. இந்த வினா அர்த்தமற்றது என்றும், பதிவுப் பிரஜையானால் அவர்களைப் புறக்கணிக்க அல்லது இரண்டாந்தரப் பிரஜையாக நடாத்துவதற்கே இவ்விபரம் கேட்கப்படுகின்றது என்ற முறைப்பாட்டை அடுத்து 1980 ஆம் ஆண்டுகளில் இனிமேல் இத்தகைய வினா அரசாங்க நடைமுறைகளில் இருக்கக் கூடாது என்ற கருத்தினை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. ஆனால், நடைமுறையில் இன்றும் அவ்வினா பல அரசாங்க நிறுவனங்களினால் வினாவப் பட்டே வருகின்றது.

இலங்கையில் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள் பல்வேறு உருவங்களில் இடம்பெற்றன. அவற்றில் நிலமற்றோருக்கு அரசாங்க நிலத்தினை குடியேற்றத் திட்டங்களின் கீழ் பங்கீடு செய்தல் முக்கிய நடவடிக்கையாக இருந்தது. (5) பிரஜா உரிமையற்றவர்கள் அவ்வாறான நிலப்பங்கீட்டுச் சலுகைகளைப் பெற முடியாதவர்களாகினர். அது மாத்திரமன்றி 1956, 1977, 1983ஆம் ஆண்டுகளில் இந்நாட்டில் ஏற்பட்ட இனரீதியான வன்முறைகள் காரணமாக பாதிக்கப்பட்டு பீதியுற்ற இந்தியத் தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்து வடக்கு, கிழக்கு மாகாண மாவட்டங்களுக்கு குடிபெயர்ந்தனர். (6) 1981ஆம் ஆண்டளவில் அவ்வாறு குடிபெயர்ந்து வடக்கு, கிழக்கு மாகாண மாவட்டங்களில் வாழ்ந்தவர்களின் எண்ணிக்கை 125,000 வரையில் காணப்பட்டது. இவர்களில் அநேகமாக அனைவருமே விவசாயத் தொழிலாளர்களாகவும் நிலமற்றவர்களாகவும் இருந்தனர். வரண்ட வலய பிரதேசங்களில் அபிவிருத்தி செய்யப்படாத அரச நிலங்களை இத்தகைய நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் ஏனைய சமூகங்களைச் சார்ந்தவர்களானால் அத்துமீறி குடியேறி காடுகளை அழித்து, இதற்காக அரசினால் தண்டம் விதிக்கப்பட்டால் பின்னர் அந்த தண்டப் பணப் பற்றுச்சீட்டைச் சான்றாக கொண்டு அந்நிலத்திற்கு உரிமையாளராகும்

நடைமுறைகள் காணப்பட்டன. ஆனால், அவ்வாறாகக் காடழித்து அவற்றை விருத்தி செய்த இந்தியத் தமிழ் விவசாயத் தொழிலாளர்களுக்கு அவ்வுரிமை மறுக்கப்பட்டது. அந்நிலங்களில் இருந்தும் அவர்கள் வெளியேற்றப்பட்டார்கள். அவ்வாறு அவர்களால் காடழிக்கப்பட்டு அபிவிருத்தி செய்த நிலங்களை ஏனையோர் கைப்பற்றிக் கொண்ட நிகழ்ச்சிகளுக்கான உதாரணங்கள் பல உள்ளன.

வர்த்தகம், கைத்தொழில்கள் ஆரம்பிக்கவும் கூட அரச அனுமதி பெறுவதற்கு பிரஜா உரிமை அடிப்படைத் தகுதியாக இருந்தது. அது இல்லாதவர்கள் அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது. ஒரு வீட்டில் நூற்றாண்டு காலமாக பரம்பரை பரம்பரையாக வாழ்ந்திருந்தாலும் பிரஜா உரிமையற்றவர்களுக்கு அதனை சந்தை விலைக்கு கொள்வனவு செய்யும் தகுதியும் கூட மறுக்கப்பட்டிருந்தது. அனைவருக்கும் இலவசக் கல்வி வழங்கிய நாட்டில் பல பரம்பரையாக இந்நாட்டில் இருந்திருந்த போதிலும் பிரஜா உரிமை இன்மை காரணமாக பல்கலைக்கழகத்தில் கட்டணம் வசூலிக்கவும் விதிமுறைகள் நடைமுறையிலிருந்தன. இவ்வாறு சுதந்திரத்தின் பின்னர் இந்நாட்டில் ஏற்பட்ட அரசியல் தீர்மானங்களினால் பிரஜா உரிமையை இழந்த மக்கள் பெரும் தாக்கத்திற்கு ஆளாகி இருந்தனர். அதனால் அடிப்படை மனித உரிமைகளை இழந்தவர்களாகவே அவர்கள் வாழ வேண்டி இருந்தது.

இத்தகைய பாரபட்சமான நிலைமைகளின் விளைவுகளை உற்று நோக்கும் போதுதான் அவற்றின் உண்மைத் தாற்பரியங்களை விளங்கிக் கொள்ள முடியும். சுருக்கமாகக் கூறுவதனால் இந்தியத் தமிழ் மக்களில் 35 வீதமானோர் எழுத வாசிக்கத் தெரியாதவர்களாகவும், 90 வீதமானோர் விவசாயத் தொழிலாளர்களாக கிராமிய, நகரத் தொழிலாளர்களைவிட குறைந்த வருமானம் பெறுபவர்களாகவும், இதனால் போஷாக்கின்மை, இரத்த சோகை போன்ற குறைபாடுகளையும் பிரசவகால மரணங்கள் அதிகமாகவும் கொண்டு காணப்பட்டனர். (7) தேசிய ரீதியில் தலா வாழுமிட வசதியின் 1/3 பங்கே இவர்களுக்கு இருந்தது. சராசரி குடும்பம் ஒன்று இருநூறு சதுர அடி கட்டப்பட்ட பரப்பினைக் கொண்ட வீடொன்றிலேயே வசித்தது. சுத்திகரித்த நீர் விநியோகம், கழிவு நீக்க வசதிகள் என்பன மிகவும் பின்னடைந்த நிலையிலும் காணப்பட்டன. கல்வியில் மிகவும் பின் தங்கி இருந்தார்கள். உயர் கல்வியில் குறிப்பாக பல்கலைக் கழகத்தில் இவர்களில் 0 வீதமானோரே பங்குபற்றியுள்ளதாக இலங்கை வங்கியின் நுகர்வோர் நிதிய அறிக்கை (1986/87) கூறுகிறது. 1997ஆம் ஆண்டில் இலங்கையின் பல்கலைக்கழகங்களில் பதிவு செய்யப்பட்டிருந்த 35,000 உள்வாரி மாணவர்களில் 150 பேருக்குக் குறைவாகவே இந்தியத் தமிழ் சமூகத்தைச் சார்ந்தவர்கள் காணப்பட்டனர்.

இத்தகைய அரசியல் சூழலில் இம்மக்கள் நாட்டின் அரசியலில் பங்கு பற்றுவதற்கான அடிப்படைத் தகுதியான குடியுரிமையினைப் பெறுவதிலேயே தமது காலம், சக்தி யாவற்றையும் விரயம் செய்து கொண்டிருந்தனர். அரசியல் ரீதியான நிறுவன அமைப்புக்கள் எதுவும் வளரவில்லை. இம்மக்களில் பெரும்பாலானவர்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களாக இருந்ததனால் அவர்களது தொழில் ரீதியிலான சில அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் தொழிற் சங்க அமைப்புக்களில் அங்கத்துவம் வகித்து வந்தனர். 1977 ஆம் ஆண்டு வரை பல்வேறு கட்டுப்பாடுகளுக்கும் தடைகளுக்கும் உட்பட்ட வகையிலேயே அவ்வமைப்புக்களும் கூட இயங்கி வந்தன என்பதனையும் குறிப்பிட்டுக் கூறவேண்டும்.

1971ஆம் ஆண்டு வரை, நாட்டில் சோல்பரி ஆணைக்குழுவின் யாப்பு நடைமுறையில் இருந்தது. அதன்படி மேல்சபை (செனற்), மக்கள் பிரதிநிதிகள் சபை ஆகியவற்றில் சிறுபான்மை யினரது நலன்களைப் பாதுகாக்க வேண்டி, அவர்களின் பிரதிநிதிகளை நியமிப்பதற்கான வழிவகை இருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனால் இம்மக்களது பிரதிநிதிகளாக தேர்தலில்

எவரும் தேர்ந்தெடுக்கப்படாத போதிலும் கூட தொழிற்சங்கத் தலைவர்களாக இருந்தவர்களிற் சிலர் மேல் சபைக்கும் பாராளுமன்றத்திற்கும் நியமன அங்கத்தவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஆனால், அவ்வாறான சிறுபான்மையினரது நலனை பாதுகாத்த சில ஏற்பாடுகளும் மேல்சபை ஒழிக்கப்பட்டதோடு இல்லாது போயிற்று.

சிறுபான்மையினருக்கு யாப்பில் இருந்த சில பாதுகாப்புக்கள் மறைந்த காலகட்டத்தில் 1964ஆம் ஆண்டிலும் 1974 ஆம் ஆண்டிலும் ஏற்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தங்கள் இலங்கையில் இந்தியத் தமிழ் மக்கள் கொண்டிருந்த நிலைமையில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். (8) 1949ஆம் ஆண்டு பிரஜா உரிமை சட்டம் காரணமாக இலங்கையில் வாழ்ந்த இந்திய தமிழ் மக்கள் நாடற்றவர்களாக்கப்பட்டு நடைப்பிணங்களாக்கப் பட்டனர் என்றால் 1964, 1974 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தங்கள் அவர்களை கை, காலற்ற ஊனர்களாக்கி விட்டது என்று கூறினால் அது மிகையாகாது. 1951ஆம் ஆண்டில் நாட்டின் இரண்டாவது இனமாயிருந்த மக்கள் கூட்டத்தினரை இவ்வொப்பந்தம் அமுலாக்கப்பட்டதன் காரணமாக 1981 ஆம் ஆண்டளவில் இந்நாட்டின் மொத்த சனத்தொகையில் 6.9 வீதத்தினையே கொண்ட நான்காவது நிலைக்குக் கொண்டு சென்று விட்டது என்பதனை மறுக்க முடியாது. 1981 ஆம் ஆண்டில் பிரதான சமூகங்களின் விகிதாசார அமைப்பு பின்வருமாறு காணப்பட்டது.

| | | |
|---|---|---|
| சிங்களவர்கள் | - | 72% |
| இலங்கைத் தமிழர்கள் | - | 12% |
| முஸ்லிம்கள் | - | 7.2% |
| இந்தியத் தமிழர்கள் | - | 6.9% |

சிறிமா-சாஸ்திரி (1964) ஒப்பந்தத்தின் கீழும் சிறிமா-இந்திரா (1974) ஒப்பந்தத்தின் கீழும் 412,000 பேர் 1981 ஆம் ஆண்டளவில் தாயகம் திரும்பி விட்டனர். (9) அதனால் அவ்வருடத்தில் இலங்கையில் வாழ்ந்த மலையகத் தமிழ் மக்களின் எண்ணிக்கை 1,036,656 ஆகவும், அது இலங்கையின் மொத்த சனத் தொகையில் 6.9 சதவீதமுமாகவே இருந்தது. 1964 ஆம் ஆண்டில் பிரஜாவுரிமையற்றிருந்த 975,000 மலையகத் தமிழ் மக்களும் பிரஜா உரிமை பெற்றிருந்த 140,000 மலையகத் தமிழ் மக்களுமாகச் சேர்ந்து 1,115,000 பேர் இருந்தனர். அவர்களில் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்களும் இலங்கையிலேயே இருந்திருந்தால் அவர்களுடைய எண்ணிக்கை 1996ஆம் ஆண்டில் 1,920,272 பேராக இருந்திருக்கும். இதன் காரணமாக 1996 ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையின் சனத்தொகை 18.4 மில்லியனாக இருந்த நிலைமை 18.92 மில்லியனாக அதிகரித்திருந்திருக்கும். அதனால் மலையகத் தமிழ் மக்கள் 10.14 வீதத்தினராகவும் இருந்திருப்பார்கள். இதனால் அரசியலில் பேரம் பேசும் தகுதிகளை இவர்கள் இன்று பெற்றுள்ளமையினை விடக் கூடிய அளவில் பெற்றிருந்திருப்பார்கள் எனக் கூறமுடியும். ஆனால் நான்கு இலட்சத்திற்கு அதிகமானவர்கள் 1981ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையை விட்டு வெளியேறியமை அவர்களுக்கு அரசியலில் அடிப்படை பலத்தைக் குறைத்துள்ளது.

1972ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்ட புதிய அரசியல் யாப்பு காரணமாக மேல் சபை நீக்கப்பட்டது. மேல் சபையில் சிறுபான்மையினருக்காக வழங்கப்பட்ட நியமன பிரதிநிதித்துவம் ஒழிக்கப்பட்டது. (10) பாராளுமன்றத் தேர்தல் தொகுதிமுறையின் கீழ் ஒரே ஒரு பிரதிநிதியினையே மலையகத் தமிழ் மக்களால் 1997ஆம் ஆண்டு தேர்தலின் போது தேர்ந்தெடுக்க முடிந்தது. இது 1948ஆம் ஆண்டு நிலைமையுடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ 17 பங்காக குறைந்திருந்தமையினைக் காண முடிகிறது. அது மாத்திரமன்றி

1947 ஆம் ஆண்டில் 95 பிரதிநிதிகள் இருந்த பாராளுமன்றத்தில் 7 பேர் அங்கத்துவம் வகித்தனர். ஆனால் 1977ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தில் அது 168 ஆக அதிகரித்து இருந்தது. எனவே, இத்தகைய அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் மலையகத் தமிழர் பின்வந்த காலங்களில் அரசியலில் பங்கு கொண்ட நிலைமைகளில் பின்தங்கிய, பலமற்ற ஒரு நிலையினையே இனங்காண முடிகிறது.

எவ்வாறாயினும் 1981ஆம் ஆண்டு அறிமுகமாகிய விகிதாசாரப் பிரநிதித்துவம் கொண்ட தேர்தல் முறை கொண்ட யாப்பு மலையக மக்களை பல்வேறு அரசியல் நிறுவன அமைப்புகளிலும் கூடியளவில் பங்கு கொள்ள வாய்ப்பளித்தமையினை மறுப்பதற்கில்லை. (11) 1989 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலிலும் ஒருவரே தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும் போனஸ் நியமன அடிப்படையில் மேலும் இருவர் தெரிவு செய்யப்பட்டது மாத்திரமன்றி அம்மூவருமே அமைச்சர்களாக அரசில் பங்கு கொண்டனர். இதற்கு இக்காலகட்டத்தில் காணப்பட்ட ஜனாதிபதி பதவிக்கான போட்டியின் போது மலையகத் தமிழ் மக்களது பிரதிநிதிகள் பேரம் பேசும் தகுதிகளை பெற்றுக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் காரணமாக 1988 ஆம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்டம் (திருத்த மசோதா) நிறைவேற்றப் பட்டது. அதன்படி இந்தியப் பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்காது இலங்கையில் சட்டபூர்வமாக வாழ்ந்த அனைத்து மலையகத் தமிழ் மக்களும் இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். 1988 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல், 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரதேசசபைத் தேர்தல் என்பனவற்றில் குறிப்பிடத்தக்க வகையில் மலையகத் தமிழ் மக்களது பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவை யாவும் 1981 ஆம் ஆண்டு யாப்பின் வாயிலாக ஏற்பட்ட விகிதாசாரத் தேர்தல் முறையினாலும் 1988 ஆம் ஆண்டில் மலையகத் தமிழ் மக்களுக்கு பிரஜா உரிமை வழங்கியதனால் ஏற்பட்ட வாக்குரிமை அதிகரிப்பினாலும் ஏற்பட்ட விளைவுகளாகும்.

இவ்வாறாக ஏற்பட்ட மாற்றங்கள் மாத்திரமன்றி இம்மக்கள் தேர்தல் காலங்களில் பின்பற்றிய அரசியல் நடத்தைகளிலும் குறிப்பிடத்தக்க சில பண்புகளை இனங்காண முடிகின்றது. 1988 ஆம் ஆண்டில் பிரஜாவுரிமை திருத்தச் சட்டம் ஏற்பட்டதன் காரணமாக இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்காத அனைவரும் இலங்கையர் என சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இதனால் நாடற்றவர்களாகக் கருதப்பட்டவர்கள் குடியுரிமை பெற்றதுடன் அதனால் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமையினையும் பெற்றார்கள். எனவே தமக்கு வாக்குரிமை வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சிக்கு 1988ஆம் ஆண்டிலும், 1993ஆம் ஆண்டிலும் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களின் போதும், 1991ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலின் போதும் தமது வாக்குகளை வழங்கினார்கள். அதன் காரணமாக அக்கட்சியுடன் இணைந்து தேர்தலில் நின்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் வேட்பாளர்கள் பெருமளவில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதுபோன்றே 1994ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போதும் நுவரெலியா மாவட்டத்திலிருந்து மூவரும் பதுளை மாவட்டத்திலிருந்து ஒருவரும் தெரியப்பட்டனர். (பின்னர் கொழும்பில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இருவர் கொல்லப்படவே, அவ்விருவருக்கும் பதிலாக இரண்டு மலையகத் தமிழ் பிரதிநிதிகள் பாராளுமன்றம் சென்றனர்). ஆனால் 1997ஆம் ஆண்டு நடைபெற்ற பிரதேசசபைத் தேர்தலில் மலையகத் தமிழ் வேட்பாளர்கள் அப்போதைய ஆளும் கட்சியுடன் (பொதுசன மக்கள் முன்னணி) இணைந்து போட்டியிட்டபோது மலையகத் தமிழ் மக்கள் முன்னர் போன்று (1988, 1991, 1993, 1994) ஆதரிக்கவில்லை. இவ்வாறு தேர்தல்களில் மலையகத் தமிழ் வாக்காளரது நடத்தையில் காணப்பட்ட இயல்புகளையும் உதாசீனம் செய்வதற்கில்லை. எனவே இந்நாட்டு அரசியலில்

சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட சில பிரதான மாற்றங்கள் மலையகத் தமிழ் மக்கள் வாழ்க்கையிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளமையினைக் காணமுடிகிறது.

அரசியல் மாற்றங்களினால் மலையகத் தமிழ் மக்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவா என்பதையும் ஆராய வேண்டும். சுதந்திரம் முதலாக 1977ஆம் ஆண்டு வரை மலையகத் தமிழ் மக்கள் வாழ்க்கையில் பெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டதாக கூறுவதற்கில்லை. 1956ஆம் ஆண்டு இனக் கலவரத்தினாலும், 1971ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலச் சீர்திருத்தச் சட்ட அமுலாக்கத்தின் போது பெருந்தோட்டங்கள் சிலவற்றில் இருந்து தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டதனாலும், 1977ஆம் ஆண்டு இனக்கலவரம் காரணமாகவும் ஏறத்தாழ ஒரு இலட்சம் மலையகத் தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சென்று குடியேறியிருந்தனர். (12) 1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் பின்னர் சென்ற மலையகத்தமிழ் மக்களையும் சேர்த்தால் அப்போது 125,000 பேர் வரையில் வடகிழக்கு மாவட்டங்களில் வாழ்ந்ததாகக் கூறலாம்.

மறுபுறத்தில், இவர்களுடைய சமூக நிலையில், குறிப்பாக கல்வி நிலையில், சில சாதகமான வளர்ச்சிகள் இக்கால கட்டத்தில் காணப்பட்டமையினையும் எடுத்துக் கூறவேண்டும். 1953ஆம் ஆண்டளவில் இவர்களில் 61 வீதமானோர் எழுத்தறிவற்றவர்களாக இருந்த நிலை 1986/ 1987ஆம் ஆண்டளவில் 31.5 வீதமாகக் குறைந்திருந்தது. அதே நேரத்தில் 35 வீதமானோரே முதனிலைக் கல்வி கற்றிருந்த நிலை 53 வீதமாகவும், 3 வீதமானோரே இரண்டாம் நிலைக் கல்வி கற்றிருந்த நிலை 1986/ 87 ஆம் ஆண்டளவில் 12 வீதமாகவும் அதிகரித்திருந்தது. (13) இக்கால கட்டத்தில் மலையகத் தமிழ் மக்களின் அரசியற் தலைவர்கள் ஆளும் கட்சியுடன் இணைந்திருந்தனர். அவர்கள் மலையகத் தமிழ் பாடசாலைகளின் வளர்ச்சிக்காக அரசாங்கத்திடம் கோரிக்கைகளை முன் வைத்ததனால் ஏற்பட்ட சாதக விளைவுகளில் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

01. பரவலாக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு ஒதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியினை அப்பிரதிநிதிகள் மலையகத் தமிழ் பாடசாலைகளின் அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்ய முடிந்தது.

02. அரசாங்கம் பாடசாலைகளது கல்வி வளர்ச்சிக்காக அயல்நாட்டு உதவிகளைப் பெற்ற போது மலையகத் தமிழ்ப் பாடசாலைகளின் அபிவிருத்திக்காகவும் அவற்றைப் பயன் படுத்த முடிந்தது. உதாரணமாக நொராட், சீடா திட்ட உதவிகள் குறிப்பிடத்தக்கவை. சீடா திட்டத்தின் கீழ் 400 மலையகத் தமிழ்ப் பாடசாலைகள் வரையில் புனருத்தாரண செய்முறைகளுக்கு உட்படுத்தப்பட்டன. (14)

03. மலையகத் தமிழ்ப் பாடசாலைகளில் கற்பிப்பதற்கு மலையகத் தமிழ் இளைஞர்களையே நியமிக்கும் கொள்கையினை அரசு ஏற்றுக் கொண்டதுடன் கடந்த 10 வருடங்களில் அவ்வாறு 2560 ஆசிரியர்களை நியமித்துள்ளது. (15)

04. ஜேர்மனிய அரசாங்க உதவியுடன் சிறிபாத கல்விக் கல்லூரி நிறுவப்பட்டுள்ளதுடன் அக்கல்லூரியின் 75 வீதமான பயிற்சியாளர்களை மலையக தமிழ் இளைஞர்கள் மத்தியில் இருந்து தெரிவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு ஆசிரியர் பயிற்சி கல்லூரியும் தலவாக்கொல்லையில் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சில சாதகமான விளைவுகளும் அரசியல் மாற்றங்களினால் மலையகத்தமிழ் மக்களைப் பொறுத்து ஏற்பட்டுள்ளமையினையும் குறிப்பிட்டுக் கூறுதல் வேண்டும். பொருளாதாரத் துறையினைப் பொறுத்தமட்டில் பெருந்தோட்டத் தொழிலாளர்களாகவே

மலையகத் தமிழ் மக்களில் பெரும்பான்மையானோர் வாழ்வதால் குறிப்பிடத்தக்க எதுவித வளர்ச்சியும் ஏற்பட்டதாகக் கூறுவதற்கில்லை. ஏறத்தாழ பத்து வருடங்களாக தொழிலாளர்களது வீடுகள் அவர்களுக்கே சொந்தமாக வேண்டும் என்ற கருத்து தொடர்ந்தும் அரசியல் விவாதங்களில் இடம்பெற்று வருவதனால் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று கூறுவதில் தவறில்லை. முன்னைய அரசாங்கம் இலங்கையில் வீட்டு வசதிகளை அபிவிருத்தி செய்வதில் பெரும் அக்கறை காட்டியது. அத்துடன் 1970-1977ஆம் ஆண்டுகளில் ஆட்சியிலிருந்த அரசு பெருந்தோட்ட துறை தவிர்ந்த ஏனைய மக்களுக்கு வாடகைக்குக் குடியிருந்த குறைந்த வருமான பிரிவினருக்கு அவர்கள் வாழ்ந்த வீட்டை உரிமையாக்கும் வகையில் "வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தினை உருவாக்கி இருந்தது." அரசுகளினால் காலத்திற்குக் காலம் முன்வைக்கப்பட்ட வீட்டு வசதி அபிவிருத்திக் கொள்கைகளின் விளைவாகவும், அவ்வரசுகளில் மலையகத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பங்கு கொண்டதன் காரணமாகவும் இப்போது பெருந்தோட்டத் தொழிலாளர்கள் வாழும் வீடுகளும் நிலமும் (7 பேர்ச் நிலம்) அவர்களுக்கு சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் உடன்பாடுகள் வளர்ந்துள்ளன. இலங்கையின் ஆட்சியினை மாறி, மாறி கைப்பற்றி வரும் ஐக்கிய தேசிய கட்சி (ஐ.தே.க), இலங்கை சுதந்திரக் கட்சி (இ.சு.க) இரண்டுமே இக்கருத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளன. அமுலாக்கமே தாமதமாகிறது. 1994ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலின் போது ஐ.தே.க அவசர அவசரமாக சில தோட்ட வீடுகளின் உரிமைச் சாசனங்களை குடியிருப்பாளருக்கு வழங்கியது. அது போன்றே 1997ஆம் ஆண்டு பிரதேச சபைத் தேர்தலுக்கு முன்னர் இப்போதைய அரசும் தோட்ட வீடுகளின் உரிமைச் சாசனங்களை சில தோட்ட குடியிருப்பாளருக்கு வழங்கியது. இவையாவும் தேர்தல் வித்தைகள் என ஒரு புறத்தில் விமர்சனங்களுக்கு ஆளாகிய போதிலும், மறுபுறத்தில் அவ்வரசுகள் வீடுகளை தொழிலாளருக்கு வழங்க கொள்கை ரீதியாக சம்மதம் தெரிவித்தமையினை அறிய முடிவதுடன், அவ்வரசுகள் அக்கொள்கையினை அமுல் நடத்த சம்மதம் தெரிவித்தமையினையும் இனங்காண முடிகிறது. பெருந்தோட்டங்களில் நிலச்சீர்திருத்தச் சட்டம் அமுல் செய்யப்பட்டதன் காரணமாக தொழிலாளர்கள் சில பகுதிகளில் பல துன்பங்களுக்கு ஆளாகினர். (16) அதே நேரத்தில் தொழிற்சங்க அமைப்புக்கள் சில சாதக விளைவுகளையும் பெற்று தமது நிலையினை உறுதி செய்து நிறுவனங்களின் நிருவாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதனால் மலையகத் தமிழ்த் தொழிலாளர்களது பிரதான அரசியல் நலன்புரி அமைப்புக்களான தொழிற்சங்கங்கள் அங்கத்தவர்கள் சந்தாத் தொகையை சிறந்த முறையில் வசூலிக்க முடிந்தது. (check off system) அதனால் அச்சங்கங்கள் நிதிவசதி பொறுத்து பலம் மிக்கனவாகின. முன்னர் தொழில் சங்க பிரதிநிதிகள் அங்கத்தவர் சந்தாவை அங்கத்தவர்களிடம் நேரடியாக வசூலிக்க வேண்டும். இப்போது தொழிலாளருடைய சம்பளத்திலிருந்து தோட்ட நிருவாகம் தொழில் சங்கங்களுக்கு கொடுத்து விடுகின்றன. இது தொழிற்சங்கச் செயற்பாட்டிற்கு ஏற்பட்ட ஒரு பெரும் சாதக விளைவு என்றே கூற வேண்டும்.

இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் அரசியல் போராட்டங்கள் மிக முக்கியமானவையாகும். பெரும்பான்மை பேராளிகள் தமிழ்மொழி பேசுபவர்களாகவும், இந்து மதத்தைப் பின்பற்றுபவர்களாகவும் இருப்பதனால், அதே மொழியினையும் மதத்தினையும் சார்ந்தவர்களான மலையகத் தமிழ் மக்களையும் பொறுத்து இப்போராட்ட விளைவுகள் முக்கியமாகின்றன. அத்துடன் 1956ஆம் ஆண்டை அடுத்த காலப்பகுதியில் இந்நாட்டில் காணப்பட்ட இனவாத அரசியலின் வற்புறுத்தல்களால் இவ்விரு தமிழ்ச் சமூகத் தலைவர்களும் அவர்களது மக்கள் எதிர்நோக்கிய சில பொதுவான அரசியல் பிரச்சினைகள் காரணமாக அரசியல் இணக்கம் கொண்டிருந்தனர். அத்துடன் மொழி, மத, கலாசார உறவுகளுடன் காலத்திற்குக் காலம்

ஏற்பட்ட இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்களில் ஒரு சாரார் முன் குறிப்பிட்டவாறு வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் சென்று குடியேறினர். எனவே அவர்களில் ஒரு சிலரும் இப்போராட்டங்களில் இணைந்திருக்க சாத்தியக் கூறுகள் உள்ளன. 1983ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட சம்பவங்களுக்கு எதிராக இலங்கையின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்கள் தம்மை பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கிய இனக் கலவரத்தினைக் கண்டித்தனர். இத்தகைய கண்டனங்களை வேறான வகையில் விமர்சனங்களுக்கு ஆளாக்கி வடக்கு, கிழக்கு போராட்டங்களுடன் இணைத்துப் பார்க்கும் ஒரு அரசியல் சிந்தனையும் உருவாகியுள்ளது. நகர்ப்புறங்களில் தொழில்புரியும் மலையகத் தமிழ் மக்கள் அரசினது பாதுகாப்பு நடவடிக்கைகளினால் பெரிதும் துன்புறுகின்றனர். இது பெருந்தோட்டங்களில் வாழ்பவர்களையும் கூட சில சந்தர்ப்பங்களில் பாதிப்படையச் செய்துள்ளது. எனவே இலங்கையின் வடக்கு, கிழக்கு அரசியல் பிரச்சினைகள் காரணமாக ஏற்பட்ட போராட்டங்களினால் மலையகத் தமிழர்களும் பாதிப்புற்றமை ஒரு தவிர்க்க முடியாத விளைவாகும்.

இவை யாவற்றையும் மனதிற் கொண்டு பார்க்கும் போது சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும், திருப்பங்களும் மலையகத் தமிழ் மக்களது வாழ்க்கையிலும் குறிப்பிடத்தக்க பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன என்பதனை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியுள்ளது. 1949ஆம் ஆண்டு இழந்த குடியுரிமையினை மீண்டும் பெற்றெடுக்க ஏறத்தாழ அரைநூற்றாண்டு விரயமாகியது. முற்றுமுழுதாகப் பெற்றுவிட்டதாகவும் கூறுவதற்கில்லை. அரசியலில் தமது அதிகாரத்தினை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவ்வப்போதைய அரசுகள் சில உரிமைகளை இவர்களுக்கு வழங்க முன் வந்தாலும் அவற்றினை முழுமையாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய அளவில் அவர்களிடம் அரசியல் பலமோ அல்லது மனிதவள வளர்ச்சியோ இல்லாதிருப்பதுடன் அவையே மலையகத் தமிழ் மக்களது முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தடையாகவும் காணப்படுகின்றன.

## அடிக்குறிப்புக்கள்

1. பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றி பெருந்தோட்டப் பொருளாதார நடவடிக்கைகளை ஆரம்பித்ததோடு தென்னிந்திய மாநிலங்களிலிருந்து கொண்டு வரப்பட்டவர்களது பிற்கால சந்ததியினரே இன்று மலையகத் தமிழ் மக்கள் என அழைக்கப்படுகிறார்கள். இவர்களை விட சிறியளவில் குடிபெயர்ந்து வந்த ஆசிரியர்கள், வியாபாரிகள் ஆகிய சில பிரிவினரும் இப்பிரிவினரில் அடங்குவர்.
2. *Peiris. L.L.T., **The Citizenship law of the Republic of SriLanka.** (1979), (Colombo), pp.25-32.*
3. *Department of Census and Statistics, **Census of Population and Housing**, Vol.3 (1986) p.115*
4. *Gnanamuthu, G.A., **Education and Plantation Workers in Sri Lanka,** (1977), (Colombo), p.36*
5. *Gunaratne, Leslee., "The Poorest of the Poor" The **Alleviation of Poverty in Sri Lanka**, (1987), (Colombo), p. 254*
6. *Ponnambalam, S., **Dependent Capitalism in Crisis**, (1980), (London), P. 137*
7. *Mookiah, M.S., Social and Economic Conditions of the Plantation Workers in Sri Lanka, (Monograph), (1991), (Colombo) p.16*

8. *Surianarayanan, V., (Ed.) Rehabilitation of Sri Lanka Repatriates, A Critical Appraisal, (1986), (Madras). pp. 97-102.*

9. *Central Bank of SriLanka, **Economics and Social Statistics of Sri Lanka**, 1991, (Colombo), p.13*

10. *Bastiam Pillai, B.E.S.J., "History of Migration of the Plantation Tamils from South India to Ceylon," (1990), (Colombo), (Unpublished Workshop paper) p.3.*

11. *Sivarajah, A., "Are Plantation Tamils in SriLanka a Naional Minority, (1990), (Colombo), p.8*

12. *மூக்கையா, மா. செ., **இன்றைய மலையகம்**(1992). (சென்னை) , p. 83*

13. *Central Bank of Sri Lanka, **Consumer Finances Survey 1986/ 87,** (1993), (Colmbo), p.80*

14. *Navaratne. C., "Primary and Secondary Education in Plantation Tamil Schools in Sri Lanka", (1991), (Kandy) (workshop paper), p.18.*

15. *MOE and HE, Plan of operation (JUly 1992 to June 1994), (Colombo), p.80.*

16. *Ponnambalam, S., **Dependent Capitalism in Crisis**, (1980), (London), p.129.*

**அட்டவணை 1**

**இலங்கை - இனங்களின் பரம்பல் 1951 - 1981**

| | 1951 | 1961 | 1971 | 1981 |
|---|---|---|---|---|
| சிங்களவர்கள் | 69.3 | 71.0 | 72.0 | 74.0 |
| இலங்கைத் தமிழர் | 10.9 | 11.0 | 11.2 | 12.7 |
| இந்தியத் தமிழர் | 12.0 | 10.6 | 9.3 | 5.5 |
| முஸ்லிம்கள் | 6.3 | 6.5 | 6.7 | 7.0 |
| ஏனையோர் | 1.5 | 0.9 | 0.8 | 0.8 |
| | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

*Department of Census and Statistics : Census of Population and Housing 1981, General Report, Vol.3 (1986), Colombo, p.113*

## அட்டவணை 11

### இலங்கை - சுதந்திரத்தின் பின்னர் நடைபெற்ற தேர்தல்களின் போது தெரிவு செய்யப்பட்ட மலையகத் தமிழ் மக்களினது பிரதிநிதிகள் 1947-1997

| ஆண்டு | பாராளுமன்றம் | | மேல்சபை | மாகாண சபை | பிரதேச சபை |
|---|---|---|---|---|---|
| | தேர்தல் போட்டி மூலம் | நியமனம் | | | |
| 1947 | 7 | - | 2 | - | - |
| 1952 | - | - | 2 | - | - |
| 1956 | - | - | - | - | - |
| 1960 மார்ச் | - | 1 | - | - | - |
| 1960 ஜுலை | - | - | - | - | - |
| 1965 | - | 1 | - | - | - |
| 1970 | - | - | 1 | - | - |
| 1977 | 1 | - | - | - | - |
| 1988 | - | - | - | 16 | - |
| 1989 | 1 | 2* | - | - | - |
| 1991 | - | - | - | - | - |
| 1993 | - | - | - | 21 | - |
| 1994 | 6 | 2* | - | - | - |
| 1997 | - | - | - | | |

❑ ஐக்கிய தேசியக் கட்சிக்கான போனஸ் ஆசனங்கள் மூலம் தெரியப்பட்டவர்கள்

# கடந்த ஐந்து தசாப்த ஈழத்துத் தமிழ் நாவல்துறையில் ஏற்பட்ட மாற்றமும் வளர்ச்சியும்

**கே. குணராசா**

ஈழத்தில் தமிழ்நாவலிலக்கியத்தின் முதல் முகிழ்ப்பு 1885ஆம் ஆண்டு நிகழ்ந்தது. அசன்பேயுடைய கதை என்ற புனைகதையை சித்திலெப்பை அவர்கள் எழுதியதன் மூலம் ஈழத்துத் தமிழ் நாவலிலக்கியத்திற்கு அத்திவாரமிடப்பட்டார். இந்த அத்திவாரத்தின் முதற் கட்டுமான வேலைகளை சி. வை. சின்னப்பிள்ளை, மங்களநாயம் தம்பையா, எஸ். தம்பிமுத்துப் பிள்ளை, ம.வே. திருஞானசம்பந்தப்பிள்ளை, இடைக்காடர் ஆகியோர் முறையே வீரசிங்கன் கதை, நொறுங்குண்ட இருதயம், அழகவல்லி, கோபால நேசரத்தினம், நீலகண்டன் ஆகிய நாவல்களை எழுதித்தந்ததன் மூலம் ஆற்றினர். ஈழத்துத் தமிழ் நாவலிலக்கிய மனை, சுவர் மட்டத்திற்கு இவர்களால் கட்டப்பட்டது. இந்த மனைக்குக் கரையிட்ட பெருமை சம்பந்தன் (பாசம்), க. சச்சிதானந்தன் (அன்ன பூரணி), கசின் (குமாரி ரஞ்சிதம்) ஆகியோரைச் சாரும். ஈழத்து நாவல் இலக்கிய மனைக்கு அழுத்தமாகச் சாந்திட்ட பெருமை வ.அ. இராசரத்தினம் (கொழுகொம்பு) தேவன் யாழ்ப்பாணம் (கண்டதும் கேட்டதும்), சி.வி. வேலுப்பிள்ளை (வீடற்றவன்), சொக்கன் (மலர்ப்பலி) ஆகியோருக்குரியதாகும். இந்த நாவல்கள் அனைத்தும் சமூகத்தின் பல்வேறு பிரச்சினைகளைச் சித்திரிப்பனவாயும், அந்த நாவல்களில் உலாவிய மாந்தர்கள் அனைவரும் யதார்த்தப் பண்பு மிக்கவர்களாயும், நாவல்களின் பகைப்புலக் காட்சிகள் கற்பனா சஞ்சாரமாகவில்லாது இந்த மண்ணின் காட்சியாகவும் அமைந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

இளங்கீரனின் வருகையோடு ஈழத்துத் தமிழ் நாவல் மனை கலையழகு பெறத் தொடங்கியது எனலாம். 1950 களில் இளங்கீரன் நாவலிலக்கியத்தில் காலடி வைத்தார். அவரால் இந்த மண்ணையும் மக்களையும் களமாகக் கொண்டு நாவல்கள் எழுத முடிந்தது. அவர் பத்திற்கு மேற்பட்ட நாவல்களை எழுதியுள்ளபோதிலும் அவரது தென்றலும் புயலும், நீதியே நீ கேள் ஆகிய இரண்டு நாவல்களும் அவருக்கு மட்டுமன்றி ஈழத்துத் தமிழ் நாவல்துறைக்கும் வலுச் சேர்த்துள்ளன. ஈழத்துத் தமிழ் நாவல் துறையில் ஏற்பட்ட மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இளங்கீரன் காரணகர்த்தாவாகவுள்ளார். இளங்கீரன் மார்க்சீயக் கருத்துக்களால் கவரப்பட்டிருந்தார். அவரது நாவல்களில் வர்க்கியமும் சாதியமும் மெல்லென இடம்பெற்றமைக்கு அவர் வரித்துக்கொண்ட சிந்தனைகளும் கருத்துக்களும் காரணமாயின. பிற்காலத்தில் செ. கணேசலிங்கனாலும் கே. டானியலினாலும் வர்க்கியமும் சாதியமும் வீறுடன் நாவல் இலக்கியத்தின் கருப்பொருளாக அமைந்தமைக்கு இளங்கீரனின் நாவல்கள் முன்னோடிகளாகவிருந்தன என்பேன். இளங்கீரனின் தாக்கம் அவர்களிடம் இருந்ததென்பதல்ல இதன் அர்த்தம். வர்க்கியச் சிந்தனைகளையும் சாதியச் சிந்தனைகளையும் ஆக்கவிலக்கியத்தில் நாவல் துறையில் சிறியளவிலாவது முன்னெடுத்தவர் இளங்கீரன் என்பதே அர்த்தமாகும்.

ஈழத்தில் தமிழ்மக்களிடையே வேரூன்றியுள்ள சமூக நோயான சாதிப் பாகுபாட்டின் இழிநிலைகளைச் சித்திரித்து சொக்கன் (1963), செ. கணேசலிங்கன் (1965), செங்கை ஆழியான் (1971), கே. டானியல் (1972), தெணியான் (1973), செ. யோகநாதன் (1976), சோமகாந்தன் (1989) ஆகியோர் சாதிப்பிரச்சினைகளின் பல்வேறு கொடூர வடிவங்களைத் தமது நாவல்களில் சித்திரித்துள்ளனர்.

காலவரன் முறையில் நாவலிலக்கியத்தின் நவீன வடிவத்தில் முதன் முதல்

சாதிப்பிரச்சினையைக் கருவாகக்கொண்டு எழுதப்பட்ட நாவல் சொக்கனின் சீதாவாகும். இந்த நாவல் 1963இல் விவேகி சஞ்சிகையில் தொடராக வெளிவந்தது. பின்னர் 1974இல் நூலுருப் பெற்றது. அவரை அடுத்து செ. கணேசலிங்கன் சாதியை எரியும் பிரச்சினையாகத் தனது போர்க்கோலம், நீண்டபயணம் ஆகிய நாவல்களில் காட்டியுள்ளார். சாதியத்திற்கு மிக அழுத்தம் கொடுத்துப் பல நாவல்களைப் படைத்துத் தந்தவர் டானியலாவார். செ. கணேசலிங்கனும் டானியலும் மார்க்சியக் கருத்துக்களுக்கு நாவல்களில் முக்கியம் கொடுத்திருப்பதுடன் சாதியத்தினது அழிவிற்கும் அடக்கியொடுக்கப்பட்ட மக்களினது விடிவிற்கும் சமூகப்புரட்சியொன்றின் மூலமே விடைகாணலாமென நம்பினர். இவர்களது நாவல்களில் யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதியப்பிரச்சினைக் களங்கள் பொதுவாக ஒத்த பண்பினடியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. கோயில்கள், பொதுக்கிணறுகள், பொதுவிடங்கள், பாடசாலைகள், தொழில் தாபனங்கள் என்பனவற்றில் பஞ்சமர்கள் அனுபவிக்கின்ற ஏற்றத்தாழ்வுகளையும் மனக்காயங்களையும் சமூக அநீதிகளையும் இருவரும் தம் நாவல்களில் காட்டியுள்ளனர். செ. கணேசலிங்கன் தனது நாவல்களில் யாழ்ப்பாணச் சமூகத்தின் பல்திற மக்களை ஆக்கவிலக்கிய கர்த்தாவின் சமநிலை திரும்பா நிலையில் சித்திரிக்க, டானியல் பஞ்சமர்களுக்கெதிராகத் தொழிற்பட்ட பாத்திரங்களை மட்டுமன்றி அப்பாத்திரங்கள் சம்பந்தப்பட்ட சமூகம் முழுவதையும் காறி உமிழ்கிறார். இங்கு டானியலிடம் ஆக்கவிலக்கியக் கர்த்தாவிற்கு இருக்கவேண்டிய சமநிலைப் பார்வையற்றுப்போய் அந்த சமூகத்தையே அழித்து விட வேண்டுமென்ற பேராட்டக் குணம் காணப்படுகின்றது. தலித் இலக்கியத்தின் பிதாமகர் என இன்று டானியல் கொள்ளப்படுவதற்கு அவர் தலித் சமூகத்தினைச் சார்ந்தவர் என்பது மட்டுமன்றி தலித் பக்க நியாயங்களுக்கு அவர் கொடுத்திருக்கும் அழுத்தமும் காரணமாகும். சாதியத்தினால் பஞ்சமர் மாத்திரமன்றி பிராமணர்களும் பாதிப்படைந்துள்ளமையை சோமகாந்தனின் “விடிவெள்ளி பூத்தது” நன்கு கலை நயத்தோடு கூறும் நாவலாகும். பிராமண தலித்தாக அவர் இருப்பது இந்த நாவலின் வெற்றிக்குத் துணை நின்றுள்ளது.

செ. கணேசலிங்கன், டானியல் சார்ந்தோர் சாதியத்தின் அழிவிற்கு அல்லது சமூக மாற்றத்திற்குத் தமது நாவல்களில் சுட்டிக்காட்டிய வழி ஒரு சமூகப் புரட்சியாகும். செங்கை ஆழியானின் சாதிய நாவல்களான பிரளயம், அக்கினி என்பன யாழ்ப்பாணத்தின் சாதியக் கொடுமையின் பல்வேறு வடிவங்களைத் தம் நாவல்களில் சித்திரிக்கின்ற அதே வேளை, சமூக மாற்றமானது கல்வி, தொழில் மாற்றம், செல்வத் தேடல் என்பனவற்றின் மூலம் ஏற்படுமெனச் சித்திரித்துள்ளார். நடைமுறையில் இன்றைய யாழ்ப்பாணச் சமூகத்தின் சாதிய மாற்றம் செங்கை ஆழியான் சுட்டியது போல கல்வி உயர்வால், தொழில் மாற்றத்தால் ஏற்பட்டிருக்கின்றமையைக் காணலாம். ஆங்காங்கு சாதியத்தின் அடக்கியொடுக்கு முறைகள் இருக்கத்தான் செய்கின்ற போதிலும் தங்கியிருக்கா நிலை மெல்லென உருவாகி வருகின்ற நிலையில் இந்தக் சமூகக்கட்டு உடைந்துவிடும். ஈழப்போராட்டத்தின் விளைவாக இந்நிலை துரிதப்பட்டுள்ளது.

1948இல் இலங்கை, பிரித்தானியரிடமிருந்து அரசியல் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது. பேரினவாதக் கருத்துக்கள் அரசியலில் 1956களில் வெளிப்படையாகத் தலை தூக்கத்தொடங்கின. இடதுசாரிகளும் பாராளுமன்றக் கதிரைகளில் நாட்டம் கொள்ளத் தொடங்கியமை பேரினவாதக் கருத்துக்களுக்கு என்றுமில்லாதளவு முக்கியத்துவம் கொடுத்தன. அரசியலைக் கைப்பற்ற உதவும் ஆயுதமாக இனவாதம் மாறியது. இந்த அரசியற் பிரச்சினைகளை நாவலாக்கியவர்களில் செ. கணேசலிங்கன், (செவ்வானம்) செ. யோகநாதன் (நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே.....), செங்கை ஆழியான் (தீம்தரிக்கிட தித்தோம்) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

அடக்கு முறைகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழுகின்ற மக்களின் எழுச்சியை இயற்பண்புடன் சித்திரிக்கின்ற நாவல்களாக சி. சுதந்திரராஜாவின் மழைக்குறி என்ற நாவலையும் செங்கை ஆழியானின் காட்டாறு என்ற நாவலையும் குறிப்பிடலாம். மழைக்குறியில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் முதலாளிகளுக்கு எதிராகத் திரண்டெழுவது கதைப்போக்கில் வலிந்து கொண்டுவரப்பட்ட கற்பனா நிகழ்வாகவில்லை என்பது முக்கியமானது. காட்டாறு நாவலில் பல்வேறு விதங்களில் சுரண்டலிற்கும் பாதிப்பிற்கும் உள்ளான மக்கள் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராகப் போர்க்குணம் கொள்வது சமூக விழிப்புடனும் கலையழகுடனும் சித்திரிக்கப்பட்டுள்ளது. காட்டாறு நாவலை வன்னிப்பிரதேச நாவல் என்ற வரையறைக்குள் விமர்சகர்கள் அடக்கிவிடுகின்ற போதிலும், அதில் விபரிக்கப்படும் கதாமாந்தர்கள் அப்பிரதேசத்தில் ஆதிக்கமும் அதிகாரமும் செல்வமும் கொண்டவர்களால் எவ்வாறு அடக்கியொடுக்கப்படுகிறார்கள் என்பதையும் ஒரு கட்டத்தில் அந்த அடக்குமுறைச் சங்கிலி எவ்வாறு உடைக்கப்படுகிறதென்பதையும் விபரிக்கின்ற நாவலாகவுள்ளது.

கடந்த ஐந்து தசாப்த ஈழத்தமிழ் நாவல் வரலாற்றில் தோட்டத்தொழிலாளரின் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு கனதியான நாவல்கள் சில வெளிவந்துள்ளன. 1962இல் வெளிவந்த நந்தியின் மலைக்கொழுந்து மலையக நாவல் கதவுகளைத் திறந்துவிட்டதெனலாம். தோட்டத்தொழிலாளரின் அவலவாழ்க்கையின் துயரங்களைப் புரிந்து கொள்ள மலைக்கொழுந்து வழிவகுத்துத் தந்தது. அதனைத் தொடர்ந்து கோகிலம் சுப்பையாவின் தூரத்துப் பச்சை, தெளிவத்தை யோசெப்பின் காலங்கள் சாவதில்லை, கே. ஆர். டேவிட்டின் வரலாறு அவளைத் தோற்றுவிட்டது, தி. ஞானசேகரனின் குருதிமலை ஆகிய நாவல்கள் ஈழத்தமிழிலக்கியத்திற்குக் கிடைத்த சிறந்த படைப்புக்களாகும்.

ஈழத்தில் வெளிவந்துள்ள நால்கள் ஒவ்வொன்றும் தம்மளவில் முனைப்பான பண்பினைக் கொண்டிருக்கின்றன. வர்க்கியம், சாதியம், சமூகப்பிரச்சினைகளான சீதனக்கொடுமை, இனத்துவம், பாலியல் பிரச்சினைகள், பெண்ணடிமைத்தனம் போன்ற பல்வேறு கருக்களையும் களங்களையும் கொண்டமைந்த நாவல்கள் அவை. யாழ்ப்பாணத்துச் சமூகத்தின் சீதனக்கொடுமையை முதன்மைப்படுத்தி வெளிவந்திருக்கும் நாவல்களில் யாழ்ப்பாணச் சமூகம் முழுமையாகச் சித்திரிக்கப்படுகின்ற தன்மைகளைக் காண முடியும். பெண்ணிலைவாதத்தை வலியுறுத்தியெழுதப்பட்ட நாவல்களில் கோகிலா மகேந்திரனின் துயிலும் ஒருநாள் கலையும் குறிப்பிடத்தக்கது. பாலியல் அம்சத்திற்கு முதன்மை கொடுத்து எழுதப்பட்ட தீ, சடங்கு ஆகிய இருநாவல்களையும் எஸ். பொன்னுத்துரை தந்துள்ளார். அவரின் சடங்கு என்ற நாவல் சொல்லப்பட்ட உத்தியாலும், மொழி நடையாலும் பாத்திரங்களின் முரண்நிலைப்படா அம்சத்தாலும் கலையழகுமிக்க இலக்கியமாகச் சடங்கினை ஆக்கியுள்ளன.

சிங்கள தமிழர் உறவு நிலைகளைச் சித்திரிக்கும் நாவல்களாக அருள் சுப்பிரமணியத்தின் அவர்களுக்கு வயது வந்துவிட்டது, சாந்தனின் ஒட்டுமா, செங்கை ஆழியானின் ஒரு மைய வட்டங்கள் என்பன விளங்குகின்றன. அருள் சுப்பிரமணியத்தின் அவர்களுக்கு வயது வந்துவிட்டது என்ற நாவல் இவற்றில் தனித்துவமாகக் குறிப்பிடத்தக்கது.

கடந்த இரு தசாப்தங்களாகப் பிரதேச நாவல்கள் வெளிவந்துள்ளன. அவை சித்திரிக்கின்ற பகைப்புலத்தால் மட்டுமன்றி அவ்வப்பிரதேச சமூகவியல் பண்புகளையும் பழகிவரும் சொற்களையும் நடத்தைகளையும் துல்லியமாகச் சித்திரிப்பதால் சிறப்புறுகின்றன. அந்த நாவல்கள் இந்தத் தன்மைகளைக் கொண்டிருப்பதால் அவற்றினை விமர்சகர்கள் பிரதேச நாவல்கள் என்ற வகைக்குள் அடக்கிவிட முயல்கின்றனர். அ. பாலமனோகரனின் நிலக்கிளி, வன்னிப்பிரதேச நாவல்கள் வெளிவருவதற்கு வழி திறந்தது என்பேன். வன்னிப்பிரதேச

புராணமக்களின் வாழ்க்கை நிலைகளை நிலக்கிளி சித்திரிக்கின்றது. வன்னிப்பிரதேசத்தில் வந்து குடியேறி வாழ்கின்ற மக்களின் வாழ்வு நிலைகளை வன்னிப்பிரதேசத்தின் பலத்தோடும் பலவீனத்தோடும் புரிந்து கொள்ள செங்கை ஆழியானின் நாவல்களே உதவுகின்றன. காட்டாறு, கனவுகள் கற்பனைகள், ஆசைகள், யானை என இப்பட்டியல் நீளும். கிழக்கிலங்கைப் பிரதேச நாவல்களில் ஜோன் ராஜனின் போடியார் மாப்பிளை, வை. அகமத்தின் புதிய தலைமுறைகள் ஆகிய இரு நாவல்களும் முக்கியமானவை. தென்னிலங்கைப் பிரதேச நாவல்களில் திக்கவயல், கமல், நீர்கொழும்பூர் முத்துலிங்கம் ஆகியோரின் நாவல்கள் விதந்துரைக்கத்தக்கன.

இந்த நூற்றாண்டின் இறுதி இரு தசாப்த காலங்கள் போராட்ட இலக்கிய முயற்சிகள் நிகழ்ந்து வரும் வேளையாகும். தமிழ் மக்களது சோகவரலாறு மட்டுமல்ல, தமிழிலக்கியத்தின் கரங்கள் கட்டுப்பட்ட வரலாறும் இதுதான். தமிழீழப் போராட்டத்தின் முனைப்பான செயல்கள் ஈழத்துத் தமிழிலக்கியத்தின் செல்நெறியைப் பாதித்துள்ளன. ஆயுதக் கலாசாரம் எங்கும் ஆதிக்கம் செலுத்தத்தொடங்கியதால் தமது படைப்புக்கள் தமக்குப் பாதிப்பினைத் தந்துவிடலாமென்ற பயத்தால் தம் பேனாக்களை ஒளித்து வைத்துவிட்ட படைப்பாளிகள் பலராவர். பயத்தினால் பேனாக்களைத் தொலைத்துவிட்ட படைப்பாளிகள் சிலர். எனினும் இவ்வாறான நெருக்கடிகளுக்கு இடையிலும் சோராது தொடர்ந்து நாவலிலக்கியத்துறைக்குத் தம் படைப்புகளை வழங்கி வருபவர்களில் செங்கை ஆழியான், கோகிலா மகேந்திரன், தெணியான் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். போராட்ட நாவல் என்ற வகையில் மலரவன் எழுதிய போர் உலா என்ற நாவல் முதன்மையான படைப்பாகும்.

எனவே, ஈழத்துத் தமிழ் நாவலிலக்கியத்தின் கடந்த ஐந்த தசாப்த கால வளர்ச்சியையும் மாற்றங்களையும் அவதானிக்கில் ஈழத்து நாவல் மனை வினைத்திறன் மிக்க படைப்பாளிகளால் கட்டப்பட்டுவிட்டது. கடந்த நூற்றுப்பதின் மூன்று ஆண்டு கால நாவல் வரலாற்றில் ஏறத்தாழ அறுநூறு படைப்புக்கள் அந்த மனையில் இடம் பிடித்துள்ளன. வினைத்திறன் மிக்க இப்படைப்புகளில் கலைத்திறன் மிக்க படைப்புகளெனக் குறைந்தது பத்து நாவல்களாவது தேறும் என்பதில் ஐயமில்லை. சர்வதேச தரத்திற்கு ஒப்பானதாகவோ, தமிழகத்தின் மிகச்சிறந்த ஒருசில நாவல்களுக்கு ஒப்பானதாகவோ உன்னதமான நாவல்கள் இலங்கையில் வெளிவந்துள்ளனவெனக் கூறிக்கொள்வதில் சுய திருப்தியிருப்பினும் ஆத்ம திருப்தி இருக்குமெனக் கூறமாட்டேன். உன்னத நாவல் இலக்கியம் தோன்றக்கூடிய மானிடப்பிரச்சினைகளின் சூள்மையம் இலங்கையில் தான் இருக்கின்றது. மனித உரிமைகளின் சிதைவும், மரணங்கள் மலிந்த நிலையும் இங்குதான் உள்ளன. ஒருபுறத்தில் யுத்தமும் மறுபுறத்தில் கிரிக்கெட்டும்; அவையிரண்டும் அபரிமிதமான ஸ்கோர்களை கின்னஸ் புத்தகப் பதிவிற்கு ஏற்படுத்துகின்ற நிலையும் இந்த மண்ணில்தான் இருக்கின்றன. சர்வதேச தரத்திற்கு ஒப்பான உன்னத நாவல்களை படைக்கக்கூடிய படைப்பாளிகளும் இங்குள்ளனர்.

ஈழத்துத் தமிழ்நாவலின் மாற்றத்தையும் வளர்ச்சியையும் விளங்கிக் கொள்வதற்கு வகைக்கு ஒன்றாகப் பின்வரும் நாவல்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ள முடியும். மங்களநாயகம் தம்பையாவின் நொறுங்குண்ட இருதயம், ம. வே. திருஞானசம்பந்தம்பிள்ளையின் கோபால நேசரத்தினம், இடைக்காடரின் நீலகண்டன் ஓர் சாதி வேளாளன், இளங்கீரனின் தென்றலும் புயலும், தேவன் யாழ்ப்பாணத்தின் கண்டதும் கேட்டதும், செ. கணேசலிங்கனின் நீண்டபயணம், கே. டானியலின் பஞ்சமர், மு. தளையசிங்கத்தின் ஒரு தனி வீடு, அ. பாலமனோகரனின் நிலக்கிளி, செங்கை ஆழியானின் காட்டாறு, தெளிவத்தை யோசேப்பின் காலங்கள் சாவதில்லை, எஸ். பொன்னுத்துரையின் சடங்கு, மலரவனின் போர் உலா ஆகிய நாவல்களைப் படிக்கில் வரன்முறையான நாவல் துறையின் வளர்ச்சியையும் மாற்றங்களையும் புரிந்துகொள்ள முடியும். இந்த நாவல்கள் சுட்டுகின்ற பொருள் தான் ஈழத்து நாவலிலக்கியத்தின் பரிணாம வளர்ச்சியாகும்.

# சுதந்திரத்திற்குப் பின் ஈழத்துக் கவிதை; மாற்றமும் வளர்ச்சியும்

செ. யோகராசா

சுதந்திரத்திற்குப் பின், ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் உள்ளடக்க ரீதியிலும் வெளிப்பாட்டு ரீதியிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய மாற்றங்களைக் காலகட்டங்களாக வகுத்துக் கவனிப்பது வசதியானது.

## 1. 1948 தொடக்கம் 1960 வரை

1.1. ஈழத்துக் கவிதையின் தோற்றம் நாற்பதுகளளவில் மறுமலர்ச்சிக் குழுவினரின் வருகையுடன் தோற்றம் பெறுகின்றது எனக் கொண்டால் அக்குழுவினர் தோற்றுவித்த கவிதைப் பண்புகள் பூரண வளர்ச்சி காண்பது இக்காலப்பகுதியிலாகும். முக்கியமான மறுமலர்ச்சிக் குழுவினர் சிலருள் மஹாகவி முதன்மையானவர் என்பது நாமறிந்ததே. அனுபவம், கிராமியம், யதார்த்தம், சிறுகதைப் பாங்கு, பேச்சோசை என்றவாறு அவரூடாக ஈழத்து நவீன கவிதை பெற்ற மாற்றங்கள் முழுமை காண்பதும் பரவலடைவதும் இக்காலப் பகுதியிலாகும்.

1.2 உள்ளடக்க ரீதியில் இக்காலப் பகுதியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க இன்னொரு மாற்றம் தமிழ்த்தேசியம் கவிதைப் பொருளானமையாகும். தமிழரசுக்கட்சியின் தோற்றமும் (1949) "சுதந்திரன்" பத்திரிகையின் வரவும் இதற்குப் பக்கபலமாயின. யாழ்ப்பாணத்தில் சச்சிதானந்தன், தில்லைச்சிவன், மட்டக்களப்பில் ராஜபாரதி, நீலாவணன், ஆரையூர் அமரன், எருவில் மூர்த்தி, புரட்சிக்கமால் மலையகத்தில் சக்தி பாலையா திருகோணமலையில் தாமரைத் தீவான் என ஈழத்தின் பல பிரதேசக் கவிஞரும் மொழி உணர்ச்சியினால் ஈர்க்கப்பட்டனர். காசி ஆனந்தன் நுழைவு இக்காலப்பகுதியின் இறுதியில் நிகழ்கின்றது. மேற்குறிப்பிட்ட கவிஞர்களுடன் பின்னர் வேறுவழிச் சென்ற மகாகவி, முருகையன் உட்பட பலரும் "தமிழ் எங்கள் ஆயுதம்" என்ற தொகுப்பில் இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

1.3 யாப்பு வடிவங்களில் பரிசோதனை, வித்தியாசமான வெளிப்பாட்டு முறை என்ற விதங்களில் தனித்துவ அம்சங்கள் கொண்ட கவிதை இயற்றிய முருகையனும், அங்கதம், சரளமாக பேச்சோசை, கவியரங்கக் கவர்ச்சி என்ற விதங்களில் தனித்துவ அம்சங்கள் கொண்ட கவிதை இயற்றிய தான் தோன்றிக் கவிராயரும் இக்காலப்பகுதியில் நுழைந்தவர்களேயாவர்.

1.4 மட்டக்களப்பில் நவீன கவிதை தோற்றம் பெறுவது இக்காலப் பகுதியிலாகும். இவ்விதத்தில் நீலாவணன் முதன்மையானவர். நீலாவணனால் ஊக்குவிக்கப்பட்ட பலருள் நுஃமான், சடாட்சரன், பஸீல் காரியப்பர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1.5 முஸ்லீம் கவிஞர் நவீன கவிதையுலகினுள் பிரவேசிப்பது இக்காலப்பகுதியே. புரட்சிக்கமால் இத்தகைய கவிஞர்களின் முன்னோடி என்பதில் தவறில்லை. புரட்சிக் கமாலின் வரிசையில் சற்றுப் பின்னர் சேர்பவர்கள் திருகோமலை அண்ணலும் பொத்துவில் யுவனும்.

## 2. 1960 தொடக்கம் 1970 வரை:

2.1 ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கதொரு மாற்றம் இக்காலப் பகுதியில் இடம்பெறுகின்றது. முற்போக்குக் கவிஞர் பரம்பரை செல்வாக்குப் பெறத் தொடங்குவதே அதுவாகும். சுதந்திரத்திற்கு முன்னர் அ.ந. கந்தசாமி, கே. கணேஸ் ஆகியோரை முற்போக்குக் கவிஞராக இனங்காண முடியுமாயின் அவ்விருவரும் அதிகம் எழுதிய வரல்லர். இப்போது அரசியல் மாற்றங்களின் பின்னணியில் முற்போக்குக் கவிஞர் குழாம் முதன்மை பெறத் தொடங்குகின்றது.

2.1.1. இவர்களுள் ஒரு சாரார் இடதுசாரிக் கட்சிகளுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள். பசுபதி, சுபத்திரன் முதலானோர் அத்தகைய பரம்பரையினரின் முன்னோடிகள். இவர்களது கவிதைகளில் பிரச்சாரப் பண்பு அதிகமென்று கூறப்படுவதுண்மையாயினும், சுபத்திரன் கவிதைகள் முற்றுமுழுதாகப் பிரச்சாரப்பாங்கின என்று கூறமுடியாது என்பதனை அண்மைக்காலத்தில் வெளி வந்த அன்னாரது தொகுப்பு ஓரளவு புலப்படுத்துகின்றது.

2.1.2 மற்றொரு சாரார், இடதுசாரிக்கட்சிகளுடன் நெருங்கிய தொடர்பு இல்லாதவர்; அழகியல் கலந்த முற்போக்குக் கவிதை வளர்ச்சியின் முன்னோடிகள் எனத்தக்கவர்கள். நுஃமான், சண்முகம் சிவலிங்கம் ஆகியோரே அவ்வாறு கருதப்படத்தக்கவர்கள்.

2.1.3 தொடர்ந்து எழுதி வந்த முருகையன், தான்தோன்றிக் கவிராயர் ஆகியோரும் முற்போக்குக் கவிஞராக இக்காலப்பகுதிக் கவிதைகள் மூலம் இனங்காணப்படுகிறார்கள்.

2.2 மேற்கூறிய பிரிவினர் எவரையும் சாராமல் சமூகச் சீர்திருத்த நோக்குடனோ ஆன்மீக நோக்குடனோ கவிதை எழுதும் குழாத்தினரையும் இக்காலந் தொடக்கம் கவனிக்க முடிகின்றது. காரை சுந்தரம்பிள்ளை, வி. கந்தவனம், திமிலைத்துமிலன், ஜீவா ஜீவரத்தினம், வெல்லாவூர், கோபால், செ. குணரத்தினம், ச.வே. பஞ்சாட்சரம், ஏ. இக்பால், அன்பு முகைதீன், பா. சத்தியசீலன் என இப்பட்டியல் நீண்டு செல்லக்கூடியது (இவர்களுள் சிலர் சற்று முன்பின்னாக முற்போக்கு அணியினருடனோ தமிழரசுக் கட்சியினருடனோ தொடர்பு கொண்டிருந்தனர்.)

2.3 மலையகப் பிரதேசத்திலிருந்து இக்காலப்பகுதியில் கவிஞர் பலர் வெளிவருகின்றனர். குறிஞ்சித்தென்னவன், தமிழோவியன், பண்ணாமத்துக் கவிராயர், அல்அஸூமத் வழத்தூர் ஒளியேந்தி முதலானோர் இவ்விதத்தில் முக்கியமானவர்கள். குறிஞ்சிப்பூ (1965) கவிதைத் தொகுப்பு இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கது.

2.4 தென்னிலங்கையிலிருந்தும் (எம்.எச்.எம்.ஷம்ஸ், யோனபுர ஹம்ஸா) மன்னாரிலிருந்தும் (கலைவாதி கலீல்) முஸ்லிம் கவிஞர் பரம்பரையொன்று உருவாகத் தொடங்கியமையும் கவனிக்கத்தக்கது.

2.5 கவிதை வெளிப்பாட்டு முறையில் இரு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இக்காலப்பகுதியில் ஏற்படுகின்றன.

2.5.1. மரபுவழி செய்யுள் அமைப்பை நிராகரிக்காது அதற்குள் மாற்றங்கள் ஏற்படுத்தல். மகாகவி, முருகையன், நுஃமான், சண்முகம் சிவலிங்கம் ஆகியோர் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டு கணிசமான வெற்றி கண்டனர்.

2.5.2. புதுக்கவிதை முயற்சியில் ஈடுபடுதல், தென்னிந்திய எழுத்து சஞ்சிகையின் தாக்கம் முக்கிய காரணமாக தருமு அரூப் சிவராம், தா. இராமலிங்கம், மு. பொன்னம்பலம் ஆகியோர் ஈழத்துப் புதுக்கவிதை முன்னோடிகளாகி தொடர்ந்து எழுதுவாராயினர். கே. எஸ். சிவகுமாரன், காவலூர் ராஜதுரை, சில்லையூர் செல்வராஜன் முதலானோர் ஒருசில கவிதைகளுடன் நிறுத்திக்கொண்டனர். இத்தகைய புதுக்கவிதை வடிவம் தொடர்பாக ஈழத்து ஆய்வாளர் மத்தியில் இருவித அபிப்பிராயங்கள் உள்ளன. : (அ) புதுக்கவிதை வேறு; நவீன கவிதை வேறு; (ஆ) நவீன கவிதையின் ஒரு காலகட்ட மாற்றமே புதுக்கவிதை (நுஃமான் இத்தகைய கருத்துடையவர்).

2.4 கவிதைகள் வானொலி ஊடாகவும், மேடை ஊடாகவும் கவியரங்கம் ஆக கோலோச்சத் தொடங்கியமை மனங்கொள்ளத்தக்கது. அரியாலையூர் ஐயாத்துரை, இ. நாகராஜன், வி. கந்தவனம், காரை. சுந்தரம்பிள்ளை, தான்தோன்றிக் கவிராயர், நாவற்குழியூர் நடராஜன் முதலானோர் இவ்விதத்தில் பிரபல்யம் பெற்ற கவிஞர்களாவர். இவர்களுள் கணிசமானோர் கவியரங்கினைச் சங்கீத மேடையாக்க, முருகையன், நுஃமான் முதலானோர் ஆரோக்கியமான முறையில் அதனை நடத்திக் காண்பித்தமை நினைவு கூரத்தக்கது.

## 3. 1979 தொடக்கம் 1980 வரை

3.1 குறிப்பாக, எழுபதுகளின் பிற்கூற்றிலிருந்து உள்ளடக்க ரீதியில் ஈழத்துக் கவிதை வளர்ச்சியில் மற்றொரு மாற்றமேற்படுகின்றது. முற்போக்குக் கவிதைப் போக்கு ஓரளவு வளர்ச்சியடைய, தமிழ்த்தேசியம் (தனிநாட்டுக் கோரிக்கையுடன்) உத்வேகமடைகின்றது. முற்போக்கு அணியினருள் சிலர்கூட தமிழ்த்தேசியக் கவிஞராகின்றமை கவனிக்கத்தக்கது. புதுவை இரத்தினதுரை (வரதபாக்கியன்) இவ்விதத்தில் குறிப்பிடத்தக்கவர்.

3.2 புதுக்கவிதை இன்னொரு வித பரிமாணம் பெறுகின்றது. தமிழ் நாட்டில் வானம்பாடிக் குழுவினரின் வரவு ஏற்படுத்திய பாதிப்பு – புதுக்கவிதை சமூக உள்ளடக்கம் பெற்றமையும் ஜனரஞ்சகமுற்றதையும் – இங்கும் பரவலாகவும் ஆழமாகவும் ஏற்படுகின்றது. புதிய பிரதேசங்களிலிருந்து குக்கிராமங்களிலிருந்து "கவிஞர்கள்" என்ற லேபலுடன் கரங்களிலே தமது புதுக்கவிதைப் பிரசுரங்களுடன் இளந்தலை முறையினரின் புறப்பாடு நிகழ்கின்றது. புதுக்கவிதை மலினமுற்ற நிலை எய்தி விடுகின்றது. ஆயினும் விதந்துரைக்கப்பட வேண்டிய ஆரோக்கியமான கவிஞர் வரிசையில் வ.ஐ.ச. ஜெயபாலன், அ. யேசுராசா, சிவசேகரம் முதலானோரும் அன்பு ஜவஹர்ஷா, திக்குவலை கமால் முதலானோரும் அடங்குகின்றனர். மட்டக்களப்புப் பிரதேசத்தில் புதுக்கவிதை முயற்சி ஆரம்பமாவதும் (சாருமதியின் கவிதைகள்) இக்காலப்பகுதியிலே ஆகும். (சுபத்திரனும் குறிப்பிடத்தக்க சில புதுக்கவிதைகள் எழுதியுள்ளார்)

3.3 வானொலி மெல்லிசைப் பாடல்கள் புதுப் பரிணாமம் எய்துவதும் செல்வாக்குப் பெறுவதும் குறிப்பிடத்தக்கதே.

3.4 விஞ்ஞான விளக்கங்களை நாட்டார்பாடல் வடிவில் கவிதையாக்குகிறார் இ. சிவானந்தன். (கண்டறியாதது)

## 4. 1980 தொடக்கம் 1990 வரை

*4.1* எழுபதுகளின் பிற்கூற்றிலிருந்து மெல்ல மெல்ல உருப்பெற்று வந்த இராணுவ ஒடுக்கு முறைகள், கெடுபிடிகள் இக்காலப்பகுதியில் அதிகரிக்கத் தொடங்கின. 83 வன்செயல் இதன் உச்சகட்டமாகிறது. இச்சூழலில் இத்தகைய ஒடுக்கு முறைகள், விளைவுகள் பற்றிய "எதிர்ப்புக் கவிதைகள்" கணிசமாக வெளிவரலாயின. சண்முகம் சிவலிங்கம், நுஃமான், அ. யேசுராசா, மு. பொன்னம்பலம் சோ. பத்மநாதன், முருகையன், ஜெயபாலன், சு. வில்வரத்தினம், சி. சிவசேகரம், தா. இராமலிங்கம், இளவாலை விஜயேந்திரன், ஔவை, ஊர்வசி முதலான மூத்த தலைமுறையினர் சிலரும் இளந்தலைமுறையினர் பலரும் இத்தகைய கவிதைகள் எழுத முற்பட்டனர். இவ்விதத்தில் இளந்தலைமுறைக் கவிஞருள் சேரன் மிக முக்கியமான ஒருவராகக் கணிக்கப்பட்டார். இளந்தலைமுறைக் கவிஞர்கள் ஏனைய இளந்தலைமுறைக் கவிஞர்கள் மீது அதிக செல்வாக்கு செலுத்திய இருவருள் சேரன் (மற்றொருவர் சோலைக்கிளி) ஒருவரென்பது பலருமறிந்ததே. "மரணத்துள் வாழ்வோம்" (1985) தொகுதி அப்பின்னணியில் முக்கியமான தொன்று. மேற்கூறிய கவிஞருள் பலரும் யாழ்ப்பாணப்பிரதேசம் சார்ந்தவர்களே. ஏனைய பிரதேச அரசியல் சூழல் இத்தகைய கவிதைகள் எழுவதற்கு ஏற்றதாக இருந்திருக்காது என்பது தெரிந்ததே.

*4.2* "தமிழ்த் தேசியம்", விடுதலை இயக்கங்கள் வளர்ச்சியுற்ற – ஆயுதப் போராட்டச் சூழலில் – இயக்கச் சார்புடைய காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை முதலான மூத்த தலைமுறையினரோடு, இளந்தலைமுறையினர் பலரை (வெவ்வேறு நிலைகளில், தமயந்தி, செழியன், வாஞ்சிநாதன், பஷீர்) கவிதையுலகினுள் சேர்த்துக்கொள்கின்து.

*4.3* பெண்கள் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி பெண்ணிலைவாதக் கவிஞர்கள் பலரது வரவிற்கு வழி வகுத்தது. அ. சங்கரி, ஊர்வசி, ஔவை, மைத்ரேயி, சிவரமணி, சுல்பிகா முதலான கவிஞர்கள் ஈழத்திலிருந்தும் நிருபா, மல்லிகா முதலான கவிஞர்கள் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் திரண்டு வந்தனர். முறையே, சொல்லாத சேதிகள் (1986), மறையாத மறுபாதி (1993) ஆகிய தொகுப்புகளைத் தந்துள்ளனர்.

*4.4* எண்பதுகளில் குறிப்பாக 83ன் பின்னர் அரசியல் தஞ்சம் கோரி ஐரோப்பிய, கனடா முதலான தேசங்களுக்குச் சென்றோர் தமது புகலிட அனுபவங்களை இலக்கியப் படைப்புகளூடாக வெளிப்படுத்தி நவீன தமிழ்க் கவிதையின் பொருளும் வடிவமும், மொழியும் வளமும் வனப்பும் பெற ஆற்றிய பங்களிப்பு விதந்துரைக்கப்பட வேண்டியது. சேன், ஜெயபாலன், சிவசேகரம், இளவாலை விஜயேந்திரன் முதலான பழைய கவிஞர்களும், கி.பி. அரவிந்தன், சுதன், ரவி, ராகவன், ராகுலன் முதலான புதிய கவிஞர்களும் இவ்வித்தில் கவனிப்பிற்குரியவர்கள். தமிழ்க் கவிதையின் பரிணாமத்தில் இவர்கள் ஏற்படுத்திய மாற்றங்கள் துருவச் சுவடுகள் (1989), கட்டிடக் காட்டிக்குள் (1992), ஒரு அகதியின் பாடல், அகதி (1991) முதலான (கவிதைத் தொகுதிகளின்) தலைப்புகளே எளிதில் புலப்படுத்தி விடுகின்றன.

**4.5** மலையகம் கவிதைத் துறையில் மறுமலர்ச்சி பெறுகின்றது. பட்டதாரியான முரளிதரனின் வரவு அம்மலர்ச்சியின் வருகையைக் குறித்து நிற்கின்றது. (எ-டு: கூடைக்குள் தேசம்)

*4.6* முற்றிலும் புதிய – புதுமையான வித்தியாசமான வெளிப்பாட்டு முறை (அதிர்ச்சியூட்டும் படிமங்கள்; கற்பனைகள், சர்ரியலிசப் பண்புகள், பிரதேச வழக்காறுகள்) காரணமாக ஈழத்துக் கவிதை வளர்ச்சிப் போக்கில் மட்டுமன்றி, நவீன தமிழ்க் கவிதை வளர்ச்சிப்

போக்கிற்கூட அதிர்வுகளை ஏற்படுத்திய சோலைக்கிளியின் கவிதைகள் இக்காலப் பகுதியிலேயே — குறிப்பாக பிற்கூற்றில் - வெளிவரத் தொடங்குகின்றன.

4.7 மஹாகவி ஆரம்பித்து வைத்த குறும்பா வடிவம் தொடர்ந்து ஒருசிலரால் எழுதப் படுகிறது. (எ-டு: குறிஞ்சித் தென்னவன்) ஹைக்கூ வடிவமும் அறிமுகமாகிறது. (எ-டு: கூடைக்குள் தேசம்)

## 5. 1990 தொடக்கம் இன்று (1997) வரை

5.1 இக்காலப்பகுதியின் ஆரம்ப நிலையில் தமிழ்த் தேசியம் சார்ந்த கவிதைகள் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு பரிமாணங்களை அடைகின்றன.

(அ) போராளிகள் கவிதை எழுதுகின்றனர். (எ-டு: மேஜர் வானதி, கஸ்தூரி, பாரதி)

(ஆ) மெல்லிசைப் பாடல் வடிவம் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது.

(இ) சுவரொட்டிக் கவிதைகள் பிறப்பெடுக்கின்றன.

(ஈ) நவீன கவிதை பொதுமக்களிடம் செல்கின்றது. (முன்னர் பாரதியாரின் பாடல்களும் பட்டுக்கோட்டைக் கல்யாண சுந்திரத்தின் பாடல்களும் பொதுமக்களால் பாடப்பட்டது போன்ற நிலைமை)

5.2 உரையாடலுக்கு மிக அண்மித்தான வெளிப்பாட்டு முறை இடம்பெறத் தொடங்குகிறது. (எ-டு: நட்சத்திரன் செவ்விந்தியனின் வசந்தம் '91)

5.3 மிக இளம் வயதுடைய இளைஞர் குழாம் கவிதை உலகினுள் பிரவேசிக்கின்றது. (பார்க்க: தொண்ணூறுகளின் இளைஞர் குழாமும் ஓட்டமாவடி அரபாத்தும் - முன்னுரை செ. யோகராசா நூல்: எரிநெருப்பிலிருந்து ஓட்டமாவமடி அரபாத், ஒக். 1996) அக்கரைப்பற்று ரஸ்மியும் ஓட்டமாவடி அரபாத்தும் உதாரணங்கள். முன்னர் எழுதத் தொடங்கிய சிலர் முதிர்ச்சி எய்துகின்றனர் (எ-டு: வாசுதேவன், ஆத்மா)

5.4 ஈழத்தின் நவீன கவிதை வளர்ச்சி குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் அதுவும் முஸ்லீம் இளங்கவிஞர் மத்தியில் தற்போது மையங் கொண்டுள்ளதாகக் கூறத் தோன்றுகிறது. (பார்க்க: மேற்கூறிய நூலின் முன்னுரை) ஒப்பீட்டு ரீதியில் தரத்திலும் எணணிக்கையிலும் இவர்கள் முன்னுக்கு நிற்கின்றனர்.

5.5 கடந்த ஒருசில ஆண்டுகளாக, பெண்ணிலைவாதக் கவிஞர்கள் மத்தியில் தளர்ச்சி காணப்படுகிறது. புகலிடக் கவிஞர் மத்தியில் தளர்ச்சி இருப்பினும் முதிர்ச்சி (எ-டு: சுகன், ரவி) ஏற்பட்டுள்ளமை நிறைவு தருகின்றது.

## 6. மனங்கொள்ள வேண்டியன :

6.1 மேலே, சிறுவர் கவிதை, மொழிபெயர்ப்புக் கவிதை முயற்சிகள் பற்றியும் கவிதைச் சஞ்சிகைகள் பற்றியும் யாதும் கூறப்படவில்லை.

6.2 மேலே கூறிய நவீன கவிதை முயற்சிக்குச் சமாந்தரமாக பாரம்பரியமான மரபுக் கவிதை முயற்சியும் இடம்பெற்று வந்துள்ளது; இடம்பெற்று வருகின்றது. (ஈழத் தமிழ்ச் சூழலில் நவீனமயமாக்கம் முழுமையாக இடம் பெறாமையின் தவிர்க்க முடியாத விளைவே அதுவாகும்.)

6.3 தவிர, வலுமிக்க வாய்மொழிக் கவிதைப் பாரம்பரியமொன்றின் செல்வாக்கினை கிழக்கு மாகாணத்திலும் (எ-டு: புலவர் பூபாலப்பிள்ளை, கன்னன்குடா சிதம்பரப்பிள்ளை) மலையகததிலும் (எ-டு: பட்டியகாமம் வேல்சாமிதாசன், ஜில், பெரியசாமிப்பிள்ளை) அவதானிக்க முடிகின்றது. கவனிக்கப்படாத இத்தகைய கவிதைப் பாரம்பரியங்கள் பல உள்ளனவன்றோ! (பார்க்க: கவனிக்கப்படாத கவிதைப் பாரம்பரியம் - செ.யோகராசா, பிரதேச சாகித்திய விழா சிறப்புமலர், பிரதேச செயலகம், ஆரையம்பதி 1997)

# சமகால ஈழத்தமிழ்ச் சிறுகதைகள் : ஒரு பார்வை

**ந. இரவீந்திரன்**

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளின் சமகாலப் போக்குகள் எண்பதாம் ஆண்டுகளில் முளைவிட்டு விருத்தியடைந்தவை எனக்கொள்ள முடியும். பெண்ணியம், இனத்தேசியம் எனும் போக்குகள் சமகால ஈழத்தமிழ்ச் சிறுகதைகளில் பிரதானமானவையென இனங்காண முடியும். (தமிழகத்தில் எண்பதுகளில் முனைப்புற்ற தலித் இலக்கியத்தின் முன்னோடி வடிவம், மராட்டியத்திலும் ஈழத்திலும் அறுபதுகளிலேயே தோற்றம் பெற்று விட்டது. ஈழத்தில் இன்று இனத்தேசியத்துவத்தின் பகுதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் குரலும் அடங்கியுள்ளது). இவை முனைப்புற்றபோது சொல்லும் பாணியும் புதிய பரிமாணங்களை எட்டுவதாயிற்று.

இத்தகைய சிறுகதைகளை ஆய்வுக்குட்படுத்துவதற்கு முன்னர் இவற்றுக்கு அடித்தளமிட்ட முன்னோடிகள் குறித்தவொரு சுருக்கமான அறிமுகம் அவசியமானதாகும். அரை நூற்றாண்டு வரலாற்றுப் பின்னணியை கவனத்திற் கொள்ளாதுவிடின் இன்றைய இருப்பின் தோற்றங்களை முழுமையாக மதிப்பிடமுடியாது போய்விடும். ஈழத்துத் தமிழ் நாவல் வரலாறு நூற்றாண்டு கண்டு கடந்தபோதிலும் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதையோ அரை நூற்றாண்டு வரலாற்றையே கொண்டுள்ளமை மனங்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

தமிழகத்தில் சிறுகதை எழுச்சிக்கு கால்கோளமைத்த மணிக்கொடி சஞ்சிகை வீறுடன் பணியாற்றிய முப்பதாம் ஆண்டுகளில் ஈழத்துத் தமிழ் சிறுகதை மூலவர்களான இலங்கையர்கோன், சம்பந்தன், சி. வைத்திலிங்கம் ஆகியோர் தமது எழுத்துப் பணியைத் தொடங்கியிருந்தனர். மணிக்கொடி, கலாமோகினி, சந்திரோதயம், கிராமஊழியன், பாரததேவி போன்ற தமிழகச் சஞ்சிகைகளில் அவர்கள் எழுதினர். அக்காரணத்தால் ஈழத்து விசேடித்த பண்புகளை விடப் பொதுவான இலக்கிய அக்கறையுடையவை மட்டுமே எழுத்துருப்பெற முடிந்தது.

நாற்பதாம் ஆண்டுகளில் பழைமைக்கும் புதுமைக்குமிடையே வேற்றுமை எழத்தொடங்கிய போது இலட்சியவேகத்துடன அ.ந.கந்தசாமி, தி.ச. வரதராசன், அ.செ. முருகானந்தன், சு.வே. இராஜநாயகம், கனகசெந்திநாதன், நாவற்குழியூர் நடராஜன், சு. வேலுப்பிள்ளை, ச. பஞ்சாட்சரசர்மா போன்ற இளம் எழுத்தாளர்கள் தோற்றம் பெற்றனர். இவர்களும் தமிழக சஞ்சிகைகளையே களமாகக் கொள்ள வேண்டியிருந்ததாயினும் பழைமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்த "ஈழகேசரி" இவர்களுக்கு இலங்கையிலேயே ஏற்றவொரு களத்தை வழங்குவதாயிற்று. இக்கட்டத்திலும் பழைமைக்கும் புதுமைக்கும் ஒட்டுறவுபேணும் முயற்சியே காணப்பட்டது.

இந்த இரண்டாம் கட்டத்தினர் ஈழகேசரிப்பண்ணையில் வளர்ந்தபோதிலும் இக்கட்டம் "மறுமலர்ச்சி" என்ற சஞ்சிகையை மையமாகக் கொண்டு "மறுமலர்ச்சிக் காலம்" என வழங்கப்படுதல் மரபாகியுள்ளது. மறுமலர்ச்சியின் இணை ஆசிரியர்களாய் தி.ச. வரதராஜன் (வரதர்), அ.செ. முருகானந்தன் ஆகியோர் விளங்கினர். மறுமலர்ச்சி இயக்கத்தினர் பழைமை யோடு புதுமையை ஒட்ட முயன்ற அதேவேளை, எழுதுவது, இரசிப்பது, பரிசீலனை செய்வது, வெளியிடுவது என்ற வட்டத்திற்குள்ளேயே இயங்கினர். கிராமிய வாழ்வும் காட்சிகளும்

படைப்புகளில் முனைப்படைந்த போதிலும் அரசியல் கண்ணோட்டமும் சமுதாய உணர்வும் முனைப்புறவில்லை.

சுதந்திரத்தின் பின்னரே அரசியற் கண்ணோட்டமும் சமுதாய விழிப்புணர்வும் சிறுகதைகளில் வெளிவரத் தொடங்கியது. அதன் காரணகாரியத் தொடர்போடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்ற அமைப்பு உருவாயிற்று. மறுமலர்ச்சி இயக்கம் போன்று வெறும் சஞ்சிகையை அச்சாகக் கொண்டு இயங்குவதாயன்றி முறையாக மாநாடு கூட்டிக் கோட்பாடு உருவாக்கி பொதுப்பண்புகளின் அடிப்படையில் இயங்கிய அமைப்பாக மு.எ. சங்கம் திகழ்ந்தது. மாநாடு கூட்டப்பட்ட 1954 ஆம் ஆண்டு முக்கியத்துவம் மிக்கவொருகாலம். நாடு பரந்த மாபெரும் ஆகஸ்ட் ஹர்த்தால் போராட்டம் நடந்து அப்போதுதான் ஓராண்டு பூர்த்தியாகியிருந்தது. இந்த எழுச்சிக்கொந்தளிப்பின் பேறாக இரண்டு ஆண்டுகளின் பின் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் நாட்டில் பாரதூரமான பல திருப்பங்களுக்குக் காரணமாயிருந்துள்ளது.

உழைக்கும் மக்களின் உணர்வுக் கொந்தளிப்புகள் சமூக அரசியற் களங்களில் தீர்க்கமான பாத்திரம் வகித்த இக்காலகட்டத்தில் சிறுகதைகளும் புதிய செல்நெறியை வரித்துக்கொண்டன. கூடவே 1956இன் தனிச்சிங்களச் சட்டம் பேரினவாத உணர்வுகளுக்கு எதிராகப் படைப்பாளிகளைத் தமிழினத்தேசிய உணர்வை வெளியிட வழிப்படுத்தியது. இவ்வாறு புதிய படைப்பாளிகள் உழைப்பையும், இனத்தையும் முதன்மைப்படுத்துவதெனும் அடிப்படையில் இரு பிரிவினர் ஆயினர்.

அக்காலகட்டத்தின் இலக்கிய கர்த்தாக்களை அ.ந. கந்தசாமி மூன்று பிரிவினராய் வகுத்துக் காட்டினார். மறுமலர்ச்சி இயக்கத்திலிருந்து வளர்ந்து முற்போக்கு எழுத்தாளர் சங்க ஸ்தாபகர்களில் ஒருவராகப் பரிமளித்த அ.ந.கந்தசாமி 1962 இல் பெப்ரவரி இரண்டாம் நாள் தினகரன் பத்திரிகையில் இந்த மூன்று பிரிவினரை மேல்வருமாறு அடையாளப்படுத்துவார்:

1. "கலை கலைக்காக" என்ற தத்துவப்படி இயங்குவோர். மணிக்கொடிக்காரர், மறுமலர்ச்சிக்காரர் இவ்வகையினர். க. ந. சுப்பிரமணியம் தொடக்கம் நமது சோ. நடராஜா, கனக செந்திநாதன் வரை ஏராளமானோர் இந்த அணியினர்.
2. "கலை ஒரு பொழுதுபோக்குச் சாதனம்" என்போர். கல்கி முதல் யாழ்ப்பாணத்து மகாதேவன் வரை இந்த இரண்டாம் பிரிவில் அடங்குவர்.
3. "கலை ஒரு சமுதாய சக்தி" என நம்புவோர். முற்போக்கான சமுதாய உருவாக்கப் பணியில் கலையை ஒரு கருவியாகக்கருதும் சிதம்பர ரகுநாதன் முதல் டொமினிக் ஜீவா, டானியல் வரை இப்பிரிவில் அடங்குவர்.

பழைமையையும் மரபையும் ஒடுக்குமுறையின் வெளிப்பாடுகளாய்க் கண்டு முற்போக்காளர்கள் முற்றிலும் புதுமையை நாடிய நிலையில் இந்தப் பிரிவினை ஆழப்பதிந்து மரபுப்போராட்டம் எனும் பெரும் விவாதத்திற்குக் களம் அமைத்துக்கொடுப்பதாயிற்று. பேராசிரியர் அ. சதாசிவம் மரபுவாதத்தின் சார்பாய் விவாதித்தபோது புனைகதைகள் இலக்கியமாகமாட்டாவெனக் கூறியதோடு, பேச்சுமொழியை சிறுகதைகள் கையாள முற்பட்டபோது இழிசனர் வழக்கு என ஒதுக்கவும் விழைந்தார். இந்தச் சூழலில் மரபிலக்கிய, செவ்வியல் அடையாளங்களிலிருந்து முறித்துக்கொண்டு மக்களின் வாழ்வை இலக்கியப்படுத்தும் போக்கு புதுமையாளர்களின் சிறுகதைகளில் முனைப்படையத் தொடங்கியது.

மரபுவாதிகளாக இருந்தபோதிலும் சிறுகதைகள் இலக்கியமாகமாட்டாதென்ற தர்க்கத்தை ஏற்கமுடியாதவர்களாயிருந்த பலர் "இழிசனர் வழக்கை" கூடியவரை தவிர்த்து இலக்கிய நடையில் சிறுகதை படைத்திருப்பதையும் அவதானிக்க முடியும். வ.அ. இராசரத்தினம் தேனீர் அருந்தியபடி ஒரு பெண்ணின் அழகை இரசிக்கும் ஆண்பாத்திரத்தை சித்திரிக்கும் போது "கழுநீர் மலரோடு முதிரா இளைஞர் ஆருயிரையும் திருகிச் செருகப் பெண்களால் முடியுமாயிருந்தால் ஏன் தேனீரோடு அவள் அழகையும் சேர்த்துக் பருக என்னால் முடியாதா?" என எழுதும் நடை இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக அமையும்.

மரபு சார்ந்த செவ்வியல் நடையிலிருந்து மாறுபட்டு இழிசனர் வழக்கை இலட்சிய பூர்வமாய் ஏற்றுக்கொண்ட டொமினிக் ஜீவா, டானியல் போன்றோர் ஒடுக்கப்பட்டுத் தீண்டத்தகாதோர் எனக் புறக்கணிக்கப்பட்ட மக்களை சிறுகதைகளில் வடித்துத்தந்தனர். டொமினிக் ஜீவா, தீண்டத்தகாதோரின் மனிதாபிமான உணர்வூடாக உயர்சாதித் தொழிலாளர்களுடன் வர்க்க ஒற்றுமையைக் காட்டுவார். தண்ணீரும் கண்ணீரும் என்ற ஜீவாவின் புகழ்பெற்ற சிறுகதை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. அ.ச.மு. "மனித மாடு" என இரக்கமேலீட்டால் குறித்த உழைப்பாளியை (ரிக்ஷாக்காரனை) பாத்திரமாக்கி இவற்றை வெளிப்படுத்துவார் ஜீவா. டானியலோ வர்க்கப் போராட்டத்தின் அன்றைய வெளிப்பாட்டு வடிவமாக வெடித்த சாதியப் போராட்டத்தை சிறுகதைகளில் வடித்தபோது சாதிய முரணின் போர்க்குணத்தைச் சிறுகதைகளில் கொணர்ந்தார்.

அறுபதுகளின் பிற்கூறில் கிளர்ந்தெழுந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைமையிலான ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்ட சூழலில் டானியல் எழுதிய சிறுகதை "ஆற்றல்மிகு கரத்தில்", மேற்சட்டை (சேர்ட்) போடுவது, தேனீர்க்கடையில் உயர்சாதியினரின் குவளையில் தேனீர் அருந்துவது, கோயிலில் ஒதுக்கப்பட்டிருந்த கயிற்று அடைப்புக்குள் இல்லாமல் உயர்சாதியினர் போல் சுதந்திரமாய் விரும்பிய இடத்தில் இருக்க முனைந்தது என்பவற்றுக்காக ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நையப்புடைக்கப்பட்டவன் வேலன். ஒடுக்கப்பட்டோரின் எழுச்சியின் பேறாக இடுப்பிலே வேறு பக்குவத்துடன் பாளைக்கத்தியைச் செருகிக்கொண்டு திருப்பி அடிக்க முனைந்தபோது உயர்சாதித் திமிர் புறங்காணக் கண்டான் வேலன். "அவனோடு, குறைந்த சாதி இளமட்டங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சங்கம் அமைக்கப் போவதாக ஊரில் பலரும் குசுகுசுவென்று பேசிக்கொண்டனர்" என கதையை முடிப்பார் டானியல்.

அந்தவகையில், யதார்த்த இயக்கத்தின் மூன்றுபடி நிலைகளைக் காணமுடியும். மறுமலர்ச்சி இயக்கத்திலிருந்து வ.அ. இராசரத்தினம், பித்தன் ஷா வரையானோர் சமூக இருப்பைத் தமது சிறுகதைகளில் சித்திரித்துக் காட்டியது ஒரு படிநிலை. சமூக உள் முரண்பாடுகளை வெளிக் கொணர்ந்து உழைப்பாளர்களின் மனிதாபிமான உணர்வுகளூடாக முரண்களுக்கான தீர்வை வெளிப்படுத்தும் இரண்டாம் படிநிலையை டொமினிக் ஜீவாவின் சிறுகதைகளில் காணமுடியும். சமூக முரண்பாடுகள் கூர்மையடைந்து போராட்டங்களூடாக புதிய யதார்த்தம் கட்டமைக்கப்படுவதை டானியலின் சிறுகதைகளில் காணமுடிவது மூன்றாவது படிநிலையெனலாம்.

எழுபதுகளின் ஆரம்பம் டானியல் போன்றோரின் இந்த வழங்கலினூடாக வளம்பெற்று அடுத்தகட்ட வளர்ச்சிநிலை குறித்த கேள்விக்குறியோடு நின்றது. இத்தகைய போராட்டங்களைத் தலைமைதாங்கி வழிநடத்திய பாட்டாளிவர்க்கக் கட்சிக்கு சில்லும் அச்சாணியாகவும் திகழக்கூடிய கட்சி இலக்கியம் அடுத்த கட்ட வளர்ச்சியாக இருக்கமுடியும் எனக் கருதப்பட்டது. அந்த வகையில் கட்சி இலக்கியம், அரசியல் இலக்கியம் என்ற வடிவங்கள் முந்திய இலங்கைத்

தேசியம் சார்ந்த தேசிய இலக்கியத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியெனக் கொள்ளலாம். சாதாரண உழைக்கும் மக்களதும் கீழமட்ட மத்தியதர வர்க்கத்தினரதும் வாழ்வும் அரசியல் விழிப்புணர்வுகளும் சிறுகதைகளில் வடிக்கப்பட்டன. யோ. பெனடிக்றபாலன், என்.கே. ரகுநாதன், நீர்வை பொன்னையன், செ. கதிர்காமநாதன், மரியதாஸ், சி.வி வேலுப்பிள்ளை, செ. யோகநாதன், செ. கணேசலிங்கம் போன்றோரது சிறுகதைகள் இவ்வகையின. அரசியல் சார்பற்ற சிறுகதைகளை செங்கைஆழியான், செம்பியன் செல்வன், என்.எஸ்.எம். இராமையா, தெளிவத்தை ஜோசப், மலரன்பன், கோமஸ், மாத்தளை வடிவேலன், ஹனீபா, மாத்தளை சோமு போன்றோர் வடித்துள்ளனர்.

இந்தப் போக்கின் வளர்ச்சியை எண்பதுகளிலும் காணமுடிகிறது. கட்சி இலக்கியம், அரசியல் இலக்கியம் சார்ந்த சிறுகதைகளுக்கு க. தணிகாசலத்தின் படைப்புகள் சிறந்த எடுத்துக்காட்டுகளாய் அமையும். க. தணிகாசலத்தின் எல்லா சிறுகதைகளுமே இந்த வடிவங்களுக்குரியவையென்பது இதன் பொருளல்ல. சமூக வாழ்வின் பலபடித்தான பரிமாணங்கள் குறித்தும் அவரது படைப்புகள் காட்ட முனைந்துள்ளனவாயினும் அரசியல்- கட்சி இலக்கிய வடிவங்கள் அவரிடம் மேலோங்கியிருப்பதை அவதானிக்க முடியும். கட்சி சார்ந்த பாத்திரங்கள் நந்தினி சேவியர், டானியல் அன்ரனி போன்றோரது சிறுகதைகளிலும் உண்டு. நந்தினி சேவியர் போன்றோரது சிறுகதைகளில் வாழ்வின் ஏனைய அம்சங்கள் வெளிப்பட்டுள்ள அளவுடன் ஒப்பிடும்போது அரசியல் இலக்கியச் சார்பு முனைப்புறவில்லையெனலாம்.

அரசியல் – கட்சி இலக்கியம் சார்ந்த சிறுகதைகளில் க. தணிகாசலத்தின் சில சிறுகதைகள் கணிசமானளவு வெற்றிபெற்றவை. அவரது ஒரு "பாதை திறக்கிறது" எனும் சிறுகதையில் அரசியல் விழிப்புணர்வு பெற்று ஸ்தாபனப்பட்ட இளைஞர்கள் தலைமையில் முழுக்கிராமமுமே கதாபாத்திரமாய் சித்திரிக்கப்பட்ட பாங்கினை விமர்சகர் கே. எஸ். சிவகுமாரன் விதந்துரைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. க. தணிகாசலத்தின் முதலாவது சிறுகதைத் தொகுதியான "பிரம்படி" நூலுக்கான விமர்சனத்தின்போதே ஒரு முழுக்கிராமமுமே கதாபாத்திரமாக ஆக்கப்பட்டிருந்த விந்தையை வியப்புடன் கே.எஸ். சிவகுமாரன் வெளிப்படுத்தியிருந்தார்.

"பிரம்படி" தொகுதிக்கான தலைப்புச் சிறுகதை இந்திய சமாதானப்படை பிரம்படி எனும் கிராமத்தில் நடாத்திய படுகொலையில் வாயிலாகத் தனது காந்தீய சமாதான முகத்தைக் களைந்து ஆக்கிரமிப்பாளராய் வெளிக்காட்டியதைச் சித்திரிப்பது. கவசவாகனங்களால் சிதைந்த வீடொன்றின் சுவரிலிருந்த காந்திபடம் உடையாதிருந்ததைக் கூறும் பழைமைவாதியிடம், காந்தியின் பிரம்புதான் எம்மீது விழுந்துவிட்டது என்ற விமர்சனம் வீசப்படும். தமிழ்த் தேசிய விழிப்புணர்வுப் பிரச்சினைகள் கதையாக்கப்படும்போது இந்த விமர்சனங்கள் புரட்சிகரச் சிந்தனையுடைய ஒரு பாத்திரம் வாயிலாக எப்போதும் வெளிப்படும். ஒடுக்கப்பட்ட மக்களின் செயலூக்கமுள்ள பாத்திரங்களை வடித்துத் தந்த க. தணிகாசலத்திடம் இனப்பிரச்சினை என வரும்போது இவ்வாறு வெறும் விமர்சன நிலைப்பாடு வெளிப்படுவது ஒருவகையில் கருத்தியல் ரீதியான பிரச்சனையே காரணம் எனலாம்.

எண்பதுகளில் க. தணிகாசலத்தின் சிறுகதைகள் இவ்வகையில் அமைந்தபோது, தூய கலைவாத நோக்கில் படைப்பாக்கம் செய்தவரான ரஞ்சகுமார், தமிழினத்தேசியப் போராட்டப் பாத்திரங்களைத் தனது கோட்பாட்டுத் தளத்தில் நின்றபடி ஓரிரு சிறுகதைகளில் வடித்துத் தந்துள்ளமையைக் காணமுடியும். அவரது கோசலை இந்த விடயத்தில் விதந்துரைக்கப்படும் சிறுகதை. எண்பதுகளில் அவர் எழுதிய சிறுகதைகள் "மோகவாசல்" எனும் தொகுதியாக

வெளிவந்துள்ளது. சமூக இயக்கப் போக்குகளுக்கு முக்கியத்துவத்தை வழங்காமல் தூய கலைவாதத்தின் பெயரால் உள்மனக் குடைச்சல்களுக்கே முதன்மை கொடுக்கும் பலவீனம் ரஞ்சகுமாரின் சிறுகதைகளில் உண்டு. இதனால் குண்டுவீச்சில் காயப்பட்டு ஆஸ்பத்திரிக்கு இரத்தஞ்சொட்ட எடுத்துவரப்படும் இளம் பெண்ணிடம் "கைபடாத முலைகள் வெளிப்பட்டுத் தெரிவதையே" கண்டு எழுதும் மனப்பக்குவத்தை ரஞ்சகுமார் கொண்டிருந்தார். அன்றைய நிலையில் இவ்வாறு எழுதுவது ஒருவகையில் "புரட்சிகரமான" புதிய நடையெனலாம்.

எண்பதுகளில் சிறுகதை நடையில் ரஞ்சகுமார் வேறோருவகையான மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளமை கவனத்திற்குரியது. தொன்மங்களை ஏற்றவகையில் கையாள்வது எண்பதுகளின் பின் முக்கியத்துவம் பெறும் ஓர் உத்தியாகும். எண்பதுகளுக்கு முன் மரபுவாதிகள் எமது தொன்மங்களை சிறுகதைகளில் பயன்படுத்தியுள்ளனராயினும், இது நவீனத்துவத்தின் சாயலுடன் வந்தமையும் உத்தியாகும். தென்னமெரிக்க சிறுகதைகளின் வீச்சு ஆங்கிலத்தில் ஏற்படுத்திய தாக்கத்தின் சாயல் இது. "கோசலை" வெறும் இன்றைய ஒரு பாத்திரம் அல்ல. ராமர்களைக் காடேகவிட்டு ஏக்கப் பெருமூச்சுடன் வீட்டில் இருந்த தமிழன்னையர் பிரக்ஞைபூர்வமாக "கோசலை" ஆயினர். குறியீடுகளும் ரஞ்சகுமாரின் கதைகளில் முனைப்புறுவன.

சமகாலத்தில் உமா வரதராசனும் இதேவகையான போக்கைக் கடைப்பிடித்தவர். கிழக்கிலங்கைளின் விசேடித்த பண்பின் பிரகாரம் கூர்மையான சமூக முரண்கள் உமா வரதராசனின் சிறுகதைகளிலும் வந்தமையாது போக, ரஞ்சகுமாரைவிடவும் உள்மனத்தேடல் முனைப்புறுவதை இவரிடங்காணலாம். "உள்மன யாத்திரை" எனும் தலைப்பில் சிறுகதை எதுவும் இல்லாத போதிலும் குறிப்பாக உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் உமா வரதராசனின் சிறுகதைகளின் தொகுப்புக்கு "உள் மன யாத்திரை" என தலைப்பிடப்பட்டது. அடிமுடி காணமுடியாத சூட்சுமமான மனத்தை எவ்வகையில் குடையினும் விளங்கிவிட முடியாதென்பதால் உமா வரதராசனின் சிறுகதைகள் கலைத்துவத் தீட்சை பெறாத சாதாரண வாசகர்கட்கு விளங்க வாய்ப்பில்லை. "வீரகேசரி" பத்திரிகையில் வெளிவந்த அத்தகைய அவரது சிறுகதையுடன் பனடோலையும் இணையாகத் தரவேண்டும் எனக் குறிப்பிட்ட வாசகரின் கடிதம் ஒன்றும் உள் மனயாத்திரை தொகுதியில் இடம் பெற்றுள்ளது. அந்தத் தொகுதியில் இடம்பெறாத - "இந்தியா டுடே" சிறப்பு மலரில் இடம்பெற்ற - "அரசனின் வருகை" சிறந்த குறியீடுவகைச் சிறுகதை என்பதற்காக விதந்துரைக்கப்படுவது. மனச்சஞ்சலங்களைப் படைப்பாக்குவதில் மு. பொன்னம்பலம், குறிப்பிடத்தக்கவர். ரஞ்சகுமார், உமா வரதராசன் பாணியில் எழுதப்பட்ட திருக்கோவில் கவியுவனின் "வாழ்தல் என்பது" எனும் சிறுகதைத் தொகுதிக்கு முன்னுரை எழுதிய பேராசிரியர் சிவத்தம்பி, "கருத்தியல் தெளிவின்மை முக்கிய பலவீனம்" எனக் குறிப்பிட்டுள்ளமை தனியே திருக்கோவில் கவியுவனின் சிறுகதைகளுக்கு மட்டுமே உரிய குறிப்பல்ல. முன்னோடிகளுக்கும் பொருந்தவல்ல விமர்சனம் அது. பொதுவாக இக்குறைபாடு எண்பதுகளைத் தொடர்ந்துவரும் ஒன்றெனலாம். எண்பது களுக்குப் பின் கருத்தியல் தவறுகள் மலிந்துள்ளது போன்றே ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளில் அகமும் புறமும் இணைவதில் ஒருமைத்தன்மையின்மையும் ஒரு பெருங்குறைபாடாகும். புறவுலகு படைப்பாக்கம் செய்யப்படும் போது அகவுலகு காட்டப்படாததும், அகம் வடிக்கப் படும்போது புறத்தின் இயக்கப்பாங்கு பற்றித் தெளிவற்றிருப்பதும் பொதுக் குறைபாடு எனலாம்.

அகமும் புறமும் ஏற்றவகையில் இணையும் சிறுகதைகளை வழங்கியவர் என சட்டநாதன் குறிப்பிடப்படுவார். அவரது "உலா" சிறுகதை சிறுவர்களின் உளவியலைப் புறநிலையுடன் இணைத்து வெளிக்காட்டியது. குடும்ப உறவுகளில் நிலவும் ஆண் மேலாதிக்க உணர்வுகளையும், உளவியல் சிக்கல்களையும், ஒடுக்கப்படும் பெண்ணின் நிலையிலிருந்து புரிந்துகொள்ளத்தக்க

ரீதியிலான சிறுகதைகளையும் சட்டநாதன் தந்துள்ளார். அவரது முந்திய சிறுகதைகள் அனைத்திலுமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளின் தொகுப்பாக "சட்டநாதன் கதைகள்" எனும் நூல் வெளிவந்துள்ளது.

பெண்களின் பிரச்சினைகளைப் பெண்களே படைப்பாக்கம் செய்வது எண்பதுகளின் சிறப்பான ஒரு பண்பு. முன்னர் பெண் எழுத்தாளர்கள் பெண்களின் பிரச்சினையை எழுதவில்லையென்பதல்ல; பொதுவான சமூக ஒழுக்க விழுமியங்களின் அளவுகோல்களுக்குள் அடங்கி எழுதப்படுவதே அன்றையநிலை. சமகாலச்செல்நெறியில் பெண் ஒடுக்கப்படுகிறாள் என்ற பிரக்ஞையுடன் பெண்விடுதலையுணர்வுக்கு முதன்மையளித்து, ஆணாதிக்க ஒழுக்க விழுமியங்களைப் புறந்தள்ளிப் படைப்பாக்கம் செய்யப்படுதல் முதன்மைபெற்றுள்ளது. ஆயினும் பெண்ணிய நோக்கிலான கவிதைகளின் வீச்சுடன் ஒப்பிடுகையில் சிறுகதைகளின் தாக்கம் குறைவானதே. இக்காரணத்தால் முந்திய பெண் படைப்பாளிகளின் மீள் வருகையை அவதானிக்க முடிகிறது. பவானியின் "கடவுளரும் மனிதரும்" எனும் சிறுகதைத்தொகுதி இக்குறிக்கோளுடன் வெளிவந்திருப்பது.

போர்க்குரலாய் வடிக்கப்பட்டு, சமகாலப் போர்ச்சூழலுடன் பரஸ்பரம் தாக்குறவுக் குள்ளாகி, ஈழத்துக்கவிதைகளும், அரங்கக்கலைகளும் செழுமை பெற்று முதன்மைநிலையை எட்டியுள்ளன. அவற்றுடன் ஒப்பிடும்போது சிறுகதை - நாவல் போன்ற புனைகதை இலக்கியங்கள் வளர்ச்சிபெற முடியாமற் போனமைக்கான காரணங்கள் என்ன? அவை வேறாக ஆராயப்பட வேண்டியன. பெண்ணிய நோக்கிலான சிறுகதைகள் அதிகம் வெளிப்பட முடியாமற் போனமைக்கான காரணமாய் யதார்த்தத்தை அதிகம் வெளிக்காட்ட வேண்டிய சூழல் கவிதையைவிட புனைகதைக்குண்டு என்பதை கருத்திற்கொள்ள நிர்ப்பந்திக்கப்படுவதைக் கூறலாம். புதிய பெண் எழுத்தாளர்களில் தாமரைச்செல்வி குறிப்பிடத்தக்க ஒருவர். அவர் இலக்கிய சமூகப்பிரச்சனைகளை நுனிநாக்கில் அலசும் பெண்ணைவிட அடுப்படியே கதியென இருக்கும் பாமரப்பெண் அகதிகளுக்கு இரங்கி இடங்கொடுக்கும் மனப்பாங்கைப் படைப்பாக்கம் செய்துள்ளார். இது பெண்ணே பெண் விடுதலைச் சிந்தனைக்கு எதிராகப் போகும் துர்ப்பாக்கியம் என பெண்ணிய விமர்சகர்களால் விசனந்தெரிவிக்கப்படுகிறது. ஆயினும் இது ஒரு யதார்த்தம். விடுதலைபற்றி வாய்ச்சவடால்களை வீசிக்கொண்டு தமது இயல்பான வாழ்வுக்குப் பங்கம் நேராமல் பார்த்துக் கொள்ளும் பதர்கள் ஆண்களில் போலவே பெண்கள் மத்தியிலும் உண்டு.

இன்றைய பெண் எழுத்தாளர் இர்ஃபானா ஜப்பார் "புதுமைப்பெண்" எனும் சிறுகதைத் தொகுதியை தந்தமைக்காக அகமகிழ்ந்து முன்னுரை வழங்கிய வள்ளிநாயகி (குறமகள்) வேறொரு யதார்த்தத்தை முன்னர் தனது சிறுகதையொன்றில் காட்டியிருந்தார். இலங்கைத் தமிழர் சமூகத்தில் ஆண் வீட்டு மாப்பிள்ளையாக மணப்பெண் வீட்டுக்குப் போகவேண்டியவன். தனது கிராமத்தில் ஆளுமையோடு சமூகசீர்திருத்தத்திற்காக உழைத்துத் தலைமை வகித்தவன், புகுந்தவிடத்தில் தனக்குரிய இடத்தை இழந்து மனைவியூடாகவே அடையாளம் தேடவேண்டியிருந்ததால் மனக்குமைச்சலுக்குள்ளாவதை வள்ளிநாயகி தனது சிறுகதையில் சித்திரித்திருந்தார். பெண்ணிய சிந்தனையாளர்கள் இந்த யதார்த்தத்தை புறந்தள்ளிவிட முடியாது. மேலைச்சிந்தனைகளை அல்லது தமிழக நிலையை இங்கே யாந்திரீகமாய்ப் பிரயோகித்துவிட முடியாது. பெண் புகுந்தவீட்டுக்குச் செல்வதால் தமிழகத்தில் எதிர்நோக்கும் பிரச்சனை அளவுக்கு இங்கு இல்லை. தனது வீட்டில் தனக்கான சொத்துடன் ஓரளவில் தனது ஆளுமையைப் பெண் பேணிக்கொள்ள முடிவது இங்குள்ள ஒரு சாதகமான அம்சம்.

அந்தவகையில் இங்குள்ள விசேட நிலைமைகளில் பெண் எதிர்நோக்கும் ஒடுக்குமுறைகளை பெண்ணிய எழுத்தாளர்கள் இனங்கண்டு காட்டவேண்டியவர்களாய் உள்ளனர். கோகிலா மகேந்திரன், தாமரைச்செல்வி போன்ற இன்றைய எழுத்தாளர்கள் எமது பெண்கள் எதிர்கொள்ளும் சமூகச் சிக்கல்களை வெற்றிகரமாக வடித்துத்தந்துள்ளனர் எனக் கூறலாம்.

ஐம்பதாம் ஆண்டுகளிலிருந்து தமிழக சமூகம் போர்க்குணம் இழந்து சமூகச் சிதைவுகள் வலுப்பெற்றுவந்த போது ஈழத்தில் கூர்மையான சமூகச் சச்சரவுகள் முனைப்படைந்து வளர்ந்து வந்துள்ளன. இன்றைய எமது வாழ்நிலை, சம்பவங்கள் மலிந்த சமூகச் சூழலைத் தந்துள்ளது. இக்காரணத்தினால் ஈழத்துச் சமகாலச் சிறுகதைகளில் உணர்வுகளை விட சம்பவங்கள் மிகைப்பட்டு நிற்பதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன. அதன்பேறாக உணர்வுகளை முதன்மைப்படுத்தும் போக்கு சமகாலத்தில் முனைப்புற்றதையும் காணமுடிந்துள்ளது. இவை இருமுனைப்போக்குகளாய் இல்லாமல், உணர்வும் சம்பவமும் ஒருங்கிசையும் புதிய படைப்பாக்க முயற்சி எமது அடுத்தகட்ட வளர்ச்சியை எட்ட உதவும். சிக்கலுற்றுள்ள பிரச்சனைகள் தெளிவற்ற மனநிலைகளை வளர்த்துள்ள சூழலில், கருத்தியல் வளர்ச்சி இன்னமும் சரியாக எட்டப்படாதிருக்கலாம். ஆயினும் போராட்டங்களூடாக உண்மையொளியை நாடும் எமது சமூகம் வந்தடையக் கூடிய சரியான கருத்தியல் எதிர்கால ஈழத்துச் சிறுகதைகளை வீரியமிக்கதாய் வெளிக்கொணர உதவும் என நம்பலாம்.

# இலங்கை சுதந்திரம் பெற்றபின் தமிழ் நாடகத்துறையில் ஏற்பட்ட மாற்றமும் வளர்ச்சியும்

காரை. செ. சுந்தரம்பிள்ளை

இலங்கையில் தமிழ் நாடகத்துக்கென நீண்டதொரு பாரம்பரியம் உண்டு. இப்பாரம்பரியம் பழைய காலத்திலிருந்து வடஇலங்கை, கிழக்கிலங்கை ஆகிய பிரதேசங்களில் மட்டுமன்றி புத்தளம், சிலாபம், நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களிலும் நன்கு வேரூன்றியிருந்தது. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையுடன் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த தோட்டத் தொழிலாளர்களால் மலையகத்திலும் புதியதொரு தமிழ் நாடகப் பாரம்பரியம் உருவாயிற்று. இவை சங்கிலித் தொடர்போல காலத்துக்குக் காலம் சிற்சில மாற்றங்களுடன் இன்றுவரை தொடரலாயிற்று. அதுமட்டுமன்றி "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல. கால வகையினானே" என்பதற்கிணங்க சில நாடக மரபுகள் அருகிவிடப் புதிய நாடக மரபுகள் தோன்றலாயின.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் ஏற்பட்ட ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சியை ஆராய்வதன் முன்னர் சுதந்திரமடைவதற்கு முன்பிருந்த நாடக வடிவங்களை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

இலங்கைத் தமிழ் நாடகங்களுள் முக்கியமானவை மரபுவழி நாடகங்களேயாகும். அவற்றுள் பள்ளு, குறவஞ்சி, விலாசம், வசந்தன், மகிடிக்கூத்து, நொண்டி நாடகம், காத்தவ ராயன் கூத்து, வடமோடிக் கூத்து, தென்மோடிக் கூத்து இசைநாடகம் என்பனவற்றுடன் மலையகத்தில் பரவலாக ஆடப்பட்ட காமன் கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் என்பனவே முக்கியமான நாடகங்களாகும்.

மேற்படி நாடகங்களுள்ளும், இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரமடைந்த காலத்தில் பெரும்பாலும் ஆடப்பட்ட நாடகங்களாக நொண்டி, காத்தவராயன், வடமோடி, தென்மோடி, மகிடி, இசை நாடகம், காமன் கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் என்பனவே விளங்கின. இவை தவிர மேனாட்டார் வருகையால் அறிமுகமாகிய நவீன நாடகங்களும் ஆடப்பட்டு வரலாயின.

இக்கட்டுரையில் முதற்கண் மரபுவழி நாடகங்களும் பின்னர் நவீன நாடகங்களும் அடைந்த வளர்ச்சி முறையே ஆராயப்படும்.

## 2.0 மரபு வழி நாடகங்கள்

இலங்கையிலாடப்பட்ட மரபுவழி நாடகங்கள் அனைத்தும் சமயத் தொடர்புடையன வாகவே இருந்துவந்தன. இந்துக்களாலாடப்பட்ட கூத்து மரபினைப் பின்பற்றி கத்தோலிக்கப் பாதிரிமாரும் தமது சமயத்தைப் பரப்புவதற்கு நாடகங்களைக் கையாளலாயினர். அதனால் கத்தோலிக்கக் கூத்து மரபு ஒன்று தனித்துவமான பண்புடன் வளரலாயிற்று. இம்மரபுவழி நாடகங்கள் வெறும் பொழுது போக்குக்காக மட்டும் ஆடப்படவில்லை. இவை பக்தி சிரத்தை யோடு நேர்த்திக் கடனாகவும், இறைவனுக்குச் செய்யும் காணிக்கையாகவும் ஆடப்பட்டன. இக்கூற்றுக்களை ஆடியோர் ஆடுங் காலத்தில் மச்ச மாமிசம் உண்பதில்லை. மதுபானம் பாவிப்பதில்லை.

## 2.1 இந்து மதக் கூத்துக்கள்

இந்துக்கள் பண்டிகைகளின்போதும் கோயில் திருவிழாக்களின் போதும் கூத்துக்களையாடி வரலாயினர். இக்கூத்துக்களுள் வடமோடி, தென்மோடி நாடகங்களும், இசைநாடகங்களும், காத்தவராயன் கூத்துப்போன்ற கதைவழிக் கூத்துக்களும் முக்கியமாக இடம் பெறலாயின. இந்துக்களாடிய கூத்துக்களுள் "இராம நாடகம்", "கீசகன்", "பப்புரவாகன்", "அலங்காரரூபன்", "அனுருத்திரன்", "இரணியன்", 'கண்டியரசன்", "இந்திரகுமார நாடகம்", "குருக்கேத்திரன்", "கோவலன்", "தருமபுத்திர நாடகம்", "பூதத்தம்பி", "மார்க்கண்டன்", "வாளபிமன்", "வெடியரசன்", "வீரகுமாரன்", "விராடநாடகம்" என்பனவும் "அரிச்சந்திரன்", "பவளக்கொடி", "அல்லியர்ச்சுனா", "சாரங்கதாரா", "நல்ல தங்காள்", "பக்த நந்தனார்", "பூதத்தம்பி", "கோவலன்", "அபிமன்யூ சுந்தரி", "வள்ளி திருமணம்" ஆகிய இசை நாடகங்களும் முக்கியமானவையாகும். காத்தவராயன் கூத்து, நொண்டி நாடகம் என்பனவும் இடைக்கிடை சிற்சில கிராமங்களில் ஆடப்பட்டன.

யாழ் குடாநாட்டிலும், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பிரதேசங்களிலும் கோயில் வீதிகள் தோறும் இந்நாடகங்கள் மேடையேறின. பல காலமாக வட்டக்களரியிலாடப்பட்ட மேற்படி நாடகங்கள் இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னரே மெல்ல மெல்ல ஒருமுகமேடையில் (P+O scenium) அரங்கேறத் தொடங்கின. இதற்கு இந்தியாவிலிருந்து வந்த இசை நாடகக் கலைஞர்களே வழிகாட்டிகளாக அமைந்தனர்.

இந்திய இசைநாடகக் கலைஞர்கள் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே கொட்டகைகள் அமைத்து உயர்ந்த மேடையிட்டு முன்திரை, பின்திரை, பக்கத்திரை என்பனவற்றைக் கட்டி அழகிய ஒப்பனைகளுடன் நாடகங்களை மேடையேற்றத் தொடங்கினர். இவர்களைப் பின்பற்றி இலங்கைக் கலைஞர்களும் கூத்துக்களை அரங்கேற்றலாயினர்.

இலங்கை சுதந்திரமடைந்ததும் இந்தியக் கலைஞர்களின் வருகை மிகவும் குறையலாயிற்று. முன்பெல்லாம் நினைத்தவுடன் இலங்கைக்கு வந்த இந்தியக் கலைஞர்கள், சுதந்திரத்தின் பின்னர் பாஸ்போட், விசா என்பன பெற்று வரவேண்டியிருந்த காரணத்தால் வரமுடியாத நிலை உருவாகலாயிற்று.

இந்தியக் கலைஞர்களின் வருகை குறைந்த அல்லது இல்லாதுபோன காரணத்தால் ஈழத்தில் புதிய புதிய கலைஞர்கள் பலர் உருவாகலாயினர். இலங்கையில் நாடகங்கள் புதிய உத்வேகத்துடன் வளர்வதற்கு இது மிகவும் உதவிபுரிந்ததெனலாம். ஏனைய பிரதேசங்களுக்கு இது முற்றிலும் பொருந்தாதெனினும் வடஇலங்கைக்கு முற்றிலும் இது பொருந்துவதாகும். இது பின்னர் ஆராயப்படும்.

இந்துமதக் கூத்துக்களை ஆராயும்போது மலையகத்தில் ஆடப்படும் சமயத்தொடர்பான காமன்கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் என்பனவற்றை விடுத்து ஆராய முடியாது. பக்தி சிரத்தையோடு ஆடும் இக்கூத்துக்கள் அம்மக்களுடைய வாழ்வுடன் இணைந்தனவாகும். இன்று வரை ஆடப்பட்டு வரும் கூத்துக்கள் காலத்துக்குக் காலம் மாற்றமடைந்து வருவதைக் காணமுடிகிறது. சினிமாவின் வருகையும், நவீன நாகரீகமும் மெல்ல மெல்ல இடம் பிடிக்க இக்கூத்துக்களும் பாரம்பரிய இயல்பையிழக்கத் தொடங்கிவிட்டன. ஆடல் மரபு, இசைமரபு, அளிக்கை முறை என்பனவற்றில் இதனை அவதானிக்க முடிகிறது.

மட்டக்களப்பிலாடப்படும் கூத்துக்கள் இன்றுவரை பெரும்பாலும் வட்டக்களரியிலேயே ஆடப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணக் கூத்துக்களில் ஏற்பட்ட சிற்சில மாற்றங்கள்

இக்கூத்துக்களில் இல்லாமையும், பழமையைப் பெரிதும் பேணிவரும் கரிசனையும் போற்றுதற்குரியன. இன்று நாட்டில் ஏற்பட்ட அரசியற் சிக்கல்கள் காரணமாக இப்பாரம்பரியம் பாதிக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் நாடகவியலாளர்கள் மத்தியில் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

## 2.2 கத்தோலிக்க மதக் கூத்துக்கள்

கத்தோலிக்க மதக்கூத்துக்கள் இன்று யாழ்ப்பாணம், முல்லைத்தீவு (வன்னி), மன்னார் ஆகிய பிரதேசங்களில் ஆடப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்தில் வடமோடிக் கூத்துக்களை விடத் தென்மோடிக் கூத்துக்களே பெரும்பாலும் கத்தோலிக்கர்களால் ஆடப்பட்டு வருகின்றன. கத்தோலிக்கத் தென்மோடிக் கூத்துக்களில் ஆடல் மரபைக் காணமுடியாது. ஒரு காலத்தில் இக்கூத்துக்களில் செழுமையுடன் திகழ்ந்த ஆடல்மரபை வண. ஞானப்பிரகாசர் நீக்கிவிட்டார். அவருடைய கருத்துப்படி வணக்கத்துக்குரிய பாத்திரங்களாகிய யேசுநாதர், அன்னைமேரி, புனிதர்களாகிய அந்தோனியார், செபஸ்தியார் ஆகிய பாத்திரங்கள் மேடையில் ஆடக்கூடாது. இதனைத் தொடர்ந்து ஏனைய பாத்திரங்களும் ஆடுவது நிறுத்தப்பட ஆடல்மரபையே யாழ்ப்பாணத்துக் கத்தோலிக்கக் கூத்துக்கள் இழந்துவிட்டன.

1993ஆம் ஆண்டு இக்கட்டுரை ஆசிரியர் பயிற்றி மேடையேற்றிய "மூவிராசாக்கள்" நாடகத்துடன் மீண்டும் கத்தோலிக்கக் கூத்துக்களில் ஆடல்மரபு புகத் தொடங்கிவிட்டது. இக்கட்டுரையாசிரியரும் கலைஞர் பாலதாசும் இணைந்து மேடையேற்றிய "முத்தா மாணிக்கமா" (கோவலன்) மிகச்சிறந்த தென்மோடி ஆட்டக்கூத்தாக அமைந்தது. யாழ் செமினறியில் இக்கட்டுரை ஆசிரியரின் ஆடற்பயிற்சியுடன் மேடையேறிய விவிலியக் கதையாகிய "இழந்தவர்கள்" இன்னோர் சிறந்த ஆட்டக் கூத்தாகும். இவற்றைத் தொடந்து இப்பொழுது பெரும்பாலான கத்தோலிக்கக் கூத்துக்கள் ஆடல்மரபுடன் மேடையேறி வருகின்றன. இத்துறையில் திருமறைக் கலாமன்றம் ஆற்றி வரும் பணியும் மகத்தானது. மற்றாஸ்மெயிலால் மேடை யேற்றப்பட்ட கோவலன் கூத்தும் ஆட்டமரபின் புத்துயிருக்கு உந்துசக்தியாக அமைந்ததெனலாம்.

மன்னாரில் ஆடப்படும் கூத்துக்களை "மாதோட்டப் பாங்கு", "யாழ்ப்பாணப்பாங்கு" என இருபிரிவுக்குள் அடக்குவர். மாதோட்டப் பாங்கைத் "தென்பாங்கு" எனவும் "தென்மெட்டு" எனவும், யாழ்ப்பாணப்பாங்கை "வடபாங்கு" எனவும் "வடமெட்டு" எனவும் கூறுவர். நாடகங்களின் சுருக்கங்களாகிய "வாசாப்பு"களும் இங்கே மேடையேற்றப்படுகின்றன.

இங்கே வட்டக்களரியிலாடப்பட்ட கூத்துக்கள் போர்த்துக்கேய கத்தோலிக்கப் பாதிரிமார் தொடர்பால் கோயிலின்முன் அமைக்கப்படும் அரைவட்டக் களரியோடு கூடிய மேடைகளில் ஆடப்படலாயின.

1948ஆம் ஆண்டின் பின்னரும் இம்மரபு நெடுங்காலமாகப் பின்பற்றப்பட்டு வந்தது, வருகிறது. கத்தோலிக்கக் கோயில்களில் இக்கூத்துக்கள் அடிக்கடி ஆடப்பட்டன. வங்காலையில் "மரிய சித்தாள்" நாடகமும், பேசாலையில் "மூவிராசாக்கள்" நாடகமும் "தொம்மையப்பர்" நாடகமும், தாழ்வுபாட்டில் "சூசையப்பர்" நாடகமும் தலைமன்னாரில் "லவுறஞ்சியா" நாடகமும், கட்டுக்கரையில் "சந்தியோகுமையார்' நாடகமும் தள்ளாடியில் "அந்தோனியார்" நாடகமும் ஆடப்படுவது வழக்கம்.

மன்னார் கலைஞர்களுக்கு இந்தியக் கலைஞர்களுடன் நெருங்கிய தொடர்பு நீண்ட

காலமாக இருந்து வந்திருக்கிறது. சுதந்திரத்தின் பின்னரும் இவர்கள் அடிக்கடி வள்ளங்களில் இந்தியாவுக்குச் சென்று திரும்புவது வழக்கம். அதனால் இந்தியாவிலிருந்து நாடகங்களுக்குரிய ஒப்பனைப் பொருட்களையும், ஏனைய பொருட்களையும் கொண்டு வந்து அரங்கை வளர்த்தனர் எனத் தெரிகிறது. மன்னாரில் மேடையேறிய நாடகங்களைப் பயிற்றியும், அவற்றில் நடித்தும் புகழீட்டிய கலைஞர்கள் பலராவர். அவர்களுள் மக்ஸிமஸ் லம்பேட் செபமாலை (குழந்தை மாஸ்ரர்), செபமாலை குரூஸ், அருளானந்தம் குரூஸ், பெஞ்சமின் செல்வம் ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

## 2.3 இசை நாடகங்கள்

யாழ்ப்பாணத்தில் ஆரம்பகாலத்தில் நாட்டார் கூத்துக்களுடன் விலாச நாடகங்களே ஆடப்பட்டன. இவையும் வட்டக்களரியிலேயே ஆடப்பட்டன. 1950ஆம் ஆண்டு பார்ஸிமரபு நாடகங்கள் இந்தியாவில் வடிவம் பெற்றன. இவை 1870ஆம் ஆண்டளவில் தமிழகத்துக்கு அறிமுகமாயின. இந்நாடகங்கள் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பரவலாக யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் மேடையேறலாயின. இந்தியக் கலைஞர்களாகிய எஸ். ஜி. கிட்டப்பா, கே.பி. சுந்தராம்பாள், எம்.ஆர். கோவிந்தசாமிப்பிள்ளை தியாகராஜ பாகவதர் போன்றோரால் இம்மரபு நாடகங்கள் இலங்கையிலாடப்பட்டன. இவையே காலப்போக்கில் இசைநாடகங்கள் எனப் பெயர்பெற்றன.

1948ஆம் ஆண்டின் பின்னர் இந்தியக் கலைஞர்களின் வருகை நின்றதும் ஈழத்துக் கலைஞர்களால் இசைநாடங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. இணுவில் நாகலிங்கம் சகோதரர்கள், நல்லூர் கைவெட்டு சுந்தரம்பிள்ளை, சுபத்திரை ஆழ்வார், அச்சுவேலி இரத்தினம், கன்னிகா பரமேஸ்வரி, மாசிலாமணி, சின்னையாதேசிகர், இராமலட்சுமி ஆகியோர் இவர்களுள் முக்கியமானர்கள். இவர்களையடுத்து வந்த சீ.ரி. செல்வராஜன், நடிகமணி வைரமுத்து, வி. என். செல்வராஜன் ஆகியோர் இம்மரபை மேலும் வளர்த்தனர். இவர்களுள் நடிகமணி வி.வி. வைரமுத்து இசைநாடகத்தைப் புதுக்கியமைத்து புதியதொரு பரிமாணத்துடன் விளங்க வைத்தார். ஐம்பதுகளின் பின்னர் இவர் மேடையேற்றிய "அரிச்சந்திர மயான காண்டம்", "பக்த நந்தனார்", "பூதத்தம்பி" என்பன அற்புதமான படைப்புகளாகும். இவற்றுள் நடிகமணியின் மயானகாண்டம் ஈழத்தின் பட்டிதொட்டியெங்கும் 2500 தடவைகளுக்கு மேலாக மேடையேறியது. இசையினூடாக நடிப்பை வெளிப்படுத்தி அரங்கையலங்கரித்தவர் நடிகமணி என்பது குறிப்பிடத்தக்கது.

ஐம்பதுகளிலிருந்து மிகவும் பிரபலமாக மேடையேறிய நாடகங்களுள் ஒன்று, காத்தவராயன் ஆகும். நேர்த்திக் கடனுக்காக இந்துக் கோயில்கள் தோறும் மேடையேறி வந்த இந்நாடகம் எழுபதுகளின் பின் சிறிது தளர்ச்சியடையத் தொடங்கியது.

1986இல் மீண்டும் இந்நாடகத்தை யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் பாலசுந்தரம், பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு மேடையேற்றினார். இம்மேடையேற்றத்தையடுத்து மீண்டும் யாழ்ப்பாணக் குடா நாடெங்கும் காத்தவராயன் மேடையேற்றப்படலாயிற்று. இந்நாடக வடிவத்தைப் பின்பற்றி சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும், தமிழ் மக்கள் படும் துயரத்தையும் இந்திய இராணுவம் தமிழ் மக்களுக்கு இழைத்த இன்னல்களையும் முன்வைத்து 1988, 1989ஆம் ஆண்டுகளில் நாடகங்கள் யாழப்பாணத்தில் மேடையேறலாயின.

மன்னார், வன்னி ஆகிய இடங்களிலும், தீவுப்பகுதிகளிலும் இடைக்கிடை நொண்டி நாடகம் ஆட்டக்கூத்தாக மேடையேறி வந்ததென்பதும் ஈண்டு குறிப்பிடவேண்டியதொன்றாகும்.

## 3.0 நவீன நாடகங்கள்

நவீன நாடகங்கள் என இங்கே குறிப்பிடப்படுவன மரபுவழி நாடகங்கள் அல்லாத நாடகங்களாகும். ஐம்பதுகளுக்கு முன்னரே இத்தகைய நாடகங்கள் பாடசாலைகளிலும் சனசமூக நிலையங்களிலும் மேடையேற்றப்படலாயின.

ஆங்கிலக் கல்வியின் வருகையும், மேனாட்டு நாகரீகமும் ஓரளவு ஐரோப்பிய அரங்கின் அறிமுகத்துக்குக் காரணிகளாயின. இலங்கையிலுள்ள முக்கிய பாடசாலைகளில் ஆங்கிலமொழி மூலம் நாடகங்கள் மேடையேறத் தொடங்கின. யாழ்ப்பாணத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி, சென். யோன்ஸ் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி என்பன ஷேக்ஸ்பியர், இப்சன், மோலியர் போன்றவர்களின் நாடகங்களை மேடையேற்றி வந்தன. இவர்கள் மேடையேற்றிய நாடகங்களுள் ஷேக்ஸ்பியரின் வெனிஸ் வர்த்தகன் (Merchant of Venice) யூலியஸ் ஸீசர், (Julius Caesar ) நீ நினைத்தபடியே (As you like it ) லியர் மன்னன் (King Lear) மாக்பெத் (Macbeth ) இப்சனின் பொம்மை வீடு (Doll's House), காட்டு வாத்து (Wild Duck), பெர்னாட்ஷாவின் துறவி ஜோன் (St. John ) என்பன முக்கியமானவை (தகவல்: M.M. துரைசிங்கம்) இந்நாடகங்கள் அனைத்தும் ஐம்பதுகளின் முன்னர் ஆங்கில மொழி மூலமே மேடையேறின. இதேபோல கொழும்பு, காலி, கண்டி ஆகிய நகரங்களிலும் ஆங்கில நாடகங்கள் மேடையேறின.

ஆங்கிலேயர் வருகையின் பின்னர் ஆங்கிலம் கற்ற ஒரு மத்தியதர வர்க்கம் இலங்கையில் உருவாகியது. இவ்வர்க்கத்தினர் நிறத்தால் கறுப்பர்களாகவிருப்பினும் நடையுடை பாவனையால் ஆங்கிலேயர்களாகவே நடக்க முயற்சித்தனர். இருந்தபோதும் இத்தகையோர் பாடசாலைகளுக்கு வெளியிலும் மேற்படி நாடகங்களையொத்த நாடகங்களை தாய்மொழி மூலம் மேடையேற்ற முயற்சித்தனர். இம்முயற்சி தலைநகரிலும், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. இத்தகையோருள் ஒருவர்தான் கலையரசு சொர்ணலிங்கமாவர். இப்பெரியாரைப் பற்றிப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். நாடகமே என் நினைவு. "நாடகமே என் கனவு, நாடகமே என் இன்பம், நாடகக் கலையே என் தெய்வம்" என்ற இலட்சியத்துடன் வாழந்து வருபவர் கலையரசு சொர்ணலிங்கம்..... தாய்மொழிப் பற்றும், சமயப்பற்றும் அற்று ஆங்கில மோகத்திலே மூழ்கி ஆங்கில நாடகங்களையே சுவைத்து வந்த காலத்திலே, தமிழ் நாடக மேடையிலே தோன்றியவர்களைத் கூத்தாடிகள் என்று ஏளனஞ் செய்து ஒதுக்கிய காலத்திலே, நாடகம், படிக்காதவர் கையில் அகப்பட்டு சீரழிந்து மதிப்பிழந்த காலத்திலே துணிந்து மேடையிலே தோன்றிப் படித்தவர் நாடகத்தில் நடிப்பதன் மூலம் அக்கலையைத் தூய ஒரு கலையாக வளர்த்து மதிப்பிற்குரிய கலையாக ஆக்கலாம் என்பதை இவர் செயலிற் காட்டினார்.

## 4.0 கலையரசு சொர்ணலிங்கம்

நாடக உலகுக்கு கலையரசரின் வருகை முக்கியமானது. ஈழத்து நவீன நாடகத்துக்கு கால்கோள் நாட்டியவர் இவர் என்றே கூறவேண்டும். தென் இந்தியாவில் நாடக உலகுக்கு அரிய பங்களிப்புச் செய்த பம்மல் சம்மந்த முதலியாரை மானசீகக் குருவாக ஏற்ற கலையரசர், சம்மந்த முதலியார் மேடையேற்றிய பல நாடகங்களைத் தானும் இலங்கையில் மேடையேற்றினார். "வேதாள உலகம்", "மனோகரா", "சிம்ஹளநாதன்", "வாணிபுரத்து வணிகன்", "நீ விரும்பிய விதமே", "சகுந்தலை, சாரங்கதாரா", "பாதுகா பட்டாபிஷேகம்" ஆகிய நாடகங்கள் இவற்றுள் முக்கியமானவை. இவர்களுடைய நாடகங்களில் ஒருசில பாடல்களைத் தவிர பெரிதும் வசனங்களே பேசப்பட்டன.

கலையரசர் 1913ஆம் ஆண்டில் இலங்கா சுபோத விலாசசபாவை நிறுவி நாடகங்களை மேடையேற்றத் தொடங்கிவிட்டார். அன்று தொடங்கிய இவருடைய கலை முயற்சி இலங்கை சுதந்திரமடைந்த பின்னரும் பல ஆண்டுகள் தொடர்ந்தது. கலையரசருடன் கூட நடித்த சககலைஞர்கள் பலர் பிற்காலத்தில் பெரும் புகழ் பெற்று விளங்கினர். இலங்கை சுதந்திரமடைந்த காலகட்டத்தில் இவருடன் இணைந்து நடித்த நடிகர்களுள் எஸ். பொன்னம்பலம், வி. என். பாலசுப்பிரமணியம், எஸ். தருமலிங்கம், ஆர். பேரம்பலம், கே செல்வரத்தினம் ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

ஐம்பதின் பிற்பகுதியிலும், அறுபதுகளிலும் கலையரசருடன் இணைந்து மிகச்சிறந்த இளம் நடிகர்கள் நடிக்கலாயினர். இவர்களுள் கே. செல்வரத்தினம், ஏ. இரகுநாதன், ம. மனோகரன், என். கனகரத்தினம், எம். சண்முகலிங்கம் (குழந்தை), ஏ. மகேஸ்வரன், பூ. கிருஷ்ணமூர்த்தி, எஸ். அருமைநாயகம், ஏ. பிரான்சிஸ் ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்கள் நடித்த "தேரோட்டி மகன்", "இன்பநாள், வழி தெரிந்தது", "நல்லதும் கெட்டதும்" ஆகிய நாடகங்கள் இயற்பண்பு நாடகநெறியைப் பின்பற்றி மேடையேற்றப்பட்டனவாகும். அக்காலகட்டத்தில் அத்தகைய நாடகங்களே இலங்கை முழுவதிலும் பெரிதும் மேடையேற்றப்பட்டன எனக் கருத முடிகிறது. பெரும்பாலும் இத்தகைய நாடகங்கள் மத்தியதர வர்க்கத்தைத் திருப்திப்படுத்துவனவாகவே அமைந்தன.

## 4.1 மொழியுணர்வு நாடகங்கள்

1956ஆம் ஆண்டை ஒரு முக்கியமான ஆண்டாக கலை இலக்கியவாதிகள் கொள்வதுண்டு. இதன் பின்னர்தான் மொழியுணர்வு தூண்டப்பட்டது. தாய்மொழிக் கல்வி முக்கியத்துவம் பெறலாயிற்று. 1958ஆம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரமும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட தமிழர் விடுதலைப் போராட்டங்களும் நாடக உலகிலும் மாற்றங்களை உண்டாக்கின. 1977ஆம் ஆண்டுவரை மேடையேறிய பெரும்பாலான நாடகங்கள் மொழிப்பற்று, நாட்டுப்பற்று என்பனவற்றை மையமாகக் கொண்டு எழுந்தன. பண்டிதர் கந்தையா எழுதி மேடையேற்றிய "சங்கிலியன்", இந்நூலாசிரியர் எழுதி மேடையேற்றிய "சங்கிலியன்" (பா நாடகம்), முல்லை மணியின் "பண்டார வன்னியன்", கரவைக் கிழாரின் "தணியாத தாகம்" என்பன முக்கியமானவை.

இந்நாடகங்களை இயக்கி மேடையேற்றியோர் பெரும்பாலும் சினிமாவின் செல்வாக்குக்கு உட்பட்டு, சினிமா உத்திகளைக் கையாண்டனர் என்பதை மறுப்பதற்கில்லை. இத்தகைய உத்தி முறைகள் அக்கால கட்டத்தில் பார்வையாளர்களாலும் வரவேற்கப்பட்டன. நாடக ஆய்வாளர்கள் இவ்வுத்தி முறைகளை அங்கீகரிக்க மாட்டார்கள் என்பது உண்மையே. இக்காலப் பகுதியில் கொழும்பு, மலையகம், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலும் இவ்வாறுதான் பெரும்பாலான நாடகங்கள் மேடையேறின எனத் தெரிகிறது.

ஹற்றன் ஹைலன்ஸ் கல்லூரியிலும், பின்னர் கண்டி திரித்துவக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணிபுரிந்த நவாலியூர் செல்லத்துரை அறுபதின் பின் பல நாடகங்களை ஹற்றன், கண்டி, நாவலப்பிட்டி, கம்பளை ஆகிய இடங்களில் மேடையேற்றினார். திரு எஸ். திருச்செந்தூரன் போன்றவர்களும் மலையகத்தில் நாடகங்களை மேடையேற்றத் தொடங்கினர். இவர்களும் தங்களுடைய நாடகங்களில் இத்தகைய உத்திமுறைகளைத்தான் பின்பற்றினர் எனத் தெரிகிறது. நடிப்பு முறையிலுங் கூட சினிமாப் பாணியே இக்கால கட்டத்தில் பல நடிகர்களாலும் இலங்கை முழுவதிலும் பின்பற்றப்பட்டு வந்தது என்றும் சொல்லப்படுகிறது.

### 4.2 நகைச்சுவை நாடகங்கள்

அறுபது எழுபதுகளில் நகைச்சுவை நாடகங்கள் பல மேடையேற்றப்பட்டன. "வெளிக்கிடடி விசுவமடுவுக்கு", "வடக்கும் தெற்கும்", "அடங்காப் பிடாரி", "தம்பி கொழும்பிலை" என்பன யாழ்ப்பாணத்தில் அடிக்கடி மேடையேற்றப்பட்டன. அடங்காப்பிடாரி மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருமலை ஆகிய இடங்களிலும் மேடையேற்றப்பட்டது. இந்நாடகங்கள் இருபொருள்பட எழுதப்பட்ட வசனங்களையுடையனவாகவும், மக்களைச் சிரிக்க வைப்பதையே நோக்கமாகக் கொண்டனவாகவும் அமைந்தன. கொழும்பிலும் சில கலைஞர்கள் சிந்தனை நாடகங்களை மேடையேற்றினர். இவை நாடக வளர்ச்சிக்கென ஏதாவது பங்களிப்புச் செய்தனவா என்று நோக்கும்போது இல்லையென்றே கூறவேண்டும். இதேகால கட்டத்தில் இந்நாடகங்களுடன் போட்டிபோட்டு நடிகமணி வி.வி. வைரமுத்து, சி. ரி. செல்வநாதன், எம். பி. அண்ணாசாமி ஆகியோருடைய இசை நாடகங்களும், பூந்தான் யோசேப்பு போன்றோருடைய நாட்டுக் கூத்துக்களும், மட்டக்களப்பு மன்னார்க் கூத்துக்களும் மலையகக் கூத்துக்களும் மேடையேறிய வண்ணமே இருந்தன.

## 5.0 பேராசிரியர் கணபதிப்பிள்ளை

தமிழ் நாடக வரலாற்றில் தனக்கென முத்திரை பதித்தவர் பேராசிரியர் கணபதிப் பிள்ளையாவர். இந்தியத் தமிழர்களுடைய பேச்சு மொழியையும் சினிமாப் பாணியையும் பின்பற்றி நாடகங்களை மேடையேற்றி வந்தவர்கள் பெரிதும் தி.மு.க. வினருடைய செல்வாக்குக்குட்பட்டவர்களாகவே இருந்தனர். பேராசிரியர் யாழ்ப்பாணத்துப் பேச்சு மொழியைக் கையாண்டதோடு இலங்கைக்கெனத் தனித்துவமான நாடகமொழி மரபையும் ஏற்படுத்தினார் எனக் கூறலாம்.

பேராசிரியர் எழுதிய "சங்கிலி", "உடையார் மிடுக்கு", "முருகன் திருகுதாளம்", "கண்ணன் கூத்து", "நாட்டவன் நகரவாழ்க்கை", "பொருளோ பொருள்", "தவறான எண்ணம்", "சுந்தரம் எங்கே", "துரோகிகள்" என்பன யாவும் பேச்சு மொழியிலே எழுதப்பட்டவையாகும். இவை சமூக சீர்திருத்தக் கருத்துக்களையுடையவை. கேலியும், கிண்டலும் நிறைந்தவை. தமிழ் நாடக வளர்ச்சிப் பாதையில் பேராசிரியர் ஒரு திருப்புமுனையாக அமைந்தவர் என்பதில் ஐயமில்லை.

## 6.0 பேராசிரியர் சு. வித்தியானந்தன்

ஈழத்து நாடக உலகில் மிகவும் முக்கிய இடம் பெறும் ஒருவராக பேராசிரியர் சு. வித்தியானந்தன் விளங்குகிறார். கலைக்கழகத்தின் நாடகக் குழுத் தலைவராகவிருந்த பேராசிரியர், வழக்கொழிந்து கொண்டிருந்த இசை நாடகங்களுக்கும், நாட்டார் கூத்துக்களுக்கும் புத்துயிரளித்து வளர வைத்தார். பாமர மக்கள் மட்டும் பார்த்துச் சுவைத்து வந்த இந்நாடகங்களைப் படித்த நகரப்புற மக்களும் பார்த்து மகிழ வைத்த பெருமைக்குரியவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள். அறுபது எழுபதுகளில் அண்ணாவிமார் மகாநாடுகளை நடத்தியும், ஆட்டக் கூத்துக்களுக்கு ஊக்கம் கொடுத்தும் நாடகக் கலையை ஊக்குவித்தார். ஏட்டுப் பிரதிகளாகவிருந்த சில கூத்து நூல்களைப் பதிப்பித்தார். காங்கேசன்துறை வசந்த கான சபை, பாஷையூர் வளர்பிறை மன்றம், மன்னார் முருங்கன், முத்தமிழ் நாடகமன்றம் ஆகியன மூலம் மரபுவழிக் கூத்துக்களை வளர்க்கப் பேரூக்கமளித்தார். இவரால் ஊக்குவிக்கப்பட்டு வளர்ந்த பெரும் கலைஞர்தான் நடிகமணி வி.வி. வைரமுத்து ஆவார்.

மரபுவழி நாடகங்களைப் பல்கலைக்கழக மட்டத்துக்கு எடுத்துச் சென்று மேன்மைப் படுத்தியவர் வித்தியானந்தன். நடிகமணி குழுவினரின் அரிச்சந்திரா, பக்த நந்தனார், கோவலன் ஆகிய இசை நாடகங்களைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மேடையேற வைத்தார். நாட்டார் கூத்துக்களாகிய கர்ணன் போர், நொண்டி நாடகம், இராவணேசன், வாலிவதை என்பவற்றைச் சுருக்கி ஒருமுக மேடைக்கேற்றவாறு ஆட்டங்களைப் பயிற்றுவித்து, பல்கலைக் கழக மாணவர்களைக் கொண்டு மேடையேற வைத்தார். பேராசிரியர் சு. வித்தியானந்தன் காலத்துக்கேற்றவாறு உத்திமுறைகளைக் கையாண்டபோதும் பழைமையைப் பேணுவதில் கண்ணுங்கருத்துமாகவிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 7.0 பல்கலைக்கழகங்களின் பங்களிப்பு

இலங்கை நாடக வரலாற்றில் பல்கலைக்கழகங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. வணக்கத்துக்குரிய பிரான்சிஸ் கிங்ஸ்பரி அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக 1926இல் இருந்து பணியாற்றினார். இவர் சந்திரகாசம், பாண்டவர் சரிதம் ஆகிய நாடக நூல்களை எழுதி வெளியிட்டார். 1943ஆம் ஆண்டு தொடக்கம் 1947ஆம் ஆண்டு வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்த சுவாமி விபுலானந்தர் நாடகவியல் பற்றி ஆய்வு செய்து பல கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் எழுதிய மதங்கசூளாமணி எனும் நூல் நாடக இலக்கணங் கூற எழுந்ததாகும். இவர்களுடைய வழியில் வந்தவர்கள்தான் பேராசிரியர்களாகிய க. கணபதிப்பிள்ளை, சு. வித்தியானந்தன் போன்றோர். இவர்கள் ஆற்றிய பணிகள் முன்னரே கூறப்பட்டன. இவர்களைத் தொடர்ந்து இவர்களுடைய மாணவர்களும் பல்கலைக்கழகங்களினூடாக இப்பணியைத் தொடரலாயினர்.

கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம், நாடக மன்றம், கட்டுப்பத்தை தமிழ்ச் சங்கம், வித்தியோதய வளாகத் தமிழ்ச்சங்கம், யாழப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் என்பன நாடக வளர்ச்சிக்குக் கணிசமான பங்களிப்பினைச் செய்துள்ளன.

பல்கலைக் கழகங்கள் பயிற்றி மேடையேற்றிய நாடக வகைகளை இ. சிவானந்தன் பின்வருமாறு வகுப்பர். அவையாவன; (1) தற்புதுமை நாடகம் (11) மொழிபெயர்ப்பு - தழுவல் நாடகங்கள் (111) மரபு வழிக் கூத்துக்கள். இவற்றுடன் இன்னொரு வகையையும் இப்பொழுது இணைத்துக் கொள்ளலாம். அதுதான் மோடி நாடகங்கள்; அளிக்கை முறைமையினால் இது வேறுபட்டு நிற்கின்றதெனலாம்.

பல்கலைக்கழக நாடக மன்றங்களுக்கான நாடகங்களை நெறியாள்கை செய்துதவியவர்களுள் பேராசிரியர் சு. வித்தியானந்தன், சானா க. செ. நடராசா, பேராசிரியர் கா. சிவத்தம்பி, வீ. சுந்தரலிங்கம், எஸ். சரவணமுத்து, கே. எம். வாசகர், பேராசிரியர் சி. தில்லைநாதன், திருக்கந்தையா, இந்திரபாலா, நந்தி, சுஹைர் ஹமீட், அ. தாசீசியஸ், எஸ். பாலசுந்தரம், மௌனகுரு, ம. சண்முகலிங்கம், சிதம்பரநாதன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுக்கூடாக நல்ல நாடக எழுத்தாளர்கள் சிலரும் வெளிக்கொணரப்பட்டனர்.

எழுபதுகளில் நாடக அரங்கத்துறையில் புதுமை செய்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் கே. பாலேந்திரா, அ. தாசீசியஸ், வீ. சுந்தரலிங்கம் ஆகியோராவர். இவர்களுள் பாலேந்திராவின் நெறியாள்கையில் பல மொழி பெயர்ப்பு நாடகங்கள் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி, திருகோணமலை ஆகிய இடங்களில் மேடையேறின. கட்டுப்பெத்தை வளாகம், மொறட்டுவை பல்கலைக்கழகம் என்பனவற்றினூடாக செயற்பட்ட இவர், அவைக்

காற்றுக் கழகத்தினூடாக நிர்மலா நித்தியானந்தன், நித்தியானந்தன் ஆகியோருடன் கூடி "கண்ணாடி வார்ப்புகள்", "மழை", "யுகதர்மம்", "ஒரு பாலைவீடு", "முகமில்லா மனிதர்கள்" ஆகிய நல்ல நாடகங்களை மேடையேற்றிப் புகழ் பெற்றார்.

**"இன்று பின்னோக்கிப் பார்க்கும் பொழுதுதான் 1976–77இல் இலங்கைப் பல்கலைக் கழகத்துக் கொழும்பு வளாகத்துக் கல்விப் பீடத்தினர் தொடங்கிய நாடக அரங்கியலுக்கான பட்டமேல்நிலை ஆசிரிய தகைமைப் பயிற்சி நெறி (Post graduate Diploma in Education -Drama and Theatre Arts)) ஆரம்பிக்கப்பட்டமை இலங்கையின் நுண்கலைக் கல்வி வரலாற்றில் தர்க்க ரீதியான தேவையாகவே அமைந்தது என்பது வெள்ளிடை மலையாகத் துலங்குகின்றது. இலங்கைக் கல்வி வரலாற்றில் முதற்தடவையாக நாடகமும் அரங்கியலும் பட்டமேற்படிப்பு க்கான பயில்நெறியாகின"** இவ்வாறு பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறுகிறார்.

மேற்படி பயிற்சி நெறியினூடாக வெளிவந்தவர்களுட் குறிப்பிடத்தக்கவர்கள் இ. தாசீசியஸ். நா. சுந்தரலிங்கம், குழந்தை, ம. சண்முகலிங்கம், இ. சிவானந்தன், காரை. செ. சுந்தரம்பிள்ளை, திருச்செந்தூரன் ஆவர். இவர்கள் அனைவரும் ஏதோ ஒரு வகையில் இப்பயிற்சிக்கு முன்னரே நாடக அனுபவம் பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அ. தாசீசியஸ் சிறந்தவோர் நெறியாளர். இவர் நெறிப்படுத்திய "புதியதொரு வீடு", "பிச்சை வேண்டாம்", "பொறுத்தது போதும்", "கந்தன் கருணை" ஆகிய நாடகங்கள் சிறப்பானவை. இவரைப் பின்பற்றிப் பல இளம் நெறியாளர்கள் தங்களது நாடகங்களை நெறியாள்கை செய்யலாயினர் என்பதும் முக்கிய அம்சமாகும்.

நா. சுந்தரலிங்கம் தாசீசியசுடன் இணைந்து பல நாடகங்களை மேடையேற்றினர். இவரும் தனித்துவமான கலைஞர். இவருடைய "விழிப்பு" நாடகம் நல்லதொரு படைப்பாகும்.

குழந்தை ம. சண்முகலிங்கம் இப்பொழுது உள்ள நல்லதொரு நாடக எழுத்தாளர். கலையரசு சொர்ணலிங்கத்தின் பட்டறையில் வளர்ந்த இவர், மோடி நாடகங்கள் பல மேடையேற உதவி வருகின்றார். இவருடைய மாணவர்கள் பலரும் இப்பொழுது சிறந்த நாடக நெறியாளர்களாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

மறைந்த இ. சிவானந்தன் எழுதி அரங்கேற்றிய "விடிவை நோக்கி", "காலம் சிவக்கிறது" ஆகிய நாடகங்கள் முக்கியமானவை. இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் நாடக அரங்கம் பற்றிய ஆய்வு நூல் நல்லதோர் படைப்பாகும்.

காரை செ. சுந்தரம்பிள்ளை எழுதிய நாடக ஆய்வு நூல்களாகிய "ஈழத்து இசை நாடக வரலாறு", "நடிகமணி வி.வி. வைரமுத்தவின் வாழ்வும் அரங்கும்", "சிங்களப் பாரம்பரிய அரங்கம்" ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கன.

பல்கலைக்கழகப் பங்களிப்புடன் இணைத்துப் பார்க்கும்போது கலாநிதி மௌனகுரு முக்கியமானவர். இவர் மரபுவழி நாடகங்களை நன்கு அறிந்தவர். அவ்வறிவின் துணை கொண்டு பல பரிசோதனை முயற்சிகளிலீடுபட்டு வருகின்றார். இவர் தயாரித்தளித்த சங்காரம் குறிப்பிடத்தக்கதொரு படைப்பாகும். இன்று நாடக ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டு வரும் இவர் "ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு", "புதியதும் பழையதும்" ஆகிய நல்ல நூல்களை வெளியிட்டுள்ளார்.

## 8.0 தலைநகரில் நாடக வளர்ச்சி

ஐம்பதுகளில் கொழும்பிலும், தமிழர் வாழும் ஏனைய இடங்களிலும் சினிமாப் பாணியிலான நாடகங்களே மேடையேறி வந்தன. உண்மையில் அறுபதின் பிற்பகுதியிலும்

எழுபதுகளிலுமே தரமான தமிழ் நாடகங்கள் மேடையேறலாயின. நெறியாள்கை, அளிக்கை முறை, கருத்தாழம் மிக்க கதைக்கரு, சமூகச்சீர்திருத்தக் கருத்துக்கள் என்பனவற்றைக் கொண்ட இந்நாடகங்கள் புதிய உத்திமுறைகளிலும் சிறப்புடையனவாகத் திகழ்ந்தன.

இக்காலப் பகுதியில் மேடையேறிய "கோடை", "புதியதொரு வீடு", "வாடகைக்கு வீடு", "சுமதி", "சாணக்கியன்", "அவனுக்கென்ன தூங்கி விட்டான்", "சதுரங்கன்", "வேதாளம் சொன்ன கதை", "கடூழியம்", "கந்தன் கருணை", "நெஞ்சில் நிறைந்தவள்", "இவர்களுக்கு வேடிக்கை", "அக்கினிப்பூக்கள்" என்பன சிறந்த நாடகங்களாகும்.

அ. தாசீசியஸ், ந. சுந்தரலிங்கம், வீ. சுந்தரலிங்கம், இ. சிவானந்தன் லடீஸ் வீரமணி, சுஹைர் ஹமீட், பாலேந்திரா, சிவபாலன் ஆகியோர்களது நெறியாள்கையும், பங்களிப்பும் இக்காலப் பகுதியில் முக்கியமானவையாகும்.

## 9.0 யாழ்ப்பாணத்தில் நாடக மறுமலர்ச்சி

யாழ்ப்பாணத்தில் சனசமூக நிலையங்களும் பாடசாலைகளும் அவ்வப்போது நாடகங்களை மேடையேற்றி வந்தன. நாடக மன்றங்களும் சில செயற்பட்டு வந்தன. நிறுவன ரீதியாகச் செயற்பட்டு வருவனவற்றுள் திருமறைக் கலாமன்றமும், நாடக அரங்கக் கல்லூரியும் முக்கியமானவை. திருமறைக்கலா மன்றத்தின் இயக்குநர் வண. பேராசிரியர் சவரிமுத்து அடிகளாரின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கது. இம்மன்றம் தயாரித்தளித்த (பாஸ்கு) நாடகங்கள், மரபுவழி நாடகங்கள், சமூக நாடகங்கள், மோடி நாடகங்கள் ஒவ்வொன்றும் தனித்துவ மானவை. நவீன உத்திமுறைகளைப் பயன்படுத்தி பிரமாண்டமான காட்சி அமைப்புகளுடன் நாடகங்களை இவர்கள் மேடையேற்றி வருகின்றனர். காட்சி அமைப்பு ஒலி, ஒளி என்பனவற்றில் இவர்கள் கூடிய கவனம் செலுத்துகின்றார்களேயொழிய நாடக அமிசத்தில் கவனம் செலுத்துகின்றார்களில்லை என்ற குறை சிலரால் சொல்லப்படுவதுண்டு. எனினும் இவர்கள் மிகச் சிறந்த நாடகங்கள் பலவற்றை மேடையேற்றியுள்ளனர். மேலும் இம்மன்றம் நாடக ஆர்வம் கொண்ட இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் நாடகப் பயிற்சியளித்து வருகிறது.

நாடக அரங்கக் கல்லூரியின் அதிபராகவிருந்து செயற்படுபவர் குழந்தை ம. சண்முகலிங்கமாவார். ஆரம்பகாலத்தில் இவர் தாசீசியுடன் இணைந்து நாடகங்களை மேடையேற்றி வந்தார். இவர் எழுதி சிதம்பரநாதன் இயக்கிய "மண்சுமந்த மேனியர்" நாடகத்தை நவீன நாடகத்தின் திருப்புமுனை என்பர் பேராசிரியர் கா. சிவத்தம்பி. இந்நாடகத்தைத் தொடர்ந்து இவர் பல நாடகங்களை சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும் தமிழர் அவலங்க ளையும் முன்வைத்து எழுதி மேடையேற்றியுள்ளார். இரண்டொரு நல்ல நாடகங்களை எழுதிய இவரின் ஏனைய நாடகங்கள், அரைத்த மாவை அரைப்பது போல ஒன்றையே திருப்பித் திருப்பிச் சொல்வதாக அமைந்துள்ளன என்று நாடகவியலாளர்கள் சிலர் கருதுகின்றார்கள். எனினும் இவர் எமக்குக்கிடைத்த நல்லதொரு கலைஞராவர்.

சுதந்திரத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தில் பல பாடசாலைகள் சிறந்த நாடகங்களை மேடையேற்றி வந்துள்ளன. அவற்றுள் மகாஜனாக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை என்பன குறிப்பிடத்தக்கன. மகாஜனாக் கல்லூரியில் கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை இயற்றி மேடையேற்றிய பல நாடகங்கள் சிறப்பானவையாகும். மானிப்பாய் இந்துக்கல்லூரி வருடாவருடம் நடத்தி வரும் நாடகப் போட்டிகளில் அருமையான நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வருகின்றன.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் செல்வி சந்தனநங்கை, முல்லைமணி, வித்துவான் குமாரசாமி, சொக்கன், காரை. செ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் நல்ல நாடகங்களை மேடையேற்றி வந்துள்ளனர்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின்னர் சிறிதுகாலம் யாழ்ப்பாணத்தில் நாடக முயற்சிகள் மந்த நிலையடைந்தாலும், இந்திய இராணுவத்தின் வருகைக்குப் பின்னர் நாடகத்துறை புதிய உத்வேகத்துடன் வளரலாயிற்று. சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும் விடுதலை உண்ர்வையும் முன்வைத்து பலவடிவங்களிலும் நாடகங்கள் மேடையேறலாயின. இதற்கு யாழ். பல்கலைக் கழகத்தின் பங்களிப்பும் முக்கியமானதாகும்.

இன்று நாடகமும் அரங்கியலும் ஒருபாடநெறியாக பட்டப்பின் படிப்புவரையுள்ளது. இதற்கு வித்திட்டவர் பேராசிரியர் கா. சிவத்தம்பியாவர். அதனால் நாடகம் பற்றிய தேடல்களும் ஆய்வுகளும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

இதுவரை சுதந்திரத்தின் பின்னர் ஈழத்தில் வளர்ந்து வந்த நாடகங்களைப் பற்றி ஓரளவு தொட்டுக் காட்டிச் சென்றுள்ளேன். முக்கியமான கலைஞர்கள் சிலரின் பெயர்களும் அவர்களுடைய பங்களிப்பும் சுருக்கம் கருதி விடப்பட்டுள்ளன. மேலும் சில பிரதேசங்களின் பங்களிப்பும் விரிவாக ஆராயப்படவில்லையென்பதும் உண்மையே. எனினும் கடந்த ஐந்து தசாப்த காலத்தில் வளர்ச்சியும் மாற்றமும் பெற்ற நாடக அரங்கு பற்றிய ஒரு பறவைப் பார்வையே (A Bird Eye view) இதுவாகும்.

# யோக சுவாமிகள் ஆன்மீக வாழ்வில் ஏற்படுத்திய தாக்கம்

**க.ந. வேலன்**

நல்ல நிலத்தில் வித்திய நல்ல விதைகூட விளைந்து பயன் தரக் காலம் வேண்டும். ஞான வித்தும் அப்படித்தான்; இயல்பாகப் பரவினாலும் மனித முயற்சியாற் பரப்பப்பட்டாலும் அவை மனித மனவயல்களில் பதிந்து பயன்தரக் காலம் வேண்டும். சுவாய் சுப்பிரமணிய சுவாமியின் முதுகில் ஓங்கியறைந்த யோக சுவாமிகள், "இந்த ஒலி அமெரிக்காவரை கேட்கும், சிங்கம்போல் கர்ச்சித்துவா'' என்றாராம்.

சுவாமிகளின் திருவுருவம் இன்று காவாயிலிருந்து கனடா வழியாக யாழ்ப்பாணம் கொழும்புத்துறையை நோக்கி அமைதியாக வந்துகொண்டிருக்கின்றது. கொழும்புத் துறையிலிருந்து புறப்பட வேண்டிய ஊர்வலம் காவாயிலிருந்து கொழும்புத்துறை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. ஞானத்தெய்வீக ஊர்வலத்துக்குத் திக்கேது? திசையேது? அரசியல் போல ஆன்மிகம் ஆர்ப்பாட்டம் செய்வதில்லை, செய்யக்கூடாது. மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருவிப் பாயும். ஞானவெள்ளமும் அப்படித்தான். ஞானியர் தாம் கண்ட உண்மைகளைத் தம்சீடர் மூலம் "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என உலக நன்மை கருதிப் பரப்பச் செய்தனரேயன்றி, மதமாற்றம் செய்யுமாறு சொல்லவில்லை. ஆனால் வறுமை, நோய், போர் முதலிய துன்பங்களால் வருந்தும் மக்களை மதமாற்றம் செய்து வருகின்றனர்.

வேதகால ரிசிகள் தொடங்கி இன்றுவரை வாழ்ந்த இந்துசமயஞானிகள், தம் கருத்துக்களைச் சீடர்களுக்குச் சொல்லியும் எழுதியும் வைத்துப் போயினரேயன்றிச் சங்கம் அமைத்து மதமாற்றம் செய்ய எப்போதும் முற்பட்டதில்லை. இந்த ஞானபரம்பரையில் முகிழ்த்த யோக சுவாமியும் தம்முன்னோர் வழியையே பின்பற்றினார். உலக வரலாற்றில் சங்கம், கட்சி என்னும் அமைப்பு மதம் சார்பாகவே ஏற்பட்டன. அப்பொழுதே எதிர்ச்சங்கங்களும் எதிர்க் கட்சிகளும் தோன்றிவிட்டன. மத எதிர்ப்பாளர் எனச் சிலரால் குற்றஞ்சாட்டப்பட்ட கால்மாக்ஸ் என்னும் சித்தபுருஷன் உண்மையில் ஒருமத எதிர்ப்பாளர் அல்ல. "சமயம் மக்களுக்கு அபின்'' என்று கூறினார் எனக் குற்றம் சாட்டப்படுகிறது. மதமல்ல. அவர் கூறியது ஸ்தாபன ரீதியான மதமே (Organised Religion) அபின். இந்தக் கருத்தைத் திரித்து அவரை மாசுபடுத்தினார்கள்.

சமுதாய அரசியற் சிந்தனையாளரான கால்மாக்சின் மீது கரிபூசியது போலவே மாசற்ற ஞானிகள் மீதும் கூசாமல் குறை கூறியுள்ளனர். இதற்கு யோக சுவாமியும் விதிவிலக்கல்ல. இன்று உலகிலுள்ள மதங்களுள் மிகப்பழமை வாய்ந்த இந்து மதத்தின் கோட்பாடுகள் காலத்துக்குக் காலம் தோன்றிய ஞானிகளால் காலத்துக்கேற்ற மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இந்து சமயக் கோட்பாடுகள் பலவற்றை அதற்குப்பின் தோன்றிய ஏனைய சமயங்களும் கூறி வருகின்றன. எனவே இந்துசமயத்துக்கு அவை கடமைப்பட்டவை என்பது கருத்தல்ல.

இலங்கையில் இன்றுள்ள சமயங்களில் இந்து சமயம் தவிர ஏனையவை எல்லாம் வந்தேறிய சமயங்களாகும். இந்துசமயம் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்ட சமயமல்ல. இந்த நாட்டின் இயற்கைக்கு ஏற்பத் தானாக முகிழ்த்த சமயம். ஆதலால் இலங்கையில் இந்து சமயத்துக்கு நீண்டகால வரலாறும் அது வளர்த்தெடுத்த தத்துவ, சமய, கலை, கலாசார பாரம்பரியமுமுண்டு. இந்தப் பின்னணியில் வந்துதித்தவரே யோக சுவாமிகள். எனவே

அவர் தோன்றுவதற்கு முன்பே இந்து சமயம் முழு வளர்ச்சி பெற்றிருந்தது. ஆனால் அடுத்தடுத்துவந்த அந்நிய ஆதிக்கங்களினால் தத்துவம் தவிர்ந்த சமய, கலை, கலாசாரங்களில் பல பிறழ்வுகள் ஏற்பட்டிருந்தன.

பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்துவம் முதலிய சமயங்களின் வருகைகளினால் பல பிறழ்வுகள் ஏற்பட்ட போதிலும் பௌத்தம், இந்து சமயத்திலிருந்து தோன்றிய காரணத்தாலும் போதி மாதவனை, இந்துக்களின் காத்தற் கடவுளாகிய விட்டுணுவின் அவதாரமெனக் கருதியதினாலும் இந்து மதம் பௌத்தத்தை இலகுவாகச் சீரணித்துக் கொண்டது. பௌத்த தத்துவம் இந்து தத்துவத்திலிருந்து வேறாக இருந்த போதும், பற்றற்ற துறவறத்தை அது வற்புறுத்திய போதும், பௌத்தம், இந்துக்களிடையே செத்துக் கொண்டிருந்த சீவகாருண்யத்தைப் போற்றியமையால் அது இலங்கையிலும் பரவியது. பௌத்தத்திற்குப் பின்னர் வந்த இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களை தாய்-பிள்ளை உறவு கொண்ட சைவத்தாலும் பௌத்தத்தாலும் எளிதில் சீரணித்துக் கொள்ள முடியவில்லை.

வணிக நோக்கோடு வந்த இஸ்லாமும் வணிகத்தோடு ஆட்சியைப் பிடித்துக் கொண்ட கிறிஸ்துவமும் ஏறக்குறைய 1300 ஆண்டுகளாக இந்நாட்டிற் பரப்பப்பட்ட போதும் மிகச் சிறந்த தத்துவ, சமய, கலை, கலாசார தளத்தையுடைய இந்து பௌத்த மக்களை அசைக்க முடியவில்லை. ஆரம்பத்தில் எதிர்த்து வெல்ல நினைத்தவர்கள், வெல்ல முடியாநிலையில் அணைத்துச் சிறுகச் சிறுக ஆக்கிரமித்து வருகின்றனர். இந்தக் காலகட்டத்தில் நாவலரும் அநகாரிக தம்மபாலாவும் தோன்றிலரேல்...... என வரலாற்றாசிரியர்களைச் சிந்திக்க வைத்துள்ளது.

நாவலருக்குப்பின் சைவமும் தமிழும் விறுவிறுப்பான வளர்நிலையைப் பெற்றன. பல்லாயிரமாண்டுகளாகப் பேணப்பட்ட சைவத்தமிழ் ஆளுமையின் மொத்த வடிவமாக நாவலர் விளங்கினார். இந்த ஆளுமை அவரிடம் உள்ளொன்று புறமொன்றாக இருக்கவில்லை. உள்ளும் புறமும் அத்துவிதமாகவேயிருந்தது. இந்த ஆளுமையே அதிகாரத்தோடு பரப்பப்பட்ட கிறிஸ்துவத்தைக் கூட்டொருவரும் வேண்டாக் கொற்றவன் இராமன் போலச் சமர்க்களத்தில் தனித்து நின்று போரிட வைத்தது. இதனால் இலங்கை இந்துக்கள் மாத்திரமல்ல தென்னகத்தாரும் தலை நிமிர்ந்து நின்றனர். ஆனால் போர்க்களத்தில், காலம்காலமாகப் போற்றப்பட்ட விழுமியங்கள் சில புறக்கணிக்கப்பட்டு வெறும் வெற்றியே நோக்கமாகக் கொள்வது போலச் சைவத்தின் விழுமியங்கள் சிலவும் கைவிடப்பட்டன. சைவத்தின் சமரசம் மறக்கப்பட்டு விட்டது. சைவம் என்பது திருநீறு, உருத்திராக்கத்தோடு கூடிய வெறும் வெளிவேஷமாகவும் சைவச் சாப்பாடாகவும் மாறிவிட்டது. இறைவன் ஒன்றாய் உடனாய் வேறாய் இருக்கின்றான் எனச் சைவதத்துவம் கூறியபோதும் முப்பொருளே தத்துவம் என்பது வற்புறுத்தப்பட்டது.

சைவம் ஒழுக்கத்துக்கும் அறத்துக்கும் முதன்மை கொடுத்த போதும் சாபக்கேடான சாதிக்கு வழிவகுத்த வர்ணாச்சிரம தர்மத்துக்கு முதன்மை கொடுக்கப்பட்டது. இங்ஙனம் இருந்த யாழ்ப்பாணச் சமயநிலையில் சைவசமயக் குடும்பத்திலே பிறந்து சிறிதுகாலம் கிறிஸ்துவக் கல்லூரியிலே கல்வி கற்ற யோகநாதன், சுவாமி விவேகானந்தரைத் தரிசிக்கும்பேறு பெற்றான். விவேகானந்தரின் வீரத்தோற்றமும் யாழ். இந்துக் கல்லூரியில் அவர் ஆற்றிய சொற்பொழிவும் மூளாத்தீப்போல் உள்ளே கனன்ற ஆன்ம ஒளியைச் சுடர்விட்டெரியச் செய்தன. அந்நியத்தை எதிர்த்துச் சைவத்தை நிலைநாட்ட நாவலரால் இறுக்கி முறுக்கேறிய சைவத்தின் வளர்ச்சிக்கு ஒரு மென்மை, வளைந்துகொடுக்கும் தன்மை (Flexibility) தேவைப் பட்டது. அதனைத் தந்தவரே யோக சுவாமிகள். அதுவே அவர் ஏற்படுத்திய தாக்கம்

இந்தப் பின்னணியில் வைத்தே சுவாமிகள் தத்துவத்தில், சமயத்தில், வாழ்வியலில் ஏற்படுத்திய தாக்கங்கள் எவை? எவை? என்பவற்றைச் சிந்திக்க வேண்டும்.

## தத்துவத்தில் ஏற்படுத்திய தாக்கம்

இந்துசமய தத்துவத்தைக் கூறும் ஆதிநூலாகிய உபநிடதத்தில் வரும் அத்துவிதம் என்னும் தொடர் இறைவனும் உலகும் வெவ்வேறல்ல. இறைவனே இவ்வுலகு. இறைவன் அன்றி வெறொரு பொருள் இல்லை என்னும் அத்துவைதமும் (இறையும் உலகும் வெவ்வேறு என்னும் துவைதமும்) இறைவனின் விசிஷ்டமே இவ்வுலகு என்னும் விசிஷ்டாத்துவிதமும் என மூவிதமாகப் பொருள் கொள்ளப்பட்டுத் தத்துவ உலகம் தடுமாறிய வேளையில், "பொய் கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித மெய்கண்ட நாதன்" எனப் போற்றப்பட்ட மெய் கண்டார் தாமருளிய சிவஞான போதத்தின் இரண்டாம் நூற்பாவில் அத்துவிதப் பொருளைத் தெளிவுபடுத்தினார். ஆனாலும் சைவசித்தாந்திகள் உட்படப் பலர் தெளிவு பெறவில்லை. மெய்கண்டார் கண்ட விளக்கத்தின் மூலம் அத்துவைதம், துவைதம், விசிஸ்டாத்துவைதம் ஆகிய எல்லாவற்றையும் சைவசித்தாந்தம் ஏற்றுக் கொள்கின்றது. இம்மூவகையினையும் ஒருமைக் கொள்கை, பன்மைக் கொள்கை என இரண்டினுள் அடக்கி விடலாம். சைவசித்தாந்தம் இந்த இரு நிலையினையும் ஏற்றுக் கொள்கின்றது.

சைவத்தின் மூலவராகிய திருமூலர் அருளிய திருமந்திரமும் "பதி, பசு, பாசம் எனப் பகர்மூன்று" எனப் பன்மையை ஏற்றுக்கொண்டும், "சீவன் எனச் சிவன் என வேறில்லை" என ஒருமையையும் வற்புறுத்துகின்றது. இக்கூற்று முன்னதை மறுக்கும் கூற்றோ எனின் அன்று. பின்னர் தம் கூற்றுக்கு ஆதாரம் காட்டும் ஆசிரியர் "சீவனார் சிவனை அறிகிலர்" அதனால் பன்மை தெரிகிறது. "சீவனார் சிவனை அறிந்தபின் சிவனார் சிவனாயிட் டிருப்பரே" என அறிந்தபின் ஒருமை உணரப்படும் என்கிறார். எனவே ஒருமை, பன்மை ஆகிய இருநிலைகள் ஆன்ம பக்குவ வேறுபாடன்றி வேறல்ல என்பது பொருளாகின்றது.

இந்திய தத்துவ உலகில் பிரச்சினையாகித் தத்துவ மதவாதிகளால் விவாதப் பொருளாகி மக்களுள் பகை வளர்த்த இந்த அறியாமையை மெய்கண்டார் நீக்கிச் சைவசித்தாந்தத்தின் உயர்வை விளக்கியுள்ளார். இதனை உணர்ந்த தாயுமானவர் சைவம், மதங்களின் இராசாங்கத்து அமர்ந்துள்ளது எனப் போற்றுகின்றார். சைவசித்தாந்தம் முப்பொருளையே பேசுகின்றது எனப் பள்ளிச் சிறுவர்களுக்கும் புகட்டப்படுகின்றது. இது உண்மை. ஆனால் சைவசித்தாந்தம் ஒருமைக் கொள்கையையும் சொல்கிறது என்னும் உண்மை மறைக்கப்பட்டு வருகின்றது. இதற்குக் காரணம், வேதாந்த சித்தாந்தக் காழ்ப்பை வளர்த்துப் பிழைப்பை நடத்தும் மதவெறியாகும். அனுபூதி இன்றி மதநூல்களைப் படித்தவர்களே இந்த நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். அனுபூதிமான்கள் வாசித்துக் காணொணாதது; பூசித்துப் பேணொணாதது என்று கூறிவிட்டனர். படித்த மதவாதிகள், பன்மை உணர்விலிருந்து விடுபடாதவர்கள்; விடுபட முடியாதவர்கள். இவர்களுக்குப்பரம் தெரியாது; பதார்த்தங்களே தெரியும்.

"பார் முதற் பூதங்கள் பரத்தை மறைத்திருப்பதனால் பரம் புலனாகவில்லை. உலகவர்க்குச் சைவசித்தாந்தம் கூறும் முப்பொருளே உண்மை. ஞானிகளுக்குப் பதியே உண்மை. இந்த ஞான ஒருமைக் காட்சி எளிதில் வாய்க்கப் பெறுவதில்லை. இந்த உண்மையைத் தாயுமானவர் என்னும் ஞானசிகரம் மிக அருமையாக விளக்கியுள்ளார். "சந்ததமும் எனது செயல்" என்று தொடங்கும் அருமைப் பாடலில் பதி, பசு, பாசம் என்னும் பன்மை நிலையில் உழன்ற தாம் மிகமேலான பதி என்னும் ஒருமை நிலையுணர்ந்த அனுபவத்தைக் கூறும்போது,

"இந்தநிலை தெளியநான் நெக்குருகி வாடிய
இயற்கை திருவுளம் அறியுமே
இந்நிலையிலே சற்றுஇருக்க என்றால் மடமை
இத சத்துரு வாக வந்து
சிந்தை குடிகொள்ளுதே மலமாயை கர்மம்
திரும்புமோ தொடுவழக்காய்
ஜென்மம் வருமோ எனவும் யோசிக்குதே மனது
சிரத்தை எனும் வாளும் உதவி
பந்தமற மெய்ஞ்ஞான தீரமும் தந்து எனைப்
பாதுகாத்து அருள் செய்குவாய்
பார்க்குமிட மெங்குமொரு
நீக்க மறநிறைகின்ற பரிபூரணானந்தமே"

என்று பாடுகின்றார்.

திருமூலர் சொன்ன உண்மைப் பொருளை உணராத காரணத்தால் ஈழத்தைச் சிவபூமியென்றும், சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் உண்மையே சைவசித்தாந்தத்தின் முடிபென்றும் எம்நாட்டில் வாழும் சில சைவர்கள், சைவ சித்தாந்திகள் நம்பிக்கை கொண்டுள்ளனர். மெய்ஞ்ஞான அனுபூதியற்றவர்களும், சைவசித்தாந்த சாத்திர தோத்திர நூல்களின் உண்மைப் பொருளைக் கற்றும் தெரியாதவர்களும் செல்வாக்கோடு வாழ்ந்த ஒருசூழ்நிலையிலேயே யோக சுவாமிகளின் வருகை நிகழ்ந்தது. சுவாமிகள் சமய சாத்திரங்களைச் சைவசித்தாந்தம் உட்பட எதையும் எழுத்தெண்ணிக் கற்றவரல்ல. அத்தகையதொரு தேவை அவருக்கிருக்கவில்லை. ஆனால்,

"கல்லாது யாவுங் கற்றேனே
காயத்தையு என்றன் கைக்குள் வைத்தேனே
அண்ட சராசர மெல்லாம் - சிவசிவ
அகத்திலே கண்டு தரிசித்துக் கொண்டேன்"

எனப் பாடுவதிலிருந்து அவரது மெய்ஞ்ஞானம் எத்தகையது, எப்படி வாய்த்தது என்பது புலனாகின்றது. முன்னைத் தவத்தால் சுவாமி விவேகானந்தரைத் தரிசிக்கும் பேறு வாய்த்தது போலவே, நல்லூர் முருகனின் அவதாரமெனச் சுவாமிகளால் வணங்கப்பட்ட செல்லப்பா சுவாமிகளின் சீடனாகும் பேறும் வாய்த்தது. இத்தகைய பெரும்பேறும் அதற்குரிய தகுதியும் சுவாமிகளுக்கு இருந்ததினால்,

"இந்தநிலை தெளியநான் நெக்குருகிவாடிய
இயற்கை திருவுள மறியுமே"

எனத் தாயுமானவர் போல் வருந்தும் நிலையன்றிச் சமயாதீதப் பெரும்பொருளை வேதாந்தமும் சைவசித்தாந்தமும் கூறும் உண்மைப் பொருளை, வேதாந்த சித்தாந்த சமரச ஞானத்தை குருநாதர் செல்லப்பன் உணர்த்த உணர்ந்து கொண்டார். மாயை வசப்பட்டுப் பன்மை உணர்வோடிருந்த தம்மை ஒன்று இரண்டு என்ற பேதத்தினைப் போக்கியது ஒரு சொல் என்பதனை,

"ஒரு சொல்லால் உளம் தூய்மை ஆச்சே - சிவசிவ
ஒன்று இரண்டு என்றிடும் பேதமும் போச்சே"

என்று பாடுவார். பன்மை உணர்வை அகற்றிய அந்த ஒரு சொல் எது? அந்தச் சொல் "நீ யார்?" என்று வினவிய சொல்லாகும். நற்பெண்டாட்டிக்கு ஒரு சொல்போல, பக்குவமடைந்த சீடனுக்கு இந்த ஒரு சொல்லே போதும். அந்த வினாவுக்கு அவன் பதில் ஏதும் கூறவில்லை, கூற எத்தனிக்கவுமில்லை, கூற முடியவுமில்லை. அந்தவினா, அவனை அருள் ஒளிக்குள்ளே இட்டுச் சென்றது. பன்மை உணர்வில் நின்ற அவன், வேதாந்த உண்மையென்னும் ஒருமையுணர்வை உணர்ந்து கொண்டான். இந்நிலையில் அவனது, "உற்றாரும் போனார், உடன்பிறந்தார் தாம்போனார், பெற்றாரும் போனார்கள்," இங்ஙனம் உள்பொருள் ஒன்று என்பதை அனுபூதியால் பெற்ற சுவாமிகள், "சீவனார் சிவனாயிட் டிருப்பரே" எனத் திருமூலர் கூறியவாறு சீவன் முத்தராய் இவ்வுலகில் வாழ்ந்து வந்தார். ஆனால், முப்பொருள் உண்மையே உண்மை என நம்பிய சைவசித்தாந்திகள், "ஒன்றாகக் காண்பதே காட்சி" என்னும் ஔவை வாக்கையும் உணராதவர்கள், யோகர் ஒருவேதாந்தி, அவர் சைவசித்தாந்தத்துக்கு மாறானவர் எனவும் எண்ணத்தலைப்பட்டனர்.

வேதாந்த சித்தாந்த சமரசத்தை உணர்ந்த சுவாமிகள், இந்த வாதப்பிரதிவாதங்களில் இறங்கியதில்லை. "வேதாந்த சித்தாந்தம் வேறாகக் காணோம்" எனப் பாடிய அவர், "யார் என்ன சொன்னாலும் வாது ஆணவத்தை மிகுவிக்கும் தீது" என்று கூறியுள்ளார். சுவாமிகள் கண்ட இந்த உண்மையைத் தாம் அருளிய நற்சிந்தனைப்பாடல் முழுவதும் உணர்த்தியிருக்கின்றார். ஒருமுறை கொழும்புத் துறையிலுள்ள ஆச்சிரமக் கொட்டிலில் தங்கியிருந்தபோது, அவர் முன்னிலையில் சில அன்பர்கள் குழுமியிருந்தனர். அங்குள்ளவர்களைப் பார்த்து இங்கு எத்தனைபேர் உள்ளோம் என்று வினவினார். எல்லோரும் எண்ணத் தொடங்கி விட்டார்கள். முடிவில் எண்ணிக்கையைச் சொன்னார்கள். இறுதியாகச் சுவாமிகள் இங்கு ஒருவர்தான் உள்ளார் என்று கூறினார். எனவே எது உண்மை? பன்மையுணர்வினையுடையவர்களுக்குப் பலர் இருப்பது உண்மை. ஒருமையுணர்வுடைய சுவாமிகளுக்கு ஒருவர் இருப்பது உண்மை. சமயப் பிரசாரத்தையோ, சமயவிவாதத்தையோ விரும்பாத சுவாமிகளிடம் யாழ். நகரமண்டபத்தில் சில நாட்களுக்கு முன் நடைபெற்ற ஒரு சமய விவாதத்தைச் சில அன்பர்கள் கூறினார்கள். அந்த விவாதம் வேதாந்தச் சார்பான ஒரு துறவிக்கும் சைவசித்தாந்தச் சாமியான மற்றொரு துறவிக்குமிடையில் நடைபெற்றது.

தென்னிந்தியாவிலிருந்து வந்து மோதிக் கொண்ட அந்தப் பிரபலமான துறவிகளின் மோதலைப் பார்க்கப் பெருங்கூட்டம் கூடியது. இந்த நிகழ்ச்சியையே சில அன்பர்கள் சுவாமிகளிடம் கூறினர். அதனைக் கேட்ட சுவாமிகள் கூறிய பதில் மிகமிகச் சுருக்கமானது. ஆனால் சிந்தித்து உணரப்பட வேண்டியது. அது இதுதான். "அவர்களுக்குக் காணும் ரிசிபத்தினிகள் இருக்கிறார்கள்". இவ்வளவுதான். இதன் பொருள் என்ன? அவர்கள் காமத்திலிருந்து விடுபடாத துறவிகள். அவர்கள் காமகோடிகளல்ல. காமம் என்னும் மூல உணர்விலிருந்தே குரோத லோப, மோக, மத, மாற்சரியம் முதலிய குணங்கள் தோன்றுகின்றன. எனவே குரோதம் முதலிய குணங்களின் அடிப்படை காமம். இந்த வேதாந்த சித்தாந்த விவாதத்தைத் தூண்டிவிட்டவை, அவர்களிடமிருந்தே குரோத, மோக, மத, மாற்சரிய உணர்வுகள். இவற்றின் அடிப்படை காமம். இந்தக் காமத்தையே ரிசிபத்தினிகள் எனச் சுவாமிகள் குறிப்பிட்டார். அவர்களுக்கு ரிசிபத்தினிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் காமம் இருக்கிறது. (அதுவே அவர்களை விவாதிக்கச் செய்கிறது.) இந்தப் பதிலிலுள்ள பொருள் ஆழமும், நகைச்சுவையும் அதனை அவர் வெளியிட்ட நாகரீக யாழ்ப்பாணத் தமிழ்நடையும் எண்ண, எண்ண வியப்பை ஊட்டுகின்றன.

சுவாமிகள் சைவசித்தாந்த தத்துவசிந்தனையில் ஏற்படுத்திய தாக்கத்தை – மாற்றத்தை உணர்ந்து கொள்ளாதவர்கள் சில சைவசித்தாந்திகள் மாத்திரமல்ல, மதமானபேய் பிடித்த

வேதாந்திகளும்தான். திருமூலர் போன்றவர்களால் உணர்த்தப்பட்டு, மெய்கண்டார் போன்ற சந்தான குரவர்களால் விளக்கப்பட்டு, தாயுமானவரால் தெளிவுபடுத்தப்பட்ட வேதாந்த சித்தாந்த சமரசத்தை ஈழத்தில் நிலைநாட்டியவர், வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தராகிய யோக சுவாமிகளேயாவர்.

## சமயத்தில் ஏற்படுத்திய தாக்கம்

சமயம் என்பது தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அந்தத் தத்துவத்தை அடைய மக்களை இட்டுச் செல்வதே சமயமாகும். தத்துவத்தை இலகுவில் எல்லோரும் புரிந்து கொள்ள முடியாது. வேதத்தின் ஞானகாண்டம் தத்துவத்தைப் பற்றிப் பேசுகின்றது. அதனையடையும் சமய கிரியைகளை விளக்குகின்றது கர்மகாண்டம். இரண்டாகிய வேதத்தை விளக்கவே தனித்தனி ஆகமங்கள் தோன்றின. இதனையே "ஆகமமாகி அண்ணிப்பான் தாள் வாழ்க" என மணிவாசகர் பாடினார். இந்த ஆகமங்களை மேலும் தெளிவுபடுத்தவே இதிகாசங்களும் புராணங்களும் ஏற்பட்டன. அவற்றை மக்கள் மயப்படுத்தவே கலைகள் பலவிதமாகத் தோன்றின. இவை எல்லாவற்றின் மையமும் இறைவனே. இந்தக் கலைகளே கலாசாரத்தின் ஊற்றுக்கள். கலாசாரத்தால் வளர்க்கப்படுவதே ஒழுக்கமாகும். தத்துவம் தவிர்ந்த அதனையடிப்படையாகக் கொண்டெழுந்த எல்லாமே சமயம் என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது.

உலகிலுள்ள எல்லாச் சமயங்களின் தத்துவமும் ஏறக்குறைய ஒன்றே. ஏனெனில் உண்மை, உணர்ந்தவர்களுக்கு ஒன்றுதான். உண்மை ஒன்றாயிருக்கும் போது அதனை அடிப்படையாகக் கொண்ட சமயமும் ஒன்றாயிருந்தாலென்ன? இதனையே மதவாதிகள் மக்களை மதமாற்றம் செய்வதன் மூலம் சாதிக்க முயல்கிறார்கள். ஆனால் இது இயற்கைக்குப் பொருத்தமற்றது. தாயுமானவர் "சமய கோடிகள்" என்றார். உலகில் உள்ள சமயங்கள் எத்தனை என்னும் வினாவுக்குத் தாயுமானவர், கோடிக்கணக்கான சமயங்கள் என்கிறார். சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த இராமகிருட்டினர் எத்தனை சமயங்கள் உள்ளன என்னும் வினாவுக்கு உலகில் எத்தனை மக்கள் இருக்கிறார்களோ, அத்தனை சமயங்கள் இருக்கின்றன என்றார்.

இந்த உண்மைக்கு எந்தச் சமயமும் விதிவிலக்கல்ல. இந்து சமயத்தில் எத்தனை பிரிவுகள் தோன்றிவிட்டன. ஏனெனில் சமயங்கள் மக்களுக்கு வழிகாட்டும் போது அந்தச் சமயநதி, தான் பாய்ந்து செல்லும் மக்களின் வரலாற்றுப் பின்னணி, புவியியல், மனஇயல் முதலிய பாரம்பரியங்களுக்கு ஏற்பத் தன்னை மாற்றியே பாய்ந்து பயன்விளைத்துச் செல்லும். ஜீவகாருண்யத்தை எல்லா மதங்களும் ஏற்றுக் கொண்டாலும் சமணம், பௌத்தம், இந்துசமயம் போன்று ஏனைய சமயங்கள் கடும்போக்கைக் கடைப்பிடிப்பதில்லை. பலதார மணத்தை இந்திய மதங்களைப் போன்று ஏனைய மதங்கள் கண்டிக்கவில்லை. விக்கிரக வழிபாட்டைச் சில போற்ற, சில தூற்றுகின்றன. அதிகம் போவானேன். யாழ்ப்பாணத்தில் இந்துக் கோவில்களில் ஆண்கள் மேலாடையுடன் போவது தடுக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்து, கனடா போன்ற குளிர்ப் பிரதேசங்களில் உள்ள இந்துக் கோவில்களில் இதனைச் செயற்படுத்த முடியுமா? எனவே வேதத்தின் ஞான காண்டத்தைத் தத்துவத்தின் அடித்தளமாகவும், கர்மகாண்டத்தையும் ஆகமங்களையும், சமயத்தின் சமயக்கிரியைகளின் அடித்தளமாகவும் கொண்டுள்ள நமது சமயம், தான் பின்பற்றும் நெறிகளிலே கால, தேச மாற்றங்களுக்கு ஏற்ப வேறுபட்டிருப்பது தவிர்க்க முடியாததாகும்.

"கிரியைகளெல்லாம் ஞானம் கிளர்த்தற்கு வழி" என்று சிவப்பிரகாசம் கூறும். ஆன்மபக்குவ உயர்நிலையடைந்த உயிர்கள் கூட "செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங் கழீஇய அன்பரோடு கூட வேண்டும்" என்றும் "ஆலயம் தானும் அரண் எனத் தொழ வேண்டும்" என்றும் சிவஞான போதம் கூறுவதையும் நினைவிற் கொள்ள வேண்டும். இந்தப் பேருண்மைகளையெல்லாம் உணர்ந்த சுவாமிகள் இன்றைய காலத்து ஈழநாட்டுச் சமுதாயத்துக்குப் பொருத்தமான, செயற்படுத்தக்கூடிய, செயற்படுத்த வேண்டிய அறநெறிகளையும் சமயக்கிரியைகளையும் நற்சிந்தனையிற் கூறியுள்ளார்.

"ஏத்துக பொன்னடி" எனத்தலைப்பிட்டு,

"எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி
தொழுது வணங்குக தூநீறணிக
பழுதில்லைந்தெழுத்தும் பன்னுக பன்முறை"

எனக் கூறியுள்ளார்.

இந்து சமய தத்துவநூல்கள் உறுதியான தத்துவதளத்தை அமைத்துக்கொடுக்க, அறநூல்கள், மனவயலின் களை நீக்கிப் பண்படுத்தத் தோத்திர நூல்கள் பண்பட்ட மனவயலில் பக்திப் பயிரை வளர்ந்தோங்கச் செய்ய, திருமந்திரம் போன்ற யோகநூல்கள் ஆன்ம கறைக் கூட்டமாகிய யோகத்தைக் கூட்டுவிக்கின்றன. இந்நிலை எய்தத் தமிழ் மக்கள் தினமும் ஓதவேண்டிய நூல்கள் மூன்று; திருக்குறள் மனமாசு போக்கிப் பண்படுத்தும். திருவாசகம் பக்திப் பயிரை வளர்த்தெடுக்கும். திருமந்திரம் யோகம் கைவரச் செய்யும். யோகசுவாமிகள் தத்துவதளத்திலே ஏற்படுத்திய தாக்கத்தைப் போன்று சமய தளத்திலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். அவர் அருளிய நற்சிந்தனைப் பாடல்கள், தத்துவ தளத்தை அமைத்துக் கொடுத்துள்ளதோடு பல அறங்களையும் கூறும் அறநூலாகவும் பக்திதரும் தோத்திர நூலாகவும் யோகம் கூட்டுவிக்கும் யோக நூலாகவும் அமைந்துள்ளது.

சுவாமிகள் நிறுவிய சிவதொண்டன் நிலையங்களில் சைவசமய முறைப்படி இக்காலத்துக்குப் பொருந்திய வழிபாட்டுமுறைகள் பேணப்பட்டு வருகின்றன. அவர் எழுத்துக்களிலும், சிவதொண்டன் இதழிலும் இக்கோட்பாடு வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. ஆண்டுதோறும் நடத்திய பாதயாத்திரை அவர் செய்த காலத்துக்கேற்ற மாற்றங்களுள் ஒன்றாகும். "ஒக்கத் தொழுகிற்றீராயின் கலி ஒன்றும் இல்லை" என்னும் ஆழ்வார் மொழிப்படி கூட்டுப் பிரார்த்தனை, கூட்டு வழிபாடு, பாதயாத்திரை முதலியன பேணப்பட்டன. மாறா இயல்புடையது சமயதத்துவம், கால இடங்களுக்கேற்ப மாறும் இயல்புடையன சமய நெறிகள். மாறி வளர்ந்து வரும் சமுதாயத்துக்கு ஏற்பவே சமய நெறிகளின் சிற்சில மாற்றங்களைச் சுவாமிகள் அமைத்துள்ளார்.

## வாழ்வியலில் (இல்லறத்தில் துறவறத்தில்) ஏற்படுத்திய தாக்கம்

யோக சுவாமிகள் துறவறத்துக்கு ஓர் இலக்கணமாய் - தூய துறவறத்துக்கு ஓர் எல்லையாய் - மிளிர்ந்தவர். அவர் தோற்றத்தைப் பார்த்து அவர் ஒரு சாமியார், ஒரு துறவி என்று கணிக்க முடியாது. ஈழத்து வடபகுதியில் வாழும் சாதாரண ஒரு மனிதனைப் போலவே காட்சி அளிப்பார். துறவிகள் இப்படித்தான் இருப்பார்கள் என்ற உணர்வு குடிகொண்டுள்ள மக்கள் மத்தியில் "மழித்தலும் நீட்டலும் வேண்டாவாம் உலகம் பழித்த தொழித்து விடின்" என்னும் வள்ளுவத்துக்கு இலக்கணமாய் வாழ்ந்தவர். இந்தத் தூய

துறவின் ஊற்றாக விளங்கியவர் சுவாமிகளின் குருநாதனாகிய செல்லப்பா சுவாமிகளாகும். சுவாமிகளின் அகம், புறமாகிய ஞானத்தோற்றத்தை வழங்கியவரும் அவரே. இதன் மூலம் இந்து சமயத் துறவறத்திலே ஒரு மாபெரும் புரட்சியே நடைபெற்று விட்டது. இன்று சில துறவிகளால் பரிகாசத்துக்கு இடமாகிவிட்ட துறவறத்துக்குச் சுவாமிகள் காட்டியவழியே மாற்று மருந்தாகும்.

நீத்தார் பெருமையைத் தெய்வத்தோடு ஒப்ப வைத்துப் பாயிரத்தில் பாராட்டிய வள்ளுவர், அவர் இயல்பினைத் துறவறத்தில் விளக்கியுள்ளார். அந்த விளக்கத்துக்குச் செயல்வடிவம் கொடுத்துப் பெருந்தாக்கத்தினைச் சுவாமிகள் ஏற்படுத்தியுள்ளார். இன்று துறவிகள், சமயவாதிகள், தம் புறத்தோற்றத்தால் தம் தூய துறவையல்ல, தம் சமயத்தைப் பறைசாற்றுகின்றனர். இதுவே பலரது கூடா ஒழுக்கத்துக்கு நல்ல போர்வையுமாகின்றது.

சுவாமிகளின் மரபு, சித்தர்மரபு, "கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டாவிறலின் விளங்கியவர்கள்." "கந்தைமிகையாம்" என்னும் கருத்துடையவர்கள். செல்லப்பா சுவாமிகளைப் பற்றிக்கூறும் சுவாமிகள், "வேடம் விரும்பிலர்", "கறுத்த மேனியர், கந்தைத் துணியினர்" "கோலமொன்றும் விரும்பிலர்" "ஆரகத்திலும் சென்றவர் உண்கிலர்" "விற்றூண் அறியாதான்" "ஒருசோறும் ஒருகறியும் ஆக்கியுண்ணுமாசான்" "நீறணியான் காவியுடையணியான்" என்றிங்ஙனம் கூறுவார்.

தமது குருநாதனைப் போலவே சுவாமிகளும் எளிமையாக வாழ்ந்துவந்தார். பக்தர்கள், அடியார்கள் என்று வருபவர் எல்லோரையும் அவர் தரும் காணிக்கைகளையும் தம் குருநாதரைப் போலவே ஏற்க மறுத்து, ஏசித்துரத்திய சந்தர்ப்பங்கள் பல. உலகியல் போலத் துறவியலில் இணங்கி அனுசரித்துப் போகும் போக்குக்கு இடமேது? அங்ஙனம் இணங்கிப் போயிருந்தால் போலிகளின் உறவும், அதனால் பெரும் பொருளும் குவிந்திருக்கும். சித்துக்கள் செய்யவல்ல தெய்வீக ஆற்றலிருந்த போதும் குருவும் சீடனும் அதை ஒரு வழியாகப் பயன்படுத்தவில்லை. "இட்ட சித்திகள் எய்தவும் விட்டிலன்" சித்துக்கள் செய்து மக்களை மயக்கக் கூடாது என்பதே குருவின் கட்டளையாகும். செல்லப்பா சுவாமிகள்,

"வருவார் போவாரை ஆசான் - வாயால்
வையாமல் வைதுவிடக் கூசான்"
"கும்பிடச் சால அன்புடன் தான்வரும் பக்தரைக்
கால னென்னக் கறுத்துடன் சீறுவான்.
வீதியிற் செலும் வீணர்கள் தங்களைப்
போதிக்கும்படி வேண்டியே பேசுவார்"

குருவைப் போலவே சீடனும் வெறும் வீணர்கள் நெருங்குவதை அனுமதிக்கவில்லை. ஏனெனில்,

"வெறும்வீணன் எத்தனை வித்தை கற்றாலும்
தறுகுறும்பானவை தான்தீரானே"

என்று அவரே பாடியுள்ளார்.

நல்லூர் வீதியில் சமையல் நடந்து கொண்டிருக்கிறது. சீடர் கூட்டம் வாயூறக்காத்து நிற்கிறது. திடீரென வந்த செல்லப்பா சுவாமிகள் ஒரு தடியால் சமையல் பானைகளை அடித்து நொருக்குகிறார். வெந்ததும் வேகாததுமான உணவுகள் சிதறுகின்றன. "அவா என்பது தவாப் பிறப்பீனும் வித்து"; "ஆரா இயற்கை அவா" இந்த உண்மைகளையே

சுவாமிகள் அன்று உணர்த்தினார்கள். சிவதொண்டன் நிலையத்துக்குள் காவியுடுத்துக் கொண்டு கந்த சாமியார் (நல்லூர்க்கந்தன்) வந்தாலும் உள்ளே விடாதே என்று உத்தரவு போட்டுவிட்டவர், யோக சுவாமிகள். இங்ஙனம் தூய துறவொழுக்கத்தால் இந்த நூற்றாண்டின் துறவொழுக்க த்துக்குத் தாம் வரம்பாகிய காட்சியர். சுவாமிகளைச் சூழ வந்தவர்கள் ஆசாபாசங்களில் உழலும் இல்லறத்தவரே, "செய்த வினை இருக்கத் தெய்வத்தை நோபவர்கள்," "அறும்பாவ மென்று அன்று இடாதவர்கள்." இன்று வெறும்பானை பொங்க வேண்டுமென்னும் மாயா ஜாலத்தை எதிர்பார்ப்பவர்கள்.

"ஒருவன் பற்றை முற்றாகத் துறந்து ஒருபக்கத்தே ஒதுங்கியிருந்தாலும் இந்த உலகம் விடாது. எதுவுமற்ற அவனிடம் உலகம் எதை எதிர்பார்க்கிறது? உலகப் பொருள்களை சுவாமி! ஏதாவது சொல்லுங்கோ, சொல்லுங்கோ என்று அவன் வாயைக் கிளறும். அவனும் ஏமாந்து ஏதும் சொல்லத் தொடங்கிவிட்டால், கொழுவிக் கொள்ளும்." இது சுவாமிகள் சொன்ன ஒரு செய்தி. சூழ வந்த இல்லறத்தார், தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவே வந்தனர். அவர்களுக்குச் சுவாமிகள் வழங்கிய பிரசாதம், வள்ளுவர் ஔவை போன்றவர்கள் கூறிய இல்லற நெறிகளைப் பின்பற்றுமாறும், விதிப்பயனை மகிழ்வோடு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதுமாகும். இல்லறம் என்னும் தலைப்பிட்டுப் பாடிய பத்துக்குறட்பாக்களில் சுருக்கமாக, ஆனால் ஆழமாக அருளுரை வழங்கியுள்ளார். நல்லாறு இல்லறமேயென்றும், எல்லா அறங்களிலும் மேலானது இதுவே என்றும் தானம், தவம் இரண்டும் ஆற்றவல்லதாயிருப்பதால் இதுவே ஞான அறமென்றும், அரனும் உமையும் நின்ற நெறி இல்லறமே என்றும், சனகன் போன்ற இராசயோகியர் கடைப்பிடித்த நெறி இதுவே என்றும் இல்லறத்தில் நின்ற ஏந்திழையாள், "சூரியனே! உதிக்காதே, நில்" என்றாள். அது நின்றதென்றும் இல்லறத்தின் பெருமைகளை எடுத்தியம்பியுள்ளார்.

சுவாமிகள் விதைத்த ஞானவிதை இனித்தான் முளைத்துப் பயிராக விளைவு தரும். அதற்கேற்ற காலம் கனிந்து கொண்டிருக்கிறது. அவர் மதப்பிரசாரமோ, பிரசங்கமோ செய்யவில்லை. அவர் வாழ்ந்து காட்டினார். அவ்வப்போது சற்பாத்திரத்தில் போட்டு வைத்தார். நற்சிந்தனையாக எழுதி வைத்தார். அவர் அருளிய நற்சிந்தனைகள், அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நாற் பொருளும் தரவல்லன. அவர் சிந்தனைகள், சாத்திரம், தோத்திரம், சமயம், அறம், யோகம் முதலியன பற்றி இக்காலத்துக்கு ஏற்ற விளக்கங்கள் கொண்டிருக்கின்றன.

இந்து சமயத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்னும் நோக்கம் சுவாமிகளுக்கு இல்லை. ஆனால் அவர் சிந்தனைகளும் வாழ்வும் அமைதியான மாபெருந் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. அவரது குருநாதர் அருளிய மகாவாக்கியங்கள் நான்கிற்கும் நற்சிந்தனையும், சுவாமிகளின் வாழ்க்கையும் விளக்கமாக அமைந்துள்ளன. இராமகிருஷ்ண குருவின் அனுபூதியைச் சீடராகிய சுவாமி விவேகானந்தர் விளக்கியது போல, அது அக்கால இந்தியாவின் தேவையாயிருந்தது போலச் செல்லப்பா சுவாமிகளின் அனுபூதிச் செல்வத்தை அவரது சீடராகிய யோக சுவாமிகள் விளக்கியுள்ளார். அது இக்கால இலங்கையின் தேவை; இலங்கையின் இந்துசமயத்தின், சைவத்தின் தேவை. சைவம் பிறமதக் காழ்ப்பற்ற தன்மையைப் போற்றி வந்துள்ளது. மதமாற்றத்தை விரும்பாதது, பிறமதங்களையும் அனுசரித்துப் போகும் தன்மை உடையது. நடைபெற்ற சில மதப் போராட்டங்களெல்லாம், பிறமதத்தினர் ஊடுவல் செய்து இந்து சமயத்தினரை மாற்ற முயன்றபோது ஏற்பட்ட தற்காப்புப் போராட்டங்களே யாகும்.

பிறமதங்கள் இந்துதேசத்தில் புகுந்து அழிவுகள் செய்தபோது, இந்துமதம் அந்நிய தேசங்களில் எவ்வித தீங்கும் செய்ததில்லை. சமண, பௌத்த மதங்கள் தமிழ்நாட்டில்

புகுந்து அரசர்களுடைய செல்வாக்கால் மதமாற்றம் செய்த போது, சைவம் அதனைப் பக்தி நெறியால் புறங்கண்டது. சைவ சித்தாந்தம், தத்துவ விளக்கத்தில் கடவுளை ஏற்காத உலகாயதர்களைக்கூட அவர்களும் ஒரு நிலையில் நிற்கிறார்கள் என ஏற்றுக் கொண்டுள்ளது. தாயுமானவர் சைவ சமரசத்தின் கொடுமுடியைக் காட்டியவர்; தாயுமானவரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்ட யோக சுவாமிகள், அவர் கருத்தைப் பல இடங்களில் போற்றியுள்ளார். இவற்றால் யாழப்பாணத்தில் வாழ்ந்த பல முஸ்லீம் அன்பர்கள், அவருடைய அடியாராக வாழ்ந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்த புகழ் வாய்ந்த நீதிபதி அக்பர் மிக்க பக்தியுடைய ஒரு பக்தராவார்.

தென்னிலங்கையிலிருந்து பல சிங்கள பௌத்த அன்பர்கள் அவரைத் தரிசிக்க வருவதுண்டு. அவரோடு தமக்கேற்பட்ட ஆன்மீக அனுபவங்களை ஆங்கிலத்தில் நூல்களாக எழுதி வெளியிட்டுள்ளனர். இலங்கையின் தேசாதிபதியாகவிருந்த சோல்பரியின் புதல்வரான ஆங்கிலேயர், சுப்பிரமணிய சுவாமியென அழைக்கப்படும் காவாயைச் சேர்ந்த அமெரிக்கத் துறவி முதலியோர் சுவாமிகளின் சீடராயினர். காவாயில் சைவசித்தாந்த ஆச்சிரமமமைத்துப் பணிபுரிந்துவரும் சுப்பிரமணிய சுவாமி, யோக சுவாமிகளின் திருவுருவத்தை ஊர்வலமாக எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணம் கொழும்புத்துறையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். இவையெல்லாம் சுவாமிகள் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவுகளேயாகும்.

# பாரம்பரிய சமயமும் நவீன சமயமும்

குமாரசாமி சோமசுந்தரம்

"மரபு என்பது, உயர்ந்தோர் ஒன்றை எவ்வழிக் கொண்டனரோ அவ்வழிக் கொள்ளுதலாகும்," என்பர்.

உயர்ந்தோர்களால் தொடக்கப் பெற்று வழி வழி வந்து கொண்டிருப்பது மரபு.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" எனப்படுபவனாகிய கடவுளும் அவனது அருள்வழிப்பட்ட அருளாளர்களும், அறிஞர் பெருமக்களும் உயர்ந்தோர் எனக் கொள்ளப்படுபவர்.

இவ்வுலகில் உயர்ந்தனவாக ஏற்றுக் கொள்ளப்பட்டவை யாவற்றிற்கும் மரபு என்று ஒன்று உண்டு. பாரம்பரியமும் உண்டு. இவற்றை வாழ்க்கையில் கைக்கொள்வதால் ஓர் ஒழுங்கு, உறுதிப்பாடு, அமைதி என்பன மனித சமூகத்தில் பேணப்படுகின்றன.

மரபு, பாரம்பரியம் என்பன ஒரு நீண்டு பரந்த கால ஓட்டத்தின் தாக்கங்களுக்கு நின்று நிலைத்து, சோதனைகளையெல்லாம் வென்று வந்தவை. அவை தேவையற்றனவாய் இருந்திருப்பின் எப்பவோ தாமாகவே கழிந்திருக்கும். இற்றைவரை அவை நிலைத்து நிற்பதால் பயனுள்ளவையே என்பது மரபு பேணுபவர்களின் கருத்து.

மரபு, பாரம்பரியம் என்பன கலாசார அம்சங்கள். அவற்றைப் புறக்கணிப்பதனாலேயே இன்றைய அமைதியின்மையையும், சமூகச் சீரழிவுகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது என்பது அவர்களின் நிலைப்பாடு.

உயர்ந்தன யாவற்றிற்கும் ஒரு மரபு, பாரம்பரியம் என்பன உண்டு என்றவகையில் சமயத்திற்கும் உண்டு. ஆனால் மரபு, மாற்றத்திற்கு உள்ளாகல் ஆகாதென்றோ, புதியன புகுதல் கூடாதென்றோ கூறுதல் பொருத்தமாகாது என்பது புதுமையில் நாட்டங்கொள்வோர் கருத்தாக உள்ளது. சமயம், கல்வி என்பன என்றும் தேக்கநிலையில் இருந்தால் வளர்ச்சியற்றன வாகி விடும்.

மாற்றத்திற்குள்ளாகாத எதுவும் வளர்ச்சியடைவதில்லை. உலகில் யாவும் மாற்றங்களுக் குள்ளாகின்றன. மனிதரிலும் இளமை, முதுமை, மூப்பு, இறப்பு என்று மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதானிருக்கின்றன. சமயமும் இதனை ஏற்றுக் கொள்கின்றது. சமயம் ஒரு சமூக விருத்திச் சாதனம் என்றவகையில் சமூகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களும் வளர்ச்சியும் சமயத்திலும் பிரதிபலிக்கின்றன. சமயத்தில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களையும் அவை தீர்மானிக்கின்றன. சமயம் தனிமனித ஈடேற்றத்திற்கு மட்டுமல்ல, சமூக ஈடேற்றத்திற்கும் உதவ வேண்டியுள்ளது. சமயம், ஒருவனின் முத்திக்கு வழிகாட்டுவதுடன், அவன் சமூகத்தில் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கை நெறியையும் வகுத்து அதன்படி ஒழுகச் செய்ய வேண்டும்.

சமய நெறியினின்றும் எழுகின்ற அன்பு, ஒப்புரவு, வாய்மை, கண்ணோட்டம், தூய்மை, நீதி, நல்லொழுக்கம், வாழ்க்கை ஒழுங்கு, சமூக உணர்வு என்பன வாழ்க்கையின் அடித்தளம் என்பது உணரப்படல் வேண்டும். இவை சமய விழுமியங்கள் கலக்காத சமூகச் செயற்பாடுகள் பயனற்றவை; அவை ஆக்கபூர்வமானவையாகவும் அமையமாட்டா.

பண்டைய காலங்களில் சமய வளர்ச்சி அவ்வளவு தூரம் சமூகப்பிரக்ஞை பூர்வமாக

இருக்கவில்லை. பக்தியும் முத்தியும் முதன்மை பெற்றிருந்தன. எனினும் இப்பொதுவான சிந்தனையோட்டத்துக்கு முறறிலும் மாறானதும் பிரக்ஞைபூர்வமானதுமான எண்ணக் கருத்துக்களும் இருந்திருக்கின்றன.

"படமாடக் கோயிற் பகவர்க்கொன்றீயின்
நடமாடுங் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயில்
படமாடக் கோயிற் பகவர்க்க தாமே"

என்பது திருமூலர் திருமந்திரம். இது அக்காலகட்டத்தில் புரட்சிகரமான கருத்து ஆகும். சமூக நோக்கில் சிந்திக்கப்பட்டுள்ளது. இறைவனுக்குப் போய்ச் சேரவேண்டுமென்றால், அப்பொருளை ஏழைமக்களின் பசியைப் போக்குவதற்கு உதவுங்கள் என்கிறார் திருமூலர். சமய உணர்வின் அடித்தளத்தில் நின்றுதான் திருமூலர் இவ்வாறு சிந்தித்துள்ளார். என்றாலும் அவர் கருத்து அக்காலகட்டத்தில் எடுபடவில்லை. அத்துடன் அவரையும் அவருடைய நூலையும் சைவ உலகம் இற்றைவரை புறக்கணித்து இருட்டடிப்பு செய்தே வருகிறது.

"தாவாரம் இல்லை தனக்கொரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி? - குதம்பாய்
தேவாரம் ஏதுக்கடி?"

இது குதம்பைச் சித்தர் பாடல். சமய உணர்வோடுதான் இப்பாடல் பாடப்பட்டது. தேவாரம் பாடுவதை நையாண்டி செய்தல் நோக்கமல்ல. உண்மையான சமயி பிறர் துன்பங்கண்டு இரக்கங் கொள்ளவேண்டும். படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயிலாக இருக்கக்கூடாது. "நான்" என்னும் அகந்தையும் "எனது" என்னும் மமதையும் அழியவேண்டும். அப்பொழுதுதான் அவன் சமயி ஆகிறான். சித்தர்கள் சித்தத்தைச் சிவன்பால் வைத்தவர்கள்; எனவே இறைநம்பிக்கையுடையவர்கள். எனினும், சமூக நோக்குடையராகவும் விளங்கினர். சித்தர்களும் மறக்கப்பட்டவர்களாகி விட்டனர்.

"பகுத்தண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை" - திருக்குறள்.

அன்பும் அறமும் வாழ்க்கையின் பண்பும் பயனும் என்று அறிவித்தவர் வள்ளுவப் பெருந்தகை.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்று கூறிய வள்ளுவர் சமய உணர்வு அற்றவர் எனக் கூறிவிட முடியுமா?

வள்ளுவரிடம் சமய உணர்வோடு சமூக உணர்வும் மேலோங்கி நின்றது.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்கிறார் அப்பர் அடிகள்.

"கங்கையாடிலென் காவிரியாடிலென்
கொங்கு தண் குமரித்துறை யாடிலென்
ஓங்குமா கடல் ஓதநீராடி லென்
எங்கும் ஈசன் எனாதவர்க் கில்லையே"

இறைவன் எல்லா உயிர்கள் மீதும் உயிரற்றவைகளிலும் நீக்கமற நிறைந்திருக்கிறான் என்னும்

அப்பரடிகளின் சமயஉணர்வு, சமூக உணர்வான மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதையும் உள்ளடக்குவதாக உள்ளது.

"அன்பே சிவம்" என்னும் திருமூலர் கருத்தை ஏற்றுக் கொண்ட தாயுமானவர்,

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்வாய் பராபரமே" என்று இறைவனிடம் வரம் வேண்டி நிற்கின்றார்.

திருமூலர், "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வைகயம்" என்கின்றார்.

திருஞானசம்பந்தர், "ஆழ்க தீயதெல்லாம்" "வையகமுந் துயர்தீர்கவே," என்றே வேண்டி நின்றார்.

கூடும் அன்பினில் இறைவனைக் கும்பிடுவதும் உலகின் நலத்திற்காகவே என்று சைவ அடியார்கள் கொண்டிருந்ததாகச் சேக்கிழார் கூறுவார்.

இளையான் குடிமாற நாயனார் தம் செல்வத்தின் பயனை அமுதளித்தல் மூலம் கண்டார். செல்வத்திற்குப் பயன் ஈதல் என்பது உணரப்பட்டமை தெரியவருகிறது.

சைவநெறி சமய உணர்வோடு சமூக நலனில் சிரத்தை வேண்டும் என்றும் கொண்டது.

சென்ற நூற்றாண்டில் சைவசமய மறுமலர்ச்சிக்குத் தலைமை தாங்கிய நாவலர் பெருமான் சமய உணர்வின் அடித்தளத்தில் நின்று சமூகப் பணிகளை ஆற்றினார். பாடசாலைகளை நிறுவுதல்; அச்சுயந்திரசாலையை அமைத்தமை, இலவசக்கல்வி, எல்லோர்க்குங் கல்வி என்பனவற்றில் ஈடுபாடு, கஞ்சித் தொட்டித் தருமம், மக்கள் நலனுக்காக அரச அதிகாரிகளுடனான போராட்டம் முதலிய அவரின் பணிகள் சமூகஞ் சார்ந்தவை.

நாவலர் நீதி கேட்பதில் நெருப்பு. ஆனால் மனிதகுலம் படுகின்ற துன்பங்கள் வேதனைகளைத் தணிப்பதில் அவர் கருணையின் வடிவமாகவே தோன்றினார். 1876இல் பஞ்சமும் கொள்ளை நோயும் மக்களை வாட்டியபோது மனித நேயத்துடன் சாதி, சமய பேதமின்றி நாவலர் ஆற்றிய சேவை நோக்கற்பாலது. நாவலரைப் பயன்படுத்தியவர்கள் அவரின் சமய உணர்வைக் காட்டினார்களேயன்றி சமூக, மானுட உணர்வுகளைக் காட்ட முற்படவில்லை. அதுமட்டுமல்ல, அந்தவகையில் நாவலரைப் பின்பற்றவுமில்லை. அவரின் மானுடத்தை – மறுபாதியை வெளிப்படுத்தாது, அவருடைய விசுவாசிகள் என்று கூறிக் கொண்டவர்கள் விட்டமையினால்த்தான், இன்று ஒரு கூட்டம் நாவலரைச் சமயவெறி பிடித்தவர், சாதி பார்த்தவர் என விமர்சிக்கின்றது. உண்மையில் அவர் அப்படியானவர் அல்லர். அவரின் அகச் சரித்திரத்தை உள்ளபடி அறியாதவர்களே அவ்வாறு தூற்றுகின்றனர்.

நீதிக்கும் மானுடத்திற்கும் புறம்பாகச் செயற்பட்ட உயர்சாதியினருக்கும்; பிரபுக்களுக்கும்; கோயில் எசமானர், குருமார்களுக்கும் போலிகளுக்கும் எதிராக நாவலர் தமது கண்டனக் குரலை எழுப்ப அஞ்சவில்லை. சாதியிலும் சமயம் மேல் என்ற நாவலர், சமயத்தில் மானுட ஒழுக்கப் பண்புகள், மனித நேயம் என்பவற்றிற்கு அதி மேலிடம் வழங்கியவர்.

"நாவலர் கோர்ட்டிலே நின்றாலுஞ் சரி, அயலிலே எரிகிறதொரு வீட்டிலே நின்றாலுஞ் சரி, அவரது வாழ்க்கை நீதியிலும் இரக்கத்திலுமே நடந்திருக்கிறது," – இதுவே பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் நாவலர் பற்றிய மதிப்பீடு. நாவலர் எல்லோரினதும் வைவுகளையும் வசைகளையும் கேட்டுக் கேட்டுச் சளைக்காது மானுடப் பணிகள் புரிந்தவர். மானுடம்

என்பது மனித நலக் கோட்பாடு. இன்றைய நவீனத்துவம் அதையே வேண்டி நிற்கிறது.

"ஓருயிருக்கும் சிறிதாயினும் தீங்கு நினைக்கலாகாது. தனக்குத் துரோகஞ் செய்தவரிடத்தும் தான் துரோக சிந்தை இல்லாதவனாய் இருத்தல் வேண்டும். பிறவுயிர்களுக்குத் துன்பம் வந்தபொழுது தன்னை நெருப்பிலே தோய்த்தாற் போல மனந்தபித்து அதை நீக்கமுயல வேண்டும்."

"பிறருடைய கல்வி செல்வமுதலியவற்றைக் கண்டு பொறாமைப்படலாகாது. கல்வியும் அறிவும் நல்லொழுக்கமும் செல்வமும் அழகும் தமக்குப் பார்க்கிலும் பிறருக்கு மிகப் பெருகல் வேண்டுமென்று நினைத்தல் வேண்டும்." – (நாவலர் நான்காம் பாலபாடம்) நாவலரின் உள்ளக்கிடக்கையை இவற்றிலிருந்து புரிந்து கொள்ளலாம். சாதி, சமயத்திற்கு அப்பால் நின்று உலகநோக்குடன் கூறப்பட்டவை, இக்கருத்துக்கள்.

சமயம் வேறு, சமூகம் வேறு எனக்கொள்ளாது இரண்டையும் இணைத்துப் பார்த்தவர்கள் சைவசமய நெறியாளர்கள். அப்பர் முதலிய நாயன்மார்கள் சமயத்தைச் சமூகத்திடம் பேதங்காட்டாது எடுத்துச் சென்றவர்கள்; சமயத்தை மக்கள் மயப்படுத்தியவர்கள். திருமூலர், சைவ அருளாளர்கள் தொடக்கம் தாயுமானவர், நாவலர் பெருமான்வரை இந்த நிலைப்பாடு இருந்திருந்த போதிலும், மக்களின் அநுட்டானத்தில் சமூகரீதியான சிந்தனைகள் அவ்வளவு தூரம் செயல்பாடானதாகத் தெரியவில்லை. பாரம்பரிய சமயம், நம்பிக்கைகளும், சடங்குகள் சம்பிரதாயங்களும், கிரியைகளும், மறுமை பற்றிய ஆதங்கமும் நிறைந்து மனிதவாழ்க்கையோடு தொடர்புபடுத்தப்படாமல், வரண்ட நிலையில் உள்ளது எனப் பொதுவாகக் கூறப்படுகின்ற குறைபாட்டை எதிர்நோக்குகின்றது. அதுமட்டுமல்ல, வேறு குறைபாடுகளும் சுட்டிக் காட்டப்படுகின்றன.

பாரம்பரிய சமயத்தில் போதனைகளே அதிகம். மறுமைபற்றிய உணர்வே மிகுதி, தனிமனித ஈடேற்றம், தான் மட்டும் முத்தியடைவதற்கான முயற்சிகளே ஊக்குவிக்கப்படுகின்றன. சாதி, வர்க்க, வர்ண வேறுபாடுகளுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. சமயவாதிகள் வாதப்பிரதி வாதங்களில் ஈடுபட்டு பூசல்களையும் வெறித்தன்மையையும் பெருக்குகின்றனர். சமூகத்திலிருந்து ஒதுங்கிவிடுகின்றனர். சமூகப் பிரக்ஞை இல்லை. மூடநம்பிக்கைகள், மூடப்பழக்க வழக்கங்கள் மிகுதியாக உள்ளன. சடங்குகள், சம்பிரதாயங்கள், கிரியைகள், ஆடம்பர விழாக்கள் என்பவையே சமயம் என்று கொள்ளப்படுகிறது. பாரம்பரியம் சமயம், மக்களுக்கு வழிகாட்டும் பாதையாக அன்றிப் போதையாகவும் போர்வையாகவும் வந்து விட்டது. ஊன்றிப் பார்க்க போனால் இவை சமயத்தின் குறைபாடுகள் அல்ல, சமயத்தைக் கையாள்பவர்களின் குறைபாடுகள் ஆகும். இன்றைய உலகில் விஞ்ஞானம் அழிவுகளை ஏற்படுத்துகின்றது என்று குற்றம் சுமத்துகிறார்கள். உண்மையில் விஞ்ஞான தொழில்நுட்ப விருத்தியைக் கையாளும் மனிதர்களிலேயே அத்தகைய குற்றம் உள்ளது. விஞ்ஞானத்தை ஆக்க வழிகளிலும் மனிதன் விரும்பினால் பயன்படுத்தலாம் தானே.

சமயத்தைப் போதையாக்கியவர்கள் யார்? சமயத்தைப் போர்வையாக்கி அதனுள் மறைந்து கொண்டு அல்லவை புரிந்தொழுகுவோர் யார்? மனிதர்கள் தானே. மனிதர்கள் தவறாக நடந்து கொண்டு சமயத்தில் பழிசுமத்துவது முறையாகுமோ? மனிதர்கள் விரும்பினால் சமயத்தை உள்ளபடி உணர்ந்து அதை ஒரு பாதையாக, வாழ்க்கை நெறியாக மீளவும் கொண்டு வரமுடியும். அதனை மறுமலர்ச்சியென்றோ, நவீனத்துவம் என்றோ எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம்.

பண்டைய சமய மரபுகள், பாரம்பரியங்கள், வாழ்க்கைமுறைகள் என்பவற்றை ஆராய்ந்து,

விமர்சித்து எழுகின்ற சிறந்த அம்சங்களைத் தற்காலச் சமுதாயத்தின் தேவைகள், நோக்கங்கள், விழுமியங்கள், பிரச்னைகள் மற்றும் கால உணர்வு என்பவற்றைக் கருத்தில் கொண்டு பொருத்தமாக உருவாக்கி இணைக்கும் முயற்சிகள் சமய மறுமலர்ச்சிப் பணிகளுள் அடங்குகின்றன. நவீனத்துவம் என்பதும் அதுவே. ஏற்கனவே இருந்தவற்றையே தற்காலச் சமூகத் தேவைகளையொட்டி நவீனப்படுத்துகிறோம். முன்பு இல்லாத ஒன்றை மீண்டும் மலரச்செய்கிறோம் என்று கூறுதல் பொருந்தாது.

பழையன, பாரம்பரியமானவை யாவுமே கூடாதன அல்ல. அதே வேளை புதியன அனைத்தும் நல்லனவுமல்ல.

"முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே" என இறைவனைப் பழமையாயும் புதுமையாயும் போற்றுதல் சைவமரபு.

சமயத்தில் பழமை, புதுமை என்று கொள்ளும் போது பழமையின் வழியே புதுமை காணப்பட வேண்டும். பழமையிலிருந்து புதுமை ஊற்றெடுக்க வேண்டும். "பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல" என்று கொள்வது தமிழ்மரபு. பழையன பயனற்றதாயின் கழிந்தே தீரும். புதுமை, நவீனத்துவம் என்னும் மோகத்தில் பயனுள்ள பழையனவற்றையும், பிற்போக்கானவையென்று கூறி கழிக்க முற்படுதல் முக்கியமாகச் சமயத்தைப் பொறுத்தளவில் அறிவுடைமை ஆகாது. பழமை பின்னோக்கு ஆகும்; பிற்போக்கு அல்ல.

"உள்ளது இல்லதாகாது. இல்லது உள்ளதாகாது; உள்ளதில் இருந்தே உள்ளது தோன்றும், இல்லதில் இருந்து உள்ளது தோன்றமாட்டாது" - சைவசமயத்தின் இக்கொள்கை சற்காரிய வாதம் எனப்படும். சமயத்தை நவீனமயப்படுத்த முனையும்போது இக்கருத்தையும் மனதில் கொள்ளுதல் அவசியமாகும்.

சமயத்தில், பழமை, பாரம்பரியத்தைப் பின்னோக்கிப் பார்க்க வேண்டும். இடைக் காலத்தில் சமயத்தினுள் வலிந்து புகுத்தப்பட்ட மாசுகள் எவையென இனங்கண்டு அவை நீக்கப்பட வேண்டும். தற்காலச் சமூகத்தேவைகளைக் கால உணர்வோடு சிந்தித்து நீதியின் அடிப்படையில் அவற்றிற்கு ஏற்றவாறு சமயத்தை நவீனத்துவப்படுத்தல் விரும்பத்தக்கதே. சமயம் பொதுவாக உணர்வு பூர்வமாகவே நோக்கப்படுதல் இன்றியமையாதது. சமயமும் ஆத்மீகமும் மறுமைக்காம் என்பதுடன் இம்மைக்குமாம் என்றும், மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு முக்கியமானவை எனக் கொள்ளுதல் சமய நவீனத்துவத்தின் அங்கமாதல் வேண்டும். சமயத்தை ஒரு போர்வையாக்கும் முயற்சிகளைக் களைந்து விட்டாலே, நவீன சமயம் ஆகிவிடும்.

சைவசமயம் தொன்மையும் குன்றாத இளமையும் உடையதாய், இன்றும் வாழும் சமயநெறியாக உள்ளது. உலகின் மூத்த நாகரிகங்களுள் ஒன்றான சிந்துவெளி நாகரிகம் சிவவழிபாட்டுடன் தொடர்புடையதென்பதை தொல் பொருளாய்வாளர் கூற்றுக்களிலிருந்து அறியமுடிகிறது.

தமிழர்கண்ட வாழ்வியல் நெறி அன்புநெறி. அவர்கள் கண்ட சமய நெறி சைவநெறி. சைவம் சிவசம்பந்தமுடையது. "அன்பே சிவம்" என்கிறது திருமூலர் திருமந்திரம். தமிழர்களின் வாழ்க்கையும் சமயமும் அன்பினை அடித்தளமாகக் கொண்டவை.

"அன்பின் வழியது உயிர்நிலை" என்றும், "அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்", என்றும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

அன்புக்கு மேலே வேறென்ன இருக்கப் போகிறது. எனவே, அன்பு எனும் "சிவனொடொக்கும் தெய்வம் தேடினும் வேறில்லை" என்று திருமூலர் உறுதியாகக் கூறிவிட்டார். எல்லா நன்மைகளும் அன்பிலிருந்தே ஊற்றெடுக்கின்றன. எல்லாத் தீமைகளும் அன்பின்மையிலிருந்தே தோன்றுகின்றன.

சமயம் மனிதனை நன்னெறிப்படுத்தவும், வாழ்க்கையைச் செம்மைப்படுத்தவுமென்றே தோன்றலாயிற்று. "ச" என்பது "நல்ல" என்ற கருத்தைத் தருகின்றது. ச+மயம் என்னும் போது நல்லதன் மயமாதல் எனப்பொருள் கொள்ளலாம். உலகில் பல சமயங்கள் தோன்றியுள்ளன. காலப்போக்கில், சமயங்கள் ஊழல்களுக்கும் துர்நடத்தைகளுக்கும் இசைந்து கொடுக்கும் போதும் கடின கட்டுப்பாடுகள் நெறிமுறைகளை மக்கள் பின்பற்ற முடியாத அளவிற்கு அவர்கள் மீது திணிக்கும் போதும்; சமூகப் பிரக்ஞையின்றி வெறும் சடங்குகள் சம்பிரதாயங்களுக்கு மாத்திரமே இடமளிக்கும் போதும்; பிற சமயங்களின் ஊடுருவல், ஆதிக்கம் காரணமாக தம் சுயநிலையையும் தன்மைகளையும் கொள்கைகளையும் இழக்க நேரிடுகின்ற போதும், காலத்தின் தேவைகளைக் கருத்திற் கொள்ளாதபோதும் சமயத்திற்கும் வாழ்விற்குமிடையிலான தொடர்பிலும் உறவிலும் விரிசல் வந்துவிடுகிறது. இந்நிலையில் சில சமயங்கள் செல்வாக்கினை இழக்கின்றன; அல்லது மறைந்து விடுகின்றன. மக்களும் சமயங்களில் நம்பிக்கை இழந்து நாத்திகம் பேசத் தொடங்கிவிடுகின்றனர்.

இவ்வாறான கட்டங்களிலேயே, சமயங்களின் குறைபாடுகளை இனங்கண்டு நிவர்த்தி செய்யும் வகையில் மறுமலர்ச்சிப் பணிகளின் தேவை உணரப்படுகிறது. சென்ற நூற்றாண்டிலே தோன்றிய ஸ்ரீலஸ்ரீ நாவலர்பெருமான தென் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் சைவசமய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு காரணகர்த்தா ஆனார். அவரின் காலம் 1822-1879 ஆகும். புதிய அணுகுமுறைகளை அவர் வாழ்ந்த கால உணர்வுக்கு இயையப் பிரயோகித்துச் சைவத்தைக் காப்பாற்றினார்.

வட இந்தியாவில் இதே காலகட்டத்தில் இந்துமத சீர்திருத்தங்களில் மூன்று இயக்கங்கள் வீசுரமாகச் செயல்பட்டன.

1. பிரம்ம சமாஜம் - ராஜாராம் மோகன் ராய் என்பவரால் 1818இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்து சமயத்தில் மூடநம்பிக்கைகள், சடங்கு சம்பிரதாயங்கள், சாதிப் பிரிவுகள் - தீண்டாமை என்பன ஆட்சி செய்தகாலம். எனவே தீவிர சமய சீர்திருத்தங்களை வேண்டி இவ்வியக்கம் பணிகளை மேற்கொண்டது.

2. ஆரிய சமாஜம் - தயானந்த சரஸ்வதி என்பவரால் 1875இல் தொடக்கப்பட்டது. பிறமதக் கோட்பாடுகளையும், மேலைநாட்டு நாகரிக, பண்பாட்டு மோகம் இந்திய மக்களிடையே பரவுவதையும் தீவிரமாகத் தடுத்து நிறுத்தி இந்து சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

3. இராமகிருஷ்ண சங்கம் - சுவாமி விவேகானந்தரால் 1886இல் நிறுவப் பெற்றது. விழுமிய சிறந்த சமய, சமூக அம்சங்கள் எங்கிருந்தாலும் அவற்றை ஏற்று "ஒன்றிணைப்பினை" உன்னத வாழ்க்கைத் தத்துவமாகவும் சமயநெறியாகவும் உருவாக்கியது. பிறசமயக் கொள்கைகளை வெறுக்காது மதித்தல், அவற்றை உண்மையென ஏற்றுக் கொள்ளல், சமயங்கள் உலக ஒருமைப்பாட்டிற்கு வழிவகுத்து அதனை வளர்க்க வேண்டுமே தவிர, சமயப் பூசல்கள் மதமாற்றங்கள் என்பவற்றில் ஈடுபடுதல் ஆகாது என்பதில் கவனம் செலுத்தல் என்பவற்றைச் சுவாமி விவேகானந்தர் வலியுறுத்தினார்.

சமயம் என்றால் மூடநம்பிக்கை; பிரிவு மனப்பான்மை; மதமாற்றம், மதவெறி, ஏனைய

மதங்களை அழித்தல் போன்ற நிலைப்பாடுகளை அகற்றுதல் சமயச் சீர்திருத்தப் பணிகள் ஆகவேண்டும். சமயப் பணிகள் சமூகப் பிரக்ஞையோடு ஆற்றப்பட வேண்டும். சமயம், மக்கள் வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தப்படுதல், அறிவியல் விழிப்பு, சமயப்பொறை, சமரச நோக்கு என்பவற்றை ஏற்படுத்தல் என்பன சமய நவீனத்துவத்துடன் இணைய வேண்டும்.

இலங்கையில் சைவசமயத்தை மறுமலர்ச்சியடையப் பணியாற்றியவர்களுள் ஆறுமுகநாவலரும், சுவாமி விபுலாநந்தரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆறுமுகநாவலர், ஈழத்துத் தமிழர் மத்தியில் அந்நிய ஆட்சியாளரின் அனுசரணையுடன் ஏற்பட்டு வந்த மதமாற்ற நடவடிக்கைகள், மேனாட்டுக் கலாசாரத் திணிப்பு முயற்சிகளுக் கெதிராகக் குரல்கொடுத்து, சைவத்தைப் பாதுகாக்கும் செயற்பாடுகளில் தீவிர ஈடுபாடுகொண்டு விளங்கியவர். அதேவேளை சைவத்தினுள் புகுந்துவிட்ட மாசுகள், கசடுகள், களைகள் என்பவற்றை அகற்றவும் முனைந்தவர். அந்தவகையில் சற்றுக் கடின போக்குடையவராகத் திகழ்ந்தவர். சைவத்தில், சமயவாழ்வில், ஆசாரங்களில், கோயில் முறைமைகளில் தூய்மையை வலியுறுத்தியவர். சைவசித்தாந்த நெறியைத் தத்துவமாகவும், ஆகம நெறியை வழிபாட்டு முறைச் சட்டமாகவும் அங்கீகரித்துச் செயல்பட்டவர். கல்விப் போதனை, நூல் வெளியீடு, புராணபடனம் பிரசங்கித்தல் என்பவற்றை சைவப்பிரசார முறையாக மேற்கொண்டார். கந்தபுராண கலாசாரத்தைப் பரப்பியவர். சைவத்தின் காவலராக விளங்கிய நாவலர், சைவத்தின் பண்டைய மரபுகள், பாரம்பரியங்களை அவர் வாழ்ந்த காலத்துச் சமுதாயத் தேவைகளுக்கு ஏற்ப அதேவேளை சைவத்தின் தூய்மை கெடாமல் தெளிவுறுத்தியவர். சைவத் தமிழ்ச் சிறார்கள் தமது சைவ பாரம்பரிய பண்பாட்டு கலாசாரங்களைப் பேணும் வகையில், உயர்கல்வி-ஆங்கிலக் கல்வியைப் பெற வாய்ப்பளிப்பதற்கு நடவடிக்கை எடுத்த வகையில், நாவலர் கால உணர்வை மதித்துள்ளார் என்பது புலப்படுகிறது. அந்த வகையில் பாரம்பரிய சமயத்திற்கும் நவீன சமயத்திற்கும் பாலம் அமைத்தவர் ஆகின்றார். ஒரு நாடு அரசியல் விடுதலை பெறுவதற்கு முன்னர், சமய, மொழி, கலாசார விடுதலை பெறவேண்டுமென்று கொண்டு அத்துறைகளில் தம் செயற்பாடுகளை நடாத்தியவர். நாவலர் நவீனத்துவத்தை வெறுத்திருந்தால், தற்கால ஆங்கிலக் கல்விமுறைக்கேற்ப, இடைநிலைக் கல்விக் கூடங்களை நிறுவியிருப்பாரா? "தமிழ் மொழியும் ஆங்கில மொழியும் இருவித முரண்படா நாகரிகப் பண்பினை இணைத்து வளர்க்க முடியும்" எனும் தத்துவத்தில் நாவலர் நம்பிக்கை கொண்டிருந்தார் என்று காலஞ்சென்ற பேராசிரியர் ப. சந்திரசேகரம் குறிப்பிடுவர். எனினும் நாவலரின் பிரதான பணி ஆகமங்களை அடிப்படையாகக் கொண்ட சைவத்தை அதன் பண்டைய தூயநிலைக்கு மீட்பதாகவேயிருந்தது. அவரின் பிற்காலப் பகுதியில் மக்கள் துயர்துடைக்கும் மானுட நேயப் பணிகளிலும் அவர் ஈடுபாடு கொண்டமை குறிப்பிடத்தக்கது. கஞ்சித் தொட்டித் தருமம் இதற்கு எடுத்துக்காட்டு.

சுவாமி விபுலாநந்தர் (1892-1947) நாவலரின் கல்வி, சைவ மறுமலர்ச்சிப் பணிகளைப் போற்றியவர். நாவலர் காலச் சூழல் வேறு, விபுலாநந்தர் பணியாற்றிய காலச் சூழல் வேறு. எனவே, அணுகுமுறைகளில் வேறுபாடு இருந்தன.

"விபுலாநந்தர் காலச் சூழலும், அவர் நின்று செயற்பட்ட தளமும், அவரிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்த குண இயல்புகள் சிலவும், அமைதியான சுபாவம், அளவு கடந்த பொறுமை, பகைவனுக்கும் இரங்கும் மனப்பாங்கு இராமகிருஷ்ண மிஷனின் தொடர்பும், பிறசமய உண்மைகளைக் கற்றுத் தெளிந்தமையும் பிறவும், அவரைச் சமயசமரசச் சன்மார்க்கவாதியாக உருவாக்கிற்று" - (கலாநிதி க. அருணாசலம் - சுவாமி விபுலாநந்தரின் சமயச் சிந்தனைகள்)

சமயமும் அதன் பணிகளும் மக்கள் வாழ்க்கை நலனோடு இணைந்து செல்ல வேண்டும். மக்களின் வாழ்க்கை நலனைக் கருத்தில் கொள்ளாத எந்த ஒரு சமயமும் மக்கள் மத்தியில் நீண்டகாலம் நிலைக்கமாட்டாது. ஆன்மிகத்தையும், ஒழுக்க விழுமியங்களையும் உதாசீனஞ் செயயும் எந்த ஒரு சமுதாயமும் விரைவில் சீரழிந்து போய்விடும். ஆன்மிகமும் உலகியலும் இணையவேண்டும். அவ்வாறு இணையும் போதே உலக அமைதி, ஊழலற்ற சமுதாயம் உருவாகும்.

மனித வாழ்வில் சமயம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. சமயங்கள் காலத்தின் தேவைகளையும் சமூகத்தின் தேவைகளையும் உணர்ந்து, மாறுதல்கள் அவசியம் வேண்டற்பாலன எனத் தெளிந்து கொள்ளும் பட்சத்தில், அவற்றை ஏற்றுத் தமதாக்கி அமைதி காணும் பட்சத்திலேயே அவை வாழும் சமயங்களாக நிலைக்கும். இவ்வாறு சமயம் நவீனமயப்படுத்தலும் வேண்டியதே என்பதை சுவாமி விபுலாநந்தர் ஏற்றுக்கொண்டவர்.

சமயக் கல்விக்குப், பாடசாலை மட்டத்தில் கடந்த அரைநூற்றாண்டு காலமாக நம் நாட்டில் இடமளிக்கப்பட்டு வருகின்றது. சமயம் ஒரு கட்டாய பாடமாக முதலாம் வகுப்பிலிருந்து பதினொராம் வகுப்பு வரை (க.பொ.த சாதாரணம்) கற்பிக்கப்படுகிறது. பதினொரு ஆண்டுகள் சமயம் கற்ற மாணவர்களில் க.பொ.த (சாதாரணம்) பரீட்சையில் ஏறத்தாழ 90 சதவீதமானோர் சித்தி பெறுகின்றனர். விசேட சித்திகள், திறமைச் சித்திகள் பெறுவோர், அவர்களுள் கணிசமான தொகையினர். போதிய சமய அறிவுடன்தான் சமூகத்துடன் இணைந்து கொள்கின்றனர். சமயம் கற்பித்தலில் எதிர்பார்த்த குறிக்கோள்கள், நடத்தை மாற்றங்கள் அடையப்பட்டதாகக் கூறுவதற்கில்லை. பெரும்பாலாரின் வாழ்வுமுறைகள் இதனைக் காட்டுகின்றன. நாட்டில் வன்செயல்கள், ஊழல்கள், துர்நடத்தைகள், சுரண்டல்கள் ஏ்னபன கூடிவருகின்றனவே தவிரக் குறைந்தபாடில்லை.

மனித சமுதாயம் அதற்கே உரிய ஆன்மிக, பண்பாட்டு உரிமைகளை இழந்துகொண்டு வருதலையும், மானுடத்திலிருந்து விலகி, விலங்கு நிலைக்கு வேகமாகச்சென்று கொண்டிருப்பதையும் இந்நிலைமைகள் தெளிவாகக் காட்டுகின்றன.

மனிதநேயம், மானுடசேவை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, இறைநம்பிக்கை, பெற்றோர் பெரியோரை மதித்தல், பிறர் நலம் காணுதல், நலிந்தோர்க்குதவுதல், உண்மை, அன்பு, சாந்தி, அஹிம்சை, நல்லொழுக்கம் என்பவற்றை அனுசரித்தல், சட்டம், ஒழுங்கு என்பவற்றிற்குக் கட்டுப்படுதல், ஊழல்களைத் தவிர்த்தல், பிறர்மீது கரிசனை என்பன நம்மிடையே அருகிக் கொண்டே வருகின்றன. மக்களில் கல்வி கற்றவர்களிடையேதான், கல்லாதவர்களை விட, ஒழுக்கச் சீர்கேடுகளும் ஊழல்களும் மலிந்து காணப்படுகின்றன.

கற்ற சமயத்திற்கும், வாழ்க்கைக்கும் தொடர்பில்லாத நிலை இங்கு வளர்ந்து வருவதையே இவை யாவும் உணர்த்துகின்றன. அறிவுக்குப் பஞ்சமில்லை; அநுட்டானமே அருகி வருகிறது. "அறிவினால் ஆகுவதுண்டோ, பிறிதின்நோய், தந்நோய் போல போற்றாக்கடை" என்னும் வள்ளுவர் வாசகத்தை மீட்டுப்பார்க்க வேண்டும்.

சமயம் முதலில் விழுமியம் சார்ந்ததாக வேண்டும். விழுமியங்கள் வாழ்வில் கடைப் பிடிக்கப்படல் வேண்டும். அப்போதுதான் சமயம் உயிர்ப்புள்ள, வாழும் சமயமாக விளங்கும். அதனால் மனிதரும் வாழ்வாங்கும் வளமாகவும் வாழ்வர். மனித வாழ்க்கைத்தரம் உலகியல், ஆன்மிகம் ஆகிய இரண்டினதும் சமவளர்ச்சியைக் கொண்டே கணிக்கப்படல் வேண்டும்.

நாம் இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி வைக்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறோம். காசேதான் கடவுள், விஞ்ஞானமே மெய்ஞ்ஞானம் என்னும் நிலைப்பாடுகளினால் ஏற்படும் பெருஞ்சவால்களை உலகம் எதிர்நோக்க வேண்டி நேரிடும். இன்று சமயமும், விஞ்ஞானமும் வெவ்வேறு திசைகளில் போய்க் கொண்டிருக்கின்றன. சமயம், விஞ்ஞானத்தை மதிப்பதில்லை. விஞ்ஞானம் சமயத்தை ஏற்பதில்லை. இந்நிலையே உலகத்தில் காணப்படுகின்ற அமைதியின்மைக்கும் குழப்பங்களுக்கும் காரணம்.

காலத்தின் தேவையை நிறைவேற்றுவதாக சமயம் மறுசீரமைக்கப்படல் அவசியமாகும். சமயம், விஞ்ஞானத்துடன் இணைய வேண்டும். விஞ்ஞானம் சமயத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். விஞ்ஞானத்தில் ஆன்மிகம் செறியும் போதுதான் முரண்பாடுகள் அழிவுகள் ஏற்படாமல் தவிர்க்க முடியும். சமயத்தை நவீனப்படுத்துதல் முயற்சிகள், அடுத்த நூற்றாண்டின் சவால்களைக் கருத்தில் கொண்டு, சமயத்தையும் விஞ்ஞானத்தையும் இணையச் செய்வதற்கே முன்னுரிமை வழங்குவதாய் அமையவேண்டும். அதேவேளை சமயத்தின் ஆன்மிக அடிப்படை பேணப்படுதலும் அவசியம் ஆகும். விஞ்ஞானமும் சமயமும் ஒன்றிற்கொன்று முரண்படா முறையில் வளர்ச்சி பெற்றுவரும் போதுதான் இரண்டுமே வாழமுடியும். மனிதகுலம் தழைக்க வழி பிறக்கும்.

# அறநெறிக் கல்வியின் தேவையும், வளர்ச்சியும்

**சாந்தி நாவுக்கரசன்**

நமது நல்வாழ்வுக்கு வழிகாட்டுவது கல்வி. கல்லுதல் என்பது அகழுதல் என்ற பொருளில் அமைகிறது. உள்ளத்திலுள்ள மாசுகளை நீக்கித் தூய்மையாக்குவதற்குத் துணைபுரிவதே கல்வி.

"சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு" என்றார் வள்ளுவர்.

தீயதன் தெறலையும், நல்லதன் நலனையும் பகுத்துரை வைப்பதற்குத் தூண்டுவது கல்வி. அதன் பயன் ஆண்டவனுடைய திருவடியில் நம்மைச் சேர்த்தலில் முடிகிறது. வள்ளுவர் பெருமானார் இதனை விளக்கவே,

"கற்றத னாலாய பயனென் கொல்வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்" என்றார்.

கல்வியின் பயன் கற்றலில் தொடங்கி நிற்றலில் முடியவேண்டும். இடையில் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்ற மூன்று படிகளும் அமைந்திருக்கின்றன. இந்தத் தெளிவுதான் சமய வாழ்வுக்கும் சமூக சேவைக்கும் எம்மைச் செலுத்துகிறது. சமுதாயத்தொண்டு என்பது இறை வழிபாட்டை ஒட்டி நிற்பதுதான்.

தெய்வ நம்பிக்கை இல்லாத உள்ளத்தில் மனச்சாட்சி வேலை செய்யாது. நீதி உயிரற்றுப் போகும். பண்பாடு புதைந்து விடும். எனவே வழிபாட்டிற் சிறந்தது சமுதாய நலனைச் சிந்தித்துச் செயலாற்றுதலே. இரண்டு வகையிற் கல்வியை நாம் பெறுகிறோம். உலகத்தில் ஏற்படும் அனுபவத்தின் மூலமும், நூல்களின் வாயிலாகவும் பெறுவது ஒருவகை. உள்ளுணர்வின் மூலம் சிந்தித்து அறிவைத் தேடிக் காண்பது இரண்டாவது வகை. இவ்விரண்டுஞ் சேர்ந்தால் பிறர் நலத்தையே சிந்தனை செய்யத் தூண்டும். முடிவில் இறைநலத்திற்கு ஆளாக்கும். தக்கது இன்னது என்றும் தகாதது இன்னது என்றும் பகுத்துரை வைக்கும்.

"தக்க தின்ன தகாதன இன்னதென்றொக்க
உன்னலராயின் உயர்ந்துள மக்களும் விலங்கே" என்றார் கம்பர்.

தக்கனவற்றைச் சிந்திப்பவன், எல்லோரும் இன்புற்றிருக்கவே நினைப்பான்,

"அனைத்துயிரும் ஒன்றென்றெண்ணி
அரும்பசி எவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
பொய் வஞ்சம் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாராகில்
செய்தவம் வேறொன்றுண்டோ" என்றார் ஒரு பெரியவர்.

பேசுகின்றபோது உதட்டில் உதிப்பவை அனைத்தும் உயர்ந்தவையாக இருக்கவேண்டுமெனில், உள்ளம் கல்வியால் நிறைந்திருக்க வேண்டும். அப்போதுதான் சமுதாயப் பெருவாழ்விற்கு ஏற்பத் தன் நிலையை உயர்த்திக் கொள்ளமுடியும். ஒவ்வொருவரும் அந்தப் பெருநிலையைப் பெற வேண்டும் என்ற பேராசையில் தான்,

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்கத் தக" என அறிவுறுத்துகின்றார், வள்ளுவர்.

கல்வியானது சிறப்புடையது என்றாலும் சிந்தனையற்ற போது செயல்படுவதில்லை. சிதறிக் கிடக்கின்ற அறிவு நல்வடிவம் பெற்றுப் பயன்தர வேண்டுமெனில் கசடறக் கற்றிருக்க வேண்டும். மேலும் கற்றது ஒன்று, செய்வது இன்னொன்று என்று இருந்தால் கல்வியாற் குறிப்பிட்ட பயனில்லை. முடிவில் தனது போக்கே தன்னை குழப்பிவிடுமாதலின், தற்காப்பிற்காக, "நிற்க அதற்குத்தக" என்று வள்ளுவர் நமக்கு நினைவுபடுத்துகின்றார்.

புகழும் பொருளும் நிரந்தரமானவை அல்ல. நிலைத்து நிற்கும் இயல்புடையவை அல்ல. நிலைத்து நிற்க வேண்டுமெனில், அவை கல்வியின் அடிப்படையில் மலர்ந்திருக்க வேண்டும். கல்வி தனது அழியாத் தன்மையால் புகழையும், பொருளையும் அழியாமல் காக்கும். அதனை உணர்த்தவே,

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

மாடல்ல உண்மையான செல்வம், கல்விதான் என்பதை வற்புறுத்தவும், பிறபொருள்மேல் இருக்கும் மயக்கம் நீங்கிக் கல்வியின் பால் மனம் திரும்பவும், மாடல்ல, மற்றயவை என்கிறார் வள்ளுவர். கல்வியின் பெருமை தனித்த ஒருவர்க்கே உரியதன்று. அது நாட்டிற்கும் பெருமை. அக்காரணத்தால் கல்வி சிறந்த நாடென்றும், கற்றோர் வாழும் நாடென்றும் புகழ்ந்து பேசுவதைக் கேட்கிறோம். அத்தகைய உண்மைக் கல்வி ஒவ்வொரு தனிமனிதனையும் வளர்த்து நாடெங்கும் விளக்கேற்றி வைத்து ஒளிவீசும் என்பது உறுதி.

இத்தகைய அறிவைக் கொண்டு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் யாவை? முதலில் எமது குற்றத்தை நாம் உணர்ந்து திருந்திக் கொள்ள வேண்டும். அடுத்தபடியாகத் தன்னலமற்ற முறையில் சமுதாயத்துக்குப் பணிபுரிய வேண்டும். இந்தச் செம்மை வாழ்வுதான் இன்றைய சமுதாய நிலையில் அவசியம் வேண்டிய ஒன்றாகும்.

இன்றைய இளைஞர்களே வருங்கால சமுதாயத்தை உருவாக்க வேண்டியவர்கள். அவர்களுக்கு "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மனப்பாங்கு உண்டாக வேண்டும். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற உயர்ந்த நோக்கு ஏற்பட வேண்டும். "நாமிருக்கும் நாடு நமது" என்ற அபிமானம் இடம்பெற வேண்டும். எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணி இரங்கும் அருள் நெறி தோன்ற வேண்டும்.

மனிதப் பண்பு இல்லையென்றால் உலகவாழ்வு ஏது? ஒருவரை ஒருவர் வீழ்த்திக் கொண்டிருக்கும் போது மனிதச் சுவடு மறைந்து மயானம் தோன்றியிருக்கும் அல்லவா? இதுவரை பண்பினால் காக்கப்படுகின்ற உலகம் இனிமேலும் பண்பால் காக்கப்பட வேண்டும். அதற்காக ஒவ்வொரு மனிதனும் பண்போடு வாழ வேண்டும். மறந்து விட்டால் அரம்போலும் கூர்மை படைத்த அறிவாலும் பயனில்லை. அவர்களை மரத்திற்கு நிகராகவே மதிப்பார்கள்.

பண்புடையார் எப்போதும் அன்போடு அறம் புரிகின்றார்கள். எனவே அவர்களின் வாழ்க்கை பயனுடைய வாழ்க்கையாக அமைந்துவிடுகிறது. அவ்வாறு பயன்படும் மனிதமாக வாழும்போது, உலகமும் பெருமகிழ்ச்சி அடைந்து பாராட்டுகிறது.

கல்வியின் சிறப்புப்பற்றி நோக்கிய நாம் இன்றைய காலகட்டத்தில் அறநெறிக் கல்வியின் அவசியமும், அதனைப் புகட்டுவதற்கு நிலைக்களனாக அமையும், அறநெறிப் பாடசாலைகளின்

தேவையும் பற்றிச் சற்று சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

இதனைப்பற்றி சுவாமி விபுலானந்த அடிகள் தனது காலத்திலேயே சிந்தித்துள்ளார். சமயக்கல்வியும், ஒழுக்கவியலும், அறிவியற் கல்வியும் தனித்தனியாகவன்றி ஒன்றாக இணைக்கப்பட வேண்டும். உலகப் பெருஞ் சமயங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாகவும், வரலாற்றுடன் இணைந்ததாகவும் சமயக்கல்வி அமைய வேண்டும் என்று விரும்பினார்.

பாரதியார், சுவாமி விவேகானந்தர் முதலியோரைப் போன்றே விபுலானந்தரும் இந்துக்கள் மத்தியில் நிலவிய குறைபாடுகள், அறியாமை, மூடப் பழக்கவழக்கங்கள், மூடநம்பிக்கைகள், மாயாவாதம் முதலியவற்றைக் கண்டித்தார். காலத்தின் தேவைகளுக்கேற்பச் சமயம் அறிவியல் அம்சங்களைத் தன்னகத்தே உள்ளடக்கிக் கொள்ளுதல் வேண்டும். அதே சமயம் ஆத்மீக நெறியினையும் போற்ற வேண்டும். ஆத்மசக்தியைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதே அவரது பேராவலாக இருந்தது.

விபுலானந்தர், ஒவ்வொருவரும் தத்தமது சமயங்களை அடிப்படையாகக் கொண்ட கல்வியைச் சிறுவர்களுக்கு ஊட்டிச் சிறுவயதிலிருந்தே அவர்களது உள்ளத்தைப் பண்படுத்த வேண்டும் என விழைந்தார். சைவச் சிறார்களின் கல்விப் பணிபற்றி, "சைவச் சிறாரின் கல்வி, அறிவாகிய விளக்கு," அறம் வளர்த்தல் முதலிய கட்டுரைகளில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் அவரது சமயச் சிந்தனைகளின் வெளிப்பாடே எனலாம். சிறுவயதிலிருந்தே மாணவர்களிடத்தே உயர் குணாம்சங்களை உருவாக்கவல்ல சமயக் கல்வி, தாய் மொழிக் கல்வி ஆகியவற்றைப் புகட்டவேண்டும். அவற்றின் அத்திவாரத்திலேயே ஏனைய கல்வித் துறைகளையும் விருத்தி செய்ய வேண்டும் என்பதே அவரது வேண்டுகோளாகும்.

"சோஷலிஸ, அரசியல் கருத்துக்களைப் பரப்புமுன் ஆன்மீகக் கருத்துக்களின் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடச்செய்யுங்கள். நம் உபநிடதங்களிலும், மதநூல்களிலும் புராணங்களிலும், பொதிந்து கிடக்கிற அற்புதமான கருத்துக்களை வெளிக்கொணர்ந்து நாடு முழுவதும் வாரி இறைக்கவேண்டும்" என்கிறார் வீரத் துறவி விவேகானந்தர்.

ஆம், இவ்வாறு ஆன்மீகம் போதிக்கப்பட்டால், அதனை உணர்ந்து மக்கள் அதன்படி வாழத்தலைப்பட்டால் நாட்டில் கள்ளம், கபடு, சூது, வாது என்பன மறைந்து அமைதி, அன்பு, சேவை ஆகியன நிறையும். எனவே ஆன்மீகக் கருத்துக்களை நாம் பரவச் செய்ய வேண்டும்.

நமது சிறுவரை சற்சமய நெறியிலே பயிற்றுவதற்கு நமக்கென்று கல்விச் சாலைகள் வேண்டும் என்பதை முதலில் எடுத்துக் கூறியவரும், அதற்காக வேண்டுவனவற்றைச் செய்தவரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரேயாவார்.

புதிய புதிய வளர்ச்சிகளால் உலகம் மாறுதல் அடைந்து கொண்டிருக்கிறது. மனிதமனம், பரபரப்புக்கும் வேகத்துக்கும் உட்படுவதால் நல்லெண்ணங்கள், வாழ்வின் உயர்பண்புகள் என்பவற்றை இழக்க நேர்கிறது. இதற்கு எதிர்மாறாக பகைமை, தன்னலம், போட்டி, பொறாமை, பதவிமோகம் போன்ற எண்ணங்கள் வளர்ச்சி பெறுவதனால் சமூகத்தின் சமநிலை குலைகிறது. நாட்டின் ஒற்றுமையும் அமைதியும் நிலை தவறுகின்றன. பண்புகளைப் போற்றாத குறுகிய சிந்தனைகளும், பொருளாதாரக் கொள்கைகளுமே இத்தகைய நிலை ஏற்படுவதற்குப் பிரதான காரணமாகும். எனவேதான், இளமையிலேயே மனங்களைப் பண்படுத்தச் செய்கின்ற ஒழுக்க வாழ்வோடிணைந்த சமயக் கல்வியைப் போதிப்பது அவசியமாகின்றது.

பல்வேறு வகைப்பட்ட பாடசாலைகளினின்றும் வேறுபட்டும் தனித்துவமான போக்கினை யுடையதும் தான் அறநெறிப் பாடசாலையாகும். இதன் அமைப்பு, செயற்பாடு என்பன மிகவும் எளிமையானதாகும். 1989ம் ஆண்டு தொடக்கம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நாடு பூராவும் அறநெறிப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப் படுகின்றன. அதன் மூலம் அறநெறிப் பாடசாலைகள் அரசாங்க அந்தஸ்துடையவைகளாக உருவாகின.

அறநெறிப்பாடசாலைகளை நடத்தும் பொறுப்பாளர்கள் யார் எனப் பார்ப்போமாகில் இந்து சமய நிறுவனங்களும், இந்து ஆலயங்களும் தான் அறநெறிப் பாடசாலைகளை நடத்த வேண்டும். நம் நாட்டில் சமயக்கல்வி கட்டாய பாடமாகும். பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்களைச் சேர்ந்த இளம் பிள்ளைகளுக்கு மேற்படி மதங்களில் உள்ள பௌத்த கோயில்களும், கிறிஸ்தவ தேவாலயங்களும், முஸ்லீம் பள்ளிவாசல்களும் இளம் வயதிலிருந்தே சமயக் கல்வியைப் புகட்டுகின்றன.

ஆனால் எமது இந்து சமயத்தில் மாத்திரம் இத்தகைய அமைப்பு உருவாகாது இருந்தமை சமயக்கல்வி வளர்ச்சிக்கு ஒரு தடையாக அமைந்தது எனலாம். எமது நாட்டில் கல்வி அமைச்சு சமய பாடத்தைக் கட்டாய பாடமாக்கி உள்ளது. இதன்மூலம் மாணவர்கள் தத்தம் சமய நெறிகளைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக் கொள்கின்றார்கள். ஆயினும் சமய பாடமும் ஏனைய பாடங்களைப் போல அறிவையும் பரீட்சைகளையும் குறிக்கோளாகக் கொண்டே போதிக்கப்படுகின்றது. இதன் விளைவாகப் பிள்ளைகளின் மனநிலையிலோ அல்லது வாழ்விலோ சமயம் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

ஆனால் அறநெறிப் பாடசாலைகளில் போதிக்கப்படும் கல்விமுறை, பாடத்திட்டங்களோடு நின்று விடாது, சீரிய, ஒழுக்க முறைகளை எத்தகைய முறையில் கைக்கொண்டு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நெறிமுறையைப் போதிப்பது மட்டுமல்லாது வழிபாட்டு முறைகளையும் போதித்து நிற்கின்றது.

எனவேதான், அறநெறிப் பாடசாலைகளின் நோக்கம், சமயக் கல்வியுடன் சீரிய வாழ்க்கை முறைகளுக்கேற்ற ஒழுக்க முறைகளைப் போதிப்பதும், இளம் சிறார்களின் மனதில் அன்பு, பக்தி, கடமையுணர்ச்சி போன்றவைகளை உருவாக்குவதுமாகும். சமயத்தை ஒரு சித்தாந்தமாகக் கொள்ளாது வாழ்வியலோடு இணைத்து வழிகாட்டுவதுதான் அறநெறிப்பாடசாலையின் நோக்கமாகும்.

அறநெறிப்பாடசாலைக் கல்விக்கு முதல் பிள்ளையின் சமயவாழ்க்கைக் கல்வி வீட்டில் பெற்றோரால், முதியோரால் ஆரம்பிக்கப்பட வேண்டும். காலை மாலை இறைவழிபாடு, வீட்டுக்கிரியைகள், விழாக்கள், விரதங்கள், பெற்றோர், பெரியோர், மூத்தோரை கனம் பண்ணல் (மதித்தல்), என்பனவற்றுடன் ஆரம்பமாக வேண்டும். அதனைத் தொடர்ந்து பெற்றோரின் வழிகாட்டலுடன் அறநெறிப் பாடசாலைக் கல்வியைத் தொடரும் பொழுதுதான் முழுமையை அடையமுடியும்.

அறநெறிப்பாடசாலையில் பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றிக் கல்விகற்க முடியாத ஏனையோரும் சேர்ந்து கல்வியறிவைப் பெறமுடியும். அதற்கேற்ப 5 வயது தொடங்கி 16 வயது வரையுள்ள இளம் பிள்ளைகள் அறநெறிக் கல்வி தொடர வாய்ப்புண்டு. அறநெறிப் பாடசாலைகளில் சமயம் ஆதாரக் கல்வியாகப் போதிக்கப்படுவதால் சமய வாழ்வு உணர்த்தப்படுகின்றது.

உதாரணமாக, கோயிலில் பண்ணோடு இசைபாடுதல், உழவாரத் தொண்டு செய்தல், நந்தவனம் அமைத்தல் என்பன அறநெறிப் பாடசாலைகள் மூலம் நடத்தப்படும் செயல் முறைக்கல்வியாகும். மாணவர் சமய அறிவோடு சமயவாழ்க்கையின் முக்கியத்துவத்தையும் உணரக்கூடிய தன்மை இதனால் ஏற்படுகின்றது. ஞாயிறு பாடசாலைகள் நடத்தும் அனைத்து இந்து நிறுவனங்களும், ஆலயங்களும் அறநெறிப் பாடசாலைக் கல்வி முறையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. இக்கல்விமுறை இலவசமாகவும், சுற்றாடலுடன் இணைந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சமய உணர்வு, அறிவு பெற்றவர்கள் இதன் ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை அறநெறிப் பாடசாலைகளை நடத்தும் மன்றங்கள், ஆலயங்களே வழங்குகின்றன. எமது அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு தனித்துவமான சீருடை அமைதல் பொருத்தமாகும். ஆனால் அவ்வாறான சீருடை அணிய வேண்டும் என்பதனை யாரும் கவனத்தில் கொள்வதில்லை. சில பாடசாலைகள் கைக்கொள்கின்றன. எமது தமிழ்ப் பண்பாட்டிற்கு உரியதான தூய்மையானதும், இலகுவானதுமான சமய அமைவுடனான சீருடை முறைகளைக் கைக்கொள்ளுதல் மிக நன்று. அதற்கான வழிமுறை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அறநெறிப் பாடசாலைகளுக்கு எமது திணைக்களம் ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியினை மாவட்ட ரீதியாக நடத்துகின்றது. அதேபோல் ஆசிரியர்களுக்கான சைவசித்தாந்த வகுப்பு, பண்ணிசை வகுப்பு ஆகியனவும் நடத்தப்படுகின்றன. இதனை விட மாணவர்களுக்குரிய நூல்களும், ஆசிரியர்களுக்கான உசாத்துணை நூல்கள், ஆசிரியர் குறிப்பேடு என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

அறநெறிப் பாடசாலைகளுக்கெனத் தனியான பாடத்திட்டம் ஆலோசனைக் குழுவினால் தயாரிக்கப்பட்டு 1990ம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ் அறநெறிப்பாடசாலைகள் ஞாயிறு தினத்தில் காலையில் ஆரம்பித்து 3 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக வகுப்பு நடைபெறுகின்றது. ஆசிரியர்கள் வேதனம் இன்றி சேவை மனப்பான்மையுடன் சேவை செய்கின்றனர். அறநெறிப் பாடசாலைகள் மிக அண்மைக் காலத்திலேயே செயற்படத் தொடங்கிய போதிலும் அவற்றின் பயன் வெகுவாக உள்ளது குறிப்பிடக்கூடிய அம்சமாகும். இதனை நாம் மாவட்ட ரீதியாக கருத்தரங்குகள் நடத்தச் செல்லும் பொழுது அனுபவரீதியாக உணரக் கூடியதாக உள்ளது. பாடசாலைக் கல்வியினைவிட இங்கு கற்பித்தல் முறை மாணவர்களை சமயம் கற்றலுடன், ஒழுக்கம், பண்பு பேணல் ஆகியவற்றிலும் வழிப்படுத்துவதாக அமைகின்றது. வெறும் ஏட்டுப்படிப்பாக இல்லாது செயல்முறைக் கல்வியாக அமைவது குறிப்பிடத்தக்கது. மாணவர்களின் செயற்திறனை வளர்க்கும் முறையில் ஆசிரியர்கள் குழுமுறைச் செயற்பாடுகள், கோலநடிப்பு ஆகியவற்றின் மூலம் கற்பித்தல் நடைபெறுகின்றது. சமூகத் தொண்டு செய்யும் முறையிலும் மாணவர்கள் வழிநடத்தப்படுகின்றனர்.

முன்பு குருகுலக்கல்வி முறை இருந்தது. இன்று அருகிவிட்டது. வேதம் ஓதும் அந்தணச் சிறார்களுக்கு சில இடங்களில் குருகுலப் பயிற்சி நடைபெறுகின்றது. ஆறுமுகநாவலர் காலத்தில் திண்ணைப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. இன்றைய காலகட்டத்தில் அறநெறிப் பாடசாலைகளின் அவசியம் உணரப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. சமயம், ஆன்மீகம், ஒழுக்கம், அறவாழ்வு மூலம் சமுதாயம் வளர்ச்சி காணவேண்டும்.

எனவே சிறந்து விளங்கும் மாணவச் செல்வங்களை உருவாக்க அவர்களுக்கு அறநெறி பாடசாலைகள் நடத்தி ஆன்மீகம் ஒழுக்கநெறிகளும் போதிக்கப்பட வேண்டும். இது ஒரு மிகச் சிறந்த புனிதப் பணியாகும். இதனைச் செய்வதில் நாம் மிகவும் ஆர்வமும் ஊக்கமும் உடையவர்களாக மாறவேண்டும். இதற்காக நாம் சில தியாகங்களைச் செய்ய வேண்டிவரும். பொருட்செலவு வரும், உடல் உழைப்பு நல்கவேண்டி வரும். ஆனால் இது போன்ற தியாகங்கள் நமக்கு இறையருள் பெற்றுத் தருவதுடன் முத்தி நிலைக்கும் வழிவகுக்கும். தியாகத்தாலன்றி அமரத்துவம் அடையப்படமாட்டாது என்பது வேதவாக்கு.